உ ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக்களஞ்சியம்

வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும்



தமிழ்மறை மாமணி
முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம்

கங்கை புத்தகநிலையம்

உ ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக் களஞ்சியம்

தொகையகராதியும் திருத்தலங்களும்

திருநெறிய தமிழ்மணி
பேராசிரியர். முனைவர். **சிவ. திருச்சிற்றம்பலம்**

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 2004

விலை : ரூ. 100–00

TITLE	:	Sri Vaishnava Samaya Kalai Kalangiam
AUTHOR	:	Dr. Siva. Thiruchitrambalam
SUBJECT	:	Encyclopedia of Sri Vishnavism
LANGUAGE	:	Tamil
EDITION	:	First Edition Dec' **2004**
PAGES	:	xxii +230 = 252
PUBLISHED BY	:	**GANGAI PUTHAKA NILAYAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar. Chennai - 600 017.
Price	:	Rs. **100-00**

அட்டைப்பட உதவி : நெய்வேலி மாதவி கார்த்திகேயன்

Laser Typeset at: **KALYANI COMPUTER PRESS,**
Kumbakonam - 612 001. Ph: (0435) 2425442

Printed at : **பாலாஜி** ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794

உ ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக்களஞ்சியம்

வைஷ்ணவத் தொகையகராதியும் திருத்தலங்களும்



தமிழ்மறைமாமணி

முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம்

அணிந்துரை

முனைவர். **தி. அரங்கநாதன்**
தமிழ் இணைப் பேராசிரியர்
முதன்மை ஆய்வாளர்,
பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் பெருந்திட்ட ஆய்வு,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்.

மூவரில் முதல்வனாய ஒருவனை உலகம் கொண்ட
கோவினை குடந்தைமேய குருமணித்திரளை இன்பப்
பாவினை பச்சைத் தேனை பைம்பொன்னை அமரர்சென்னிப்
பூவினை புகழும் தொண்டர் என்சொல்லிப் புகழ்வர் தாமே.

(திருக்குறுந்தாண்டகம்)

உலகப் பண்பாடுகளில் இந்தியப் பண்பாடு மிகப் பழமைமிக்கது. இந்தியப் பண்பாட்டில் ஆன்மீக உணர்வு அடிப்படையாக அமைந்த ஒன்று. அவ்வுணர்வின் அடிப்படையில் தான் உலகத்தில் வேறெங்கும் காண இயலாத அளவிற்கு இந்திய நாட்டில் சமயங்களும், வழிபாடுகளும், சடங்குகளும், மிகுந்து காணப்படுகின்றன. அதுவே இம்மண்ணுக்குரிய சிறப்பாக அமைந்துவிட்டது. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் என்ற ஆறு சமயங்களும் இணைந்த நிலையே இன்று இந்து சமயம் என்றழைக்கப்படுகிறது. இவை வைதிக சமயங்க ளாதலின் இவற்றுக்கு வேதங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையில் இந்து சமய வளர்ச்சியை இருவகைகளில் கூறுவது மரபு. வேதம், சம்கிதை, பிராமணம், உப்நிடதம், புராணம் என ஐந்து நிலைகளில் கொள்ளுவது ஒரு மரபு; வேதம், உபநிடதம், ஆகமம் எனக் கொள்ளுவது இன்னொரு மரபு.

வேதகாலம் தொடங்கிப் பெருந்தெய்வ வழிபாட்டு மரபு இன்றளவும் நிகழ்ந்து வரக் காண்கிறோம். மிகப் பழமையானது என்று போற்றப்படும் இருக்கு வேதத்தில் முப்பத்து மூன்று கடவுளர் பற்றிய குறிப்பு உண்டு என்று கூறுவர். சிவனும் திருமாலும் அதில் அடங்குவர். இந்திய மக்களின் மிகப் பழமையான வழிபாட்டுக் கடவுள் திருமால் என்பது இதிலிருந்து விளங்கும். திருமால் பேரழகு உடையவனாகவும், இளமை உடையவனாகவும் வேதங்களில் போற்றப்படுகிறான். அவன் மூன்றடி கொண்டு இவ்வுலகு அளந்தது வேதத்தில் இடம்பெற்ற செய்தி. வேதங்களை அடுத்து வசனத் தொகுப்பாய் வந்த பிரமாணங்களிலும் திருமால் பற்றிய குறிப்பு உண்டு.

ஆத்திரேயப் பிராமணம் திருமாலைக் காக்கும் கடவுளாகக் குறிக்கின்றது. சதபதப் பிராமணம் திருமாலைத் தியாக உணர்வின் கருவாகக் கூறுகின்றது.

பிரம்மத்தைப் பற்றிய கருத்துக்களை உபநிடதங்கள் மிகத் தெளிவாக விளக்குகின்றன. உபநிடதங்கள் நூற்றெட்டு ஆகும். திருமாலின் திருநாமங்களில் ஒன்றாக அமையும் விஷ்ணு என்ற சொல் கட்டுப்பாடு இல்லாத சக்தியையும் எல்லாப் பொருள்களிலும் இருக்கிற தன்மையையும் எப்பொருளாலும் இயலாத குணத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. அவனே இவ்வுலகைப் படைப்பவனாகவும் காப்பவனாகவும் அழிப் பவனாகவும் இருக்கும் தன்மையைத் தைத்ரீய உபநிடதம் கூறுகின்றது. திருமாலே இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தான். அவனே இவ்வுலகத்துப் புகுந்தான் எனச் சாந்தோக்கிய உபநிடதம் விளக்குகின்றது.

வடமொழி நூல்களான வேதம், பிராமணம், உபநிடதம் என மிகப் பழைமையானவை எல்லாம் திருமாலை உயர்தனிக் கடவுளாகப் போற்றுகின்றன. இருவேறு பண்பாட்டு மொழி, இனம் கொண்ட இத்திருநாட்டில் வடமொழி நூல்களில் திருமால் வழிபாடு பற்றிய சிறப்புக்கள் காணப்படுவது போலவே தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் திருமாலைப் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன. தொல்காப்பியத்தில் ‘மாயோன் மேய காடுறை உலகமும்’ எனத் தொடங்கும் நூற்பா அதற்குச் சான்று. தமிழகத்தில் தொல்காப்பியர் காலம் தொடங்கி இன்றளவும் திருமால் வழிபாடு சமயம், தத்துவம், வாழ்க்கை என்ற பலபரிமாணங்களைப் பெற்றுத் தமிழக மக்களின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாக இடம்பெற்றுவிட்டது.

சங்க காலத்திலும் அதையொட்டிய காலத்திலும் முல்லை நிலக் கடவுளாகவும் வழிபடு கடவுளாகவும் இருந்த திருமால் பக்தி இயக்க காலத்தில் பெருங்கடவுள் வடிவம் கொண்டதைத் திவ்வியப் பிரபந்தம் எடுத்துக்காட்டுகிறது. திருமாலை வழிபட்டு வாழ்வதே வாழ்க்கை என்ற நிலையை ஆழ்வார்கள் உணர்த்திக் காட்டினர். அதையே

உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்
ஓவாதே நமோ நாராயணா என்பன்
வன்மையாவது உன்கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மைகண்டாயே (பெரியாழ். 5.1.3)

என்று பாடினார் பெரியாழ்வார்.

வழிபாடாகவும், வாழ்க்கையாகவும் இருந்த நிலை சமுதாயத்தில் தத்துவமாகவும் வேரூன்றிவிட்டது. ஆழ்வார்களுக்குப் பின் தோன்றிய இராமானுசர் விசிஷ்டாத்வைதம் கண்டார். பின்னர் தோன்றிய மத்துவரும் நாராயணனே தனிப்பெரும் தத்துவம் என்று துவைதம் கண்டார்.

பிற்காலத்தில் தோன்றிய அரசர்களும் திருமால் வழிபாட்டையும் கலையையும் இணைத்துத் திருமாலுக்குப் பெருங்கோயில்கள் கட்டினர். மக்களும் அக்கோயில்களைப் பேணிக் காத்தனர்; வழிபட்டனர். ஆதலின் திருமால் வழிபாடும், வைணவ சமயமும், தத்துவமும் இன்றும் தமிழக மக்களின் பண்பாட்டு நிலைகளில் ஒன்றாக மாறிவிட்டது.

இத்தகைய உயர்ந்த பண்பாட்டு, சமய, தத்துவ, வைணவ வழிபாட்டுச் சிந்தனைகளைத் தொகுத்தளிக்க வேண்டும் என்னும் அரிய முயற்சியின் உருவாக்கமே ஸ்ரீ வைணவ சமயக் கலைக்களஞ்சியம் என்னும் இந்த நூல். பேராசிரியர், முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் படைத்த நூல்கள் பல. சைவ சமயக் கலைக்களஞ்சியம், விநாயகர் கலைக் களஞ்சியம், திருமுருகன் கலைக் களஞ்சியம் என்பன அவற்றுள் சில. சைவக் கடவுளரான விநாயகர், முருகன், சிவபெருமான் பற்றிய வேறு சில தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றை முழுமைபெறச் செய்து கடவுளர் பற்றிய அனைத்துச் செய்திகளும் ஒருங்கே தொகுக்கப்பட வேண்டும் என்னும் பேராசிரியரின் முழுமையான முயற்சியில் உருவானவை அக்கலைக் களஞ்சிய நூல்கள். அந்நூல்களின் உருவாக்கத்திற்குத் தொகுப்பு முயற்சி பெரிது. முழுமையாக்க முயற்சி அரிதுமாக இருந்திருக்கக்கூடும்.

வைணவச் சம்பிரதாயம் மிகக் கடுமையானது. இக்கடுமையான கட்டுப்பாட்டின் காரணமாக வைணவம் பற்றிய நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந்து கொண்டிருக்கின்றன. சைவம் போல வைணவ சமயத்திற்குரிய சிந்தனைகள், கோவில்கள், அடியார்கள், நூல்கள் பற்றிய தொகுப்பினைக் காணுவது அரிது. நெகிழ்ச்சியின்மையே அதற்குக் காரணம். அதுவே அச்சமயத்திற்குரிய பெருமையும் ஆகும். அது தவிர இன்னொரு இடர்ப் பாடும் உண்டு. வைணவ சமய நூல்கள், விளக்கங்கள், மணிப் பிரவாள நடையில் அமைந்தவை. ஆதலின் வைணவ சமயக் கருத்துக்களை அறிவதே அரிதான ஒன்று, வைணவ விளக்க நூல்களில் பழங்காலத்தில் அச்சான நூல்கள் மணிப் பிரவாள நடைக்குக் கிரந்தம், தெலுங்கு எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. அதையடுத்து வெளியான நூல்கள் தேவநாகரி எழுத்துக்களாலானவை. தற்காலத்தில்தான் சுலோகங்களும், வடமொழிச் சொற்களும் தமிழ் எழுத்துக்களால் அச்சிடப்படுகின்றன. ஆதலின் இக்கலைக் களஞ்சியத்திற்குக் கருத்துச் சேகரிப்பு என்பது எளிதாக இருந்திருக்க இயலாது. தொகுப்பு முயற்சியே அரிய ஒன்றாக இருந்திருக்க வேண்டும். மேலும் முழுமையாக்க முயற்சியும் மிக அரிய ஒன்றாகவே தோன்றுகின்றது. ஆதலின் இந்நூலாக்கம் பேராசிரியருடைய வாழ்க்கைக் குறிக்கோளாக அமைந்துள்ளதை உணரமுடிகிறது.

வைணவம் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய நூலாகிய இந்த ஆய்வுக் களஞ்சியம் ஒரு நிறுவனத்தால் மட்டுமே முழுமையாக்கம் பெறக்கூடியது. ஆனால் தேவாரமணி. பேராசிரியர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் தனியொருவராய் அம்முயற்சியை மேற்கொண்டு சாதித்திருக்கிறார். அதற்கு முன்னதாக அவர் வெளியிட்ட கலைக் களஞ்சியங்கள் ஒருவகையில் மட்டுமே உதவி இருக்கின்றன. இந்த நூல் அவருடைய வைணவ நூல் வெளியீட்டு வரிசையில் இரண்டாவது முயற்சி. கலைக்களஞ்சியத்தைப் பொறுத்தவரை முதல் முயற்சி. முழு முயற்சி. அம்முயற்சிகளில் அவர் வெற்றியும் கண்டுள்ளார்.

* *இந்தியாவைக் கடந்தும் திருமால் வழிபாடு பரவி இருந்தமை.*
* *ஆழ்வார்கள் ஆச்சாரியர்கள் பற்றிய குறிப்புகள்.*
* *தமிழகத்தில் உள்ள திருமால் திருக்கோயில்களின் மாவட்ட வாரியான முழுமையான பட்டியல் மற்றும் தென்னிந்தியா, வடஇந்தியாவில் உள்ள திருமால் திருக்கோயில்களின் பட்டியல்.*
* *தமிழில் அமைந்த திருமால் பற்றிய இலக்கியங்கள்.*
* *திருமாலிய நெறியாளர்களின் பட்டியல்.*
* *வைணவத் தத்துவ நூல்கள் மற்றும் தத்துவங்கள்*

முதலானவை இக்கலைக் களஞ்சியத்தில் இடம்பெற்ற தொகுப்புக்களில் மிகக் குறிப்பிடத் தகுந்தனவற்றுள் சிலவாகும். திருநெறிய தமிழ்மணியான பேராசிரியர் முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் இன்பக்கதி நல்கும் திருமாலிய நெறிவிளக்கும் அரிய நூலை நம் கைகளில் இன்று தவழவிட்டுள்ளார்.

சமயத்தைப் பற்றி வெளிவரும் நூல்களில் சரியானவை சிலவே. அதிலும் வைணவத்தைப் பற்றி வெளிவருபவை மிகச் சிலவே. அச்சிலவற்றுள் முழுமையானதாக, பல சிறப்புக்களைக் கொண்டதாகத் திகழ்கிறது இந்நூல். தமிழறிந்த அனைவரும், சமய உணர்வு கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய நூல் இது. திருமாலிய நெறியைப்போற்றும் அனைவரும் தம் இல்லில் தவறாது வைத்திருக்க வேண்டிய நூல்களில் இன்று இந்நூலும் ஒன்றாகிவிட்டது.

இந்த நூலின் ஆசிரியரான பேராசிரியர். முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்கள் இது போன்ற நூல்கள் பலவற்றை இத்தமிழுலகிற்கு அளிக்கவேண்டும். அவற்றைப் படித்துச் சமயநெறி தழைத்துத் தமிழினம் சிறக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல திருவேங்கடமுடையானைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

அன்பன்

கும்பகோணம்

தி. அரங்கநாதன்.

ஆசிரியர் உரை

பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி அனலும்
பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடல் ஏழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே!

- ஸ்ரீ திருமங்கையாழ்வார்

ஸ்ரீ இராமாவதாரத்தின் மாண்பினைப் பாடமுனைந்த கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வார்

'ஓசைபெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்கு புக்கென
காசில் கொற்றத்து இராமன் கதையினை
ஆசை பற்றி அறையலுற் றேனரோ'

என்று அவையடக்கமாய்க் கூறிப்போந்தார். அவதாரம் ஒன்றின் மேன்மையை உரைக்கப்போந்த அவர்நிலையே அதுவென்னில் பரந்து விரிந்து தோன்றும் வைணவ சமயக் கருத்துக்களை 'ஸ்ரீவைஷ்ணவ சமயக் கலைக்களஞ்சியம்' என்று நூலாய்த் தொகுக்க முனைந்துள்ள ஒன்றுக்கும் பற்றா எளியேனுடைய நிலைமை என்னாவது?

சைவசமயக்கலைக் களஞ்சியம், விநாயகர் கலைக் களஞ்சியம், திருமுருகன் கலைக் களஞ்சியம் முதலான நூல்களைத் தொகுத்துள்ள அடியேற்கு வைணவ சமயக் கலைக் களஞ்சிய நூல்தொகுப்பு முயற்சி சற்று அதிகப் பிரசங்கித்தனமானதாகத் தோன்றினாலும் என்னைத் தமிழ் ஆய்வுலகத்திற்கு அறிமுகம் செய்து ஏற்றம் தந்த வைணவ சமயத்திற்கு என்னாலான சிறு கைமாறைச் செய்யவேண்டும் என்னும் மன உந்துதலே இந்நூலை வரைவதற்கான அடிப்படைக் காரணம் என்பதே உண்மை.

குடந்தை அரசு கல்லூரியில் 1965ஆம் ஆண்டில் முதலாமாண்டு தமிழ் இலக்கிய வகுப்பில் படித்து வந்தபோது, 'திருமங்கையாழ்வார்

வாழ்வும் வாக்கும்' என்னும் பொருள் குறித்து மதுரை தியாகராயர் கல்லூரி நடத்திய மாநில அளவிலான ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு என்னை அழைத்து ஆற்றுப்படுத்திய பெருந்தகையாளர் பேராசிரியர். திரு. கோ. சங்கரராசன் அவர்கள் ஆவார்கள்.

அவர்கள் காட்டிய நெறியில் அடியேனால் முதன்முதலாக அந்நாளில் 120 பக்க அளவில் எழுதப்பெற்ற **வைணவ சமய ஆய்வுக் கட்டுரை தமிழ் மாநில அளவில் முதற்பரிசினைப் பெற்றுத் தந்ததோடு** பேரறிஞர்களான டாக்டர். தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர். சி. இலக்குவனார், டாக்டர். அ. கி. பரந்தாமனார், பெருந்தகையாளர் பி.ஆர். புருஷோத்தம நாயுடு, ஐயன்பெருமாள் கோனார் முதலான பல்துறைத் தமிழ்ப் பேரறிஞர் களுடைய நல்வாழ்த்துக்களையும் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரியார் சுவாமிகளின் நல்லாசியையும் ஒருங்கேப் பெற்றுத் தந்தது. அவ்வித்தினைத் தொடர்ந்து சென்னை லயோலாக் கல்லூரியினால் நடத்தப்பெற்ற மாநிலக் கல்லூரிகள் அளவிலான ஆய்வுக் கட்டுரைப் போட்டியிலும் என்னால் கலந்துகொண்டு முதல் பரிசினைப்பெற இயன்றது.

இவ்வாறு எளியேனை ஆய்வுலகிற்கு அறிமுகம் செய்து ஏற்றம் தந்த ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் நூற்றிஎட்டு திவ்யதேசங்களுள் ஒன்றான திருநந்திபுர விண்ணகரத் தல வரலாற்றினை அண்மையில் அடியேன் எழுதி வெளியிட மாலவன் திருவருள் துணை நின்றது. அவ்வமயம் தோன்றிய நினைவலைகள் இக்களஞ்சியத்தொகுப்பினைத் தொகுக்க எனக்குப் பெரிதும் தூண்டுகோலாய் அமைந்தன.

ஏனைய சமயங்கள் போலன்றிக் கட்டுப்பாடுகள் பல நிறைந்துள்ள வைணவ சமயத்தின் வைகானசர்/ பாஞ்சராத்திரர்/ வடகலையார்/தென்கலையார்/புராணிகர்கள்/ வரலாற்றாசிரியர்கள் எனவரும் பல்வேறு வைணவ சமயப்பிரிவினரும் மனம் கோணாத வண்ணம் இக்களஞ்சிய நூலைத் தொகுப்பதில் பல்வேறு சிக்கல்களும் சிரமங்களும் அடியேற்குத் தோன்றின என்பதே உண்மை. அவற்றின் விளைவாக இந்நூலின்கண் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில கருத்துக்கள் முரணாக அமையப்பெற்றுள்ளதாகத் தோன்றிடினும்,

'பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ!'

எனும் கம்பன் கவிமொழிக்கிணங்க, சிறியேன் செய்துள்ள சிறுபிழைகளையெல்லாம் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கையரான வைணவ சமயச் சான்றோர் பெருமக்கள் பொறுத்தருளி எளியேனை ஆசீர்வதித்து அருளுமாறு அன்புடன் பணிந்துவேண்டுகின்றேன்.

என்னை உருவாக்கிய என் அன்புத்தாயார் **அமரர் சிவ. கமலாம்பிகை அம்மையார்** மற்றும் எழுத்துலகில் என்னை ஊக்குவித்த இனிய தந்தையார் சைவத்தமிழ்மணி **வித்துவான். மா. சிவகுருநாதப் பிள்ளை** ஆகியோரைப் பணிந்து போற்றுகின்றேன்.

இந்நூலை எழுதும்போது பல்வகையானும் உடனின்றுதவிக் கட்டுரைகளைப் படியெடுத்துப் பணிசெய்த **தி. மலர்க்கொடி,** துணைநின்ற துணைவியார். **தி. இராணியம்மாள்,** 'சிவ சிவ' இதழாசிரியர். அன்பு மகன். **தி. திருநாவுக்கரசு,** பிழைதிருத்தம் செய்துதவிய முனைவர். **தி. பாலசுப்பிரமணியன்,** சென்னை **கிரிசுந்தரி சரவணன், தி. இராதாகிருஷ்ணன்** ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள்.

வைணவ சமய பூஷணமாகத் திகழும் குடந்தை அரசு கலைக் கல்லூரி தமிழ் இணைப்பேராசிரியர் முனைவர். **தி. அரங்கநாதன்** அவர்கள் வைணவ சம்பிரதாயங்களில் தாம் ஆழங்காற் பட்டுள்ளமையோடு என்னையும் அச்சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொள்ளச் செய்த பெருமையர் ஆவார். அன்னார் இந்நூலுக்கு முன்னுரை எனத்தக்க அணிந்துரையை உவந்தளித்துள்ளார். அவர்கட்கு என் நன்றி.

என் பிறந்த ஊரான சுந்தரப்பெருமாள்கோயிலில் ஸ்ரீ சௌந்தர ராஜப் பெருமானுக்குத் திருவாராதனம் செய்துவரும் 'பெருமாள் பெருந்தொண்டர்' **ஸ்ரீ சுந்தர்ராஜ பட்டாச்சாரியார்** அவர்கள் அறிமுகவுரை தந்துள்ளார். அவர்கள் திருவடிகட்கு என் நமஸ்காரம்.

இந்நூலைச் சிறப்பான முறையில் வடிவமைத்த செல்வி. க. திலகவதி, அட்டைப்படம் அமைத்துதவிய செல்வன். **டி. சிவா,** அச்சக உரிமையாளர். **கே.எம்.செந்தில்குமார்** ஆகியோருக்கு என் வாழ்த்துக்கள்.

சமய உலகம் சீர்பெறும் வகையினில் சிறப்புடைய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுவரும் சென்னை வானதி பதிப்பக அதிபர் பெருந்தகை. **திரு. ஏ. திருநாவுக்கரசு** அவர்கட்கும், அன்னாரின் அன்புத்தோன்றல் சைவ நூற்பதிப்புச் செம்மல் **திரு.தி. இராமநாதன்** அவர்கட்கும் இறையருளால் நலம் பல பெருக வேண்டியமைகின்றேன்.

கும்பகோணம். **சிவ. திருச்சிற்றம்பலம்**

ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக் களஞ்சியம்

தொகையகராதியும் திருத்தலங்களும்

பொருளடக்கம்

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென்மனனே!

- நம்மாழ்வார்

★ **வைணவ சமயத் தொகையகராதி**

– இறைவன் -உயிர்த் தொடர்பு நிலைகள் - உயிர்களின் இயல்பு விளக்கத் தொடர்கள் - இருவகை சிருஷ்டிகள் - நியாயங்கள் - தொண்டுநெறிகள் - அவதாரங்கள் வீடுபேற்றிற்கான உபாயங்கள் - பிரபத்திகள் - விசேஷணங்கள்

– மூன்று - திருமாலின் அடையாளங்கள் - அவதார நிலைகள் - திருக்கோல வகைகள் - திருமந்திரங்கள் - மூவகைச் சரணாகதி - மூவகை நெறிகள் - மூவகை உயிர்கள் - அவதார நோக்கங்கள் இறைநிலைகள் - பக்திநிலைகள் - மூவகை நாச்சியார் - மூவர் திருமேனித்தத்துவங்கள் - மூவகைத் தாபங்கள் - திவ்யத்திரயங்கள்

– சாதகர் நால்வர் - வைணவப் புராணங்கள் நான்கு - திருமாலிய மூர்த்தங்கள் - நால்வகைக் கூத்துக்கள் பிரபத்தியின் வகைகள் - யாப்பிலக்கணப் பிரபந்த வகைகள் திருமால் உகந்த நான்கு - திருமாலைப் பாடிய பரிபாடல் புலவர்கள்.

– பஞ்சகாலப் பராயணர்கள் நியமங்கள்- பரமபதம் பெறத் தடையாய் உள்ளவை - ஐந்து ஈடுஉரைகள் - பெருமாள் சந்நிதிகள் - மூலப் பிரகிருதி

– நிலைகள் - வேதப்பிரிவுகள் - பஞ்சதத்துவங்கள் - வைணவர் விதிகள் - பஞ்சாயுதங்கள் - மூர்த்தி பேதங்கள் - அர்த்த பஞ்சக ஞானம் - பிரபத்தி அங்கங்கள் - வைணவர் கடமைகள் - அகவளர்ச்சி நிலைகள் - எம்பெருமான் சொரூப குணங்கள் - பிரபந்தச் சிற்றிலக்கியங்கள் - பஞ்சதேவியர்.

– பிரபத்தி உறுப்புகள் - இறைவன் குணங்கள் - திருவாராதன நிகழ்வுகள் - முத்திபெற்ற ஜீவான்மாநிலை சாளக்கிராமத் தலங்கள் - சங்க இலக்கியப் புலவர் பெயர்கள்.

– சப்த புண்ணிய ஷேத்திரம் - பிரபத்தி நிலையில் ஏழு மூவழி நிலை - பக்தியோக நெறிகள் - பாகவத லட்சணங்கள் - திவ்யதேசநாடுகள்.

– திவ்ய மந்திரம் - இறைவன் குணங்கள் - அட்ட சயனங்கள் - அஷ்டப்பிரபந்தம் - எட்டு விருட்ச தீர்த்தங்கள் - நித்ய ஆசாரங்கள் - இராமானுஜர் சீடர்கள் - பக்தியின் எட்டு குணங்கள் - எண்வகைச் சித்திகள் - யோகத்தின் எட்டு அங்கங்கள்.

– ஆன்மா இறைவன் உறவுநிலைகள் - வானேறும் வழிப்படிகள் - நவ திருப்பதிகள் - நவ பக்திகள் - நவக்கிரக மூர்த்தங்கள்.

– அவதாரங்கள் - திருமண் தத்துவம் - பரமாத்மா - ஜீவாத்மா தொடர்புநிலைகள் - பன்னிரு சயனத் தலங்கள் - திருமண் காப்பின் வடிவங்கள் - மகாபாரதப் பருவங்கள் - நித்ய சூரிகள் - சாளக்கிராம வகைகள் - பிரபந்தத்தில் உள்ள நால்வேதங்கள் - ஆறு அங்கங்கள் - 11 உபாங்கங்கள் - நித்திய முக்தர்கள் 22 - பாகவத அவதாரங்கள் 22 - திருமாலின் திருக்கோலங்கள் 24 - அவதூத கீதை குருமார்கள் - வைகாநச யக்ஞங்கள் - 74 - சிம்ஹாசனாதிபதிகள் - மகாபக்த விஜய அடியவர்கள் - 108 திவ்ய தேசங்கள் - பாஞ்சராத்ர சம்ஹிதைகள் - திருமால் நாம மந்திர மகிமை.

★ திருமால் திருமுக மண்டலத் திருக்கோயில்கள்

★ திருமால் திருக்கோலங்கள்

★ திவ்யதேசப்பெருமான் திருநாமங்கள்

★ திவ்யதேசப் பிராட்டித் திருநாமங்கள்

★ திவ்யதேச விமானங்கள்

★ திவ்யதேச விருட்சங்கள்

★ திவ்யதேசத் தீர்த்தங்கள்

★ சிறப்புத் திருவமுதுகள்

★ பரிகாரத் தலங்கள்

★ நோய் தீர்க்கும் வைணவத் திருத்தலங்கள்

★ திவ்யதேசத்தில் பேறுபெற்ற பேரருளாளர்கள்

★ திவ்யதேச முடிபுச் சொற்கள்

★ திவ்யதேச வழக்குச் சொற்கள்

★ **மாவட்டத்திருத்தலங்கள்**

இராமநாதபுரம் மாவட்டம் - 9

1. ஆதிசேது.
2. இராமநாதபுரம்
3. இராமேஸ்வரம்
4. இராஜசிங்கமங்கலம்
5. திருப்புல்லாணி *
6. தேவிப்பட்டிணம்
7. தொண்டி
8. பரமக்குடி
9. மேலப்பார்த்திபனூர்

ஈரோடு மாவட்டம் - 4

10. ஈரோடு
11. தொண்டீச்சரம்
12. பவானி அல்லது திருநணா
13. விஜயமங்கலம்

கடலூர் மாவட்டம் - 5

14. காட்டுமன்னார் கோயில்
15. சிங்ககிரி
16. திட்டக்குடி
17. திருவஹீந்திரபுரம் *
18. ஸ்ரீமுஷ்ணம்

கரூர் மாவட்டம் -4

19. கரூர்
20. காட்டுப்புத்தூர்
21. தான்தோன்றிமலை
22. திருநாராயணபுரம்

கன்னியாகுமரி மாவட்டம் - 6

23. திருவண்பரிசாரம் *
24. திருப்பதிசாரம்
25. திருவாட்டாறு *
26. நாகர் கோயில்
27. பத்மநாபபுரம்
28. பறக்கை

காஞ்சிபுரம் மாவட்டம் - 58

29. அகிலி
30. அட்டபுயகரம் *
31. அரிசக்ரபுரம்
32. அனந்தூர்
33. ஆற்காடு
34. ஆர்பாக்கம்
35. ஆரணிரோட்
36. உத்திரமேரூர்
37. உள்ளாவூர்

38. எடமிச்சி
39. காட்டாங்குளத்தூர்
40. குடியாத்தம்
41. கூரம்
42. சாலவாக்கம்
43. சிங்கப்பெருமாள் கோயில்
44. செங்கற்பட்டு
45. செய்யூர்
46. சூணாம்பேடு
47. தாமல்
48. திருக்கச்சி *
49. திரு ஊரகம் *
50. திருக்கள்வனூர் *
51. திருக்கடன்மல்லை *
52. திருக்காரகம் *
53. திருக்கார்வானம் *
54. திருநிலாத்திங்கள் துண்டம் *
55. திருநீரகம் *
56. திருத்தண்கா *
57. திருப்பரமேச்சுர விண்ணகரம் *
58. திருப்பவள வண்ணம்
59. திருப்பாடகம் *
60. திருவெஃகா *
61. திருவேளுக்கை *
62. திருக்கருங்குழி
63. திருப்புட்குழி *
64. திருவிடவெந்தை *
65. திருவோத்தூர்
66. துப்புல்
67. நெய்யடிவாக்கம்
68. பஞ்சுப்பேட்டை
69. பட்டாளம்
70. பழையனூர்
71. புதிரன்கோட்டை
72. புலிப்பரக்கோயில்
73. புலிப்பாக்கம்
74. புள்ளம்பாக்கம்
75. பேரனக்காவூர்
76. பொன்விளைந்த களத்தூர்
77. மதுராந்தகம்
78. மருதம்
79. மலையன் குளம்
80. மலைவையாவூர்
81. முரசவாக்கம்
82. மேல்மதுரமங்கலம்
83. விசூர்
84. வில்லியம்பாக்கம்
85. ஸ்ரீ பெரும்புதூர்
86. ஜோலார்பேட்டை

கோவை மாவட்டம் - 31

87. அக்ரஹாரசாமக்குளம்
88. ஆலத்தூர்
89. ஆனைமலை
90. இடிகரை
91. உடுமலைப்பேட்டை
92. ஒத்தக்கால்மண்டபம்
93. கருவலூர்
94. காரமடை
95. காரைத்தொழுவு
96. காரைமலை
97. காணியூர்
98. குமரலிங்கம்
99. குறும்பபாளையம்
100. கோயம்புத்தூர்
101. சங்கராமநல்லூர்
102. சர்க்கார் கண்ணாடிபுத்தூர்
103. சிங்க நல்லூர்
104. சின்னவீரம்பட்டி
105. சூளூர்
106. சேவூர்
107. சோழமாதேவி

108. பெரியகளந்தை
109. பொள்ளாச்சி
110. திருமுருகன் பூண்டி
111. திருப்பேரூர்
112. தெற்கு அவிநாசிப்பாளையம்
113. தேவாம்பதி
114. நடுவார்சேரி
115. நல்லூர்
116. வடவாம்பட்டி
117. வெள்ளலூர்

சிவகங்கை மாவட்டம் - 14

118. இளையான்குடி
119. இடைக்காட்டூர்
120. எமனேஸ்வரம்
121. ஒரத்தூர்
122. கொந்தகை
123. திருக்கோட்டியூர் *
124. சிவகங்கை
125. திருப்பாச்சேத்தி
126. தேவக்கோட்டை
127. நாட்டரசன் கோட்டை
128. பரமக்குடி
129. பாகனேரி
130. மானாமதுரை
131. வேலங்குடி

சென்னை மாவட்டம் - 37

132. அத்திப்பட்டு
133. அபிராமபுரம்
134. அடையாறு
135. அயனம்பாக்கம்
136. எழும்பூர்
137. கல்பாக்கம்
138. காலாடிப்பேட்டை
139. குளத்தூர்
140. குண்ணம்
141. கெருகம்பாக்கம்
142. கொரட்டூர்
143. கொத்தவால்சந்தை
144. கோபாலபுரம்
145. கோயம்பேடு
146. கோடம்பாக்கம்
147. சித்தாதிரிப்பேட்டை
148. சூளை
149. சென்னை
150. சைதாப்பேட்டை
151. சோமங்கலம்
152. திருக்கச்சூர்
153. திருக்கள்ளம்
154. திருவல்லிக்கேணி *
155. திருவாய்ப்பாடி
156. திருவொற்றியூர்
157. திருமயிலாப்பூர்
158. தியாகராயநகர்
159. நந்தம்பாக்கம்
160. நசரத் பேட்டை
161. நுங்கம்பாக்கம்
162. புரசைப்பாக்கம்
163. பூவிருந்தவல்லி
164. பெசன்ட் நகர்
165. மாம்பலம்
166. முத்தியாலுப்பேட்டை
167. வண்ணாரப்பேட்டை
168. வேளச்சேரி

சேலம் மாவட்டம் - 6

169. அயோத்தியாப்பட்டினம்
170. ஆத்தூர்
171. கொங்குப்பட்டி
172. சின்னசேலம்
173. சேலம்
174. பாபநாசமலை

தஞ்சை மாவட்டம் - 29

175. திருஆதனூர் *
176. கருந்தட்டாங்குடி
177. கல்யாணபுரம்
178. காரப்பன்காடு
179. குடந்தை ராமசாமி கோயில்
180. சக்கரபாணிகோயில்
181. சுந்தரப்பெருமாள்கோயில்
182. சேங்கனூர்
183. தஞ்சை ஆளிநகர்
184. தஞ்சை மணிக்குன்றம்
185. தஞ்சை மாமணிக் கோயில் *
186. திருக்கண்டியூர் *
187. திருக்கவித்தலம் *
188. திருக்குடவாயில்
189. திருக்குடந்தை சாரங்கபாணிக்கோயில் *
190. திருக்கூடலூர் *
191. திருமண்டங்குடி
192. தியாகசமுத்திரம்
193. திருப்பேர்நகர் *
194. திருச்சேறை *
195. திருவிண்ணகர் *
196. திருபுள்ளம் பூதங்குடி *
197. திருநறையூர் *
198. திருநந்திபுர விண்ணகரம் *
199. திருவெள்ளியங்குடி *
200. திருக்கோளிலி
201. பந்தணைநல்லூர்
202. பாபநாசம்
203. பெரும்புலியூர்

தர்மபுரி மாவட்டம் - 1

204. தேன்கனிக்கோட்டை

திண்டுக்கல் மாவட்டம் 14

205. ஆயக்குடி
206. இராமராஜபுரம்
207. இராமகிரி
208. சின்னாளம்பட்டி
209. சுருளிமலை
210. சோழவந்தான்
211. தாடிக்கொம்பு
212. திண்டுக்கல்
213. பழநி
214. மண்ணாடிமங்கலம்
215. வத்தலகுண்டு
216. வடமதுரை
217. வாலாசமுத்திரம்
218. வேடசந்தூர்

திருச்சி மாவட்டம் - 17

219. அரியலூர்
220. உறையூர் என்னும் திருக்கோழி *
221. கள்ளம்
222. குணசீலம்
223. குணசேகரம்
224. குளித்தலை
225. மேலஅன்பில்
226. திருவரங்கம் *
227. திருஅன்பில் *
228. திருக்கரம்பனூர் *
229. திருவெள்ளறை *
230. திருசின்னம்பூண்டி
231. துறையூர்
232. பாச்சிலாச்சிராமம்
233. பெருமாள்மலை
234. மணக்கால்
235. நத்தம்

நெல்லை மாவட்டம் - 21

236. அம்பாசமுத்திரம்
237. ஆழ்வார்திருநகரி
238. இலஞ்சி
239. இராமேசநல்லூர்
240. கருங்குளம்
241. கல்லிடைக்குறிச்சி
242. கிருஷ்ணாபுரம்
243. சித்தமல்லி
244. தாழைநல்லூர்
245. திருக்குருகூர் *
246. திருக்குறுங்குடி *
247. திருநாங்கோயில்
248. திருநெல்வேலி
249. திரிபுராந்தகம்
250. திருப்புளிங்குடி
251. திருச்சிரீவரமங்கை *
252. திருவரகுணமங்கை *
253. பாப்பான்குளம்
254. பிரமதேசம்
255. புளியங்குடி
256. மன்னார்கோவில்

திருவண்ணாமலை மாவட்டம் - 18

257. அனக்காவூர்
258. ஆரணி
259. களப்பூர்
260. காப்பளூர்
261. கோவிலூர்
262. செங்கம்
263. செய்யாறு
264. தென்னாங்கூர்
265. புரிசை
266. புதுப்பாளையம்
267. பொன்னூர்
268. போளூர்
269. மாமண்டூர்
270. முள்ளண்டிரம்
271. மேல்சீஷமங்கலம்
272. வந்தவாசி
273. வாசுதேவம்பட்டி
274. வீரானந்தல்

திருவள்ளூர் மாவட்டம் - 38

275. அக்கரப் பாக்கம்
276. அரசூர்
277. அருங்குளம்
278. அயலூர்
279. ஆற்காட்டுக்குப்பம்
280. ஆரணி
281. இருளாஞ்சேரி
282. ஊத்துக்கோட்டை
283. ஊதிக்காடு
284. எலையம்பேடு
285. கட்டாவூர்
286. கன்னிகைப்பேர்
287. காட்டூர்
288. கும்மிடிப்பூண்டி
289. சிறுவாபுரி
290. செஞ்சி
291. செம்பேடு
292. தட்டமாஞ்சி
293. திருநீர்மலை *
294. திருஎவ்வுள் *
295. திருநின்றவூர் *
296. திருமழிசை
297. திருவள்ளூர்
298. தொட்டிக்கலை

299. தோழூர்
300. பட்டரைப்பெரும்புதூர்
301. பாக்கம்
302. பாடி
303. பேரம்பாக்கம்
304. பொன்னேரி
305. மணவூர்
306. மணிமங்கலம்
307. மீஞ்சூர்
308. ராமன்சேரி
309. நசரத்பேட்டை
310. நிமிழி
311. வெங்கல்
312. வெள்ளிக்கரம்

திருவாரூர் மாவட்டம் - 9

313. அடம்பர் (பனையூர்) - கல்யாண ரங்கநாதர் கோயில்.
314. அலிவலம் - கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.
315. காரப்பன்காடு
316. திருநல்லூர்
317. தில்லைவிளாகம்
318. திருமக்கோட்டை
319. திருக்கண்ணங்குடி *
320. ராஜ மன்னார்குடி
321. வடுவூர்

தூத்துக்குடி மாவட்டம் - 7

322. ஆத்தூர்
323. திருக்கோளூர் *
324. திருக்குளந்தை *
325. திருத்தொலைவில்லிமங்கலம் *
326. திருப்பேரை *
327. நத்தம்
328. திருவைகுண்டம் *

தேனி மாவட்டம் - 7

329. உப்பார்பட்டி
330. கங்குவார்பட்டி
331. கோட்டூர்
332. சீலையான்பட்டி
333. தாமரைக்குளம்
334. பெரியகுளம்
335. மேல்மங்கலம்

நாகை மாவட்டம் - 33

336. ஆக்கூர்
337. காட்டுமன்னார்கோவில்
338. கீழ்ச்சட்டநாதபுரம்
339. கீழச்சாலை
340. கொண்டல்
341. சிக்கல்
342. திருஇந்தளூர் *
343. திருச்சிறுபுலியூர் *
344. திருச்சித்ரகூடம் (சிதம்பரம்) *
345. திருக்காழிச்சீராம விண்ணகரம் *
346. தலைச்சங்க நாண்மதியம் *
347. திருக்கண்ணமங்கை *
348. திருக்கண்ணபுரம் *
349. திருவாலி *
350. திருநகரி
351. திருவழுந்தூர் *
352. திருநாகை *
353. திருஅரிமேயவிண்ணகரம் *
354. திருக்காவளம்பாடி *
355. திருசெம்பொன் செய்கோயில் *
356. திருத்தெற்றியம்பலம் *

357. திருத்தேவனார் தொகை *
358. திருப்பார்த்தன் பள்ளி *
359. திருவெள்ளக்குளம் *
360. திருமணிக்கூடம் *
361. திருமணிமாடக்கோயில் *
362. திருவண்புருடோத்தமம் *
363. திருவைகுந்த விண்ணகரம் *
364. நரசிங்கன்பேட்டை
365. நீடூர்
366. மயிலாடுதுறை
367. ராதாநல்லூர்
368. வேள்விக்குடி

நாமக்கல் மாவட்டம் - 3

369. கொடுமுடி
370. திருச்செங்கோடு
371. நாமக்கல்

புதுக்கோட்டை மாவட்டம் - 4

372. சாலக்கிராம ஷேத்திரம்
373. திருநாராயணபுரம்
374. திருமெய்யம் *
375. விராலிமலை

பெரம்பலூர் மாவட்டம் - 2

376. முத்துசேர்வாமடம்
377. குருவாலப்பர் கோயில்

மதுரை மாவட்டம் - 9

378. இடையக்கோட்டை
379. கரைக்கண்ணி
380. கீழ்மாத்தூர்
381. சௌதார்பட்டி
382. திருமாலிருஞ்சோலை *
383. திருக்கூடல்(மதுரை) *
384. திருமோகூர் *
385. பாலையூர் (திருமங்கலம்)
386. வாலாபுரம்

விருதுநகர் மாவட்டம் - 12

387. அருப்புக்கோட்டை
388. இளந்திரை கொண்டான்
389. இராஜ பாளையம்
390. கம்பைக்குடி
391. சாத்தூர்
392. சிவகாசி
393. திருத்தண்கால் *
394. திருவண்ணாமலை
395. திருவில்லிபுத்தூர் *
396. நத்தம்பட்டி
397. வாட்ரப்
398. வீரசோழம்

விழுப்புரம் மாவட்டம் - 22

399. சிங்காவரம்
400. சின்னதிருப்பதி
401. சின்னசேலம்
402. சீவலபூரை
403. திண்டிவனம்
404. திருவெண்ணெய்நல்லூர்
405. திருக்கோவலூர் *
406. திருபுவனை
407. திருமுண்டீச்சுரம்
408. திருமுதுகுன்றம்
409. திருவரங்கம்
410. தேவபந்தளம்
411. நொச்சலூர்
412. பண்ருட்டி
413. பரிக்கல்

414. பாதூர்
415. புதுச்சேரி
416. மேலூர்
417. வளவனூர்
418. விளம்பர்
419. விழுப்புரம்
420. வீராமூர்

வேலூர் மாவட்டம் - 16

421. ஆம்பூர்
422. ஆற்காடு
423. கலவை
424. கரிவேடு
425. காங்கேயநல்லூர்
426. காவேரிபாக்கம்
427. சக்கரமல்லூர்
428. சேரி
429. திருக்கடிகை * (சோளிங்கர்)
430. திருபாற்கடல்
431. திருப்பத்தூர்
432. துத்திப்பட்டு
433. பள்ளிக்கொண்டா
434. வாணியம்பாடி
435. வாலாஜாப்பேட்டை
436. வாழைப்பந்தல்

கேரள மாநிலம் - 56

437. அம்பலப்புழை
438. ஆலப்புழை
439. ஆல்வாய்
440. இருஞ்சாலகுடி
441. எர்ணாகுளம்
442. கல்பாத்தி
443. திருக்கண்டியூர்
444. கண்ணனூர்
445. திருக்கடித்தானம் *
446. காச்சாம்குறிச்சி
447. காஞ்சரங்காடு
448. காசர்கோடு
449. குருவாயூர்
450. கும்பளா
451. திருக்குலசேகரபுரம்
452. கொல்லம்
453. கொச்சி
454. கொட்டாரக்கரை
455. கொடும்பு
456. கொடுவாயூர்
457. கோழிக்கோடு
458. செருகுன்று
459. தத்தமங்கலம்
460. துறவூர்
461. திருச்சூர்
462. தொடுபுழா
463. நூறணி
464. பழையன்னூர்
465. பட்டாம்பி
466. பறளி
467. திருப்பரையார்
468. திருப்பணிதுரா
469. புரக்காடு
470. பொங்கணம்
471. மட்டாஞ்சேரி
472. மமூர்
473. மாவேலிக்கரை
474. மீன்குளம்
475. வர்க்கலா
476. திருவல்லவாழ் *

477. வடக்காஞ்சேரி
478. திருவம்பாடி
479. திருவார்ப்பு
480. வைக்கம்
481. வில்வாத்ரிமலை
482. திருவெண்காடு
483. திருகாட்கரை *
484. திருச்செங்குன்றூர் *
485. திருநாவாய் *
486. திருபுலியூர் (குட்டநாடு) *
487. திருமூழிக்களம் *
488. திருவண்வண்டூர் *
489. திருவனந்தபுரம் *
490. திருவாறன் விளை *
491. திருவித்துவக்கோடு *
492. ஸ்ரீராகவபுரம்

ஆந்திர மாநிலம் - 44

493. அன்னாவரம்
494. அகிரபல்லி
495. கதிரி
496. கர்னூல்
497. கடப்பை
498. கமலாபுரம்
499. காகினாடா
500. குண்டூர்
501. கொண்டாபுரம்
502. சிங்கராயகுண்டா
503. சிலகலபுடி
504. சூளூர்பேட்டை
505. செகந்தராபாத்
506. சோமபல்லி
507. தர்மபுரி
508. தாட்பத்ரி
509. தெனாலி
510. த்ராக்ஷராமா
511. நகரி
512. நரசாபட்டணம்ரோட்
513. நாராயணவனம்
514. நாகலாபுரம்
515. நாயுடுபேட்டை
516. நிடதவோல் (கூடூர்)
517. நெல்லூர்
518. பாபட்லா
519. பீமடோல்
520. பெனுகொண்டா
521. பெத்தசெருக்கூர்
522. பொப்பிலி
523. மங்களகிரி
524. யாதகிரி
525. ராஜமஹேந்திரம்
526. வால்டேர் சிம்மாசலம்
527. விசாகப்பட்டனம்
528. வினுகொண்டா
529. விஜயவாடா
530. வேமுல்வாடா
531. ஹைதராபாத்
532. ஸ்ரீ கூர்மம்
533. திருவேங்கடம் *
534. கீழத் திருப்பதி
535. மேலத் திருப்பதி
536. திருச்சானூர்

கர்நாடக மாநிலம் - 39

537. உடுப்பி
538. எடத்தூர்
539. கூடலி
540. கைதாள

541. கைவாரா
542. கொல்லூர்
543. கோகர்ணம்
544. கோரிபித்தனூர்
545. சங்கரநராயண
546. சரவணபெலகுலா
547. சிஞ்சன்சட்டி
548. சோமநாதபுரம்
549. தலக்காடு
550. தும்கூர்
551. தேவராயதுர்க்கா
552. தொட்குருகாட்
553. தொட்டகட்டவல்லி
554. தொண்டனூர்
555. நாசிப்பூர் திருக்கூடல்
556. பாகமண்டலா
557. பாதாமி
558. பெங்களூர்
559. பெல்லாரி
560. பேலூர்
561. மங்களூர்
562. மாடூர், மாத்தூர்
563. மிதுனசாலக்ராமம்
564. மைசூர்
565. ராமநாதபுரம்
566. லேபாஷி
567. ஐஹோளே
568. ஹம்பி
569. ஹப்பி
570. ஹாஸ்பேட்
571. வி. நரசிம்மபுரம்
572. சிவசமுத்திரம்
573. திருநாராயணபுரம்
574. தொண்டனூர்
575. ஸ்ரீரங்கப்பட்டினம்

மகராஷ்டிரம் - 12

576. ஆலந்தி
577. கல்யாண்
578. கதாம்புரி
579. குண்டினபுரம்
580. கோலாப்பூர்
581. நாசிக்
582. பம்பாய்
583. பண்டரிபுரம்
584. பாதாமி
585. பூனா
586. ராம்டேக்
587. திருச்சிங்கவேள் குன்றம் *

மத்தியப்பிரதேசம் - 5

588. அமர்கண்டக்
589. உஜ்ஜயினி
590. காஜீராஹோ
591. குவாலியர்
592. ஜபல்பூர்

குஜராத் - 13

593. ஆஜ்மீர்
594. உதயபூர்
595. ஓகாட்போர்ட்
596. கோவா
597. சித்தூர்கர்
598. சூரத்
599. சோமநாதம்
600. டாக்கோர்
601. ராஜ்கோட்
602. போர்பந்தர் போர்ட்

603. திருத்துவாரகை *
604. ஸீதாபூர்
605. ஜாம்நகர்

மேற்குவங்கம் - 1

606. திருநைமிசாரண்யம் *

பஞ்சாப் - 1

607. அமிர்தசரஸ்

பீஹார் - 5

608. கயா
609. பாகல்பூர்
610. மாங்கீர்
611. மிதிலாபுரி
612. மிதிலா

உத்திரப்பிரதேசம் - 22

613. திருவயோத்தி *
614. ஆக்ரா (வடமதுரா) *
615. உத்தராயாத்திரை
616. காசி
617. குருக்ஷேத்திரம்
618. சித்திரகூடம்
619. சிம்லா
620. சீதாபூர்
621. டெல்லி
622. நேபாளம்
623. பத்ரிநாத்
624. பால்வால்
625. ரிஷிகேசம்
626. ஸ்ரீநகர்
627. திருவாய்ப்பாடி *
628. திருபதரியாச்சரமம் (இமயமலை) *
629. திருப்பிருதி *
630. திருக்கண்டமென்னும் கடிநகர் *
631. திருச்சாளக்கிராமம் *
632. லெஷ்மணபுரி
633. ஸ்ரீவைகுண்டம் (பரமபதம்)
634. திருப்பாற்கடல்

ஒரிஸா - 3

635. கோலாகாட்
636. சகிகோபால்
637. டாம்லுக்

வெளிநாடுகள் - 11

இல்லினாய்ஸ்
ஓகியோ
கலிபோர்னியா
கனடா
சிக்காகோ
பென்சில்வேனியா
மேற்கு வர்ஜீனியா
மேரிலாண்ட்
நியூயார்க்
நியுஜெர்சி
ஜியார்ஜின்



ஸ்ரீ வைஷ்ணவத் தொகையகராதி

ஒன்று

* மதுர கவியாழ்வார் அருளிய பிரபந்தப் பாசுரம் ஒன்றே. ''கண்ணி நுண் சிறுத்தாம்பு''.
* திருப்பாணாழ்வார் அருளிய பிரபந்தம் ஒன்றே. 'அமலனாதிப்பிரான்'.
* குலசேகராழ்வார் அருளிய பிரபந்தம் ஒன்றே. 'திருமொழி'
* திருப்பரமபதம் திவ்யதேசம் மட்டும் ஆழ்வார்கள் எண்மருடைய மங்களாசாசனம் பெற்றதாகும்.
* திருவேங்கடம் திவ்யதேசம் மட்டும் பத்து ஆழ்வார்களுடைய மங்களாசாசனம் பெற்றதாகும்.
* ஆழ்வார்களுள் ஒருவரால் மட்டும் மங்களாசாசனம் பெற்ற திவ்ய தேசங்கள் 70.
* வலது கையில் மத்தும் இடது கையில் கயிறையும் ஏந்தி யாதவகுல பாலகனாகப் பாலகிருஷ்ண வடிவம் உடுப்பியில் மட்டுமே காணப்படுகிறது.
* திருமாலின் பத்து அவதார வடிவங்களுள் நரசிம்மாவதார வடிவம் மட்டுமே யோக நிலையில் உள்ளதாகச் சுட்டப்பெற்று யோக நரசிம்மர், லட்சுமி நரசிம்மர் எனும் பெயர்களால் வணங்கப் பெறுகின்றது.
* *வலங்கை சங்குபாணி:* வலது கையில் சங்கினை ஏந்தியுள்ள பெருமானைத் திருக்கோவிலூரில் மட்டும் கண்டு தரிசிக்கலாம்.
* *வைணவ அண்ணாமலை:* ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள 'அண்ணாமலை' எனும் திவ்யதேசம் தென்திருப்பதி என்று சிறப்பித்துக் கூறப்பெறுகின்றது.

பெற்று வரும் மாவட்டங்கள், வட்டங்கள் சற்று மாறுபட்டு அமைந்திருக்க வாய்ப்புள்ளது என்பதை மறுக்க இயலாது. ஆதலின் அத்திருத்தலங்கள் அமைந்துள்ள பகுதிகளை ஓரளவு முன்பின்னாகச் சுட்டி அறியப்பெறும் வகையில் இந்நூல் ஒருசிறிது துணைசெய்யும் என்பது அடியேன் நம்பிக்கை.

வைணவ சமயக் கலைக்களஞ்சியம் என்னும் இந்நூல் தொகுதி முழுமையாக முற்றுப்பெற்ற முயற்சி என்று உறுதியாகக் கூற இயலாது.

அந்நோக்கத்தின் அடிப்படையில் அடியேன் மேற்கொண்ட முதல் முயற்சி இந்நூல் என்பதே ஓரளவு பொருத்தம் உடையதாகும்.

இச்சிறு முயற்சியினைத் தொடர்ந்து வைணவ சமயப் பேரறிஞர்கள் தம் நுண்மாண்நுழைப்புலத்திறத்தே தோன்றும் அரிய பல கருத்துக்களைத் தெரிவித்து அருளினால் அவை அடுத்துவரும் பதிப்புக்களில் நன்றியுடன் இடம்பெறச் செய்யப்பெறும். அம்முயற்சி வைணவ சமய உலகிற்கு அவர்கள் செலுத்தும் ஞானநன்கொடையாகும் என்பதில் ஒரு சிறுதும் ஐயம் இல்லை.

மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணம் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவ**கன்சீ**ர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியிடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராய ணா என்னா நாவென்ன நாவே

- இளங்கோவடிகள்

உ ஸ்ரீ

ஒருகுறளாய் இருநிலம்மூ வடிமண் வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திரள்நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவைஆறும் இசைகள் ஏழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே!.

- திருமங்கையாழ்வார்

பாற்கடலில் பள்ளி கொண்டருளும் பரந்தாமனான திருமால் திறம், வைணவச் சமயத் திருத்தலங்களான திவ்யதேசங்கள், ஆழ்வார்கள் அவர்களுடைய அருளிச் செயல்கள், ஆச்சாரியார்கள், தத்துவங்கள் முதலான பல்வகைச் செய்திகளைக் கட்டுரை வடிவில் வெளிக் கொணர்ந்தால் அவை பலநூறு பக்கங்களாக விரிவடைந்து பயில்வோர்க்கு மருட்கையினை ஊட்டும் ஆதலின் அவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு, இன்றியமையாப் பல்வேறு வைணவ சமயக் குறிப்புக்களை ஓரளவு தொகுத்து *எண் இயல்* அடிப்படையில் தொகையகராதியாக ஈண்டு தொகுத்தளிக்கப்பெறுகிறது.

அதுபோலத் திருமால் உறைந்தருளும் திருத்தலங்கள், மங்களாசாசனம் பெற்ற திவ்யதேசங்கள், புராணத் தொடர்புடைய திருத்தலங்கள், அபிமான ஸ்தலங்கள் என்ற வகையில் இதுகாறும் தொகுக்கப்பெற்று நூல் வடிவாக வெளிவந்துள்ளன.

ஆனால் இத்தொகுப்பின்கண் மேற்கூறிய முறையில் இருந்து சற்று மாற்றப்பெற்றுச் சிறியதும் பெரியதுமாக ஆங்காங்கே அமைந்து வழிபடப் பெற்றுவரும் திருமாலின் திருக்கோயில்கள் அமைந்துள்ள ஊர்களைப் பற்றிய விவரங்கள் மாவட்டம், மாநிலம், நாடுகள் வாரியாக இந்நூலின்கண் தொகுத்தளிக்கப்பெற்றுள்ளன. மாவட்டத் தலங்களின் பட்டியல் அவ்வபோது அரசு, நிர்வாகப் பணி காரணமாக மாற்றம்

* இராமபிரானின் 10 அவதாரங்களில் வாமனாவதாரத்திற்குரிய சிறப்புக்கோயில் கொச்சிக்கு அருகில் உள்ள திருக்காபதிக் கரையில் அமைந்துள்ளது. இங்கு திருவோண நாளில் வாமனப் பெருமானை வணங்குவது சிறப்பாகும்.

* அக்காரக்கனி என்னும் மூலிகைகளால் உருவாக்கப்பெற்ற சோளிங்கர் நரசிம்மருக்கு அபிஷேகம் செய்யப்படுவதில்லை.

* ஆதிவராகத் திருக்கோயில் மாமல்லபுரம் அருகில் உள்ள திருவிடவெந்தைக் கோயிலில் வராகப்பெருமான் சந்நிதி அமைந்துள்ளது.

* பெருமாள் கோயில்களில், நவதிருப்பதிகளில் ஒன்றான ஸ்ரீவைகுண்டம் கள்ளப்பிரானுக்கு மட்டும் நாள்தொறும் பால் திருமஞ்சனம் நடைபெறுவது சிறப்பாகும்.

* நம்பாடுவான் என்னும் ஹரிசன வைணவ பக்தனுக்குப் பெருமாள் காட்சித்தர வேண்டிக் கருடனும், கொடிமரமும் திருக்குறுங்குடியில் சற்று விலகியுள்ளன.

* சங்கு மட்டும் தாங்கிய திருமால் வடிவினைத் திருவீழிமிழலையில் காணலாம்.

* வைணவ திவ்ய தேசங்களில் சித்திரை, ஐப்பசி மாதங்களில் சூரிய வழிபாடு நடைபெறும் திவ்யதேசம் ஸ்ரீவைகுண்டம் (திருநெல்வேலி) மட்டுமே.

* 11 ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்யதேசம் ஸ்ரீரங்கம் மட்டுமே.

* 108 திவ்ய தேசங்களில் அர்ச்சுனனுக்குக் கோயில் இருப்பது திருப்பார்த்தன் பள்ளியில் மட்டுமே.

* திவ்யதேசத்தில் விபூதி பிரசாதமாக அளிக்கப்படும் தேசம் திருவல்லவாழ் மட்டுமே.

* நவக்கிரகங்களில் வியாழக் கிரகத்துடன் தொடர்புடைய தலமாகக் கருதப்படுவது திருப்புளியங்குடி மட்டுமே.

* திவ்ய தேசங்களில் சிவாச்சாரியாரால் பூஜிக்கப்படும் திவ்யதேசம் திருநிலாத்திங்கள் துண்டம் (காஞ்சி) மட்டுமே.

* விலங்கினங்களில் கஜேந்திரன் என்னும் யானைக்கு முக்தி கொடுத்த திருத்தலம் திருகவித்தலம் மட்டுமே.

* நான்கு திருக்கரங்களுடன் சங்குசக்கரதாரியாக ராமன் சயனத் திருக்கோலத்தில் உள்ள திவ்யதேசம் திருப்புள்ளம்பூதங்குடி மட்டுமே.

* ஐந்து தேவியருடன் காட்சிதரும் திவ்யதேசம் திருச்சேறை மட்டுமே.

* திருமால் கோயில்களில் விபூதிக்கு முதன்மை தரும் ''திருநீறணி விழா'' திருக்கண்ணங்குடியில் மட்டுமே நடைபெறுகிறது.

* நவக்கிரகங்களில் சுக்கிரனுக்கு உரிய பரிகாரத் தலமாகத் திருவெள்ளியங்குடி என்னும் திவ்யதேசம் திகழ்கிறது.

* சித்திரை மாதம் சூரியக்கதிர்கள் திருக்கச்சித் திருமால் திவ்ய தேசத்தில் படுகின்றன.

* நாகத்தையும், அமிர்த கலசத்தையும் ஏந்திய கருடன் திருத்தங்கலில் மட்டுமே காணப்படுகிறது.

* மற்ற தலங்களில் உள்ளவாறு பஞ்சலோக விக்ரமாக இல்லாமல் வெள்ளியில் ஆன மூலவர் திருக்கோஷ்டியூரில் மட்டுமே உண்டு.

* பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீராடும் மகாமகக்கிணறு உள்ள திருத்தலம் திருக்கோஷ்டியூர் ஆகும்.

* ராமன் சரயூநதியில் தன் உடலை நீத்துப் பரமபதம் சென்ற இடம் குத்தகாட் என்று அழைக்கப்படுகிறது.

* திருமங்கை ஆழ்வார் முதன்முதலில் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்யதேசம் திருப்பிருதி என்று கூறப்படுகிறது.

* சூரியவழிபாடு நடைபெறும் ஒரே தலம் திருவாட்டாறு.

* ஒரு அடி நீளமுடைய கருங்கல்லால் ஆன நாதஸ்வரம் ஆழ்வார் திருநகரியில் காணப்படுகிறது.

* புதனுக்குரிய வைணவத்தலம் ஆழ்வார்திருகரி.

* திருமால் திவ்யதேசத்தில் ஆழ்வார் உத்தியோகசயனத்தலம் திருக்குடந்தை மட்டுமே.

* திருமால் திவ்யதேசத்தில் தர்ப்பசயனத்தலம் புல்லாணி மட்டுமே.

* திருமால் திவ்யதேசத்தில் போகசயனத் தலம் திருச்சித்திரகூடம் மட்டுமே.

* திருமாலின் மாணிக்கசயனம் திருநீர்மலை மட்டுமே.

* திருமால் திவ்யதேசத்தில் வடபத்ரசயனம் திருவில்லிபுத்தூர் மட்டுமே.

* திருமால் திவ்யதேசதலத்தில் பெருமாளின் வீரசயனத் தலம் திருஇந்தளூர் மட்டுமே.

* திவ்யதேசத்தில் ஆழ்வார் ஒருவரால் மட்டும் மங்களாசாசனம் பெற்றதலம் 67 தலங்கள்.

* பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தைமாதம் பூச நட்சத்திரத்தில் குருபகவான் வரும்பொழுது திருச்சேறை சார புஷ்கரணியில் நீராடுவது மகாமகத்திற்கு ஒப்பானதாகும்.

* இலங்கைக்கு அரசனாக விபீடணன் முடிசூட்டப்பட்ட திவ்யதேசம் திருப்புல்லாணி.

* வலமிருந்து இடமாக திருமாலின் சயனகோலம் உள்ள திவ்யதேசம் திருவெஃகா மட்டுமே.

* கற்சிலைகள் இல்லாத திவ்யதேசம் தில்லைவிளாகம் மட்டுமே.

* சங்கு, சக்கரத்துடன் கூடிய அனுமன் வடிவம் திருக்கடிகையில் மட்டுமே காணப்படுகிறது.

* கிருஷ்ண பகவான் குடும்பம் காணப்படும் திவ்யதேசம் திருவல்லிக்கேணி மட்டுமே.

* விபீஷணனுக்குத் தனி சந்நிதி உள்ள திவ்யதேசம் திருக்கண்ணபுரம் மட்டுமே.

* ஜடாயுவுக்குத் தனிச்சந்நிதி உள்ள திவ்யதேசம் திருப்புட்குழி மட்டுமே.

* ஆண்டாள், கருடன் மூலவருடன் காட்சிதரும் ஒரே திவ்யதேசம் - ஸ்ரீவில்லிபுத்தூர் மட்டுமே.

* திருப்பாணாழ்வாருக்குத் தனிச்சந்நிதி உள்ள திவ்யதேசம் உறையூர்.

* அஷ்டபுஜ நரசிம்மர் வெண்கலச்சிலை உள்ள திவ்யதேசம் திருநாகை மட்டுமே.
* இடது கையில் ஏடும் எழுத்தாணியும் கொண்டு திருமால் திகழும் திவ்யதேசம் திருஆதனூர் மட்டுமே.
* ராமானுஜர் துறவு பூண்ட திவ்யதேசம் திருகச்சி அத்திகிரி.
* செங்கோல் தாங்கிய உற்சவர் உள்ள திவ்யதேசம் திருக்கூடலூர்.

இரண்டு

* **நடுநாட்டுத் திவ்ய தேசங்கள் இரண்டு**

  1. திருக்கோவலூர், 2. திருவஹீந்திரபுரம்.

* **நிலவுலகில் காணப்பெறாத திவ்யதேசங்கள் இரண்டு**

  1. திருப்பாற்கடல், 2. திரு பரமபதம்

* **இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு நிலைகள்**

  1. *சேஷத்துவம்* - இருப்பும் முயற்சியும் வாழ்வும்; ஈசனுக்கும் பயன்படுமாறு செய்தல்.

  2. *பாரதந்திரியம்* - ஈசனுக்கு உறுப்பாய், அவன் இச்சைப்படிப் பயன்படுத்தத் தகுதியுடையோராதல்.

* **ஆழ்வார்களுள் இருவகை நிலை**

  அவயவங்கள்: நம்மாழ்வார் நீங்கலான (உடல் உறுப்புகள்) பதினொரு ஆழ்வார்கள்.

  அவயவி : நம்மாழ்வார்

  மேலும் இருவகை நிலைகளில் 1. பிரபந்தர்: (பிரபத்தி நெறி) நம்மாழ்வார் நீங்கலாக ஏனைய பன்னிரு ஆழ்வார்கள்.

  2. பிரபந்த கூடஸ்தர்: (முதல்வர்) நம்மாழ்வார்.

* ஆழ்வார்கள் இருவரால் பாடப்பெற்ற திவ்யதேசங்கள் - 21
* இரண்டு திவ்யதேசங்கள் ஆழ்வார்கள் எழுவரால் பாடப் பெற்றவை.

* **உயிர்களின் இயல்பு விளக்கத் தொடர்கள் இரண்டு.**

  1. தருமிபூத ஞானம்: உயிரின் சொரூபம்.

2. தரும பூத ஞானம்: உயிர் உணரும் சக்தி.

* **தொண்டரடிப் பொடியாழ்வார் அருளியன இரண்டு.**

1. திருமாலை, 2. திருப்பள்ளியெழுச்சி.

* **பெரியாழ்வார் அருளியன இரண்டு.**

1. பெரிய திருமொழி, 2. திருப்பல்லாண்டு

* **ஆண்டாள் அருளியன இரண்டு.**

1. திருப்பாவை, 2. நாச்சியார் திருமொழி.

* **திருமழிசை ஆழ்வார் அருளியன இரண்டு.**

1. நான்முகன் திருவந்தாதி, 2. திருச்சந்த விருத்தம்.

* **நாதமுனிகள் அருளிய நூல்கள் இரண்டு.**

1. யோக ரகசியம், 2. நியாய தத்துவம்.

* **பிள்ளை லோகாசார்யர் அருளிய நூல்கள்**.

1. அர்த்த பஞ்சகம், 2. தத்துவத் திரயம்

* **மணவாள மாமுனிகள் என்னும் பெரிய ஜீயர் அருளியவை.**

1. ஆச்சார்ய ஹிருதய வியாக்யானம், 2. உபதேச ரத்னமாலை

* **திருமாலியத் தொண்டு நெறிகள் இரண்டு.**

1. *பகவத் கைங்கர்யம்:* பகவானுக்குச் செய்யப்பெறும் தொண்டு நெறி.

2. *பாகவத கைங்கர்யம்:* பகவான் தொண்டர்கட்குச் செய்யப் பெறும் தொண்டு.

* **இரண்டு தேவாரத்தலங்களுள் இரண்டு திவ்யதேசங்கள்**

1. சிதம்பரம் (கோயில்) திருச்சித்திரக்கூடம் - கோவிந்தராஜன்

2. காஞ்சி (ஏகாம்பரநாதர் கோயில்) - திருநிலாத்திங்கள் துண்டம்.

* **கருடன் ஆதிசேடன் விசேட திவ்யதேசங்கள்**

ஆதிசேஷனாகிய பாம்பு, கருடாழ்வார் சந்நிதிகள் திருச்சிறு புலியூரில் அமைந்துள்ளன.

* திருவஹீந்திரபுரத்தில் கருடன் விரஜாநதி நீரினாலும், ஆதிசேஷன்
7 பாதாள கங்கை நீராலும் அபிஷேகம் செய்து பெருமானைப் பூசித்துள்ளனர்.

* **பொருள் மாறுபடும் வகைகள் - 2**

  பிரகிருதி: பிரிதொரு பொருளாக மாறுபடும் தன்மையது.

  விக்ருதி: பிறிதொரு பொருளாய் மாறுபட்டது.

* **சிருஷ்டிகள் இருவகை**

  சமஷ்டி சிருட்டி (அத்வாரக சிருட்டி): அண்டத்தைப் படைத்து அதற்குள் நான்முகனைப் படைத்தல்.

  வியஷ்டி சிருட்டி(சத்வராக சிருட்டி): நான்முகன் வாயிலாகப் பதினான்கு அண்டங்களின் உயிர்களைப் படைத்தல்.

* **நியாயங்கள் இருவகை**

  மற்கட நியாயம், மார்ச்சால நியாயம்

* **வலமும் இடமும்**

  மகாபலிபுரத்தில் உள்ள திருக்கடல் மல்லையில் வராகப் பெருமாள் பிராட்டியை வலதுபுறத்தில் தாங்கியுள்ளார்.

  திருவிடந்தை திவ்யதேசத்தில் வராகப்பெருமான் இடது கரத்தில் பிராட்டியை ஏந்திக் காட்சி தருகிறார்.

* கும்பகோணம் சாரங்கபாணி கோயிலில் தட்சிணாயன வாசல், உத்ராயணவாசல் என்று இரண்டு வாயில்கள் தனித்தனியே உள்ளன. அதுபோலத் திருவெள்ளறை என்னும் கோயிலில் தட்சிணாயனப் படிகள், உத்ராயணப் படிகள் என்று இரண்டு படிகள் உள்ளன.

* திருஇந்தளூர் சயனக்கோலத் திருமாலின் தலைமாட்டில் காவிரியும், கால்மாட்டில் கங்கையும் அமர்ந்த திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர்.

* பாதாளமேட்டு சீனிவாசப்பெருமாள்: கும்பகோணம் சாரங்கபாணி கோயிலில் எட்டு படிகள் கொண்ட பாதாள சீனிவாசனும் பிறிதுஒரு இடத்தில் மேட்டு சீனிவாசனும் திருச்சந்நிதி கொண்டுள்ளனர்.

* திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதிக்குச் சித்திரை மாதத்திலும், ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஆனி மாதத்திலும், தனித்தனியே உள்ள கொடி மரங்களில் கொடியேற்றிப் பிரமோற்சவம் நடைபெற்று வருகிறது.

✻ **அவதாரங்கள் இருவகை**

ஆவேச அவதாரம் (கௌணாவதாரம்) கபிலர் தாத்தாத்ரேயர். பரசுராமர் முதலானவை சம்சாரிகள் உபாசிக்கத்தக்கவை.

முக்கிய அவதாரம் (சாட்சாத் அவதாரம்) இராமர், கிருட்டிணர், வராகம் போல்வன முமுட்சுக்கள் உபாசிக்கத்தக்கவை.

✻ **வீடுபேற்றிற்கான உபாயங்கள் இரண்டு**

1. சித்தோபாயம் - தம்மால் செய்யப்பெற வேண்டியதாயன்றி முன்பேயுள்ள நெறி.

2. சாத்தியோபாயம் - நம்மால் மேற்கொள்ளப்பெறும் பத்தி, பிரபத்தி நெறிகள்.

✻ **பிரபத்தி இரண்டு வகை**

ஆர்த்த பிரபத்தி - உடனே மோட்சம் பெற விரும்பிச் செய்யும் சரணாகதி.

திருப்த பிரபத்தி - உடல் உள்ளவரை கர்மபலனை அனுபவித்து முடிவில் மோட்சம் பெற விரும்பிச் செய்யும் சரணாகதி.

✻ **சதுர்புஜராமர்கள் இரண்டு**

பொன்விளைந்த களத்தூர் கோயிலில் உள்ள ராமருக்கும் ஆந்திராவில் பத்ராசலத்தில் உள்ள ராமருக்கும் நான்கு திருக்கரங்கள் காணப்பெறுவது சிறப்பாகும்.

✻ கார்த்திகை மாதத்தில் அவதரித்த ஆழ்வார்கள் இருவர். திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்.

✻ நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் 1000 பாசுரங்களுக்கு மேல் அருளியவர் இருவர். நம்மாழ்வார் 1296 திருமங்கையாழ்வார் 1127.

✻ காவிரிக்கரை திருஅரங்கத்தைப் பூலோக வைகுண்டம் எனவும், தாமிரபரணிக் கரையில் அமைந்துள்ள ஆழ்வார் திருநகரியைப் பரமபதத்தின் எல்லை என்றும் கூறுவர்.

✻ *திவ்யதேசங்களில் உள்ள இரண்டு புலியூர்கள்:* 1. சிறுபுலியூர் - சோழநாடு; 2. திருப்புலியூர் - கேரளா.

✻ திருவேங்கடம், திருப்பாற்கடல் ஆகிய திவ்யதேசங்களில் தொண்டரப் பொடியாழ்வார் தவிர மற்றவர்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

* இருஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் - 21

* *வாழைமரம் தலவிருட்சங்களாக உள்ள திவ்யதேசங்கள் 2*. திருக்கரம்பனூர், திருவெள்ளியங்குடி.

* திவ்யதேசங்களில் எம்பெருமானின் இடதுபுறம் காட்சிதரும் பூதேவி வலதுபுறமாகவும், வலது புறம் காட்சிதரும் ஸ்ரீதேவி இடது புறமாகவும் காட்சிதரும் திவ்யதேசம் திருப்புட்குழி ஆகும்.

* மூலவரும் உற்சவரும் சமசிறப்புடன் பூஜிக்கப்படும் திவ்யதேசம் திருக்குடந்தை சாரங்கபாணி கோயில் ஆகும். ஆதலின் இது உபயப்பிரதான திவ்யதேசம் என்பர்.

* *உறங்காப்புளி உள்ள திவ்யதேசங்கள் இரண்டு.* 1. ஆழ்வார் திருநகரி. 2. திருக்கண்ணமங்கை.

* ஆழ்வார்கள் திருநாடு அடைந்த திவ்யதேசங்கள் இரண்டு. திருமங்கையாழ்வார் - திருக்குறுங்குடி.

  நம்மாழ்வார் - திருப்பேர்நகர்.

* பிரமனுக்கும், வால்மீகிக்கும் அழகிய வல்லியுடன் வடிவழகிய நம்பியாகத் திருமால் காட்சிதந்த திவ்யதேசம் திருஅன்பில்.

* மூன்று வாயில்களில் திருமால் கிடந்தகோலத் தரிசனம் தரும் திவ்யதேசங்கள் இரண்டு.

  1. திருவனந்தபுரம் - அனந்த பத்மநாபன்
  2. திருவாட்டாறு - ஆதிகேசவப்பெருமாள்

* திருமால் நரன் என்னும் மாணவனாகவும், நாராயணன் என்னும் ஆசானாகவும் அவதரித்துக் குரு சிஷ்ய பாவனையை உணர்த்திய திவ்யதேசம் பத்ரிநாத் ஆகும்.

* சிவசக்தி வடிவில் திருமால்: திருப்பவள வண்ணத்தில் சிவன் அம்சமாகப் பவளவண்ணனாகவும் பராசக்தி அம்சமாகப் பச்சை வண்ணனாகவும் காட்சிதருகின்றார்.

* திருப்பரமேசுவர விண்ணகரத்திலும், மதுரை கூடலழகர் கோயிலிலும் மூன்று அடுக்குகளில் திருமால் நின்ற, இருந்த,

கிடந்த கோலக் காட்சிகளைத் தந்தருளுகின்றார். அவற்றுள் அவ்விரண்டு திவ்யதேசங்களில் வீற்றிருந்த திருக்கோலத்திற்கு மட்டுமே பூஜைகள் நடைபெறுகின்றன.

* **த்வாரம் இரண்டு**

நாபித்வாரம், உச்சித்வாரம் (ப்ரஹ்மரந்த்ரம்).

* *திருமால் விபூதி நாயகன்*

1. நித்யவிபூதி, 2. லீலா விபூதி.

* ஈரெழுத்து மந்திரம் 'ராம'

* **பிரமம் இரண்டு**

சரீராத்மப்ரமம் - அசேதநமான சரீரத்தையே ஆத்மாவாக நினைப்பது.

ஸ்வதந்த்ராத்மப்ரமம் - ஜீவாத்மாவை எப்பெருமானுக்குச் சேஷமாக நினையாமல் ஸ்வதந்த்ரனாக நினைப்பது.

* **விசேஷணம் இருவகைப்படும்**

1. ஸ்வரூப நிரூபக விசேஷணம்.
2. நிருபிச ஸ்வரூப விசேஷேணம்.

திருமாலை கட்டித் தொண்டாற்றிய ஆழ்வார் இருவர்

1. பெரியாழ்வார் 2. தொண்டரடிப் பொடியாழ்வார்

மூன்று

* **திருமாலின் அடையாளங்கள் மூன்று**

1. மார்பில் ஸ்ரீவத்சம், 2. கையில் சியமந்தக மணி, 3. கழுத்தில் கவுத்துவ ஆரம்.

* **திருமால் அவதாரநிலைகள் மூன்று**

1. அவதாரநிலை - இராமன், கண்ணன்

2. ஆவேசநிலை - பரசுராமன், நரசிம்மன்

3. அம்சநிலை - திருமங்கைமன்னன் (சார்ங்கம்)

பொய்கையாழ்வார் (பாஞ்சசைன்யம்)

✻ திருமால் திருக்கோல வகைகள் மூன்று

1. நின்ற திருக்கோலம், 2. இருந்த திருக்கோலம்,
3. கிடந்த திருக்கோலம்.

✻ திருமால் திருமந்திரங்கள் மூன்று

1. *திருவெட்டெழுத்து* - ஓம் நமோ நாராயணாய.

2. *துவயம்* - ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம்.
பிரபத்யே ஸ்ரீமதே நாராயணாய நம.

3. சரமஸ்லோகம்.

✻ திருமாலைச் சரணடைதல் - மூவகை நிலை

1. *ஸ்வரூப சமர்ப்பணம்* - தான் இருப்பதே அவன் அருளால் என நினைத்து தன்னையே அர்ப்பணித்தல்.

2. *பல சமர்ப்பணம் :* தன் முயற்சிகளையும் கருமபலன்களையும் இறைவனிடம் ஒப்படைத்தல்.

3. *பாரசமர்ப்பணம் :* தெய்வானுபவங்களை அடையச் செய்யும் பொறுப்புக்களையும் இறைவனிடத்து ஒப்படைத்தல்.

✻ வைணவ நெறிகள் மூன்று நிலை

1. தத்துவம் - ஈஸ்வரன் சித்து அசித்து.
2. இதம் (உபாயம்) பத்தி, பிரபத்திகள்.
3. புருஷார்த்தம் (சிரேயஸ்) பரமனுக்கு அடிமை செய்தல்.

✻ தகுதி அடிப்படையில் உயிர்களை மூவகைப் படுத்துவர்

1. பத்தர் (பந்தநிலைப்பட்டவர்)
2. முத்தர் (பற்றற்றவர்)
3. நித்யர் (நிதம் பரமனுக்கு ஆட்படுவோர்)

✻ முதலாழ்வார்கள் மூவர்

பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி.
பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி.
பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி.

✻ ஆழ்வார்கள் மூவரால் பாடப்பெற்ற திவ்யதேசங்கள் மூன்று

நடுநாடு - திருக்கோவலூர் - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார்.

தொண்டைநாடு - திருவல்லிக்கேணி - பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார்.

வடநாடு - திருவாய்ப்பாடி - பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்.

✻ பலரும் கூடிய திவ்யதேசங்கள் – 3

தெய்வநாயகன் லெட்சுமித் தாயார் திருமண வைபவத்தினைக் காண தேவர்கள் கூடிய திவ்யதேசம் திருத்தேவனார்தொகை.

அதர்மத்தினை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட ஒருவருக்கும் தெரியாமல் தேவர்கள் கூடித் திட்டமிட்ட திவ்யதேசம் திருக்கோட்டியூர்.

வேதரிஷிகளும், முனிவர்களும் கூடித் தவம் செய்த திவ்யதேசம் நைமிண்சாரண்யம்.

✻ மூன்று திசை திருக்கோலங்கள்

திருவல்லிக்கேணி வரதராஜர் கிழக்குத் திசையை நோக்கியும், இராமபிரான் சந்நிதி தெற்குத் திசை நோக்கியும், நரசிம்மர் சன்னதி மேற்குத் திசைநோக்கியும் அமையப்பெற்றுள்ளமை சிறப்புடையதாகும்.

✻ மூவகை நிலைகளில் நரசிம்மர்

பிரமசரியநிலை - இரணியனை வதம் செய்த நிலையில் நரசிம்மர்.

போக நரசிம்மர் - உக்ரம் தனிய ஆதிலெட்சுமியுடன் கூடிய நரசிம்மர்.

வானப்பிரஸ்தம் - தவயோகநிலையில் யோக நரசிம்மர்.

✻ தாயார் சந்நிதிகள் மூன்று

திருமலையில் திருமால் தன் வகுளாதேவித் தாயாருடனும்,

திருத்துவாரகையில் தன் தேவகித் தாயாருடனும்,

திருஆய்ப்பாடியில் தன் யசோதைத் தாயாருடனும் காட்சி தந்து அருள்கின்றார்.

✻ வசன நடைப்பாக்களால் இராமானுஜரின் கத்யத்ரயம் மூன்று இத்யங்கள்

1. *சரணாகதி கத்யம்* - ஆன்மா ஸ்ரீதேவி சமேத மகாவிஷ்ணுவிடம் தம் துன்பத்தை நீக்கவேண்டிச் சரணடைதல்.

2. ஸ்ரீரங்ககத்யம் - ஸ்ரீரங்க நாயகி சமேத ஸ்ரீரங்கநாதனுக்குத் தொண்டு செய்தல்.

3. ஸ்ரீவைகுண்ட கத்யம் - ஸ்ரீ வைகுண்ட நாச்சியாருடனான எம்பெருமான் மற்றும் சூழ உள்ளவர்கள் பற்றிய சித்திரம்.

✻ சரணாகதி மூவகை

1. தவை வாஹம் - நான் உன்னுடையவன்.

2. மமைத்துவம் - நீ என்னுடையவன்.

3. த்வமோஹம் - நான் நீயே எனும் அத்வைத சரணாகதி.

✻ இராமானுஜர் நெறிப்படியான ஆன்மாக்கள் மூன்று

1. நித்யசூரிகள் - எப்போதும் கர்மத் தொடர்பற்றோர்.
2. முக்தர்கள் - ஒருகாலத்தில் கர்மத்தொடர்பு அற்றோர்.
3. பக்தர்கள் - கர்மத்தாலும் தேகத்தாலும் கட்டுப்பட்டவர்.

✻ பாஞ்சராத்திர ஆகமங்கள் மூன்று வகையின

1. திவ்யம் - இறைவனால் அருளப்பெற்றவை - (எ.டு) சாத்வத, பௌஸ்கர.
2. முனி பாஷிதம் - பிரமனாலும் முனிவராலும் அருளப்பெற்றவை - (எ.டு) ஈஸ்வர பரத்வாஜ்
3. மானுஷீயம் - மனிதர்களால் கூறப்பெற்றவை - ஆளவந்தார் ஆகமப்பிராமணியம்.

✻ பாஞ்சாத்ர சம்ஹிதைகள் 108இல் ரத்னத்ரயமான மூன்று

1. சாஸ்வதம் - விரிவு ஈஸ்வர சம்ஹிதை
2. பொஷ்கரம் - விரிவு பாரமேஸ்வர சம்ஹிதை
3. ஜயாக்யம் - விரிவு பாத்ம சம்ஹிதை

✻ அவதார நோக்கங்கள் மூன்று

1. அடைந்தாரைக் காத்தல்,
2. அவர்தம் விரோதிகளைப் போக்கல்
3. வைதீக தருமத்தை நிலைநிறுத்தல்.

✻ மூன்று சயனத் திருத்தலங்கள்

பிரமனின் யாகத்திற்குத் துணைபுரியும் வகையில் பாலாற்றின் நீர்ப்பெருக்கைத் தடுக்கும் வகையில் மூன்று இடங்களில் திருமால் பள்ளிகொண்டு அருளியுள்ளார்.

1. பள்ளிகொண்டான். 2. திருப்பாற்கடல் (காவிரி பக்கம்), 3. காஞ்சி.

✻ **மூன்று காவிரி அரங்கங்கள்**

காவிரி ஆறு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஒன்று கூடும் இடங்கள் மூன்று ஆகும். இம்மூன்று இடங்களிலும் திருமால் பள்ளி கொள்ளும் நிலையில் காட்சி தருகிறார்.

1. ஆதிரங்கம் - ஸ்ரீரங்கப்பட்டினம்

2. மத்யரங்கம் - சிவசமுத்திரம்

3. அந்தர்ரங்கம் - ஸ்ரீரங்கம்

✻ ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்று மூன்று தேவியர் புடைசூழப் பெருமாள் உள்ள திவ்யதேசம் திருப்பார்த்தன்பள்ளி.

✻ நின்றான், இருந்தான், கிடந்தான் என்னும் திருமாலின் மூன்று கோலங்களைத் திருக்கோட்டியூர், மதுரை, நெல்லை, நாகை, உத்திரமேரூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் காணலாம்.

✻ **ஆழ்வார்களின் அதிக பாசுரங்களைப் பெற்ற திவ்யதேசங்கள் மூன்று.**

1. திருவரங்கம்- 11, 2. திருமலை - 10, 3. குடந்தை - 7

✻ **இறைநிலைகள் மூன்று (பாஞ்சராத்திரம்)**

பரத்வம் - கடந்தநிலை; அந்தர்யாமி - உள்ளுறைநிறை; அவதாரம் - வெளிப்படுநிலை.

✻ **பக்தியின் மூன்று நிலைகள்**

பரபக்தி - எம்பெருமானை நேரில் காணவேண்டும் எனும் ஆவல்.

பரஞானம் - நேரில் எம்பெருமானைக் காணல்.

பரமபக்தி - அவனை இடையறாது அனுபவிக்க விரும்புதல்.

✻ **கைங்கர்யத் துடிப்பு மூன்று வகைகள்**

முதல் வகை : தனக்கே இன்பமுண்டாக வேண்டும் என்னும் அகங்காரக் கலப்புடன் செய்யும் ஈஸ்வர கைங்கர்யம்.

இரண்டாவது - ஈஸ்வரனுக்கும் தனக்கும் இன்பம் வேண்டும் பொதுநோக்குடனான கைங்கர்யம்.

மூன்றாவது - தான் புரியும் தொண்டு ஈசனுக்கே இன்பம் தரவேண்டும் என்று செய்யப்பெறுவது.

* **உயரமான ராஜகோபுரம் உடைய திவ்யதேசங்கள் மூன்று**

ஸ்ரீரங்கம் - 236 அடி.
ஸ்ரீவில்லிபுத்தூர் - 165 அடி.
திருக்குடந்தை - 150 அடி.

* **தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய திவ்யதேசங்கள் மூன்று**

1. திருவரங்கம், 2. அயோத்தி, 3. திருப்பாற்கடல்.

* **திருப்பாணாழ்வார் பாடிய திவ்யதேசங்கள் மூன்று**

1. திருவரங்கம், 2. திருவேங்கடம், 3. திருபரமபதம்

* **ஐப்பசி மாதத்தில் அவதரித்த ஆழ்வார்கள் மூவர்**

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

* மும்மூர்த்திமரம் (பிரயாகை) திருக்கண்டம் என்னும் கடிநகரில் விஷ்ணு, சிவன், பிரமன் ஆகியோர் உறைகின்ற அழிவற்ற ஆலமரம் காணப்படுகிறது.

* **திருமால் ஆலயங்களில் உள்ள நாச்சியார் மூவகைப்படுவர்.**

1. லயார்ச்சை - திருமால் திருமார்பில் வீற்றிருக்கும் திருமகள்.

2. போகார்ச்சை - திருமாலுக்கு இருப்பக்கங்களிலும் உபயநாச்சியாராக எழுந்தருளியிருப்பது.

3. அதிகாரார்ச்சை - தனியான சந்நிதியில் தன் ஆதாரங்களுடன் எழுந்தருளியிருப்பது.

* **மஹாவிஷ்ணு காயத்ரி**

1. ஓம் நாராயணா வித்மஹே வாசுதேவாய தீமஹி
   தந்நோ விஷ்ணு ப்ரசோதயாத்
2. ஓம் த்ரைலோக்ய மோஹனாய வித்மஹேவாசுதேவாய தீமஹி
   தந்நோ விஷ்ணு ப்ரசோதயாத்
3. ஓம் வஜ்ர நகாயவித்மஹே தீக்ஷண தம்ஷ்ட்ராயதீமஹி
   தந்நோ ந்ருஸிம்ஹ ப்ரசோதயாத்.

* மும்மூர்த்தித் தலமாகத் திகழ்வது கரம்பனூர் எனப்படும் உத்தமர்கோயில்.

* திருக்கோட்டியூர் தாயாருக்குத் திருமாமகள், நிலமாமகள், குலமாமகள் என்று மூன்று திருநாமங்கள் உண்டு.

* **திவ்யதேசத்தில் உள்ள மூன்று கடிநகர்கள்**

திருக்கடிகை, திருக்கடிநகர், திருக்கடித்தானம்

* **முக்கோணத் திருத்தலங்கள்**

கிருஷ்ணன் பிறந்த மதுரா.

ஆநிரை மேய்த்த பிருந்தாவனம்.

குன்றைக் குடையாக எடுத்த கோவர்த்தனகிரி ஆகிய மூன்று தலங்கள் முக்கோணமாக அமைந்துள்ளன.

* வைஷ்ணவ பக்தர்கள் கொக்கைப் போலவும், கோழியைப் போலவும், உப்பைப் போலவும் திகழுதல் வேண்டும் .

கொக்கு - ஆற்றில் தனக்கு உகந்த மீன்வரும் வரை கொக்கு காத்திருப்பதனைப் போல் தனக்கு உகந்த ஆச்சாரியார்கள் வரும்வரை காத்திருந்து உபதேசம் பெறுதல்.

கோழி - குப்பைகளைக் கிளறித் தனக்குத் தேவையான உணவுகளைக் கோழி பெறுவதனைப்போல் சமயநூல்களை ஆராய்ந்து அவற்றின் சாரமாகத் தாம் உய்தி அடைவதற்கு வேண்டிய பொருள்களைப் பெறுதல்.

உப்பு - உணவில் உப்பு அதிகமாயினும், குறைவுதுபடினும் உணவின் சுவை குன்றும், அதுபோலப் பிறர் தன்னைப் புகழினும், இகழ்ந்துரைப்பினும் தன்நிலை மாறாதிருத்தல்.

* **மூன்று வகை அவதாரக் கூறுகள்**

1. ராமாவதாரக் கூறு - திருவரங்கத்து அழகிய மணவாளன்
2. கண்ணபிரான் அவதாரக் கூறு - திருவேங்கடத்துத் திருவாழ் மார்பன்.
3. இராமன், கிருஷ்ணன் அவதாரக்கூறு - அத்திகிரி அருளாளன்.

* **வைணவ ரத்தினங்கள் மூன்று**

புராண ரத்தினம் - விஷ்ணுபுராணம்.

ஆளவந்தார் அருளிய ஸ்தோத்திர ரத்தினம்.

த்வத்யம் என்ற மந்திரரத்தினம்.

* **ஸ்ரீராமானுஜர் காலத்திலேயே செய்யப்பட்ட சிற்ப வடிவங்கள் மூன்று**

ஸ்ரீரங்கம் - தானான திருமேனி.

(திருநாராயணா) மேலக்கோட்டை - தான் உகந்த திருமேனி.

ஸ்ரீபெரும்புதூர் - தமருகந்த திருமேனி.

* **மூவர் மங்களாசாசனம் செய்த தலங்கள் ஐந்து**

திருஅத்தியூர்	திருக்கோவலூர்
திருவல்லிக்கேனி	திருவிண்ணகர்
திருஆய்ப்பாடி	

* **வழிபாட்டின் இறுதியில் பெறத் தக்கன மூன்று**

திருத்துழாய்/ தீர்த்தம்/ சடாரி

* **மூவர் திருமேனித் தத்துவங்கள்**

1. *இறைவன் திருமேனி:* கருடனுடைய உடலாகவும், வேதத்தின் பொருளாகவும் திகழும் திருமால் திருமேனியில்,

ஜீவன்	-	கௌஸ்தூபமணி
மூலப்பிரகிருதி	-	ஸ்ரீவர்ஷம்
மான் எனும் தத்துவம்	-	கௌமோதகி என்னும் கதை
ஞானதத்துவம்	-	நந்தகம் என்னும் வாள்
மருள்	-	வாளின் உறை
காமசம் அகங்காரம்	-	சாரங்கம் என்னும் வில்.
சாத்வீக அகங்காரம்	-	பாஞ்சசைன்யம் என்னும் சங்கு.
மணம்	-	சுதர்சனம் என்னும் சக்கரம்.
தன்மாத்திரைகள் 5 பூதங்கள் 5	} -	வனமாலை
ஞானேந்திரியம் 5 கன்மேந்திரியம் 5	} -	10 - அம்புகள்

இவ்வாறு தத்துவங்கள் அனைத்தும் எம்பெருமானின் ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும் திகழ்வதாகக் கூறப்படுகின்றன.

2. *நம்மாழ்வார் திருமேனி:* ஆழ்வார்களைச் சடகோபர் எனப் படும் நம்மாழ்வாரின் அவயவங்கள் ஆகவும், நம்மாழ்வாரை அவயவியாகவும் குறிப்பிடுவர்.

ஆழ்வாரின் திருமுடி	-	நம்பெருமாள்
தலை	-	பூதத்தாழ்வார்

திருக்கண்கள்	-	பொய்கையாழ்வார், பேயாழ்வார்
திருமுகமண்டலம்	-	பெரியாழ்வார்
கழுத்து	-	திருமழிசை ஆழ்வார்
திருக்கைகள்	-	குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார்.
திருமார்பு	-	தொண்டரடிப்பொடியாழ்வார்
திருநாபி	-	திருமங்கை ஆழ்வார்
திருவடிகள்	-	மதுரகவிகள் எம்பெருமானார்.

3. ராமானுஜர் திருமேனி

தலை	-	நம்மாழ்வார்
முகம்	-	நாதமுனிகள்
கண்கள்	-	உய்யக்கொண்டார், (புண்டரீகாட்சர்)
கன்னம்	-	மணக்கால்நம்பி (இராம மிஸ்ரா)
மார்பு	-	ஆளவந்தார் (யமுனாசாரியர்)
கழுத்து	-	பெரியநம்பி
கைகள்	-	திருக்கச்சி நம்பி
ஸ்தனம்	-	திருக்கோட்டியூர் நம்பி
வயிறு	-	திருவரங்கப் பெருமாள் அரையர்
முதுகு	-	திருமலையாண்டான்
இடுப்பு	-	கிடாம்பியாச்சான்
இடை	-	எம்பார்
புட்டகங்கள்	-	பட்டர், நஞ்சீயர்
துடை	-	நம்பிள்ளை
முழங்கால்	-	வடக்குவீதிப்பிள்ளை
திருவடி	-	பிள்ளை லோகாசார்யர்
பாதரேகை	-	திருவாய்மொழிப்பிள்ளை
பாதுகை	-	மணவாளமாமுனிகள்
ஊர்த்துவபுண்டரம் (திருமண்காப்பு)	-	சேனாதிபதிகள் ஜீயர்
புரிநூல்	-	கூரத்தாழ்வார்
திரிதண்டம்	-	முதலியாண்டார்
கமண்டலம்	-	கிடாாம்பியாச்சான்
கல்லாடை	-	வடுகநம்பி

தோமாலிகை	-	திருக்குருகைப்பிரான்
நிழல்	-	பிள்ளையுறங்காவில்லிதாசர்

* **தாபம் மூன்று வகைப்படும்**

  1. ஆத்யாத்மிகம்-(சரீரத்தைப் பற்றி வரும் தலைநோய் ஜலதோஷம் முதலியனவும் மனத்தைப்பற்றி வரும் காமம், கோபம், பயம் முதலியனவும்)

  2. ஆதிபௌதிகம் - (மிருகம், பக்ஷி, மனிதவர்க்கம் முதலிய பூதங்களால் வருவன)

  3. ஆதிதைவிகம் - (குளிர், சூடு, காற்று, மழை போன்றவற்றால் தெய்வீகமாக வருவன)

* திருவரங்கம் பற்றிய தண்டபாணி-சுவாமிகளின் மும்மண்டில வெண்பா

அரங்கமே	**போற்றுவாய்**	**ஆடரவிற்**	பூத்த
வரங்கமழ்	காற்றுணைநேர்	வாடல் -	கரங்கூப்பு
வீற்றுவகைப்	பாடல்களால்	வீழகமே	பாழாகா
மாற்றுயர்ந்த	வீடதென	வாழ்	
போற்றுவாய்	ஆடரவிற்	பூத்த	வரங்கமழ்
காற்றுணை	நேர்வாடல்	கரங்கூப்பு -	வீற்றுவகைப்
பாடல்களால்	வீழகமே	பாழாக	மாற்றுயர்ந்த
வீடதென	வாழ்அரங்க	மே	
ஆடரவிற்	பூத்த	வரங்கமழ்	காற்றுணைநேர்
வாடல்	கரங்கூப்பு	வீற்றுவகைப் -	பாடல்களால்
வீழகமே	பாழாகா	மாற்றுயர்ந்த	வீடதென
வாழ்ஆரங்க	மேபோற்று	வாய்	

* **திவ்யதேசப்பெருமாள் திருக்கழல்கள்**

  1. திருவரங்கம் - கோயில் - அழகிய மணவாளன் - திருப்பொலிந்த சேவடி.

  2. திருவெஃகா (காஞ்சி) பெருமாள் கோவில் - தேவப்பெருமாள் - துயரறு சுடரடி.

  3. திருவேங்கடம் - திருமலை - வேங்கடமுடையான் - பூவார்கழல்கள்.

✻ **திவ்யத் திரயங்கள் மூன்று**

ஆழ்வார்கள் - பிரமாதாக்கள் - திவ்யசூரிகள்.

அருளிச்செயல் பிரமாணம் - திவ்வியப் பிரபந்தம்.

திருப்பதிகள் - பிரமேயம் - திவ்யதேசங்கள்.

நான்கு

✻ நம்மாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் நான்கு (நான்மறைகள்)

1. பெரிய திருவந்தாதி.
2. திருவிருத்தம்.
3. திருவாசிரியம்.
4. திருவாய்மொழி.

✻ **ஆழ்வார்கள் நால்வரால் பாடப்பெற்ற திவ்யதேசங்கள் நான்கு**

1. *சோழ நாடு* - திருவிண்ணகர் - பேயாழ்வார், பொய்கையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார்.
2. *பாண்டிநாடு* - திருக்குறுங்குடி - நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார். திருமங்கையாழ்வார்.
3. *வட நாடு* - வடமதுரை - நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்.
4. *தொண்டை நாடு* - திருப்பாடகம் - பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார்.

✻ **நான்கு திவ்யதேசங்கள் ஆழ்வார்கள் ஐவரால் பாடப்பெற்றவை:**

1. *சோழநாடு* - திருக்கண்ணபுரம் - நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்.
2. *பாண்டி நாடு* - திருக்கோட்டியூர் - பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார்.
3. *வடநாடு* - திருவயோத்தி - நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார்.
4. *தொண்டைநாடு* - திருவெஃகா - பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார்.

❋ **சிவன் சந்நிதி உடைய விஷ்ணு கோயில்கள் -4**

உத்தமர்கோயில்
திருக்கோட்டியூர்
திருக்குறுங்குடி
திருவித்துவக்கோடு

❋ **வைணவ நெறியில் நின்ற சாதகர் நால்வர் (கீதை)**

1. ஆர்த்தர் (துன்புற்றவர்) - கஜேந்திரன்
2. ஜிக்ஞாசு (ஞானவேட்கையர்) - குசேலன், துருவன்
3. அர்த்தார்த்தீ (பொருள் இன்பம் தேடுபவன்) அருச்சுனன்
4. ஞானி (ஞானநிலையினன்) பிரகலாதன்.

❋ **வைணவப் புராணங்கள் நான்கு - 55000 கிரந்தங்கள்.**

1. விஷ்ணு புராணம் - 6000 கிரந்தங்கள் - தாமசம். விஷ்ணு, தேவி, பராசக்தி பற்றியது.
2. பாகவத புராணம் - 18000 கிரந்தங்கள் - தாமசம். நாரதர் வரலாறு கூறும் .
3 நாரதீய புராணம் - 25000 கிரந்தங்கள் - தாமசம். கருடன் காசியபருக்கு உரைத்தது
4. காருட புராணம் - 6000 கிரந்தங்கள் - தாமசம்.

❋ திருநீர்மலை என்னும் திவ்யதேசத்தின் மலை அடிவாரக் கோயிலிலும், மலைமேல் உள்ள கோயிலிலும் பெருமாள் நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்னும் நான்கு நிலைகளில் காட்சி தருகின்றார்.

❋ ராமாயணத்தில் இடம்பெற்றுள்ள தசரதன், மகன்களான நால்வருக்கும் கேரளாவில் நான்கு இடங்களில் தனிக்கோயில்கள் அமைந்துள்ளன.

1. ஸ்ரீராமர் - திருப்பிராயத்திருத்தலம்.
2. லெட்சுமணர் - இரிஞ்ஞாலக்குடா (கூடல்மாணிக்கம்)
3. பரதன் - மூழிக்குளம்.
4. சத்ருக்கனன் - பாயம்மல்

* **ஏகாதசிச் சிறப்புத்தலங்கள் நான்கு**

ஆஷாட ஏகாதசி - பண்டரிபுரம்.

கைசிக ஏகாதசி - திருக்குறுங்குடி.

விருச்சிக ஏகாதசி - குருவாயூர்.

வைகுண்ட ஏகாதசி - ஸ்ரீரங்கம்.

* **திருக்கண்ணங்குடியின் சிறப்புக்கள் 4**

1. உறங்காப் புளி
2. தோலா வழக்கு
3. ஊறாக் கிணறு
4. காயா மகிழ்

* **திருமாலிய மூர்த்தங்கள் நான்கு நிலை**

யோக மூர்த்தங்கள்

போக மூர்த்தங்கள்

வீர மூர்த்தங்கள்

அபிசாரிக மூர்த்தங்கள்

* **ஆகமங்களில் கூறப்பெறும் செய்திகள் நான்கு**

1. ஞானபாதம் (தத்துவ விசாரம்)
2. யோகபாதம் (தியானம்)
3. கிரியா பாதம் (விக்ரக வழிபாடு)
4. சரியா பாதம் (ஆசாரங்கள்)

* **பதினோரு வகைக் கூத்துகளில் திருமால் ஆடிய கூத்துவகைகள் நான்கு.**

அல்லியம், குடம், மல்லாடல், மோகினி

1. *அல்லியம் :* தன்னைக் கொல்வதற்குக் கம்சன் அனுப்பிய (குவலயா பீடம்) யானையின் கொம்பை முறித்துக் கண்ணன் ஆடிய கூத்து.
2. *குடக்கூத்து:* வாணாசுரன் அநிருத்தனைச் சிறையில் அடைத்தபோது திருமால் குடத்தின் மீது நின்றாடிய கூத்து.
3. *மல்லாடல்:* திருமால் வாணாசுரனை வெல்வதற்கு மல்லனாகச் சென்று ஆடிய கூத்து.

4. *மோகினி(பாவை) :* அசுரர்களைச் சண்டையிடாமல் செய்து மயக்கித் திருமால் ஆடிய ஆட்டம்.

✻ நான்கு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த தலங்கள் மூன்று

திருக்கூடலூர்

திருப்பாடகம்

திருபேர்நகர்

✻ விஷ்ணுவின் ஆயுதங்கள் நான்கு

	ஆயுதம்	*விளக்கம்*	*தத்துவம்*
1.	சங்கு	உயர்ந்த ரகம் பாஞ்சசைன்யம் (சங்கநிதி?)	ஓங்கார நாதத் தத்துவம்
2.	சக்கரம்	காலச் சக்கரம்	காலத்தின் இறைவன்
3.	கதை	மகா வல்லமை பலம்	அனைவரின் பலமும் இறைவனிடம்.
4.	தாமரை	பதுமநிதி?	செல்வமுடைமை

✻ நால்வகைத் தருமங்கள்

சாமான்ய தருமம் - ராமன்.

சேஷ தருமம் - இலக்குவன்.

விசேஷ தருமம் - பரதன்.

விசேஷதர தருமம் - சத்ருக்கனன்.

✻ வைணவக் கோயில் விமானங்கள்

ஸ்ரீரங்க விமானம் - பிரணா வாஹார விமானம்.

திருவல்லிக்கேணி - ஆனந்த வாஹார விமானம்.

திருப்பதி - ஆனந்த நிலைய வாஹார விமானம்.

காஞ்சி - புண்ய கோடி வாஹார விமானம்.

✻ பிரபத்தியின் வகை

1. ஸ்வநிஷ்டை - தாமே எம்பெருமானைச் சரணடைதல்.
2. உக்தி நிஷ்டை.
3. ஆசாரிய நிஷ்டை.
4. பாகவத நிஷ்டை.

✻ **நால்வகை உடல்கள்**

தேவஉடல், மானுட உடல், பிராணிஉடல், தாவர உடல்.

✻ **நான்கு மண்டபக் கோயில்கள்**

ஸ்ரீரங்கம் - போகமண்டபம் .

திருமலை - புஷ்ப மண்டபம்.

காஞ்சி வரதராஜர் கோயில் - தியாகமண்டபம்.

திருநாராயணபுரம் - ஞானமண்டபம் .

எனவும் வழங்கப்பெறுவது உண்டு.

✻ **நான்கு பெருமாள்கள்**

காஞ்சிக்கு அருகில் உள்ள திருஊரகம் திவ்யதேசத்தில் திருஊரகம், திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் என்னும் நான்கு திவ்யதேசப் பெருமாள்களும் ஒருங்கே எழுந்தருளியுள்ளனர்.

✻ **காஞ்சியை வலம் செய்யும் நதிகள் நான்கு**

சக்ஷிர நதி எனப்படும் பாலாறு.

பாகு நதி எனப்படும் செய்யாறு.

வேகவதி எனப்படும் சரஸ்வதி நதி.

கமண்டல நதி எனப்படும் கம்பாநதி.

✻ திவ்யதேசங்களில் அமைக்கப்பெற்றுள்ள மூலபிம்பங்கள் நான்கு வகைப்படும்

1. சிலாபிம்பம் (கல்லால் அமைவது) அதாவது துருவபேரத்தில் அழகாக, அளவுக்குத்தக்கபடி சீரான அங்கங்கள் அமைப்பது. சிலா பிம்பத்தில் 1 அங்குலத்திற்குக் குறைவாக அங்கங்களைச் செதுக்கி, அதன்மேல் சிப்பி, சுண்ணாம்பு போன்ற மென்மையான பண்படுத்தப் பட்ட சுண்ணாம்பைக் குறைவுக்கு நிரப்பி வர்ணம் பூசி வழிபடுவது முதலியன கூறப்பட்டுள்ளன. இதற்கு சௌதம் என்று பெயர்.

2. தாருபிம்பத்திற்குப் பெரும்பாலும் அத்திமரம் சிறந்தது. வைரமுள்ள அத்தி மரத்தாலும் செய்யலாம்; இடுப்புவரை ஒரே பாகமாகவும் செய்து, மேல்பாகத்தை மற்றொரு பாகமாகவும் செய்யலாம். ஆனால் ஒரே சாதிமரமாக இருக்கவேண்டும்.

3. மூலபிம்பம் 8 வித மண்ணாலும், பல பச்சிலைச் சாற்றால் அமைக்கப்பட்ட சுண்ணாம்பாலும், சுக்கு, திப்பிலி முதலிய மருந்துச் சரக்கினாலும், அஷ்டபந்தனம் என்ற கூட்டு மருந்தாலும் அமைத்து எலும்பு, நரம்பு, சதை, ஊன், மாமிசம், இரத்தம், தோல் என்ற 7 விதம் அமையும்படி அமைக்கலாம் என்பது வைகானஸக் கருத்து.

4. மூல பிம்பம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அடிபீடம் அசையாமலும், பழுதுபடாமலும் நிலைத்திருக்க வேண்டும்.

* **தேவாரத்துள் இடம்பெற்றுள்ள திருமால் அவதாரங்கள் நான்கு**

  வராக அவதாரம்
  வாமன அவதாரம்
  ராம அவதாரம்
  கிருஷ்ண அவதாரம்

* பூலோகத்தில் அவதாரம் முடிந்தபின் வைகுண்டத்திற்குச் செல்லும் காட்சியில் திருநீர்மலையில் பெருமாளின் சேவை நான்கு.

  1. நின்றான் - நீர்வண்ணன்
  2. இருந்தான் - சாந்த நரசிம்மர்
  3. கிடந்தான் - ரெங்கநாதர்
  4. நடந்தான் - திரிவிக்ரமன்

* யாப்பிலக்கண அடிப்படையில் பிரபந்தங்களில் இடம்பெற்றுள்ள பிரபந்த வகைகள் நான்கு

  அந்தாதி
  திருஆசிரியம்
  திருசந்தவிருத்தம்
  தாண்டகம்.

* தொண்டரடிப்பொடியாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ள தலங்கள் நான்கு.

* ஸ்ரீராமானுஜர் மிகுதியும், தொடர்புடைய திவ்யதேசங்கள் நான்கு.

  ஸ்ரீபெரும்புதூர்
  காஞ்சி
  மேலக்கோட்டை (ஸ்ரீ நாராயணபுரம்)
  ஸ்ரீரங்கம்

4.

* ஸ்ரீபராகராமடம் ஜீயர் சுவாமிகளால் பாராட்டுப் பட்டம் பெற்ற நால்வர்

ஸ்ரீமதி மணிகிருஷ்ணசாமி - சங்கீதாமிருதலஹரி.

ஸ்ரீ உ.வே.வி. சர்மாசாமி - ஸ்ரீஹயக்கிரீவ ஷேவாரத்தினம்.

பிரம ஸ்ரீகல்யாணம் ஐயர் - ஸ்ரீ சடகோபதாசன்.

பிரம ஸ்ரீ வே. வெங்கடேசன் - ஸ்ரீ ஹயக்கரீவதாசன்.

* **கள்ளப்பெயர்கள் நான்கு**

திருவைகுண்டம் - கள்வன்

திருமாலிருஞ்சோலை - கள்ளழகர்

திருக்கார்வானம் - கள்வர்

திவ்யதேசம் பெயர் - திருக்கள்வனூர்

* **தண்டபாணி சுவாமிகள் பாடிய திருமால் 'கூற்றிருக்கைகள்' 4**

1. திருமால் எழுகூற்றிருக்கை
2. திருவரங்க எழுகூற்றிருக்கை
3. திருவல்லிக்கேணி எழுகூற்றிருக்கை
4. திருமால் ஒருபது கூற்றிருக்கை.

* **திருமங்கை மன்னனின் சீடர்களில் முக்கியமான நால்வர்**

1. நீர்மேல் நடப்பான் 2. நிழலில் ஒதுங்குவான், 3. தாளுதுவான், 4. தோலாவழக்கன்.

* **வைணவ மரபில் நான்கு பெயர்கள்**

துயில் எழும்போது - ஹரியையும்

வெளியே செல்லுங்கால் - கேசவனையும்

உணவுண்ணகையில் - கோவிந்தனையும்

உறங்கச் செல்லும்போது - மாதவனையும் துதித்துப் போற்ற வேண்டும்.

* **வராக புராணம் குறிப்பிடும் திருமால் உகந்த நான்கு**

1. அச்வத்த விருட்சம், 2. காராம் பசு, 3. துளசிச்செடி, 4. வைகானச முனிவர்.

* **நவக்கிரக சந்நிதிகள் உள்ள விஷ்ணு கோயில்கள் நான்கு**

மதுரை கூடலழகர் கோயில்.

திருக்கண்ணபுரம்.

தஞ்சாவூர் கலியுகவரதராஜப்பெருமாள் கோயில்.

செட்டிக்குறிச்சி வரதராஜப்பெருமாள் கோயில்.

❊ பரிபாடலில் திருமாலைப் பாடிய புலவர்கள் நால்வர்

1. கீரந்தையார்
2. கடுவன் இளவெயினனார்
3. நல்லெழுநியார்
4. இளம் பெருவழுதியார்.

❊ திருமங்கையாழ்வார் நாற்கவிகள்

1. ஆசு கவி	-	பெரிய திருமொழி
2. சித்திரக்கவி	-	திருவெழுகூற்றிருக்கை
3. வித்தாரக்கவி	-	பெரிய திருமடல்
		சிறிய திருமடல்
4. மதுரகவி	-	திருக்குறுந்தாண்டகம்
		திருநெடுந்தாண்டகம்

❊ பன்னிரு ஆழ்வார்களுள் நால்வர் அடையாளச் சின்னங்களுடன்

1. ஆண்டாள் - திருக்கரங்களில் கிளி
2. தொண்டரடிப் பொடியாழ்வார் - மலர்க்கூடை
3. திருமங்கையாழ்வார் - வாளாயுதம்
4. திருப்பாணாழ்வார் - இசைக்கருவி

❊ நான்கு யுகங்களில் திருமங்கையாழ்வார் பிறப்பு

கிரேதாயுகம் - பிரமதேவன் மகன் கர்த்தமபிரஜாபதி

திரேதா யுகம் - உபரிசரவசு

துவாபர யுகம் - சங்கபாலன்

கலியுகம் - கலியன்

ஐந்து

❊ ஆழ்வார்கள் ஐவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற

சோழநாட்டுத்தலம் -1

பாண்டியநாட்டுத்தலம் -1

தொண்டைநாட்டுத்தலம் -1

வடநாட்டுத்தலம் - 1

பஞ்சகாலப் பராயணர்கள் எனப்பெறும் பாகவதர்கள் நாள்தொறும் பகல்பொழுதில் உள்ள 5 பொழுதுகளில் செய்யவேண்டிய நியமங்கள்.

பிராதக் காலம்	சங்கவ காலம்	மத்யான காலம்	அபிராஹ்ன காலம்	சாயங்காலம்
அபிகமனம் தீர்த்தமாடுதல் சந்தியாவந்தனம் ஆலயம் வலம் வந்து வணங்குதல்	உபாதானம் திருமஞ்சனத்திற்கு வேண்டிய திரவியங்களையும் திருவமுது செய்வதற்கான பொருள்களையும் சேகரித்தல்	இஜ்யா மதியநீராடுதல் திருவாராதானம் செய்தல், உறவினர் விருந்தினருடன் உணவருந்தல்	சுவாத்தியாயம் மோட்சநெறிக்கு உரிய வேதாந்தங்களையும் இதிகாச, புராணங்களையும் கற்றல், கேட்டல்	யோகம் சந்தியாவந்தனம் பிராணாயாமம் முதலியன செய்தல், பள்ளி கொள்ளுதல்

* **உயிர்கள் பரமபதம் பெறுவதற்குத் தடையாயிருப்பவை -5**

1. *சொரூப ஞானத் தடை:* தன்உண்மை நிலையை அறிதற்குத் தடையாயிருக்கும் மயக்கநிலை.
2. *இறைஞானத் தடை:* நாராயணனைப் பரம்பொருளாகக் கருதாமை. அவதாரக்கோலங்களை மானிடக் கோலங்களாகக் கருதுதல்.
3. *வாழ்க்கைப் பயனுக்குத்தடை :* இறைவனுக்குகந்த பணி செய்தலை விடுத்துத் தனக்கு உகந்த பணிசெய்யக் கருதுதல்.
4. *மெய்நெறிக்குத் தடை:* இறைவனிடம் சரணாகதி நெறியில் ஐயப்படுதல்.
5. *பேற்றுக்குத் தடை:* இறைவனையும் மெய்யடியாரையும் போற்றாதிருத்தல்.

* **திருமால் ஆலயப் பரிவாரக் கோலங்கள்**

இவற்றைப் 'பஞ்சபரிவாரம்' என்றும் கூறுவர்.

1. விஸ்வக்சேனர் 2. கருடன் 3. ஸ்ரீபூதர், 4. நியக்ஷர், 5. பூதபீடம்.

* **விண்ணகரத் திவ்யதேசங்கள் ஐந்து**

பரமேஸ்வர விண்ணகரம்.
காழிச்சீராம விண்ணகரம்.
அரிமேய விண்ணகரம்.
வைகுந்த விண்ணகரம்.
நந்திபுர விண்ணகரம்.

* **ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெறும் 5 கருடசேவை.**

1. திருவண்ணாமலை (ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மருங்கைந்த வெங்கடாசலபதிப் பெருமாள்)
2. திருத்தங்காலப்பன், திருத்தங்கல் பெருமாள்.
3. வடபத்ரசாயி
4. ரெங்கமன்னார்
5. காட்டழகர் சுந்தரராஜன்

* வைணவ நெறிகளான தத்துவம் இதம் புருஷார்த்தம் எனும் மூன்றனுள் இதம் என்பது

கரும யோகம்
ஞான யோகம் } பக்திநெறி
பக்தி யோகம்

பிரபத்தி யோகம்
ஆசார்ய அபிமானம் } பிரபத்தி நெறி

* **ஈடு உரை ஐவகைப்படும்**

1. ஆறாயிரப்படி - திருக்குருகைப்பிரான் பிள்ளான்.

2. ஒன்பதாயிரப்படி - நஞ்சீயர்.

3. பன்னீராயிரப்படி - வாதிகேசரி அழகிய மணவாளஜீயர்.

4. இருபத்து நாலாயிரப்படி - பெரியவாச்சான் பிள்ளை.

5. முப்பத்து ஆறாயிரப்படி - நம்பிள்ளை விரிவுரையை வடக்குத் திருவீதிப்பிள்ளை எழுதியது.

* **கிருஷ்ணத் தலங்கள் ஐந்து**

1. திருக்கண்ணபுரம்.
2. திருக்கண்ணங்குடி.
3. திருக்கண்ணமங்கை
4. திருக்கபிஸ்தலம்.
5. திருக்கோவிலூர்.

* **ரங்கன் தலங்கள் ஐந்து**

காவேரி ரங்கன் - ஸ்ரீரங்கம்.

கஸ்தூரி ரங்கன் - குடந்தை.

பரிமள ரங்கன் - திருஇந்தளூர்.

ஹேம ரங்கன் - திருநாங்கூர்.

கல்யாண ரங்கன் - திருநகரி.

* **பெருமாள் சந்நிதி ஐந்து**

திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி, நரசிம்மர், ரங்கநாதர், ராமர். கஜேந்திர வரதன் ஆகிய ஐந்து சந்நிதிகள் அமைந்துள்ளன.

* **பஞ்சநாராயணத் தலங்கள் ஐந்து**

1. திருக்கண்ணங்குடி - தாமோதரநாராயணன்
2. கீழ்வேளூர் - யாதவ நாராயணன்

3. தேவூர் - தேவ நாராயணன்

4. பெரிய ஆழத்தூர் - வரத நாராயணன்

5. ஆபரணதாரி - ஆனந்த நாராயணன்

* **பிரபந்தம் கூறும் பாற்கடல் பரத்தாமன் நிலை**

1. கண்வளர்த்தல்
2. அறிதுயில்
3. கள்ளநித்திரை
4. யோகத்துறக்கம்
5. பையத்துயில்

* **இறைவன் சொரூபங்கள் ஐவகை**

1. பரஸ்வரூபம், 2. வியூகஸ்வரூபம், 3. விபவஸ்வரூபம், 4.அந்தர்யாமி ஸ்வரூபம், 5. அர்ச்சாவதார ஸ்வரூபம்.

* **மூலப்பிரகிருதியின் ஐந்து நிலைகள்** (கபாலோபனிடதம்)

1. அவிபக்த தமஸ் - பூமியில் விதைக்கப்பட்ட விதை போன்றது.
2. விபக்த தமஸ் - பூமியில் இருந்து எழும் விதை போன்றது.
3. அட்சரம் - நீருடன் கலந்து பூரித்த விதை போன்றது.
4. அவ்யக்தம் - ஊறிப் பருத்து வெடித்த விதை போன்றது.
5. மகாத் - வித்தினின்று எழும் முளை போன்றது.

* பாஞ்சராத்திரம் இறைவனால் ஐந்து இரவுகளில் முறையே ஐவர்க்கு அளிக்கப்பெற்றது

அனந்தன், கருடன், விசுவக்சேனன், பிரமன், ருத்ரன்

* இறைவனுடைய ஐந்து ஆயுதங்களாக உள்ள

சாண்டில்யர், மௌஞ்சாயனர், ஔபசாயணர், கௌசிகர், பரத்வாஜர் ஆகியோருக்கு அருளப்பெற்றது.

* **வேதப்பிரிவுகள் ஐந்து**

பேத சுருதி

அபேத சுருதி

சகுண சுருதி

நிர்க்குண சுருதி

கடக சுருதி

* **கூரத்தாழ்வார் - பஞ்சதத்துவங்கள்**

சிரிச்தவம்

சிரிவைகுண்டத்தவம்

ஆதிமானுச்சத்வம்

சிரிசுந்தர பாகுச்தவம்

சிவரதராசச்தவம்

* **ஆழ்வார் திருநகரியின் 5 பெயர்கள்**

1. ஆதி க்ஷேத்திரம்
2. வராக க்ஷேத்திரம்
3. சேஷ க்ஷேத்திரம்
4. தீர்த்த க்ஷேத்திரம்
5. தாந்த க்ஷேத்திரம்

* பாற்கடலைக் கடைந்தபொழுது அதிலிருந்து எழுந்த ஐந்து பொருட்களைத் திருமால் பெற்றுக்கொண்டார். அவை,

திருமகள், பாஞ்சசைன்யம், சாரங்கம், கவுத்துவமணி கோமதகி.

* **வைணவனுக்குரிய விதிகள் ஐந்து**

தாபம் : விஷ்ணுவிற்குரிய சின்னங்களாகிய சங்கு சக்கரங்களை முத்ராதானமாகப் பெற்றுத் தரித்துக் கொள்ளுதல்.

பண்டரம் : நெற்றியிலும் நெஞ்சிலும் திருமண்ணும் ஸ்ரீ சூரணமும் கொண்டு நாமம் இட்டுக் கொள்ளுதல்.

நாமம் : விஷ்ணுவின் அடியான் என்பதை வெளிப்படுத்தும் வகையில் 'தாசன்' என்ற பெயரை அவன் திருநாமத்தோடு சேர்த்துக் குறிப்பிடுதல்.

மந்திரம் : ஆசாரியரிடம் தீட்சை பெற்று மந்திர உபதேசம் பெறுதல்.

இஜ்யை: பகவானை ஆராதிக்கும் முறை பற்றி உபதேசிக்கப்பெற்று ஆராதனை செய்தல்.

* **திருமால் ஏந்தியுள்ள பஞ்சாயுதங்கள்** ஆவன

சங்கு, சக்கரம், கதை, வில், கத்தி

* **திருமாலின் மூர்த்தி பேதங்கள் ஐந்து**

1. பரஸ்வரூபம் : (மேலான வடிவம்) திருமகளோடு ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள திவ்விய மங்கள சொரூபம்'

2. *வியூக ஸ்வரூபம் :* (வெளிப்பட்ட வடிவம்) திருப்பாற்கடலில் தேவர்கள் வழிபடும் திருக்கோலம். இதனை விஷ்ணு, புருஷன், சத்தியன், அச்சுதன், அநிருத்தன் எனும் ஐந்து நிலைகளில் விளக்குவர்.

3. *விபவம்* (தீயோரை அழித்து நல்லோரைக் காக்கத் தோன்றி வந்த வடிவம்.

4. *அந்தர்யாமி:* உலகியற் பொருள்களில் எல்லாம் ஊடுருவிப் பரந்து நிற்கும் தோற்ற நிலை.

5. *அர்ச்சாவதாரநிலை:* வழிபடுவதற்குரிய வடிவமாகக் கோயில் களிலும் இல்லங்களிலும் எழுந்தருளும் தொழுவதற்குரிய வடிவம்.

✻ பஞ்சரங்கங்கள் ஐந்து

ஆதிரங்கம் - ஸ்ரீரங்கப்பட்டினம்

அப்பாலரங்கம் - திருப்பேர்நகர்

மத்யரங்கம் - ஸ்ரீரங்கம்

சதுர்த்த ரங்கம் - கும்பகோணம்

பஞ்சரங்கம் - திருஇந்தளூர்.

✻ நாச்சியார் கோயில் தீர்த்தங்கள் ஐந்து

மணிமுத்தா புஷ்கரணி

சங்கர் ஷன தீர்த்தம்

ப்ரத்யும்ன தீர்த்தம்

அநிருத்த தீர்த்தம்

சாம்ப தீர்த்தம்.

✻ ஆழ்வார்கள் அவதாரம் செய்த பஞ்ச நதி தீர்த்தங்கள் ஐந்து

தாமிரபரணி - நம்மாழ்வார், மதுரகவிஆழ்வார்.

வைகை ஆறு - பெரியாழ்வார், ஆண்டாள்.

பாலாறு - பொய்கைஆழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார்.

பேரியாறு - திருமழிசை ஆழ்வார்.

காவிரி - தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்.

✻ கருட சேவை ஐந்து

திருக்குறுங்குடியில் ஸ்ரீ வைஷ்ணவ நம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, திருப்பாற்கடல் நம்பி என்று ஐந்து நம்பிகளுக்கும் சித்திரை மாதம் உத்திரத் திருவிழாவில் ஐந்தாவது நாள் ஐந்து கருடசேவை நடைபெறும்.

✻ பஞ்சவடி

ஆல் அரசு மா நெல்லி வில்வம் ஐந்து மரங்கள் உள்ள இடம்.

✻ நரசிம்மர் ஐவர் (வைகானச சம்ஹிசைகள்)

1. மலையினின்றுதித்தவர்.
2. தூணில் இருந்து தோன்றியவர்
3. சுதர்சன நரசிம்மர்.
4. இலக்குமி நரசிம்மர்.
5. பாதாள நரசிம்மர்.

✻ விட்டுணுவுடன் பிரதிட்டை செய்யப்பெறும் பஞ்சவீரர்கள்

வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், சாம்பன், அநிருத்தன்.

✻ வடலூர் இராமலிங்க அடிகளார் திருஎவ்வுள் என்னும் திவ்யதேசப் பெருமான் மீது ஐந்து பாடல்கள் கொண்ட திருப்பஞ்சகம் என்னும் பதிகத்தை அருளியுள்ளார்.

✻ திருமங்கை ஆழ்வார் திருமாலைக் கண்ட தலங்கள் ஐந்து

திருக்குறுங்குடி, திருவரங்கம், திருவெஃகா, திருவேங்கடம் திருத்தங்கல்.

✻ திருமால் ஐந்தொழில்களைக் குறிக்கும் ஆயுதங்கள்

படைத்தல்	- பாஞ்ச சைன்யம்	- சங்கு
காத்தல்	- சுதர்சனம்	- சக்கரம்
அழித்தல்	- சாரங்கம்	- வில்
மறைத்தல்	- நந்தகம்	- வாள்
அருளல்	- கௌமோதகி	- கதை (தண்டு)

✻ பஞ்சபாண்டவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற திவ்யதேசங்கள் ஐந்து

திருச்சிற்றாறு - தர்மன் பிரதிஷ்டை செய்தது

திரு ஆரம்முளா - அர்ஜுனன் பிரதிஷ்டை செய்தது.

திருப்புலியூர் - பீமன் பிரதிஷ்டை செய்தது.

திருவண்வண்டூர் - நகுலன் பிரதிஷ்டை செய்தது.

திருக்கடித்தானம் - சகாதேவன் பிரதிஷ்டை செய்தது.

* ஆறு, காடு, நகரம், ஆலயம், தீர்த்தம் முதலான ஐந்தினாலும் புகழ்பெற்ற தலம் திருக்கண்ணங்குடி. இது பஞ்சபத்ரா எனப்படும்.

* **பஞ்சாயுதப் பெருமாள்**

வாள்

வில்

சக்கரம்

தண்டாயுதம்

சங்கு

முதலான ஐந்து ஆயுதங்களுடன் நாதன்கோயிலில் பெருமான் காட்சி தருகிறார்.

* **அர்த்த பஞ்சக ஞானம்**

1. ஆன்மசொரூபம்/ நித்தியர், முக்தர், பக்தர், கேவலர், முமுட்சுகள்

2. இறைவன் சொரூபம் / பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம் அர்ச்சை.

3. விரோதி சொரூபம்/ கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசார்யாபிமானம்.

4. உபாய சொரூபம்/ சொரூப, பரத்வ, புருஷார்த்த, உபாய, பிராப்ய.

5. புருஷார்த்த சொரூபம்/தர்மம், அர்த்தம், காமம், ஆன்மானுபவம், பகவத் அனுபவம்.

* **பிரபத்தியின் அங்கங்கள்**

ஆறு கூல்ய சங்கற்பம் : எம்பெருமான் திருவுளத்திற்கு உகந்தவற்றைச் செய்தல்.

பிராதி கூல்ய வர்ஜனம் : எம்பெருமான் திருவுளத்திற்கு மாறானவற்றைச் செய்யாதிருத்தல்.

மகாவிசுவாசம்: எம்பெருமான் தம்மை இரட்சிப்பான் என்று உறுதியாக நம்புதல்.

கோபத்ருத்வவரணம் : பக்தி, யோகம் முதலான உபாயங்களை அனுஷ்டிக்க இயலாத தம் விஷயத்தில் அருள்புரிந்து பலன் தரவேண்டுதல்.

கார்ப்பண்யம்: எம்பெருமானைத்தவிர வேறு தெய்வத்தினிடம் பற்றில்லாமை.

* **வைணவர் கடமைகள்**

அபிகமநம்: அன்றைய நாட் கடமைகள் தடையின்றி நடைபெற எம்பெருமானை வேண்டுதல்.

உபாதாநம்: மனத் தூய்மையுடன் பூஜைக்குரிய சாதனங்களைச் சேர்த்தல்.

இஜ்யை: சாத்திர முறைப்படிப் பகவானுக்குத் திருவாராதனம், உபசாரங்களைச் செய்தல்.

சுவாத்தியாயம்: திருமந்திரம் துவயம் சரமசுலோகம் ஆகிய ரகசியங்களை அனுசந்தித்தல்.

யோகம், சதாசர்வ காலமும் இறைதிருவடிகளைத் தியானித்தல்.

* ஸ்ரீ இராமானுஜர் தமது ஆச்சார்யார்களாக ஏற்றுக்கொண்டவர்கள் ஐவர்.

1. பெரியநம்பி.
2. பெரிய திருமலை நம்பி.
3. திருவரங்கம் பெருமாளரையர்.
4. திருமலையாண்டான்.
5. திருக்கோட்டியூர்நம்பி.

* **வைணவ அடியார் அகவளர்ச்சி நிலைகள் ஐந்து**

1. இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள உறவை அறிதல்.
2. அதனைச் சிந்தித்து உணர்தல்.
3. பாவனை யாக்குதல்.
4. முற்றக் காட்சியாதல்.
5. உணவுப் பொருள்களைப் போன்று தெளிந்த காட்சி.

* **எம்பெருமான் சொரூப குணங்கள் -5**

சத்தியத்துவம் - எப்பொழுதும் மாறுபடாத தன்மை.

ஞானத்துவம் - எப்பொழுதும் முறைவுபடாத ஞானம்

அநந்தத்துவம் - பொருள் இடம் காலம் கடந்த நிலை

ஆனந்தத்வம் - ஆனந்த வடிவாய நிலை

அமலத்துவம் - குற்றமிலாத தன்மை.

❊ திருமங்கையாழ்வார் பூசித்த நரசிம்மர் ஐவர்

1. திருநகரி விமான வடபுறம் - இரண்ய நரசிம்மன்
2. பிராகாரத்தில் - கிழக்குநோக்கிய யோக நரசிம்மன்
3. திருக்குறையலூர் - உக்ர நரசிம்மன்
4. மங்கை மடம் - வீர நரசிம்மன்
5. திருவாலி - லட்சுமி நரசிம்மன்

❊ சிங்கவேள்குன்றத்தில் உள்ள தீர்த்தங்கள் -5

இந்திர, நரசிம்ம, பாபநாச, கஜ, பார்க்கவ தீர்த்தங்கள்.

❊ 5 ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த தலங்கள்

திருவயோத்தி

திருக்கண்ணபுரம்

திருகூடலூர்

திருத்துவாராபதி

வடமதுரா(மதுரா)

திருவெஃகா.

❊ நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் பொருள் அடிப்படையில் காணப்படும் சிற்றிலக்கியங்கள் -5

1. திருப்பல்லாண்டு - பெரியாழ்வார்.
2. திருப்பள்ளியெழுச்சி - தொண்டரடிப் பொடியாழ்வார்.
3. திருப்பாவை - ஆண்டாள்.
4. பெரியதிருமடல், சிறிய திருமடல் - திருமங்கையாழ்வார்.
5. திருமாலை - தொண்டரடிப்பொடியாழ்வார்.

❊ பஞ்சதேவியர் தொடர்புடைய திவ்யதேசங்கள்

சஷ்ஷிராப்திநாதன் - திருக்கோட்டியூர் - ஸ்ரீதேவி, பூதேவியுடன்

வாசுதேவன் - திருநறையூர் - திருமகளை மணந்த கோலம்.

அநிருத்தன் - அன்பில் - அழகியவல்லி நாச்சியாருடன்

ப்ரத்யுமனன் - திருவெள்ளறை - ஸ்ரீதேவியுடன்

ஸங்கர்ஷணன் - உறையூர் - கமலவல்லியுடன்

ஆறு

* பிரபத்திக்கு உறுப்புகள் ஆறு என்பாரும் உளர். அவையாவன,

1. அனுகூல்ய சங்கல்பம்: சாத்துவீக உணர்வில் இறை சித்தத்தைப் பின்பற்றல்.

2. பிரதிகூல வர்சனம் : இறை சித்தத்திற்கு வேறானவற்றைத் துறத்தல்.

3. ராட்சஸ்ய திதி விசுவாசம் : இறைவன் காப்பான் என்ற உறுதியுடன் நிற்றல்.

4. கோப்த்ரத்வ வர்ணம்: வீடு பேற்றிற்கு இறையருளையே நம்பியிருத்தல்.

5. ஆத்ம நிக்ஷேபம் : தன்னையே நிவேதனமாக்குதல்.

6. கார்பண்யம் : தன்னால் ஆகாமையை வெளிப்படுத்துதல்.

* **திருமங்கை மன்னன் இயற்றிய ஆறு அங்கங்கள்**

1. பெரிய திருமொழி
2. குறு நெடுந் தாண்டகம்
3. திரு நெடுந் தாண்டகம்
4. பெரிய திருமடல்
5. சிறிய திருமடல்
6. திருவெழுகூற்றிருக்கை.

* இறைவன் குணங்கள் - ஆன்மாக்களின் அனுபவப் பொருளாவன ஆறு

1. ஞானம் : எல்லாக் காலத்தும் எல்லாப் பொருள்களையும் உணரும் உணர்வு

2. சக்தி : இவ்வுலகிற்கு அடிப்படையாகவுள்ள பரிணாம சக்தி.

3. பலம் : தன் சங்கற்பத்தினால் அனைத்தையும் தரித்துக் கொள்ளுதல்.

4. ஐஸ்வர்யம்: எல்லாவற்றையும் நியமித்து நடத்தும் திறன் உடைமை.

*5. வீரியம் :*தன் செயல்களில் தளர்ச்சி சிறிதும் இல்லாது இருத்தல்.

6. தேஜஸ் : உலகப் புகழ் அனைத்தையும் தம்முள் அடக்கி வீறுகொண்டு நிற்கும் ஒளி.

✻ திருமால் திருவாராதன நிகழ்ச்சிகள் ஆறு

1. *மந்திராசனம் :* எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளைத் தமது பூசையை ஏற்றருளுமாறு அழைத்து மந்திராசனம் அளித்தல்.
2. *ஸ்நானாசானம் :* திருமஞ்சனத்திற்கு ஆசனமளித்துப் பகவானுக்குத் திருமஞ்சனம் சமர்ப்பித்தல்.
3. *அலங்காராசானம் :* புஷ்ப, சந்தனங்களைச் சமர்ப்பித்து அலங்கரித்தல்.
4. *போஜ்யாசனம் :*தலத்தூய்மை செய்து மனையிலே பிரசாதம் முதலான திருவமுதுகளைச் சமர்பித்தல்.
5. *புனர்மந்திராசனம் :* பழம், அடைக்காய் முதலான பொருள்களை அருளமுது செய்வித்தல்.
6. *பரியங்காசனம் :* திருக்காப்பிடுதல்.

✻ ஆளவந்தார் (யமுனாசாரியர்) செய்த நூல்கள் ஆறு

1. சித்தி - திரையம்
2. ஆகமப் பிராமணீயம்
3. கீதார்த்தசங்கிரகம்
4. மகாபுருஷ நிர்ணயம்
5. சதுஸ்ஸ்லோகி
6. வேதோத்ர ரத்நம்

✻ கட்டுமலைத்தலங்கள் ஆறு

திருக்கச்சி
திருக்கோட்டியூர்
திருநறையூர்
திருபேர்நகர்
திருவாட்டாறு
திருவெள்ளறை

✻ ராமானுஜர் அருளிய நூல்கள் ஆறு

1. வேதார்த்த சங்கிரகம்
2. ஸ்ரீ பாஷ்யம்
3. கீதா பாஷ்யம்
4. வேதாந்த தீபம்
5. வேதாந்த சாரம்
6. சத்யத் திரயம்

✻ முத்திபெற்ற ஜீவான்மா நிலை பற்றிய உவமைகள் ஆறு

1. இராகு பற்றி விட்ட கதிரவன் ஒளி.
2. அழுக்கு நீங்கிய முத்தின் ஒளி.
3. வழிமாறிய கப்பற் பயணிகள் கரை சேர்ந்தபின் மகிழ்ச்சி.
4. காட்டுத்தீயில் தப்பிய யானையின் மகிழ்ச்சி.

5. தலைவியைப் பெறாத தலைவன் குறிக்கோள் நிறைவேறிய மகிழ்ச்சி.
6. அரசுரிமை இழந்த அரசன் மீண்டும் அரசுரிமை பெறுதல்.

❋ **இறைக்குணங்கள் ஆறு**

வாத்சல்யம் சுவாமித்துவம் சௌசீல்யம் சௌலப்யம்	சேதநன் எம்பெருமானையடையத் துணைசெய்வன
ஞானம் சக்தி	தனை வந்தடைந்த சேதநனுக்குப் பயன்படுவன

❋ **சாளக்கிராமத் தலங்கள் -6**

1. வெண்மை நிற சாளக்கிராமம் - வாசுதேவ க்ஷேத்திரம்.
2. கருமை நிற சாளக்கிராமம் - விஷ்ணு க்ஷேத்திரம்.
3. பச்சை நிற சாளக்கிராமம் - ஸ்ரீநாராயண க்ஷேத்திரம்.
4. பசும்பொன்(அ) மஞ்சள் சற்று கலந்து சிகப்புநிற சாளக்கிராமம் - ஸ்ரீ நரசிம்ம க்ஷேத்திரம்.
5. மஞ்சள் நிற சாளக்கிராமம் - வாமன க்ஷேத்திரம்.
6. கருநீலநிற சாளக்கிராமம் - ஸ்ரீகிருஷ்ண க்ஷேத்திரம்.

❋ சங்க இலக்கியப் புலவர் பெயர்களில் ஆறு புலவர் பெயர்கள் திருமாலின் பெயர்களாக அமைந்துள்ளன.

1. கேசவனார்
2. கோவிந்தனார்.
3. நல்லச்சுதனார்
4. தாமோதரனார்
5. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
6. வடமவண்ணக்கன் தாமோதரன்

❋ ஆழ்வார்கள் அறுவர் மங்களாசாசனம் செய்த திவ்யதேசம் திருமாலிருஞ்சோலை.

❋ **ஸ்ரீ வசன பூஷணம் :** நூற்பாயிரம் (1-4) நீங்கலாக ஆறு இயல்களை உடையது

1. புருஷாகார வைபவமும் உபாய வைபவமும் (5-24)
2. உபாயம் (24-80)
3. அதிகாரியின் தன்மை (81-311)
4. நல்லாசிரியர் ஒழுக்க முறை (312 - 368)
5. பற்றற்று இறைபுரியும் திருவருட் சிறப்பு (369-410)
6. முடிந்த பகுதியின் மெய் (411-466)

ஏழு

❊ ஸ்ரீ ரங்க மதில்கள் 7

முதல் திருமதில் - சத்யலோகம் - திருஅணுக்கன் திருவாயில்.

இரண்டாவது திருமதில் - தபோலோகம் - ராஜமகேந்திரன் சுற்று.

மூன்றாவது திருமதில் - ஜனலோகம் - ஆரியபட்டர் வாசல்.

4வது திருமதில் - மகர்லோகம் - திருமங்கை மன்னன் சுற்று.

5வது திருமதில் - சுவர்லோகம் - நான்முகன் கோட்டைவாசல்.

6வது திருமதில் - புவர்லோகம் - திருவிக்ரமன் வீதி

7வது திருமதில் - பூலோகம் - ராஜவீதி.

❊ திருவெள்ளறை திவ்யதேசத் தீர்த்தங்கள் ஏழு

திவ்ய தீர்த்தம் பத்ம தீர்த்தம்
வராஹ தீர்த்தம் புஷ்கல தீர்த்தம்
குசஹஸ்தி தீர்த்தம் மணிகர்ணிகா தீர்த்தம்.
சந்திர புஷ்கரணி தீர்த்தம்

❊ சப்த புண்ணிய க்ஷேத்திரம்

விமானம், ஆரண்யம், மண்டபம், தீர்த்தம், தேசம், நதி, நகரம் முதலான ஏழு சிறப்புக்கள் அமையப்பெற்ற திவ்யதேசம் திருக்கண்ணமங்கை ஆகும்.

❊ பொய்கை ஆழ்வார் பாடிய திவ்யதேசங்கள் - 7

திருபரமபதம், திருப்பாற்கடல், திருவேங்கடம், திருவரங்கம், திருவிண்ணகர், திருக்கோவலூர், திருவெஃகா.

❊ பிரபத்தி நிலையில் 7 வழிநிலைகள்

1. எழில் வடிவக் காட்சியில் ஆர்வம்
2. இறை சிந்தனை

3. அவன் நினைவு
4. அனுபவிக்கும் இச்சை
5. முதிர்ந்து சுவையாதல்
6. அவனைக் கூடும் மகிழ்ச்சி
7. பிரிவதில் துன்பம்.

✻ ஆழ்வார்கள் எழுவரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்ய தேசங்கள் இரண்டு.

சோழநாடு - திருக்குடந்தை - பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்.

பாண்டி நாடு - திருமாலிருஞ்சோலை - பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்.

✻ **சப்தகிரி - ஏழுமலைகள்**

வேங்கடாத்ரி
சேஷாத்ரி
வேதாத்ரி
கருடாத்ரி
விருஷபாத்ரி
அஞ்சனாத்ரி
ஆனந்தாத்ரி

✻ **சப்த ரிஷி ராமாயணம்**

காஸ்யபர்	- பாலகாண்டம்
அத்திரி	- அயோத்யாகாண்டம்
பரத்வாஜர்	- ஆரண்ய காண்டம்
கௌசிகர்	- கிஷ்கிந்தா காண்டம்
கௌதமர்	- சுந்தரகாண்டம்
ஜமதக்னி	- யுத்த காண்டம்
வசிஷ்டர்	- உத்தர காண்டம்.

✻ **குலசேகர ஆழ்வார் பாடிய திவ்யதேசங்கள் ஏழு**

திருவரங்கம்
திருக்கண்ணபுரம்
திருவேங்கடம்
திருவயோத்தி

திருச்சித்ரகூடம் திருப்பாற்கடல்

திருவித்துவக்கோடு

* **பக்தியோக நெறிகள் ஏழு**

விவேகம் - இறைவன் வாழும் உடலைச் சத்துவ குணம் முதலியவற்றால் தூய்மையுறச் செய்வது இது புறத் தூய்மை எனப்படும்.

விமோகம் - உலகியற் பொருள்களில் விருப்பின்றி வாழும் அகத் தூய்மை.

அப்பியாசம் - இறைவன் உண்டு என்றும், அவன் உயிர்க்குயிராய் உறைபவன் என்றும் இடையறாது நினைந்து வாழ்தல்.

கிரியை - தேவயக்ஞும் (தேவர்களுக்குச் செய்யும் வழிபாடு), பிரமயக்ஞும் (ஓதலும், ஓதுவித்தலும்), பித்ருயக்ஞும் (தென் புலத்தாருக்குச் செய்யும் கடன்), மனுஷ யக்ஞும் (ஐயம் இடல்), பூதயக்ஞும் (உயிர்கள் மாட்டு அருளுடைமை) என்னும் ஐவகை வேள்விகளையும் ஆற்றுதல்.

கல்யாணம் - வாய்மை, தீயன நினைத்தலும், சொல்லுதலும், செய்தலும் இன்மை, எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாய தோர் உள்ள நிகழ்ச்சி முதலான நற்பண்புகளைக் கொண்டிருத்தல்.

அளவசாதம் - துன்பத்துள் துன்பப்படாமை

அனுதர்ஷம் - இன்பத்துள் இன்பம் விழையாமை.

* **பாகவத லட்சணங்கள் -7**

1. பலனில் இச்சையை விட்டுக் கடமையைச் செய்தல்.
2. கர்மாக்களினுடைய பலனைப் பகவதர்ப்பணம் செய்தல்.
3. ஆராதிக்கும் வஸ்துவிடம் மனம் இடையீடில்லாமல் படிதல்.
4. 'நான் வேறு' என்ற எண்ணம் குறைந்து கொண்டே வந்து முதலில் அது ஒழிந்து ஆராதிக்கும் பொருளாக மட்டும் நிற்றல்.
5. விஷயம் அநித்யம், பிரம்மம் நித்யம் என்ற அறிவு.
6. ஆத்மாவே பிரும்மம் என்ற உணர்ச்சி
7. சஹஜ சமாதிபெற்று விதேக முக்தி அடைதல்.

* **சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள திருமால் அவதாரங்கள் ஏழு**

ராமர்	வாமனம்
கிருஷ்ணர்	பலராமர்
நரசிம்மர்	தச அவதாரம்
வராகம்	

* 7 ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திவ்யதேசம் - குடந்தை.

* தெற்கு நோக்கிய திருமுக மண்டலம் உள்ள திவ்யதேசங்கள் - 7

* **கடற்கரையில் உள்ள திவ்யதேசங்கள் -7**

திருவனந்தபுரம், திருவல்லிக்கேணி, திருவிடந்தை, திருக்கடன் மல்லை, துவாரகா, திருநாகை, திருப்புல்லாணி.

* **கடல் ஏழு**

உப்பு, பால், தேன், நெய், கருப்பஞ்சாறு, தயிர், சுத்தஜலம் இவற்றால் ஆகியவை.

* **த்வீபங்கள் ஏழு**

ஜம்பு, ப்லக்ஷம், சால்மலி, குசம், க்ரௌஞ்சம், சாகம், புஷ்கரம்

* **ஏழுமலைகள்**

மஹேந்த்ரம், மலயம், ஸஹ்யம், சுக்திமான், ருக்ஷம், விந்த்யம், பாரியாத்ரம்.

* **முக்தி க்ஷேத்திரம் ஏழு**

அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

* **பெரியாழ்வாரின் வேறு பெயர்கள் - 7**

1. பட்டர்பிரான் 2. வில்லிபுத்தூர்க்கோன் 3. வேயர்குல விளக்கு, 4. கிழியறுத்தான், 5. புதுவைக்கோன், 6. விட்டுச்சித்தன், 7. மாலாகாரர்.

* **இந்தியா முழுமையும் பரவிக்கிடக்கும் திவ்யதேசநாடுகள் ஏழு**

1. சோழநாடு, 2. பாண்டிநாடு, 3. மலைநாடு, 4. தொண்டைநாடு, 5. நடுநாடு, 6. வடநாடு, 7. திருநாடு.

* பரிபாடலில் திருமால் பற்றிய பாடல்கள் - 7

* **இராமாயண சகோதரர் எழுவர்**

1. இராமன், 2. இலக்குவன், 3. பரதன், 4. சத்ருக்கணன்,
5. குகன், 6. சுக்ரீவன், 7. வீடணன்

எட்டு

* **திருமாலின் திவ்ய மந்திரமான அஷ்டாட்சரம்**

ஓம் நமோ நாராயணாய

* ஆழ்வார்கள் எண்மரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்யதேசம்.

திருநாடு - திருவைகுந்தம் (பரமபதம்) - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், பாணாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார்.

* **இறைவன் எண்குணங்கள்**

நல்வினை தீவினை இன்மை	பசியின்மை
மூப்பின்மை	தாகமின்மை
இறப்பின்மை	விரும்பியதைத் தவறாமல் பெறுதல்
துக்கமின்மை	நினைத்ததை நிறைவேற்றுதல்

* **அஷ்டலெட்சுமி**

தன தான்ய தைரிய சௌபாக்ய
வித்யா கீர்த்தி விஜய ராஜ்ய லட்சுமிகள்

* **அட்ட சயனங்கள்**

உத்யோக சயனம் - குடந்தை	மாணிக்க சயனம் - திருநீர்மலை
தருப்பசயனம் - புல்லாணி	வடபத்ர சயனம் - ஸ்ரீவில்லிபுத்தூர்
புஜங்கசயனம் - ஸ்ரீரங்கம்	வீர சயனம் - இந்தளூர்
போகசயனம் - சித்ரகூடம்	தலசயனம் - மாமல்லை

* **முக்தியளிக்கும் தலங்கள் எட்டு**

திருவேங்கடம்	சாளக்கிராமம்
ஸ்ரீமுஷ்ணம்	பத்ரியாச்சரமம்
திருவரங்கம்	நைமிசாரண்யம்
தோத்தாத்திரி	திருக்கண்ணபுரம்

* *அயோத்தியை ராமன் எட்டுப் பாகங்களாகப் பிரித்து*

தனது புதல்வர்கள்	லவ - குசன்
பரதனின் புதல்வன்	தக - புஷ்கலன்
லெட்சுமணனின் புதல்வன்	அங்கத - சந்தரகேசனர்
சத்ருகன்புதல்வர்கள்	சூரசேன - சூடாகி

ஆகிய எண்மருக்கும் பிரித்துக்கொடுத்துள்ளார்.

* அட்டபுயகரத்தில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் எட்டு கரங்களுடன் காட்சியளிக்கின்றார். வலது கரங்களில் சக்கரம், கத்தி, மலர், அம்பு ஆகியவையும், இடது கரங்களில் சங்கு, வில், கேடயம், கதை ஆகியவற்றையும் கொண்டு காட்சியளிக்கின்றார்.

* அஷ்டப்பிரபந்தம் - அழகிய மணவாள தாசர் (எ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

1. கோயில் அந்தாதி (திருவரங்கத்தந்தாதி)
2. திருவரங்கக் கலம்பகம்
3. திருவேங்கடத் தந்தாதி
4. திருவேங்கடமாலை
5. திருவரங்கத்து மாலை
6. அழகர் அந்தாதி
7. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி
8. சீரங்க நாயகர் ஊசல்.

* **பெரியன எட்டு**

ஸ்ரீரங்கம் கோயில்	- பெரிய கோயில்.
ஸ்ரீரங்கம் பெருமாள்	- பெரிய பெருமாள்
ஸ்ரீரங்கம் பிராட்டி	- பெரிய பிராட்டி
பெண் கொடுத்த ஆழ்வார்	- பெரியாழ்வார்
ஸ்ரீரங்கமண்டபம்	- பெரியமண்டபம்
ஸ்ரீரங்கத் திருநாள்	- பெரிய திருநாள்
ஸ்ரீரங்க அமுது	- பெரிய திருப்பாவாடை
ஸ்ரீரங்கம் ஜீயர்	- பெரிய ஜீயர்

❊ எட்டு திருக்கரங்களுடன் எம்பெருமான் திருஅட்டபுயகரம் திவ்யதேசத்தில் மட்டுமே எழுந்தருளி உள்ளார்.

❊ **திருமங்கைஆழ்வாரின் பட்டப்பெயர்கள் எட்டு**

1. ஆலிநாடன்
2. அருள்மாரி
3. அரட்டமுக்கி
4. அடையார்சீயம்
5. கொங்குமலர்க் குழலியர்வேள்
6. மங்கைவேந்தன்
7. பரகாலன்
8. கலியன்

❊ எட்டு விருட்சங்களின் பெயரால் எட்டு சிறப்புத் தீர்த்தங்கள் ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ளன.

நாவல்	-	நாவல்தீர்த்தம்
புன்னை	-	புன்னைதீர்த்தம்
புரசு	-	புரசுதீர்த்தம்
மா	-	மாதீர்த்தம்
வில்வம்	-	வில்வதீர்த்தம்
அரசு	-	அரசுதீர்த்தம்
மகிழ்	-	மகிழ்தீர்த்தம்
கடம்பு	-	கடம்ப தீர்த்தம்

❊ நாராயண பட்டாத்ரியால் பாகவத ஸாரமான நாராயணீயத்தில் கூறப்படும் நித்திய ஆசாரங்கள்.

1. பகவத் கீதா பாராயணம்
2. கங்கா தீர்த்த ஸ்நான பானங்கள்
3. காயத்ரீ ஜபம்
4. துளசி பூஜை
5. திலகதாரணம்
6. ஸாளக்ராம பூஜை
7. ஏகாதசி விரதம்
8. பகவத்நாமஸங்கீர்த்தனம்

✻ திருக்கோட்டியூர் கோயிலின் மேல்தட்டில் எண்திசையிலும் அமையப்பெற்றுள்ள எட்டு விமானங்கள் எட்டு எழுத்துக்களைக் குறிப்பனவாக அமையப்பெற்றுள்ளன.

✻ **குலசேகராழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்கள் எட்டு:**

திருஅயோத்தி, திருஅரங்கம் திருவாலி, திருகண்ணபுரம், திருச்சித்ரக்கூடம், திருபாற்கடல், திருவித்துவக்கோடு, திருவேங்கடம்.

✻ எட்டு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திவ்யதேசம் பரமபதம்

✻ **ஸ்ரீ இராமானுஜர் இயற்றிய காவியங்கள் எட்டு**

யாதவாப்யுதம், ஹம்ஸ ஸந்தேசம், ஸங்கல்யஸூர்யோதம், பூகோள நிர்ணயம், ஸீபாஷிதநீவி, வைராக்கிய பஞ்சகம், ரகுவீரகத்யம்

✻ **ஸ்ரீ இராமானுஜர் சீடர்களில் எட்டு பேர் பிரசித்தி பெற்றவர்கள்**

ஆழ்வான், ஆண்டான், எம்பார், ஆச்சான், பிள்ளான், வடுகநம்பி, அனந்தன், உறங்காவில்லி.

எட்டுமா மூர்த்தி யெண்கண னெண்டிக
கெட்டிறை யெண்பிர கிருதி
யெட்டுமா வரைக ளீன்றவெண் குணத்தோ
னெட்டெணு மெண்குண மதியோர்க்
கெட்டுமா மலரெண் சித்தியெண் பத்தி
யெட்டியோ காங்கமெண் செல்வ
மெட்டுமா குணமெட் டெட்டெணுங் கலையெட்
டிரதமே லதுவுமெட் டினவே.

- திருமந்த்ராதிகாரம்

✻ **எட்டுத்திசைகள்**

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு.

✻ **திக்பாலர் எண்மர்**

இந்திரன், யமன், வருணன், குபேரன், அக்னி, நிருதி, வாயு, ஈசானன்.

✻ எட்டு ப்ரக்ருதி

ப்ரக்ருதி, மஹான், அஹங்காரம், பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம்.

✻ எட்டு குலபர்வதம்

ஹிமவான், நிஷதம், விந்த்யம், மால்யவான், பாரியாத்ரகம், மந்தரம், மலயம், மேரு.

✻ பகவானுடைய எட்டுக் குணங்கள்

1. கர்மத்திற்கு வசப்படாதிருத்தல்
2. கிழப்பருவமில்லாமை
3. சாவில்லாமை
4. சோகமில்லாமை
5. பசியில்லாமை
6. தாகமில்லாமை
7. போகத்திற்குரிய அழிவுற்ற வஸ்துக்களையுடைமை
8. நினைத்ததை முடிக்கவல்லமை

✻ புத்தியின் எட்டுக் குணங்கள்

1. விஷயத்தை மனதில் வாங்குகை
2. மனத்தில் தரிக்கை
3. மறுபடி நினைக்கை
4. பிறருக்கு எடுத்துக்கூறுகை
5. பிறர் கூறாத விஷயங்களையும் அறிகை
6. பிறர் கூறியதில் வேண்டாத சிலவற்றைத் தள்ளுகை
7. விஷயங்களைத் தெளிவுடன் அறிகை
8. உண்மையான அர்த்தங்களை அறிகை.

✻ எட்டு புஷ்பங்கள்

அஹிம்சை, இந்திரியங்களை அடக்குதல், ஸகல ஜந்துக்களிடமும் கருணை, பொறுமை, ஜ்ஞானம், தபஸ், த்யாநம், ஸத்யம்.

✻ எட்டு சித்திகள்

1. வேதத்தை அத்யயநம் செய்தல்
2. அதன் அர்த்தத்தை அறிதல்

3. ஆராய்ந்து அர்த்தத்தை நிச்சயித்தல்
4. தான் செய்த அர்த்தத்தை உறுதிசெய்ய வித்துவான்களுடன் கலத்தல்.
5. ஸித்தாந்தார்த்தத்தை எப்பொழுதும் மனத்தால் பரிச்சயம் செய்தல்.
6. தன்னைப்பற்றிவரும் துன்பமில்லாமை
7. ஐந்து பூதங்களாலும் வரும் துன்பமில்லாமை
8. தெய்வத்தால் வரும் துன்பமில்லாமை.

❊ எட்டுப் பக்திகள்

1. பகவானிடத்தில் அன்பு வைத்தல்
2. பகவானை ஆராதிப்பதில் மகிழ்வுகொள்ளல்
3. பகவானுடைய சரித்ரத்தைக் கேட்பதில் ஆவல்கொள்ளல்.
4. அவனைப் பற்றிப் பேசினாலும், நினைத்தாலும், கேட்டாலும், குரல் தழுத்தழுத்துக் கண்ணீர் பெருகி மயிர்க்கூச்செறிதல்.
5. அவனைத் தானே ஆராதிக்க முயலுதல்.
6. அவனுக்குச் செய்யும் கைங்கர்யங்களில் டம்பமற்று இருத்தல்.
7. அவனையே தியானித்தல்.
8. அவனிடம் அற்ப பலன்களை யாசியாமை.

❊ யோகத்தின் எட்டு அங்கங்கள்

1. *யமம்* - அஹிம்ஸை, ஸத்யம், திருடாமை, காமத்தை அடக்குதல், பொருளை சேர்க்க முற்படாமை.
2. *நியமம்* - பரிசுத்தி, உள்ளதைக் கொண்டு திருப்தியடைதல், வ்ரதம், தவம் முதலியன செய்தல், வேதாந்த பரிச்சயம் செய்தல், எல்லாக் கர்மங்களையும் பகவானிடம் ஸமர்ப்பித்தல்.
3. *ஆஸநம்* - பத்மாஸநம், பத்ராஸநம் முதலியன.
4. *ப்ராணாயாமம்* - சுவாஸத்தை அடக்குதல்.
5. *ப்ரத்யாஹாரம்* - இந்த்ரியங்களை உலக விஷயத்தில் இருந்து திருப்புதல்.
6. *தாரணை* - பகவானுடைய திருமேனியை மனத்திற்கொள்ளுதல்.

7. *த்யாநம்* - இடைவிடாது பகவானை த்யானித்தல்.

8. *ஸமாதி* - அவ்வாறு த்யானித்து நேரில் கண்டாற் போன்ற நிலைமையை அடைதல்.

⁕ எண்வகைச் சித்திகள் (வேறு)

1. அணிமா - சரீரத்தைச் சிறிதாக்கிக்கொள்ளல்
2. மஹிமா - பெரிதாக்கிக் கொள்ளல்
3. லகிமா - இலேசாகச் செய்தல்
4. கரிமா - கனமாக்கிக் கொள்ளல்
5. வசித்வம் - எல்லாவற்றையும் தன் வசமாக்கிக்கொள்ளல்.
6. ஈசத்வம் - எல்லாவற்றுக்கும் தலைவனாயிருத்தல்.
7. ப்ராப்தி - நினைத்த பொருளைப் பெறுதல்.
8. ப்ராகாம்யம் - நினைத்தவிடம் செல்லும் வல்லமை.

⁕ எம்பெருமானின் எட்டுக்குணங்கள் (வேறு)

1. ஸகல ஜந்துக்களிடமும் கருணை
2. பொறுமை
3. பொறாமையில்லாமை
4. பரிசுத்தம்
5. வருந்தாமை
6. நன்மையை நினைத்தல்
7. லோபமின்மை
8. ஆசையின்மை

ஒன்பது

⁕ வேதாந்த தேசிகர் அருளிச்செய்த நூல்கள் ஒன்பது

1. நிக்ஷேபரக்ஷா
2. ரீகஸ்ய த்ரய சாரம்
3. சச்சரித்ர ரக்ஷா
4. பாஞ்சராத்திர ரக்ஷா
5. பரமபதபங்கம்
6. தத்துவதீகா

7. திராவிட வேதோபிஷத் தாத்பர்ய ரத்னாவளி
8. ஸ்ரீதேசிகப்ரபந்தம் (தமிழ்)
9. ஸ்ரீதேசிக ஸ்தோத்ரஸ்துதி (வடமொழி)

✻ பிரபக்தி நிலையில் இறைவன் - ஆன்மா உறவு நிலைகள் ஒன்பது

1. தந்தை - மகன்
2. காப்பவன் - காக்கப்படுபவன்
3. ஆண்டான் - அடிமை
4. நாயகன் - நாயகி
5. அறிபவன் - அறியப்படுபொருள்
6. உடையவன் - உடைமை
7. சரீரி - சரீரம்
8. தாங்குவோன் (தாரகன்) - தாங்கப்படுபொருள்
9. நுகர்பவன் (சேஷி) - நுகரப்படுபொருள்

✻ ஆழ்வார்கள் வரலாற்றை அறிய உதவும் மூலங்கள் ஒன்பது

1. திவ்யசூரிசரிதம் (வடமொழி) - கருடவாகன பண்டிதர்.
2. குருபரம்பராப்ரபாவம் - பெருமாள் ஜீயர் (ஆறாயிரப்படி)
3. உபதேசரத்னமாலை - மணவாள மாமுனிகள்.
4. தேசிகப்பிரபந்தம் - வேதாந்த தேசிகர்.
5. குருபரம்பராப்ரபாவம் - ஸ்ரீபிரமதந்தரி சுதந்திர ஜீயர்.
6. பிரபந்தநாம்ருதம் - ஸ்ரீ அனந்தாச்சாரியர் (வடமொழி)
7. கோயில் ஒழுகு - ஸ்ரீஆண்பிள்ளை கந்தாடையப்பன்.
8. தனியன், வாழித்திருநாமம் - ஆசாரியர்கள்.
9. திவ்யப் பிரபந்த அகச்சான்றுகள்.

✻ நவநரசிம்மர்

லட்சுமிநரசிம்மர்	சாரங்கி நரசிம்மர்
யோக நரசிம்மர்	உக்கிர நரசிம்மர்
சந்திராங்கத நரசிம்மர்	வராக நரசிம்மர்
பார்க்கவ நரசிம்மர்	பர்முவீதி நரசிம்மர்
	பிரகலாத நரசிம்மர்

⁂ **வானேறும் வழிப்படிகள் - 9**

1. முதற்படி	விவேகம்
2. இரண்டாம் படி	வீண்காலம் கழித்தமைக்கு வருந்தல்.
3. மூன்றாம் படி	உலகவாழ்வின் பற்றறுத்தல்.
4. நான்காம் படி	வினைப் பயனுக்கு அஞ்சுதல்.
5. ஐந்தாம்படி	வீடுபேற்றிற்கான நெறிகளைக் கடைப்பிடித்தல்.
6. ஆறாம்படி	உடலினின்று ஆன்மா வெளியேறுதல்.
7. ஏழாம்படி	சீவான்மா அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்கை
8. எட்டாம் படி	சீவர்கள் வைகுந்த மாநகரை அடைதல்
9. ஒன்பதாம்படி	பரிபூரண பிரம்மாநுபவம்.

⁂ **அகோபிலத் திவ்யதேசத்தில்**

லட்சுமி நரசிம்மர்	சத்ரவட நரசிம்மர்
காரண்ட நரசிம்மர்	யோகானந்த நரசிம்மர்
குக நரசிம்மர்	குரோத நரசிம்மர்
மாலோல நரசிம்மர்	ஜ்வாலா நரசிம்மர்.
பரவன நரசிம்மர்	

என்று நவ நரசிம்மர்கள் உள்ளதாகப் புராணங்களுள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

⁂ **நவதிருப்பதிகள் (நவக்கிரகங்கள் வழிபட்ட தலங்கள்)**

திருவைகுண்டம்	- சூரியன்
திருவரகுணமங்கை	- சந்திரன்
திருப்புளியங்குடி	- புதன்
திருத்துலை வில்லிமங்கலம்	- ராகு/ கேது
திருக்குளந்தை	- புதன்
திருக்கோளூர்	- செவ்வாய்
தென்திருப்பேரை	- சுக்கிரன்
திருக்குருகூர்	- வியாழன்

⁂ **ஆழ்வார் திருநகரித் திருவிழா**

திருவைகாசித் திருவிழாவின் 5ஆம் நாள் காலையில் நவ திருப்பதிப் பெருமாள்களும் எழுந்தருளி மங்களாசசனமும் இரவில் ஒன்பது கருட வாகனப் புறப்பாடும் சிறப்பாக நடைபெறும்.

* **ஸ்ரீரங்க தீர்த்தங்கள் 9**

சந்திர புஷ்கரணி

வில்வ தீர்த்தம்

நாவல் தீர்த்தம்

அரசு தீர்த்தம்

புன்னை தீர்த்தம்

மகிழ் தீர்த்தம்

புரசு தீர்த்தம்

கடம்ப தீர்த்தம்

மாதீர்த்தம்

* **இராமாயணத்தில் நவபக்திரசம்**

சிரவணம் - அனுமன்

கீர்த்தனம் - வான்மீகி

ஸ்மரணம் - சீதாபிராட்டி

பாதசேவை - பரதன்

அர்ச்சனம் - சபரி

வந்தனம் - வீடணன்

தாஸ்யம் - இலக்குவன்

ஸக்யம் - சுக்ரீவன்

ஆத்ம நிவேதனம் - ஜடாயு.

* உத்திரமேரூர் திவ்யதேசத்தில் திருமாலின் 9 மூலவர் திருவடிவங்கள் அமைந்துள்ளமை தனிச்சிறப்பாகும்.

* சிங்கவேள்குன்றத்தில் ஒன்பது நரசிம்மர் கோயில்கள் உள்ளன.

1. அஹோபில நரசிம்மர்
2. வராக நரசிம்மர்
3. பாவள நரசிம்மர்
4. காரஞ்ச நரசிம்மர்
5. சக்ரவடநரசிம்மன்
6. பார்க்கவ நரசிம்மன்

7. ஜ்வாலா நரசிம்மன்
8. மாலோலா நரசிம்மன்
9. யோகா நந்த நரசிம்மன்

✻ நவக்கிரகங்களும் திருமால் மூர்த்தம்/ தலங்களும்

சூரியன்	ஸ்ரீராமன்	பறக்கை, குடந்தை சக்ரபாணி கோயில், திருக்கச்சி
செவ்வாய்	ஸ்ரீநரசிம்மர்	நாச்சியார் கோயில், கோளூர்
புதன்	ஸ்ரீகல்கி	புள்ளபூதங்குடி, திருக்கடிகை
குரு	ஸ்ரீவாமனர்	அத்தனூர்
சுக்கிரன்	ஸ்ரீ பரசுராமர்	வெள்ளியங்குடி
சனி	ஸ்ரீவராகர்	உப்பிலியப்பன் கோயில்
ராகு	ஸ்ரீமச்சர்	கவித்தலம்
கேது	ஸ்ரீபலராமர்	ஆடுதுறை

✻ ஸ்ரீராமானுஜர் அருளிய வேதாந்த நவரத்தினங்கள் 9

✻ ஒன்பது வர்ஷங்கள்

பாரதம், கிம்புருஷம், ஹரி, இலாவ்ருதம், ரம்யம், ஹரண்யகம், குரு, பத்ராசுவம், கேதுமாலம்.

✻ ஒன்பது த்வாரங்கள்

கண் - 2	வாய் - 1
காது - 2	மலத்துவாரம் - 1
மூக்கு - 2	ஜலத்வாரம் - 1

பத்து

✻ பத்து ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்யதேசம்

வடநாடு - திருவேங்கடம் - தொண்டரடிப்பொடி - மதுரகவி நீங்கலாக ஏனைய பதின்மர்.

✻ திருமால் அவதாரங்கள் பத்து

மச்சம்	கூர்மம்	வராகம்	நரசிம்மம்	வாமனன்
பரசுராமன்	ராமன்	பலராமன்	கண்ணன்	கல்கி

* **எம்பெருமான் திருமேனித் தத்துவம் (தேசிகன்)**

ஜீவன் (ஆத்மா)	- கௌஸ்தூப ரத்தினம்
மூலப் பிரகிருதி	- ஸ்ரீவத்ஸம் எனும் மறு
'மகாந்' தத்துவம்	- கௌமோதகி எனும் கதை
ஞானம்	- நந்தகம் எனும் கத்தி
அஞ்ஞானம்	- கத்தியின் உறை
சாத்வீக அகங்காரம்	- சாரங்கம் எனும் வில்
தாமச அகங்காரம்	- பாஞ்சசைன்யம் எனும் சங்கு
மனம் எனும் தத்துவம்	- சுதர்சனசக்கரம்
ஞானேந்திரியம் 5 தன்மேந்திரியம் 5	- பத்து அம்புகள்
பூதங்கள் 5 தன்மாத்திரை 5	- வநமாலை (துளசிமாலை)

* பரமாத்மாவிற்கும், ஜீவாத்மாவிற்கும் உள்ள 10 வகைத் தொடர்பு நிலைகளைக் குருவுக்கும் சிஷ்யனுக்கும் உள்ளதாகப் பாவித்து மதுரகவி ஆழ்வார் அருளிய திருப்பாசுரம் குறிப்பிட்டுள்ள 10 வகைத் தொடர்புகள்.

1. நினைக்கவும் இனிமையாக இருத்தல்.
2. வணங்கி வழிபடத்தக்கவனாக இருத்தல்.
3. ஆட்பட்டால் பலபேறுகள் வந்தடைதல்.
4. பலர் உறவினராகவும் இருத்தல்.
5. மற்ற விஷயங்களிலுள்ள ஆசையை மாற்றுதல்.
6. தானே அடிமையாக ஏற்றல்.
7. பாவம் போக்குதல்.
8. மிகுந்த கருணை காட்டுதல்.
9. தத்துவார்த்தத்தை விளக்கியருள் செய்தல்.
10. தன்னைப்போல் ஆக்குதல்.

* பெருமானுக்கும், ஜீவனுக்கும் பத்துவிதமான சம்பந்தங்கள் உள்ளன. அவை,

1. ஆனந்தரூபமான பகவானுடைய அனுபவம்.
2. அவனைச் சரணமாக அடைதல்.

3. அவனையே தன் ஸ்வரூபத்திற்குத் தக்க பலனாகக் கொள்ளுதல்.

4. அவனோடு தன் ஸ்வரூபத்திற்குத் தக்க பலனாகக் கொள்ளுதல்.

5. தகாத விஷயங்களில் ஆசையை அவனால் ஒழிக்கப் பெறுதல்.

6. அவன் விஷயமான பற்று உண்டாகப் பெறுதல்.

7. பாபங்கள் ஒழிக்கப்பெறுதல்.

8. அவனுடைய கருணைக்கு இலக்காயிருத்தல்.

9. அவனால் தத்துவஞானம் உண்டாகப்பெறுதல்.

10. அவன் தன்னைப் போலாக்கப்பெறுதல்.

பதினொன்று

* வடநாட்டில் அமையப்பெற்றுள்ள மங்களாசாசனம் பெற்ற திவ்ய தேசங்கள் பதினொன்று.

* பதினொரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற திவ்யதேசங்கள் இரண்டு.

  சோழ நாடு - திருவரங்கம் மதுரகவி தவிர பதினொருவர்.
  வடநாடு - திருப்பாற்கடல் பாணாழ்வார் தவிர பதினொருவர்.

* ஸ்ரீரங்கம் திவ்ய தேசத்தில் மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள் 11 பேர்கள்.

* **சரமலோகச்சுருக்கு**:
  பதினோரு பாசுரங்களை உடையது.

* **திருச்சின்னமாலை** (சுவாமிதேசிகன்):
  11 பாசுரங்களை உடையது.

* **பதினொன்று இந்த்ரியம்**

  ஜ்ஞாநேந்திரியம் ஐந்து - செவி, வாய், கண், மூக்கு, உடல்.

  கர்மேந்த்ரியம் ஐந்து - வாய், கை, கால், பாயு, உபஸ்தம், மனம்.
  உடன் சேர்ந்து 11 இந்திரியங்கள்.

* கருடசேவை நடைபெறும் இடங்கள்

✻ **தை அமாவாசை மறுநாள் திருநாங்கூர் என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளும் மூர்த்தங்கள்**

1.	திருக்காவளம்பாடி	-	கோபாலகிருஷ்ணன் ருக்மணியுடன்	-	துவாரகை
2.	திருஅரிமேய	-	குடமாடு கூத்தர்	-	விண்ணகரம் கோவர்த்தனகிரி
3.	திருவண்புருடோத்தமம்	-			அயோத்தி
4.	திருச்செம்பொன்செய்கோவில்	-	அழகிய மணவாளன்	-	உறையூர்
5.	திருமணி மாடக்கோவில்	-	நாராயணப்பெருமாள்	-	பத்ரி
6.	திருவைகுந்த விண்ணகரம்	-			ஸ்ரீவைகுண்டம் (பரமபதம்)
7.	திருத்தேவனார்த்த தொகை	-	கீழச்சாலை	-	திருவடந்தை
8.	திருத்தெற்றியம்பலம்	-	பள்ளிக் கொண்ட பெருமாள்	-	ஸ்ரீரங்கம்
9.	திருமணிக்கூடம்	-	வரதராஜப்பெருமாள்	-	கச்சி
10.	திருவெள்ளக்குளம்	-	அண்ணன்கோயில்	-	திருப்பதி
11.	திருப்பார்த்தன்பள்ளி	-	பார்த்தசாரதி	-	குருசேஷத்திரம்

* **ஆண்டாள் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்கள் 11**

1. திருவரங்கம்
2. திருஆய்பாடி
3. திருகண்ணபுரம்
4. திருகுடந்தை
5. திருத்துவாரபதி
6. திருபரமபதம்
7. திருப்பாற்கடல்
8. திருமாலிருஞ்சோலை
9. திருவடமதுரை (மதுரா)
10. திருவில்லிபுத்தூர்
11. திருவேங்கடம்

பன்னிரண்டு

* திருமாலின் பன்னிரு நாமம் பற்றிய தேசிகரின் தோத்திரம் கூறும் நாமங்கள் 12

கேசவன்	நாராயணன்	மாதவன்	கோவிந்தன்
விஷ்ணு	மதுசூதனன்	திரிவிக்ரமன்	வாமனன்
சிரீதரன்	இருபீகேசன்	பத்பநாபன்	தாமோதரன்

* **பன்னிரு சயனத் தலங்கள்**

1.	ஸ்ரீரங்கம்	-	வீரசயனம்
2.	மகாபலிபுரம்	-	தலசயனம்
3.	திருமயம்	-	போகசயனம்
4.	சிறுபுலியூர்	-	பாலசயனம்
5.	கும்பகோணம்	-	உத்தானசயனம்
6.	திருவனந்தபுரம்	-	அனந்தசயனம்
7.	திருமோகூர்	-	பிராத்தனாசயனம்
8.	திருப்புல்லாணி	-	தர்பசயனம்
9.	திருச்சித்திராகூடம்	-	போகசயனம்
10.	திருநீர்மலை	-	மாணிக்கசயனம்
11.	ஸ்ரீவில்லிபுத்தூர்	-	வடபத்திரசயனம்
12.	திருவெஃகா	-	புஜங்கசயனம்

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்துள் பாசுரம் அருளிச்செய்துள்ள ஆழ்வார்கள் பன்னிருவர்.

				பாடல்கள்
1. பொய்கையாழ்வார்	திருவெஃகா	ஐப்பசி திருவோணம்	பாஞ்சசைன்யம்	100
2. பேயாழ்வார்	மாமல்லை	ஐப்பசி அவிட்டம்	கதை	100
3. பூதத்தாழ்வார்	மயிலை	ஐப்பசி சதயம்	நந்தகாம்சம்	100
4. திருமழிசையாழ்வார்	திருமழிசை	தை மகம்	சக்கரம்	216
5. பெரியாழ்வார்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆனி சுவாதி	கருடன்	473
6. ஆண்டாள்	ஸ்ரீவில்லிபுத்தூர்	ஆடி பூரம்	பூதேவி	173
7. தொண்டரடிப்பொடி யாழ்வார்	திருமண்டங்குடி	மார்கழி கேட்டை	வானமாலம்சம்	55
8. குலசேகராழ்வார்	அஞ்சைக்களம்	மாசிமகம்	கவுத்துவம்	105
9. திருப்பாணாழ்வார்	உறையூர்	கார்த்திகை - ரோகிணி	ஸ்ரீவத்சம்	10
10. திருமங்கையாழ்வார்	திருவாவி	கார்த்திகை - கார்த்திகை	சார்ங்கம்	253
11. நம்மாழ்வார்	திருக்குருகூர்	வைகாசி - விசாகம்	சேனைபலம்	1296
12. மதுரகவியாழ்வார்	திருக்கோளூர்	சித்திரை - சித்திரை	-	11

* துவயச் சுருக்கு : 12 பாசுரங்களை உடைய நூல்.

* **திருவரங்கம் 12 சிறப்புகள்**

1. திருவரங்கம் - பூலோக வைகுந்தம்
2. பொன் வேய்ந்த விமானம்
3. தெற்கு நோக்கிய திருமுக மண்டலம்
4. அறிதுயில் அனந்தசயனம்
5. காயத்ரி மண்டபம் 24 அட்சரங்கள் 24 தூண்கள்
6. ஸ்ரீரங்க விமானம் - ஓங்கார வடிவம் - பிரணவ விமானம்
7. சப்த தாதுக்கள் - 7 பிராகாரங்கள்
8. 4 வேதம் 6 அங்கங்கள் - 10 ஸ்தூபிகள்
9. இடைகலை சுழுமுனை பிங்கலை நாடிகள் காவிரி ஸ்ரீரங்கம் கொள்ளிடம்
10. ஆழ்வார்கள் மங்களாசாசனம்
11. தனாகர்ஷணா சக்கரம் - பிரதிட்டை சாகரர்
12. 11 ஆழ்வார்களால் பாடப்பெற்றமை.

* **திருமண் காப்பின் வடிவங்கள் -12**

1. தீபஜ்வாலை	7. சங்கு
2. மூங்கில் இலை	8. புளியம்இலை
3. தாமரை மொட்டு	9. சுளகு
4. ஆம்பல்	10. ஊமத்தம்பூ
5. மீன்	11. தண்டாகாரம்
6. ஆமை	12. விஷ்ணு பாதவடிவம்

* **வடநாட்டுத் திவ்ய தேசத் தலங்கள் -12**

திருஅயோத்தி	திருநைமிசாரண்யம்
திருஆய்ப்பாடி	திருபாற்கடல்
திருக்கண்டங்கடிநகர்	திருப்பிரிதி
திருசாளக்கிராமம்	திருவடமதுரை
திருசிங்கவேள்குன்றம்	திருவதரியாச்சிரமம்
திருத்துவாரகை	திருவேங்கடம்

* செவ்வைச் சூடுவார் பாகவதம் - பன்னிரண்டு கந்தங்கள்

திருமண் காப்பிட்டுக்கொள்ளும் துவாச இடங்கள்

பேர்ஆறு மூழ்கி மறைநூல்பிதற்றி மிடறும்பிளந்து பிறவித்
தூர்ஆறு மாறு நினையாமல் உங்கள் தொழிலே புரிந்து சுமபீர்!
ஓர் ஆறு பேத சமயங்களுக்கும் உருவாகி நின்ற ஒருவன்
ஈறுஆறு நாமம் உரைசெய்து மண்கொடு இடுவார்கள் காணும் இமையோர்

- வில்லிபாரதர்

வ எண்.	உறுப்பு	சேவை தந்து ரிற்கும் வடிவம்	ஒளிநிறம்	ஏந்தியுள்ள படைகள்	பிராட்டி	திருமண் காப்பின் உயரம்
1.	நெற்றி	கேசவன்	பொன்மயம்	நான்கு திருவாழிகள்	பெரிய பிராட்டி	4 ”
2.	வயிறு	நாராயணன்	நீலமேகசாமளன்	நான்கு சங்குகள்	அம்ருதோத்பவை	10 ”
3.	மார்பு	மாதவன்	இந்திரநீலரத்னம்	நான்கு கதை	கமலை	8 ”
4.	கண்டம்	கோவிந்தன்	சந்திரகாந்தி	நான்கு சாரங்கம்	லோககசுந்தரி	4 ”
5.	வலதுபுற வயிறு	விஷ்ணு	தாமரைப்பூந்தாது	4 ஹலாயுதம்	விஷ்ணுபத்தினி	10 ”
6.	வலப்புயம்	மதுசூதனன்	தாமரைப்பூ	4 முகலங்கள்	வைணவப்பிராட்டி	8 ”
7.	வலக்கழுத்து	திரிவிக்ரமன்	அக்னிகாந்தி	4 கட்சங்கள்	வராரோஹிணி	4 ”
8.	இடப்புற வயிறு	வாமனன்	இளஞாயிறு	வஜ்ராயுதம்	அரிவல்லபை	10 ”
9.	இடப் புயம்	சிரீதரன்	தாமரை	4 வாள்	சாரங்கிணி	8 ”
10.	இடப் புறக்கழுத்து	இருடீசன்	மின்னல்	4 உழலைத்தடி	தேவதேவி	4 ”
11.	முதுகின் அடி	பத்மநாபன்	சூரியஒளி	4 பஞ்சாயுதம்	மகாலட்சுமி	4 ”
12.	பிடரி	தாமோதரன்	இந்திரகோபம்	4 பாசாயுதபாணி	சர்வலோக சுந்தரி	4 ”

திருமண் ஸ்ரீ சூர்ண மகிமை

சிந்துரப் பொடிகொண்டு சென்னி யப்பித்
திருநாம மிட்டங்கோ ரிலையந் தன்னால்,
அந்தர மின்றித் தன்னெறி பங்கியை
அழகிய நேத்திரத் தால ணிந்து,
இந்திரன் போல் வரு மாயப் பிள்ளை
எதிர் நின்றங் கினவளை யிழவே லென்ன,
சந்தியில் நின்று கண்டீர் நங்கை
தன்துகி லொடுசரி வளைகழல் கின்றதே.

ஏதாங்க ளாயின வெல்லாம் இறங்க லிடுவித்து, என் னுள்ளே
பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து,
போதில் கமலவன் னெஞ்சம் புகுந்துமென் சென்னித் திடரில்,
இத்திவ்யதேசம் புத்திரப்பேறு, கல்யாணப்பேறு ஆகியவற்றை அளிக்கும் தலமாகக் கொண்டாடப் பெற்றுவருகிறது. இத்தலப் பெருமானுக்கு வைத்திய வீரராகவன் என்ற திருநாமம் உள்ளமையின் இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி இப்பெருமானை வணங்க, கொடிய நோய்கள் குணமாகும்.

8. நாங்குநேரி

சீவரமங்கை என்னும் இத்திவ்யதேசப் பெருமானுக்கு நாள் தோறும் செய்யப்படும் தைலஅபிஷேகம் சேர்க்கப்பெறும். கிணற்றில் உள்ள எண்ணெயைப் பக்தர்கள் உண்பதாலும், தங்கள் உடலில் பூசிக் கொள்வதாலும் குஷ்டம் போன்ற கொடிய வியாதிகள் நீங்கப் பெறுகின்றனர்.

9. ஆலத்தூர்

கோவைக்கருகில் உள்ள மொண்டிப்பாளையம் என்னும் ஊஞ்சல் வனத்தில் உள்ள திருக்குளத்தில் நீராடித் துளசி, வேப்பங் கொழுந்து, மாங்கொழுந்து, எரிக்கலம்பூமொட்டு, அரளிப்பூ, எலுமிச்சைப் பழசாறு, கரி போன்ற பொருட்களை சேர்த்துக் கொண்டு இவற்றை ஒன்றாகக் கலந்து தீ மூட்டி வெளிவரும் நறுமணப்புகையும், எரிந்த பின்பு கிடைக்கும் கரித்தூளைப் பக்தர்களின் உடம்பின் மீது தடவி நோய்களைக் குணப்படுத்துகிறார்கள்.

10. சிறுபுலியூர்

இங்கு வீற்றிருந்தருளும், சலசயனப் பெருமானை வணங்க, நாக தோஷ நிவர்த்தியும், புத்திரசந்தானமும் ஏற்படும்.

11. திருவெள்ளக்குளம்

மக்கட்பேறு, திருமணப்பேறு ஆயுள்விருத்தி ஆகியவற்றிற்கான சிறப்புப் பிரார்த்தனைத் தலம்.

12. திருஊரகம்

இங்கு எழுந்தருளியுள்ள ஆதிசேடனுக்குத் திருமஞ்சனம் செய்து, பாயசம் படைத்து வழிபட, புத்திரப்பேறு கிட்டும்.

13. திருப்புட்குழி

இங்குள்ள ஜடாயுதீர்த்தத்தில் பெண்கள் நீராடி, வறுத்தபயிரை மடியில் கட்டிக்கொண்டு படுத்திருந்து மறுநாள் காலையில் அப்பயிறு முளைத்திருக்குமாயின் புத்திரப்பேறு கிட்டும் என்பது நம்பிக்கை.

14. திருவல்லவாழ்

குழந்தைச்செல்வம் இல்லாதவர்கள் இத்திருத்தலத்தில் கதகளி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதன் வாயிலாகத் தங்கள் பிரார்த்தனையை வேண்டுவது இங்கு மரபாக உள்ளது.

15. திருவனந்தபுரம்

இத்திவ்ய தேசத்தை வழிபடுவோருடைய நோய்களும், வினைகளும், செய்த பாவங்களும் அப்போதே நீங்கும் என்று நம்மாழ்வாரின் பாசுரங்கள் தெரிவிக்கின்றன.

16. திருக்கோவூர்

வாழ்க்கையில் தாங்கள் இழந்த செல்வங்களை மீண்டும் பெறக் குபேரனால் வழிபடப்பெற்ற வைத்தமாநிதிப் பெருமானைத் தரிசித்தல் வேண்டும்.

17. பத்ரிநாத்

இங்கு கங்கைக் கரையில் அமைந்துள்ள பிரம்மகபாலம் என்னும் பெரியபாறையில் முன்னோர்களுக்கு நீர்க்கடன் செலுத்தினால் எல்லாத் தலைமுறையினரும் முக்தி அடைவர் என்பது தனிச்சிறப்பாகும்.

திவ்ய தேசங்களில் பேறுபெற்ற பேருளாளர்கள்

அகஸ்தியர்	-	திருக்கண்டியூர், திருவழுந்தூர்
அஷ்டகோண மகரிஷி	-	காழிச்சிராமவிண்ணகரம்
அலாதிநிகஞ்சமப்ரஜாபதி	-	திருவாலி, திருநகரி
அநந்தாழ்வார்	-	தெற்றியம்பலம்
அசுவத்தநாராயணன்	-	திருக்கள்வனூர், புல்லாணி
அச்விநிதேவதை	-	பவளவண்ணம்
அக்னி	-	வரகுணமங்கை, ராஜமன்னார்குடி
அக்ரூவர்	-	திருநீரகம்
அம்பரீசன்	-	திருவித்துவக்கோடு
அஜருத்ரர்	-	திருமோகூர்
அத்ரிமகரிஷி	-	திருவல்லிக்கேணி
அநிருத்தன்	-	திருவல்லிக்கேணி
அநந்தர்	-	பரமபதம்
அழகியசிங்கர்	-	சிங்கவேள்குன்றம்
ஆதிசேஷன்	-	திருக்கச்சி, திருஊரகம்
ஆறுமுகன்	-	திருவேங்கடம்
இரவிதர்மன்	-	ஸ்ரீரங்கம்
இரவிதர்மா	-	திருக்கோழி
இலட்சுமி	-	திருவெள்ளறை, திருநாவாய்
இந்திரன்	-	வெள்ளியங்குடி, மணிமாடக்கோயில், கோவலூர், நைமிசாரண்யம், வடமதுரை, திருவனந்தபுரம், திருச்சிரீவரமங்கை, வைகுண்டம், தொலைவில்லிமங்கலம் திருமோகூர், திருக்கோட்டியூர்
இந்த்ரத்யும்னன்	-	பூரிஜகந்நாதம்
எமன்	-	அழகர்மலை
ஏகாதசருத்ரர்கள்	-	மணிமாடக்கோயில்,

		திருப்பார்த்தன்பள்ளி, திருவனந்தபுரம்.
உபமன்யு	-	திருப்பேர்நகர், வண்புருடோத்தமம்
உதங்கமுனிவர்	-	அரிமேயவிண்ணகரம், வைகுந்தவிண்ணகரம்
உபரிசரஸீ	-	கண்ணங்குடி, திருவழுந்தூர், வைகுந்தவிண்ணகரம்
உடையநங்கை	-	திருச்சிரீவரமங்கை
ஊர்வசி	-	அன்பில்
கதம்பமுனி	-	திருக்கரம்பனூர், திருக்கோட்டியூர்
கஜேந்திரன்	-	திருக்கவித்தலம், திருக்கச்சி, திருநாவாய்
கன்வமுனிவர்	-	கண்ணபுரம்
கருடன்	-	கண்ணபுரம், திருவழுந்தூர், திருவஹீந்திரபுரம், திருவண்பரிசாரம், பரமபதம், திருநாராயணபுரம்
கமடன்	-	ஸ்ரீமுஷ்ணம்
கமலவல்லி	-	உறையூர்
கண்டகி	-	சாளக்கிராமம்
கனிகண்ணன்	-	திருவெஃகா
கயாலீஸ்வரன்	-	கயாக்ஷேத்ரம்
கபிலமுனி	-	திருகாட்கரை
கம்சன்	-	வடமதுரை
கண்டாகர்ணன்	-	திருவல்லவாழ்
காமதேனு	-	திருஆதனூர்
காவேரி	-	விண்ணகர், திருச்சேறை, திருவழுந்தூர்
காசியபர்	-	கோவலூர்
காவலர்	-	கோவலூர்
காலதூசகன்	-	ஸ்ரீவைகுண்டம்
கார்ஹமகரிஷி	-	திருக்காரகம்
க்ருத்ரராஜன்	-	திருப்புள்ளம்பூதங்குடி
கிள்ளிவளவன்	-	ஸ்ரீரங்கம்

குஷி	- திருகோவலூர்
குசத்வஜன்	- கோவலூர்
குபேரன்	- திருக்கோளூர்
கௌதமர்	- கண்ணங்குடி
சப்தரிஷிகள்	- திருப்புலியூர்
சத்தியவான்	- வரகுணமங்கை
சத்தியதேவதை	- திருமெய்யம்
சல்யபாண்டியன்	- திருதண்கால்
சமுத்திரராஜன்	- திருப்புல்லாணி
சனகர்	- ஸிம்ஹாசலம்
சனந்தனர்	- ஸிம்ஹாசலம்
சனத்குமாரர்	- ஸிம்ஹாசலம்
சங்கரமங்கலத்தம்மை	- திருவல்லவாழ்
சந்திரன்	- ஸ்ரீரங்கம், தலைச்சங்கநாண்மதியம், இந்தளூர், திருவஹீந்திரபுரம் திருவனந்தபுரம், திருவாட்டாறு
சங்கன்	- ஆழ்வார்திருநகரி
சனகஸநந்தன்	- திருக்கரம்பனூர்
சரஸ்வதி	- திருதண்கா
சப்தரோமா	- திருவல்லிக்கேணி
சாந்தீபனிமஹரிஷி	- அவந்தி
சாலிஹோத்ரமுனி	- திருஎவ்வுள்
சிபி	- திருவெள்ளறை, நந்திபுரவிண்ணகரம்
சிறியதிருவடி	- திருக்கவித்தலம்
சிவன்	- நிலாத்திங்கள் துண்டம், திருச்செங்குன்றூர், செம்பொன் செய்கோயில், குறுங்குடி, காசி
சுக்ரன்	- திருப்பேரை
சுதர்மன்	- நைமிசாரண்யம்
சுவேதபூபாலன்	- ஸ்ரீகூர்மம்
சுமதிராஜன்	- திருவல்லிக்கேணி
சுசிசித்தன்	- ஸ்ரீகூர்மம்
சுப்ரவர்	- திருவல்லிக்கேணி

சுவேதமுனிவர்	-	திருவெள்ளக்குளம்
சூதர்	-	நைமிசாரண்யம்
சேனைத்தலைவர்	-	காவாளம்பாடி
சோமசர்மா	-	ஹரித்வார்
சௌனகர்	-	திருகோவலூர்
தண்டகமகரிஷி	-	கண்ணபுரம்
தர்மதேவதை	-	விண்ணகர், திருவழுந்தூர், திருமாலிருஞ்சோலை
தநுர்த்வஜன்	-	பிரயாகை
தர்மராஜன்	-	புளிங்குடி
தாந்தன்	-	ஆழ்வார்திருநகரி
திருமங்கை ஆழ்வார்	-	திருக்கரம்பனூர், திருஆதனூர், கண்ணங்குடி,நாகை, திருவாலிதிருநகரி
தில்லை மூவாயிரவர்	-	சித்திரகூடம்
திவாகரமுனிவர்	-	திருவனந்தபுரம்
திரௌபதி	-	திருத்துவாரகை
திலோத்தமை	-	ஸ்ரீகூர்மம்
துருவன்	-	நாகை
தேவர்கள்	-	தலைச்சங்கநாண்மதியம், ஸிம்ஹாசலம்
தேவப்ருந்தங்கர்	-	தலைச்சங்க நாண்மதியம்
தேவகி	-	வடமதுரை
தொண்டைமான்	-	திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருவேங்கடம்
பதஞ்சலி	-	சித்திரகூடம்
பலிச்சக்ரவர்த்தி	-	கோவலூர்
பல்லவராஜன்	-	பரமேச்சுரவிண்ணகரம்
பலராமன்	-	திருவல்லிக்கேணி
பரதன்	-	திருவயோத்தி
பரத்வாஜர்	-	கடிநகர்
பரசுராமர்	-	திருவாட்டாறு
பத்மாவதி	-	பிரயாகை
பக்தராமதாஸ்	-	பத்ராசலம்

பட்டாத்திரி	-	வர்க்கலா
பராசரர்	-	திருப்பேர்நகர், தஞ்சை மாமணிக்கோயில், வெள்ளியங்குடி
பார்த்தன்	-	திருப்பார்த்தன்பள்ளி, திருவல்லிக்கேணி
பார்வதி	-	பவளவண்ணம், திருகார்வானம், திருப்பிருதி,
பாணினி	-	சித்திரகூடம் , ஜோதிடமடம்
பிரம்மா	-	திருஅன்பில், நறையூர், கண்ணங்குடி, நாகை, வெள்ளியங்குடி, கோவலூர், திருகச்சி, திருவெஃகா, சாளக்கிராமம், வடமதுரை, திருவாறன்விளை, திருச்சிரீவரமங்கை, திருப்பேரை, திருக்குருகூர், திருமோகூர், திருபாற்கடல், ராஜமன்னார்குடி, புஷ்கரம்
பிருகு	-	கண்ணங்குடி, திருகச்சி, திருவேளுக்கை, திருவல்லிக்கேணி திருநீர்மலை, வைகுண்டம், ராஜமன்னார்குடி
பிரணிதீ	-	பிரயாகை
பிரத்யும்னன்	-	திருவல்லிக்கேணி
பிரகலாதன்	-	சிங்கவேள்குன்றம்
பிரகஸ்பதி	-	திருக்குளந்தை
புலி	-	திருத்தண்கால்
புல்லாரண்யமுனி	-	புல்லாணி
பூதேவி	-	வெள்ளியங்குடி, ஸ்ரீமுஷ்ணம்
பூதத்தாழ்வார்	-	கோவலூர், திருவெஃகா
புண்டரீக மஹரிஷி	-	திருகடல்மல்லை, பண்டரீபுரம்
பெரியாழ்வார்	-	வில்லிபுத்தூர், திருக்கூடல்
பெரிய திருவடி	-	திருவெள்ளறை, விண்ணகர்
பேயாழ்வார்	-	திருக்கோவலூர்

பைரவேசர்	-	ஸ்ரீகூர்மம்
மயன்	-	வெள்ளியங்குடி
மதுமான்மகரிஷி	-	திருவல்லிக்கேணி
மதுரகவி ஆழ்வார்	-	திருக்கோளூர், திருகுருகூர்
மண்டூகமுனி	-	வில்லிபுத்தூர்
மலயத்துவஜபாண்டியன்	-	மாலிருஞ்சோலை
மார்க்கண்டேயர்	-	திருவெள்ளறை, விண்ணகர், திருச்சேறை,இடவெந்தை, வெள்ளியங்குடி, திருவல்லிக்கேணி திருநீர்மலை, திருவண்வண்டூர், திருச்சிரீவரமங்கை
மாடரர்	-	திருகண்ணங்குடி
மிருகண்டு	-	திருக்கோவலூர்
முப்பத்துமூன்று தேவர்கள்	-	திருக்கோழி
மேதாவிமுனிவர்	-	திருநறையூர்
யக்ஞசர்மா	-	திருபுளிங்குடி
யசோதை	-	வடமதுரை
ராமன்	-	திருப்புள்ளம்பூதங்குடி
ருக்மணி	-	திருவல்லிக்கேணி
ருக்மாங்கதன்	-	திருக்கடித்தானம்
ருத்ரர்	-	திருவெள்ளறை, காவளம்பாடி, திருவெள்ளக்குளம், சாளக்கிராமம், திருப்பேரை, திருப்பாற்கடல்
ரோமசமுனி	-	கண்ணமங்கை, திருச்சிரீவரமங்கை, வரகுணமங்கை
ரைப்யர்	-	ஹரித்வார்
நந்தகமுனி	-	திருக்கூடலூர்
நந்தி	-	நந்திபுரவிண்ணகரம்
நந்தகோபர்	-	திருவாய்ப்பாடி
நவயோகி	-	திருநாவாய்
நரன்	-	பதரியாச்ரமம்
நம்மாழ்வார்	-	திருகுருகூர்
நவநிதிகள்	-	திருக்கோவலூர்
நாகராஜன்	-	நாகை

நாச்சியார்	-	தெற்றியம்பலம்
நாரதர்	-	திருக்கச்சி, திருவண்வண்டூர், ஸிம்ஹாசலம்
நித்தியசூரிகள்	-	தலைச்சங்கநாண்மதியம், பரமபதம்
நிருதி	-	புளியங்குடி
நரர்	-	புளியங்குடி
வபரிசரவஸு	-	திருக்கரம்பனூர்
வருணன்	-	கண்ணமங்கை, திருப்பார்த்தன்பள்ளி, திருநின்றவூர் திருப்புளிங்குடி - தொலைவில் ளங்கலம்
வசிஷ்டர்	-	திருத்தேவனார்தொகை
வசுதேவர்	-	வடமதுரை
வக்ராங்கமஹரிஷி	-	ஸ்ரீகூர்மம்
வால்மீகி	-	திருஅன்பில்
வாயு	-	தொலைவில்லிமங்கலம்
வியாசர்	-	சிறுபுலியூர், நைமிசாரண்யம், திருவாறன்விளை
வியாக்ரபாதர்	-	சிறுபுலியூர், சித்திரகூடம்
விசுவக்சேனர்	-	பரமபதம்
விந்தை	-	திருவண்பரிசாரம்
வேதசாரன்	-	திருக்குளந்தை
விபீடணன்	-	ஸ்ரீரங்கம், தனுஷ்கோடி
ஹாரீதமுனி	-	திருப்பாடகம்
ஹாரீதமஹரிஷி	-	திருமூழிக்களம்
ஹேமமஹரிஷி	-	குடந்தை
ஜில்லிகை	-	ஸ்ரீமுஷ்ணம்
ஜடாயு	-	திருப்புட்குழி
ஜாஜலிமஹரிஷி	-	திருவல்லிக்கேணி
ஜனமேஜயன்	-	திருப்பாடகம்
ஸுவேதராஜன்	-	திருவெள்ளக்குளம்
ஸ்ரீதேவி	-	திருத்தண்கால்
ஸ்ரீவல்லவன்	-	திருத்தண்கால்
ஸுத்யும்னன்	-	ஸ்ரீமுஷ்ணம்

திவ்யதேச முடிபுச் சொற்கள்

அகம்	-	திருவூரகம், திருக்காரகம், திருநீரகம்
அறை	-	திருவெள்ளறை
அம்பலம்	-	திருத்தெற்றியம்பலம்
ஆறு	-	திருக்கோட்டாறு, திருவாட்டாறு
ஆச்சிரமம்	-	திருவதரியாச்சிரமம்
ஆரண்யம்	-	திருநைமிசாரண்யம்
ஊர்	-	அத்தியூர், ஆதனூர், இந்தளூர், கண்டியூர், நறையூர், திருவழுந்தூர், சிறுபுலியூர், திருக்கோவலூர், திருக்கள்வனூர், திருநின்றவூர், திருமோகூர், திருக்கோட்டியூர், திருக்குருகூர், கோளூர், திருச்செங்குன்றூர், வண்வண்டூர்
ஒயில்	-	தென்திருப்பேரெயில்
கரை	-	திருக்காட்கரை
களம்	-	திருமூழிக்களம்
கடல்	-	திருப்பாற்கடல்
கா	-	திருவெஃகா
கால்	-	திருத்தண்கால்
குடி	-	திருக்கண்ணங்குடி, திருக்குறுங்குடி, திருவெள்ளியங்குடி, புளிங்குடி
குளம்	-	திருவெள்ளக்குளம்
குன்றம்	-	சிங்கவேள்குன்றம்
குழி	-	திருப்புட்குழி
கூடல்	-	தில்லைத் திருச்சித்ரகூடம்
கேணி	-	திருவல்லிக் கேணி
கோடு	-	திருவித்துவக்கோடு
சோலை	-	திருமாலிருஞ்சோலை
தலம்	-	கவித்தலம்

தானம்	-	திருக்கடித்தானம்
தொகை	-	திருத்தேவனார்தொகை
பள்ளி	-	பார்த்தன் பள்ளி
பதம்	-	திருப்பரமபதம்
பாடி	-	திருவாய்ப்பாடி, காவளம் பாடி
புரம்	-	திருக்கண்ணபுரம், திருவயீந்திரபுரம், திருவனந்தபுரம்
மங்கை	-	திருக்கண்ணமங்கை, வரகுணமங்கை
மங்கலம்	-	தொலைவில்லிமங்கலம், சிரீவரமங்கலம்
மல்லை	-	திருக்கடன்மல்லை
மலை	-	திருநீர்மலை, திருமலை
மதியம்	-	தலைச்சங்கநாண்மதியம்
வண்ணம்	-	திருப்பவளவண்ணம்
வாழ்	-	திருவல்லவாழ்
வானம்	-	திருக்கார்வானம்
விளை	-	திருவாறன்விளை
விண்ணகர்	-	திருவிண்ணகர்
விண்ணகரம்	-	திருப்பரமேச்சர விண்ணகரம், அரிமேய விண்ணகரம், நந்திபுர விண்ணகரம்
நகர்	-	திருப்பேர்நகர், கண்டங்கடிநகர்

கருட வாகனமும் கொடியும்

திருமால் கருடனிடம் நீ எனக்கு வாகனமாக இருக்க வேண்டும் என்று பணித்தார்.

கருடனும் உங்கள் கொடியில் (துவஜம்) என் உருவம் இருக்கவேண்டும் என்ற வரத்தைத் திருமாலிடம் வேண்டினார். இந்த விபரம் மகாபாரதத்திலுள்ள ஆதி பர்வத்தில் 24-வது அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளது.

திருமாலும் - கருடனும் ஒருவரே என்று மகாபாரதத்திலுள்ள அனுசாசன பர்வத்தில் காணப்படுகிறது.

ஞானம், பலம், ஐஸ்வர்யம், வீர்யம், அதீதசக்தி, தேஜஸ் என்ற ஆறுவிதமான குணங்களுடன் கருடன் திகழ்கிறார்.

திவ்ய தேசங்களின் வழக்குப் பெயர்கள்

மகாபலிபுரம்	-	திருக்கடல்மல்லை
உத்தமர்கோயில்	-	திருக்கரம்பனூர்
கும்பகோணம்	-	திருக்குடந்தை
ஆழ்வார் திருநகரி	-	திருக்குருகூர்
நாதன்கோயில்	-	நந்திபுர விண்ணகரம்
ஆடுதுறை பெருமாள்கோயில்	-	திருக்கூடலூர்
சிதம்பரம்	-	திருச்சித்ரகூடம்
வானமாமலை	-	திருச்சிரீவரமங்கை
நத்தம்	-	வரகுணமங்கை
இரட்டைத் திருப்பதி	-	திருத்தொலை வில்லிமங்கலம்
கோயிலடி	-	திருப்பேர்நகர்
உப்பிலியப்பன் கோயில்	-	திருவிண்ணகர்
உலகளந்த பெருமாள் கோயில்	-	திருவூரகம்
தேவப்பிரயாகை	-	திருக்கண்டங்கடிநகர்
அகோபிலம்	-	சிங்கவேள் குன்றம்
கீழைச்சாலை	-	திருத்தேவனாந்தொகை
நாச்சியார் கோயில்	-	திருநறையூர்
அழகர் கோயில்	-	திருமாலிருஞ்சோலை
அண்ணன் கோயில்	-	திருவெள்ளக்குளம்
முகுந்த நாயகர்கோயில்	-	திருவேளுக்கை
வைகுண்ட பெருமாள் கோயில்	-	பரமேச்சுர விண்ணகரம்
நாராயணப் பெருமாள்கோயில்	-	திருமணிமாடக்கோயில்
சின்னகாஞ்சிபுரம்	-	அத்தியூர்
திருவிழந்தூர்	-	திருஇந்தளூர்
தலைச்சங்காடு	-	தலைச்சங்க நாண்மதியம்
விளக்கொளிப் பெருமாள்	-	திருத்தண்கா
ஆரம்முளா	-	திருவாறன் விளை
திருப்பதிசாரம்	-	திருவண்பரிசாரம்
மதுரை	-	திருக்கூடல்
உறையூர்	-	திருக்கோழி
சீகாழி	-	காழிச்சீராம விண்ணகரம்
சிங்கப்பெருமாள்கோயில்	-	தஞ்சையாளி நகர்

'இராம' நாம மந்திர மகிமை

மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை; முற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும் பதத்தை; தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை; **'இராமன்'** என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை; கண்களில் தெரியக் கண்டான்

- கம்பர்

'நாராயண' நாம மந்திர மகிமை

குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும்; நீள்விசும்பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

- திருமங்கையாழ்வார்

'கோவிந்த' நாம மந்திர மகிமை

ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம் புனல்சோர அளகஞ்சோர
வேறான துகில்தகைந்த கைசோர மெய்சோர வேறோர் சொல்லுங்
கூறாமல் **கோவிந்தா கோவிந்தா** என்றரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற உடல்புளகித்(து) உள்ளமெலாம் உருகி னாளே.

- வில்லிபாரதம்

'பத்து' அவதார நாராயண நாம மகிமை

மீன் ஆமை கோலம் நெடு நரசிங்கம், ஆகி நிலம் விரகால் அளந்த குறளாய்
ஆனாது சீறும்மழு வல்வில்லும் முனை அலம் உற்ற செங்கை யவராய்
வான்நாடர் வந்துதொழ மண்நாடர் யாவரையும் மடிவிக்க வந்த வடிவாய்
நானாவிதம் கொள்பரியாள் ஆகிநின்றருளும் **நாராயணாய நமவே**

- வில்லிபாரதம்



திருமால் திருத்தலங்கள்

மாவட்டத் திருத்தலங்கள்

இராமநாதபுர மாவட்டம் - 9

1. ஆதிஸேது : இராமபிரான் அணைகட்டிய இடம். சமுத்திரத்தில் சுவர் தெரிவதாகவும், அலைகள் மோதுவதாகவும் சொல்லப்படுகிறது. இங்கு ஸமுத்திரஸ்நானம் விசேஷம். அனுமார் சந்நிதியும், சத்திரங்களும் இருக்கின்றன. வெண்சலவைக் கல்லில் மிகவும் புராதனமான அகத்தியர் சிலை உள்ளது. அகத்தியர் கடல் நீரைப் பருகிய தலம்.

பெருமாள் : ஸ்ரீனிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலம்.
தாயார் : அலர்மேலுமங்கை

2. இராமநாதபுரம் : ஸ்ரீ கோதண்டராமசுவாமி திருக்கோயில்.

3. இராமேஸ்வரம் : சேதுமாதவன் திருக்கோயில்.

பெருமாள் : சேதுமாதவன், ஸ்ரீராமநாதன் - நின்ற திருக்கோலம்
தாயார் : மஹாலெட்சுமி

4. இராஜசிங்கமங்கலம் : கைலாசநாதர் திருக்கோயில் அருகில் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் உள்ளது.

5. திருப்புல்லாணி *

புல்லணைத் தெய்வச்சிலையான்

மதயானைக் கோள்விடுத்து, மாமுதலை கொன்ற
கதையால் இதயம் கரையும் - முதல் ஆய
புல்லாணி மாலே ! - புறத்தோர் புகழ் இருப்பு
வல் ஆணி; என் செவிக்கு மாறு.

மங்களாசாசனம்

திருமங்கை யாழ்வார்: 1768-87, 2674 (131)
மொத்தம் : 21 பாசுரங்கள்

திருப்புல்லாணி : (தர்ப்பசயனம்) ராமநாதபுரத்தில் இருந்து பேருந்து வசதிகள் உண்டு. புல்ல மகரிஷிக்குக் காட்சி தந்தருளிய தலம் ஆதலால் 'புல்லாரண்யம்' எனப்படுகிறது. இங்குள்ள சக்கரவர்த்தித் திருமகன் சன்னதியில் லெட்சுமணன் ஆதிஷேடனாக நின்று சேவை சாதிக்கின்றனர்.

பெருமாள் : கல்யாண ஜகந்நாதர். நின்ற திருக்கோலம்.

தாயார் : கல்யாணவல்லி, பத்னாஸனி.

6. தேவிப்பட்டினம் : ஆதிஜகந்நாத பெருமாள் கோயில் உள்ளது.

7. தொண்டி : ஸ்ரீ பூதப் பெருமாள் திருக்கோயில்.

8. பரமக்குடி : சுந்தரராஜப் பெருமாள் கோயிலும், ஸ்ரீகோதண்ட ராமர் கோயிலும் உள்ளது.

9. மேலப் பார்த்திபனூர் : ஸ்ரீ வேணுகோபல சுவாமி திருக்கோயில்.

ஈரோடு மாவட்டம் - 4

10. ஈரோடு: கஸ்தூரிரங்கப் பெருமாள் கோவில். பள்ளி கொண்ட பெருமாள் - கமலவல்லித் தாயார்

11. தொண்டீச்சரம் : ரங்கநாதர் கோயில்.

12. பவானி அல்லது திருநணா: வரதராஜர் - ஆதிகேசவப் பெருமாள் கோயில். சௌந்தரவல்லித் தாயார். வேணுகோபாலன் - ருக்மணி, சத்யபாமா. திருக்கோயில். தலவிருட்சம் - இலந்தைமரம்.

13. விஜயமங்கலம் : நாகேஸ்வரப் பெருமாள் கோயில்.

கடலூர் மாவட்டம்7- 5

14. காட்டுமன்னார் கோயில்: கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் மரகதவல்லித் தாயார் உடனாய ஸ்ரீ வீர நாராயணப் பெருமாள் கோயில். ஸ்ரீமந் நாத முனிகள் அவதரித்த திருத்தலம்.

15. சிங்கிரி (அபிஷேகப்பாக்கம்): வராக நதியின் தென்கரையில் 16 கைகளுடன் ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் சுவாமி கோயில். கனகவல்லித் தாயார் விருகு முனிவர், பிரகலாதன் ஆகியோருக்குக் காட்சி தந்த திருத்தலம், தீர்த்தம் - விருகு புஷ்கரணி.

16. திட்டக்குடி (வசிஷ்டபுரம்): வெள்ளாற்றின் வடகரை வசிஷ்ட முனிவர் பூஜித்த தலம் பள்ளிகொண்ட ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில்.

17. திருவஹீந்திரபுரம் *

வஹீந்திரபுரவரதன்

அன்பு அணிந்த சிந்தையராம் ஆய்ந்த மலர்தூவி
முன் பணிந்து நீர் எமக்கு மூர்த்தியரே என்பர்
எம் அயிந்திர புரத்தார்க்கு இன்தொண்டர் ஆனார்
தமை இந்திர புரத்தார்தாம்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் 1148 - 57 10 பாசுரங்கள் திருப்பாதிரிப் புலியூர் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் உள்ளது. ஆதிசேஷன் உருவாக்கிய தலம் ஆகையால் திருவஹீந்திரபுரம் எனப் பெறுகிறது கருடன் கொணர்ந்த விரஜாதீர்த்தம் திருமஞ்சனத்திற்கும், ஆதிசேஷன் கொணர்ந்த கங்கா தீர்த்தம் நிவேதனத்திற்கும், பயன்படுத்தப்பட்டு வருகிறது ஸ்ரீசுவாமி தேசிகன் இங்கு தவம் செய்து ஸ்ரீஹயக்ரீவன் அருளையும், கருடன் அருளையும் பெற்றுள்ளார்.

பெருமாள் : தேவநாதப் பெருமாள். நின்ற திருக்கோலம்.

தாயார் : ஹேமாம்புஜவல்லி (வைகுண்டநாயகி)

18. ஸ்ரீமுஷ்ணம்: பகவான் ஹிரண்யாஷனை ஸம்ஹரித்துப் பூமி தேவியை ஆவிர்பவித்தபடியால் பூவாராஹக்ஷேத்திரம் என்ற பெயர் உண்டு. ஸ்வயம்வ்யக்தத் தலம் இதுவாகும். இங்கு ஸப்த கன்னி வழிபாடு நடைபெறுகிறது.

பெருமாள் : பூவராஹன்; தாயார் : அம்புஜவல்லி.

கரூர் மாவட்டம் - 4

19. கரூர் : மூலவர் அபயப் பிரதான ரங்கநாதர் - தாயார், ஸ்ரீரங்க நாயகி , முசுகுந்த சக்கரவர்த்தி வழிபட்ட தலம்

20. காட்டுப்புத்தூர்: காவிரியின் வடகரையில் திருமகள் பூமிதேவி உடனான ஸ்ரீவேங்கடரமண சுவாமி கோயில்.

21. தான்தோன்றி மலை: குடைவரைக் கோயில் ஸ்ரீபிரசன்ன வெங்கடேச சுவாமி திருக்கோயில் பத்மாவதித் தாயார் அமராவதி ஆற்றின் தென்கரை திருப்பதி செல்ல முடியாதவர்கள் இங்கே பிரார்த்தனை செலுத்தலாம் என்பது ஐதீகம்.

22. திருநாராயணபுரம் (வேதகிரி): காவிரி வடகரை. வேதநாயகி தாயார் உடனாய ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில். வேத விமானம், வேத தீர்த்தம், குச, அசுவ, பத்ம தீர்த்தங்கள், திருப்பாற்கடல் தீர்த்தம். தல விருட்சம், வில்வம். இங்குள்ள ஆதிசேஷனுக்குப் பத்துத் தலைகள் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம் - 6

23. திருவண்பரிசாரம் *

வண்பரிசாரத் திருவாழ்மார்பன்

அடியும் குளிர்ந்தாள், அறிவும் குலைந்தாள்,
முடிகின்றாள்; மூச்சு அடங்கு முன்னே, கடிது ஒடி,
பெண் பரிசு, ஆர், அங்குப் பிறப்பித்து மீளுவார்-
வண்பரிசாரம் சிறந்த மாற்கு?

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3475 -1 பாசுரம்

நாகர்கோவிலிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். இங்குள்ள மூலவர் கடுகு, சர்க்கரை மற்றும் மலைதேசத்து மூலிகைகளால் செய்யப்பட்டுள்ளதால் இவருக்குத் திருமஞ்சனம் இல்லை. ஆஞ்சநேயரின் விருப்பத்திற்கு இணங்கி அகத்தியர் இங்கு இராமாயணம் அருளிச் செய்துள்ளார். நம்மாழ்வாரின் தாயார் உடைய நங்கை அவதரித்த திவ்ய தேசம் .

பெருமாள் : திருக்குறளப்பன். வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார்: கமலவல்லி நாச்சியார்.

24. திருப்பதிசாரம் : நஞ்சுனாட்டுப்புட்டன் ஆற்றின் தென்கரையில் இரண்டு பிராகாரங்களுடன், கிழக்கு நோக்கிய வண்ணம் இறைவன் திருவாழ் மார்பன் (திருக்குறளப்பன்) சங்கு, சக்கரத்துடன் காணப் படுகிறார். மற்ற தலங்களில் மார்பின் வலப்பாகத்தில் வாசம் செய்யும் திருமகள், இத்தலத்தில் இடப்புறத்தில் வாசம் செய்வதால் இப் பெருமானுக்குத் திருவாழ்மார்பன் என்று பெயர். மூலவர் கடுகு சர்க்கரை யோகம் என்ற கலவையால் உருவானதால் அபிஷேகம் இல்லை. இத்தல இறைவனைக் காரி, நடைய நங்கை, லட்சுமி, கருடன், சப்தரிஷிகள், வழிபட்டுள்ளனர்.

25. திருவாட்டாறு *

வாட்டாற்று ஆதிகேசவன்

மாலை முடி நீத்து, மலர்ப்பொன் அடி நோவப்
பாலைவனம் புகுந்தாய் பண்டு என்று, சாலவும் நான்
கேட்டால் துயிலேன் காண் - கேசவனே ! -பாம்பு - அணைமேல்
வாட்டாற்றுக் கண்துயில் கொள்வாய்.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3722 - 32 -11 பாசுரங்கள்

இது கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் அமைந்துள்ள திவ்யதேசம். மேற்கே திருமுக மண்டலம். சந்திரன், பரசுராமன் ஆகியோர் வழிபட்ட தலம். கர்ப்பக்ருஹத்தில் மாலை வேளையில் சூரிய வெளிச்சம் விழும்படி அமைந்துள்ளமை சிறப்பு
பெருமாள்: ஆதிகேசவப் பெருமாள் - புஜங்கசயனம்

தாயார் : மரகதவல்லி நாச்சியார்.

26. நாகர்கோவில்: மூலவர் இரண்டு திருக்கரங்களில் வெண்ணெய் உருண்டையுடன் காட்சி தரும் பாலகிருஷ்ணன்.

27. பத்மநாபபுரம்: ராமசாமி திருக்கோயில். இக்கோயிலின் மேற்புறம் மரப் பலகைகளில் ராமாயணக் காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.

28. பறக்கை (நாகர்கோவில்): ஸ்ரீமதுசூதனப் பெருமாள் கோயில். சித்திரை மாதம் சூரிய பூஜை நடைபெறும்.

காஞ்சிபுரம் மாவட்டம் - 58

29. அகிலி : (மதுராந்தகம்) வரதராஜப் பெருமாள் கோயில்.

30. அட்டபுயகரம் *

அட்டபுய ஆதிகேசவன்

என்றும் துயர் உழக்கும் ஏழைகாள் ! நீங்கள் இளங்
கன்று போல் துள்ளிக் களித்து இரீர் - அன்று நடம்
இட்ட புயங்கத்து இரு சரணமே சரண் என்று
அட்ட புயங்கத்தாற்கு ஆள் ஆய்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் :1118- 1127 , 2674 (128)

பேயாழ்வார் : 2380

மொத்தம் : 12 பாசுரங்கள்

காஞ்சி வரதராஜர் திருக்கோயிலுக்கு 2 கிலோமீட்டர் தொலைவில் தேரடிக்கு அண்மையில் உள்ளது. முதலை வாய்ப்பட்ட யானையை மீட்டருளிய தலம். மேற்கே திருமுக மண்டலம். எட்டு திருக்கரங்களில், வலபுறம், சங்கு , கத்தி, மலர், அம்பு ஆகியவையும், இடப்புறம் சங்கம், வில், கேடயம், கதை ஆகியவையும் காணப் படுகின்றன. ஆழ்வார்கள் இருவருடன் ஸ்ரீசுவாமி தேசிகனும், மணவாள மாமுனிகளும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பெருமாள் : ஆதிகேசவப் பெருமாள். நின்ற திருக்கோலம்.

தாயார் : அலர்மேல்மங்கை, பத்மாசனி

31. அரிசக்ரபுரம் : விஷ்ணு கோவில். திருமால் சிவனை வழிபட்ட தலம். நின்றருளிய பெருமாள் - தடங்கண்ணி.

32. அனந்தூர் : ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

33. ஆர்க்காடு: பெருமாள் கோயில்.

34. ஆரணி ரோட்: வீரஆஞ்சநேயர் பெருமாள் கோயில்.

35. ஆர்பாக்கம்: (காஞ்சி) ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

36. உத்திரமேரூர் : மூன்று நிலை அஷ்டாங்க விமானம், ஸ்ரீ சுந்தர வரதராஜப் பெருமாள் - திருமகள் பூமிதேவி, நின்ற திருக்கோலம்- அடித்தளம் இரண்டாம்தளம் - ஸ்ரீவைகுந்த வரதப்பெருமாள் -பூமிதேவி - அமர்ந்த திருக்கோலம் மூன்றாம் தளம்- அரங்கநாதர் - ஆனந்தவல்லித் தாயார் - சயனத் திருக்கோலம்.

37. உள்ளாவூர் (வாலாஜாபாத்): ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில்.

38. எடமிச்சி : ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் கோயில்.

39. காட்டாங்குளத்தூர் : ஸ்ரீ சினிவாசப் பெருமாள் திருக்கோயில்.

40. குடியாத்தம் : ரங்கநாதர் - ரங்கநாயகி கோயில் வியாச புஷ்கரணி.

41. கூரம் : ஆதிகேசவப் பெருமாள் - நின்ற திருக்கோலம் 35 அடி உயரக் கருடக் கம்பம். மாதாந்திர கார்த்திகைத் தீபம் சிறப்பு.

42. சாலவாக்கம் : ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோயில்.

43. சிங்கப்பெருமாள் கோயில்: (செங்கற்பட்டு) மலைமீது குடவரைக் கோயில். கிழக்கு நோக்கிய நரசிங்கசாமி சந்நிதி ஸ்ரீமுதலியாண்டான் பக்தி செய்த தலம்.

44. செங்கற்பட்டு: ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில், கோதண்டராமர் திருக்கோயில்.

45. செய்யூர் (மதுராந்தகம்): ஸ்ரீகரிய மாணிக்கப்பெருமாள் கோயில்.

46. சூணாம்பேடு (மதுராந்தகம்): ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

47. தாமல் (காஞ்சிபுரம்): ஸ்ரீ தாமோதரப் பெருமாள் கோயில்.

48. திருக்கச்சி *

அத்திகிரி வரத ரார்

பொருள் ஆசை, மண் ஆசை, பூங்குழலார் போகத்து
இருள் ஆசை, சிந்தித்து இராதே, அருளாளன்,
கச்சித் திருப்பதி ஆம் அத்தியூர்க் கண்ணன், தாள்
இச்சித்திருப்பது யாம் என்று?

மங்களாசசனம்

திருமங்கையாழ்வார் : 1541,2050, 2060, 2066
பூதத்தாழ்வார் : 2276, 2277
பேயாழ்வார் : 2307
மொத்தம் : 7 பாசுரங்கள்

காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயில். மேற்கே திருமுக மண்டலம். இத்தலத்தில் மூழ்கியிருக்கும் அத்திவரதர் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பெற்று 10 தினங்கள் சேவைக்கு வைக்கப் பெறுகின்றார். இங்குள்ள பிராகாரத்தில் உள்ள பல்லி வடிவங்களைத் தொட்டு வணங்குவோர், சகல வியாதிகளும் நீக்கம் பெறுவர். இத்தலம் ஸ்ரீ சுவாமி தேசிகனின் அவதாரத் தலமும் ஆகும். மூன்று ஆழ்வார்களுடன் ஆளவந்தார், திருக்கச்சி நம்பி, ஸ்ரீராமானுஜர், ஆழ்வான், ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஆகியோர் மங்களாசாசனம் செய்த திருப்பதி.

பெருமாள் : வரதராஜர். நின்ற திருக்கோலம்.

தாயார் : பெருந்தேவி, மஹாதேவி.

49. திருஊரகம் *

ஊரகத்தே உலகளந்தவன்

நேசத்தால் அன்று உலகை, நீர் வார்க்க, வைத்து அளந்த
வாசத்தாள் என் தலைமேல் வைத்திலையேல், நாசத்தால்
பாரகத்துள் அன்றி, யான் பாழ் நரகில் வீழ்ந்து என்கொல்?
ஊரகத்துள் நின்றாய் ! - உரை

மங்களாசாசனம்

திருமழிசையாழ்வார் : 814, 815

திருமங்கையாழ்வார்: 2059 , 2064 , 2673 (70) 2674(128)

மொத்தம் : 6 பாசுரங்கள்

பெரிய காஞ்சிபுரம் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் உள்ள திவ்யதேசம். பலிச்சக்கரவர்த்திக்குத் திருமால் திருவிக்ரமசேவை சாதித்த திருத்தலம். மேற்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : திருவிக்கிரமன். உலகளந்த பெருமாள்.
நின்ற திருக்கோலம்

தாயார் : அமுதவல்லி நாச்சியார், அம்ருதவல்லி

உற்சவர்: பேரகத்தான்.

50. திருக்கள்வனூர் *

கள்வனூர் ஆதிவராகன்

பண்டே உன் தொண்டு ஆம் பழ உயிரை என்னது என்று
கொண்டேனைக் கள்வன் என்று கூறாதே , மண் - தலத்தோர்-
புள்வாய் பிளந்த புயலே! -உனை, 'கச்சிக்
கள்வா! ' என்று ஓதுவது, என் கண்டு?

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2059 - 1 பாசுரம்

பெரிய காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் வலதுப்புறம் அமைந்துள்ள திவ்யதேசம். பார்வதி வாமன மூர்த்தியை நோக்கித் தவம் செய்து காமாட்சி என்னும் பெயர் கொண்டு சிவபெருமானை மணம் செய்து கொண்டார். மேற்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : ஆதிவராஹ ப் பெருமாள். நின்ற திருக்கோலம்.

தாயார் : அஞ்சிலைவல்லி நாச்சியார்.

51. திருக்கடல் மல்லை

மல்லைத் திரைக்கிடைப் பள்ளியான்

'சொறிந்த பணை பறித்து, தின் களிற்றைச் சாடி,
முறிந்து விழப் பாகனையும். மோதி எறிந்து,
தருக்கு அடல் மல்லைக் குமைத்தான் தஞ்சம்' என்று - நெஞ்சே !-
திருக்கடல் மல்லைக்குள் திரி.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1088 -1107, 1195, 1551, 2050, 2060, 2673(73), 2674(120)

பூதத்தாழ்வார் : 2251-27 பாசுரங்கள்

திருவிடந்தையிலிருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது. கிழக்கே திருமுக மண்டலம். பூதத்தாழ்வார் அவதாரத்தலம். ஸ்ரீ மணவாள மாமுனிகள், பிள்ளை லோக ஜீயர் மங்களாசாசனம் செய்துள்ளனர் .

பெருமாள் : ஸ்தல சயனப் பெருமாள். சயனத் திருக்கோலம்

தாயார் : நீலமங்கைத் தாயார்.

52. திருக்காரகம் *

காரகக் கருணாகரன்

ஒராதார், 'கல்வி உடையேம்'குலம் உடையேம்,
ஆராதனம் உடையேம், யாம் என்று சீர் ஆயன்
பூங்காரகம் காணப் போதுவார் தாள் தலைமேல்
தாங்கார், அகங்காரத்தால்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2059 - 1 பாசுரம்

பெரிய காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயில் பிராகாரத்தில் உள்ள திவ்யதேசம். தெற்கே திருமுக மண்டலம்.

பெருமாள்: கருணாகரப் பெருமாள். நின்ற திருக்கோலம்.

தாயார் : பத்மாமணி நாச்சியார் (ராமாமணி நாச்சியார்)

53. திருக்கார் வானம் *

கார்வானத்துறை கள்வன்

'தாலேலோ' என்று ஆய்ச்சி தாலாட்டி , தன் முலைப்பா
லாலே எவ்வாறு பசி ஆற்றினாள்? - மாலே! பூங்
கார் வானத்து உள்ளாய்! கடலோடும் வெற்போடும்
பார், வானம், உண்டாய் நீ, பண்டு.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்: 2059 -1 பாசுரம்

பெரிய காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் பிராகாரத்தில் உள்ளது. மேற்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : கள்வர். நின்ற திருக்கோலம்.

தாயார் : கமலவல்லி (தாமரையாள்)

54. திருநிலாத்திங்கள் துண்டம் *

நிலாத்திங்கள் துண்டம் நின்றவள்

மீண்டும் தெளியார்கள் மேதினியோர்- நின் அடிப்பூப்
பாண்டரங்கமாடி படர்சடைமேல் தீண்டி,
கலாத் திங்கள் துண்டத்தின் மீது இருப்பக் கண்டும்,
நிலாத் திங்கள் துண்டத்தானே!

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2059 - 1- பாசுரம்

பெரிய காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் ஈசான்ய மூலையில் அமைந்துள்ள திவ்யதேசம் மேற்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : நிலாத்திங்கள் துண்டத்தான், சுந்தர சூடப் பெருமாள்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : நேர்ஒருவரில்லா வல்லி, நிலாத்திங்கள் துண்டத் தாயார்.

55. திருநீரகம் *

நீரகத்துறை சகதீசன்

ஆலத்து இலை சேர்ந்து, அழி உலகை, உட்புகுந்த
காலத்தில், எவ்வகை நீ காட்டினாய் - ஞாலத்துள்

நீரகத்தாய்! நின் அடியேன் நெஞ்சகத்தாய்! நீள் மறையின்
வேரகத்தாய்! -வேதியற்கு மீண்டு?

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் 2059 .-1 பாசுரம்

பெரிய காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : ஜகதீஸ்வரர். நின்ற திருக்கோலம்.

தாயார்: நிலமங்கை வல்லி.

56. திருத்தண்கா *

தங்கா விளக்கொளியான்

ஆட்பட்டேன்; ஐம்பொறியால் ஆசைப்பட்டேன்; அறிவும்
கோட்பட்டு நானும் குறைபட்டேன் - சேண்பட்ட
வண்காவை வண் துவரை வைத்த விளக்கொளிக்கு ,
தண்காவைச் சேர்ந்தான் தனக்கு

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1849 ,2065 -2 பாசுரங்கள்

அட்டபுயகரத்திற்கு அண்மையில் உள்ளது. மேற்கே திருமுக மண்டலம். ஸ்ரீஸ்வாமி தேசிகன் அவதாரத் தலம்.

பெருமாள் : தீபப்ரகாசர், விளக்கொளிப் பெருமாள்.
நின்ற திருக்கோலம்

தாயார்: மரகதவல்லி.

57. திருப்பரமேச்சுர விண்ணகரம்

பரமேச்சுரவிண்ணகரப் பரமன்

பதத் தமிழால் தன்னையே பாடுவித்து, என்னைத் தன்
பதத்து அடியார்க்கே ஆட்படுத்தான்- இதத்த
பரமேச்சுர விண்ணகரான், பல ஆன்
வர, மேச்சு, உரல் அணைந்த மால்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1128- 1137 -10 பாசுரங்கள்

பெரிய காஞ்சிபுரம் ரயிலடிக்கு அருகில் உள்ள கோயில். மேற்கே திருமுக மண்டலம். விஷ்ணு துவார பாலகர்கள் இரண்டு புத்திரர்களுக்கு சேவை சாதித்த திருத்தலம்

பெருமாள் : பரமபத நாதன், வைகுந்த நாதன்.

வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : வைகுந்தவல்லி

58. திருப்பவள வண்ணம் *

பவளவண்ணத்துறைப் பெருமான்

கண்டு அறிந்தும், கேட்டு அறிந்தும், தொட்டு அறிந்தும் காதலால்,
உண்டு அறிந்தும், மோந்து அறிந்தும், உய்யேனே - பண்டைத்
தவள வண்ணா! கார் வண்ணா! சாம வண்ணா! கச்சிப்
பவள வண்ணா! நின் பொற் பாதம்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2060 - 1 பாசுரம்

பெரிய காஞ்சிபுரத்தில், ரயிலடிக்கு அருகில் உள்ளது. மேற்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : பவளவண்ணன். நின்ற திருக்கோலம்.

தாயார் : பவளவல்லி.

59. திருப்பாடகம் *

பாடகப் பாண்டவ தூதன்

தவம் புரிந்த சேதநரை, சந்திரன், ஆதித்தன்,
சிவன், பிரமன், இந்திரனாச் செய்கை - உவந்து,
திருப்பாடகம் மருவும் செங்கண் மால்- தன் மார்பு
இருப்பாள் தகவு உரையாலே.

மங்களாசாசனம்

திருமழிசையாழ்வார் : 814, 815

திருமங்கையாழ்வார்: 1541, 2674 (127)

பூதத்தாழ்வார் : 2275

பேயாழ்வார் : 2311

மொத்தம் : 6 பாசுரங்கள்

பெரிய காஞ்சிபுரம் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு அருகில் உள்ளது. கிழக்கே திருமுக மண்டலம். ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம். பாண்டவ தூதரான கண்ணன் மிகப் பெரிய விஸ்வரூபத் திருவடிவில் அமர்ந்த கோலத்தில் காணப்படும் திவ்யதேசம் .

பெருமாள் : பாண்டவ தூதர்.
வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : ருக்மணி, சத்ய பாமா

60. திருவெஃகா *

சொன்னவண்ணம் செய்த பெருமாள்

உரை கலந்த நூல் எல்லாம் ஓதி உணர்ந்தாலும்,
பிரை கலந்த பால்போல் பிறிதாய் - தரையில்
திரு வெஃகா மாயனுக்கே சீர் உறவு ஆம் தங்கள்
உரு வெஃகா உள்ளத்தினோர்க்கு.

மங்களாசாசனம்

திருமழிசையாழ்வார் : 814, 815 ,2417

திருமங்கையாழ்வார் : 1854,2059, 2064, 2065, 2673(70).
2674(127)

பொய்கையாழ்வார் : 2158

பேயாழ்வார் : 2307, 2343 , 2345, 2357

நம்மாழ்வார்: 2503

மொத்தம் : 15 பாசுரங்கள்

அட்டயபுரத்திற்கு அண்மையில் உள்ள திவ்யதேசம். மேற்கே திருமுக மண்டலம் பெருமாள் வலமிருந்து இடமாகச் சயன கோலத்தில், அருள்கின்றார். பொய்கையாழ்வார் அவதாரத் தலம்.

பெருமாள் : யதோக்தகாரி, சொன்னவண்ணம் செய்தபெருமாள்.
புஜங்க சயனம்

தாயார் : கோமளவல்லி நாச்சியார்.

61. திருவேளுக்கை *

வேளுக்கை முகுந்தன்

தனக்கு உரியனாய் அமைந்த தானவர்கோன் கெட்டான்,
உனக்கு உரியன் ஆய மைந்தன் உய்ந்தான்: நினைக்குங்கால்
வேளுக்கை ஆள் அரியே! -வேறு உதவி உண்டோ, உன்
தாளுக்கு ஆள் ஆகாதவர்க்கு ?

மங்களாசாசனம்

பேயாழ்வார் : 2307 , 2315, 2343
திருமங்கையாழ்வார் : 2674(127)
மொத்தம் : 4 பாசுரங்கள்

அட்டபுயகரத்திற்குத் தென்மேற்கே உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். ஸ்ரீசுவாமி தேசிகன் “காமாஸீகாஷ்டகம்” அருளியுள்ளார்.

பொருள் : அழகியசிங்கர், நரசிம்மர், முகுந்த நாயகன்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : வேளுக்கை வல்லி, அம்ருதவல்லி

62. கருங்குழி : (மதுராந்தகம்) ஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோயில்.

63. திருப்புட்குழி *

புட்குழிவென்றிஇராகவன்

மால் வேழமும், அரவும், மாயையும், வெற்பும், கடலும்,
மேல் வீழ் படையும், விடமும், போய், பாலன்,
நெருப்பு உள் குழி குளிர நின்றதும் கேட்டு, ஓதார்-
திருப்புட்குழி அமலன் சீர்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1115 , 2674 (117) - 2 பாசுரங்கள்

சென்னை வேலூர் சாலையில் பாலுச்செட்டி சத்திரம் என்ற ஊருக்கு அண்மையில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். ஸ்ரீராமபிரான் சடாயுவுக்குத் தர்ப்பணம் செய்யத் தீர்த்தம் உண்டாக்கிய திவ்ய தலம். நம்பிள்ளையின் சிஷ்யரான பின்பழகிய பெருமாள் ஜீயர் அவதரித்த தலம். ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பெருமாள் : விஜயராகவப் பெருமாள்.
வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : மரகதவல்லித் தாயார்

64. திருவிடவெந்தை *

இடவெந்தை நாள் மணக் கோவலன்

நின்ற திரியும் பிறவி எல்லாம் நேர்வித்து,
கொன்று திரியும் கொடு வினையார் இன்று
வெருவிட, எந்தைக்கே விழுமிய தொண்டு ஆனேன்-
திருவிட வெந்தைக்கே செறிந்து.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1021, 1108 - 1117, 2673 (73), 2674 (119)- 13 பாசுரங்கள்

சென்னை கோவளம் வழியாக மகாபலிபுரம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. கிழக்கே திருமுகமண்டலம் காலவ மஹரிஷியின் 360 பெண்களையும் பகவான் 360 நாள் திருமணம் செய்துகொண்டதால் ' நித்ய கல்யாணன் ' என்று அழைக்கப்படுகிறார். பெருமாள் கல்யாண கோலத்திலேயே காட்சியளிக்கின்றார். ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்துள்ளார்.

65. திருவோத்தூர் : ஆதிகேசவப் பெருமாள் கோயில். மேலும் காஞ்சிபுரத்தின் தெற்கில் பெருமாள் கோயில்.

66. துப்புல்: விளக்கொளிப் பெருமாள் கோயில் - விளக்கொளிப் பெருமாள் - மரகதவல்லி பாண்டவப் பெருமாள் கோயில்.

67. நெய்யடிவாக்கம் : ஸ்ரீ பட்டாபிராமர் திருக்கோயில்.

68. பஞ்சுப்பேட்டை : கம்மாளத்தெருவில் பச்சை வண்ணப்பெருமாள் - பவளவண்ணப் பெருமாள். வைகுண்ட பெருமாள் - விஜயராகவப் பெருமாள் கோயில்கள்.

69. பட்டாளம்: மலைமேல் பிரசன்ன வேங்கடேசர் - அலர்மேல் மங்கை. ஸ்ரீவைகுண்டம் கண்ணபிரான் உபயநாச்சியார் உத்ஸவர்.

70. புதிரன் கோட்டை : (மதுராந்தகம்) ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் கோயில்.

71. புலிப்பாக்கம்: புண்டரீகாஷ வரதராஜப் பெருமாள் கோயில்.

72. புலிப்பரக்கோயில்: (மதுராந்தகம்) ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

73. புள்ளம்பாக்கம் : ஆதிகேசவப் பெருமாள் கோயில் .

74. பழையனூர் (மதுராந்தகம்): ஸ்ரீசுந்தரராஜப் பெருமாள் கோயில்.

75. பேரனக்காவூர் : ஸ்ரீ சென்ன கேசவப் பெருமாள் கோயில்.

76. பொன் விளைந்த களத்தூர் : ஸ்ரீ லெட்சுமி நரசிம்ம பெருமாள், கோதண்ட ராமர் கோயில்.

77. மதுராந்தகம் : 5 நிலை ராஜ கோபுரத்துடன் ஸ்ரீ கோதண்ட ராமர் கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம். ஜனகவல்லித் தாயார், பெரிய நம்பிகள், ராமானுஜர், நிகமாந்தமாக தேசிகர், மணவாள மாமுனிகள் முதலியோர் மங்களாசாசனம் செய்துள்ளார்கள்.

78. மருதம் : வேணுகோபால சுவாமி திருக்கோயில்.

79. மலையன் குளம் : வீற்றிருந்த பெருமாள் கோயில்.

80. மலைவையாவூர் : பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில். பத்மாவதி தாயார். 1500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. 200 படிகளுடன் மலை மீது நின்ற கோலத்தில் பெருமாள். இரண்டு பிரகாரத்துடன் காணப்படுகிறது. தீர்த்தம் - வராக புஷ்கரணி.

81. முசரவாக்கம்: ஆதிகேசவப் பெருமாள்.

82. மேல் மதுரமங்கலம் : அமர்ந்த நிலையில் ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள். இராமானுஜரின் இளவல் எம்பார் பிறந்த தலம்.

83. விசூர் : புண்டரீகாட்சப் பெருமாள் கோயில்.

84. வில்லியம்பாக்கம் : ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில்.

85. ஸ்ரீபெரும்புதூர் : 5 நிலை ராஜகோபுரம், ஆதிகேசவப் பெருமாள் தாயார் - ஸ்ரீ எதிராஜ நாகவல்லித் தாயார். கிழக்கு நோக்கிக் காணப் படுகிறார். ஸ்ரீராமானுஜர் அவதாரத் தலம். தீர்த்தம் அனந்தசரஸ்.

86. ஜோலார்பேட்டை : பெருமாள் கோயில்.

கோவை மாவட்டத் தலங்கள் - 31

87. அக்ரஹாரசாமகுளம் : ஸ்ரீ லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

88. ஆலத்தூர் (அவினாசி): வெங்கடேசப் பெருமாள் - அலர்மேலு மங்கை திருக்கோயில்.

89. ஆனைமலை : ஸ்ரீ அரங்கநாதர் திருக்கோயில், ஸ்ரீ அனுமந்தராயன் திருக்கோயில்.

90. இடிகரை : பள்ளிகொண்ட ரங்கநாதர் திருக்கோயில்

91. உடுமலைப் பேட்டை : ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில், நவநீத கிருஷ்ணன் கோயில்.

92. ஒத்தக்கால் மண்டபம் : ஸ்ரீ நவகோடி நாராயணப்பெருமாள் கோயில்.

93. கருவலூர்: கருணாகர வெங்கட்ரமண சுவாமி கோயில், வேணு கோபால பெருமாள் கோயில், அனந்தராயர் கோயில்.

94. காரமடை : அரங்கநாதர் ஸ்ரீ ரெங்கநாயகி திருக்கோயில். இத்தலத்தில் சடாயுவுக்குப் பதிலாக வெள்ளியால் செய்யப்பட்ட ராமபாணத்தால் ஆசீர்வதிக்கப்படுகிறது.

95. காரைமலை : அரங்கநாதர் - அரங்கநாயகித் தாயார். கோயில் - பிரமதீர்த்தம். கருடதீர்த்தம் - தலமரம் - காரைச்செடி.

96. காரத்தொழுவு : கல்யாண வரதராஜப் பெருமாள் கோயில்.

97. காணியூர் : சந்தானகோபால கிருஷ்ணன் கோயில்.

98. குமரலிங்கம் : கிருஷ்ணர் கோயில், வேணுகோபால சுவாமி கோயில்

99. குறும்பபாளையம் : வரதராஜப் பெருமாள் கோயில்

100. கோயம்புத்தூர் : லெட்சுமி நாராயண பெரிய கோயில், வேணு கோபால சுவாமி கோயில், கோதண்டராமர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில்.

101. திருமுருகன் பூண்டி: குன்றின்மேல் கரிவரதராஜப்பெருமாள் கோவில்.

102. சங்கராமநல்லூர் : கல்யாண வரதராஜப் பெருமாள்.

103. சார்க்கார் கண்ணாடிபுத்தூர் : கலியுக வரதராஜப் பெருமாள் கோயில், கல்யாண வரதராஜப் பெருமாள் கோயில்.

104. சிங்க நல்லூர் : உலகளந்த பெருமாள் கோயில்.

105. சின்ன வீரம்பட்டி : வரதராஜப் பெருமாள் கோயில்.

106. சூளூர் : திருவேங்கடநாதப் பெருமாள் கோயில்.

107. சேவூர் : கல்யாண வெங்கடேசர் கோயில்.

108. சோழ மாதேவி : லெக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயில்.

109. பெரிய களந்தை : வரதராஜப் பெருமாள் கோயில்.

110. பொள்ளாச்சி: மாமாங்க ஆற்றின் பாறைமேல் பெருமாள்கோவில்.

111. தெற்கு அவிநாசிப் பாளையம் : விண்ணளந்த பெரிய பெருமாள் திருக்கோயில்.

112. திருப்பேரூர் : பெருமாள்மலையில் மந்த்ராசலப்பெருமாள்.

113. தேவாம்பதி : வெங்கட்ரமண சுவாமி கோயில்.

114. நடுவாச்சேரி: கோவிந்தராஜப் பெருமாள் கோயில்.

115. நல்லூர்: வீரராகவப் பெருமாள் கோயில்.

116. வெள்ளலூர் : வரதராஜப் பெருமாள் கோயில்.

117. வடவாம்பட்டி : கரி வரதராஜப் பெருமாள் கோயில்.

சிவகங்கை மாவட்டத் தலங்கள் - 14

118. இளையான்குடி : மதனவேணு கோபால சுவாமி கோயில்.

119. இடைக்காட்டூர் : கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.

120. எமனேஸ்வரம் : வரதராஜப் பெருமாள் கோயில்.

121. ஒரத்தூர் : பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில்.

122. கொந்தகை : தெய்வநாயகப் பெருமாள் கோயில்.

123. சிவகங்கை : சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

124. திருக்கோட்டியூர் *

கோட்டியூர் சௌம்ய நாரணன்

வான் பார்க்கும் பைங்கூழ்போல், வாளா உனது அருளே
யான் பார்க்க, நீ பார்த்து இரங்கினாய், தேன் பார்ப்பின்
ஒசைத் திருக்கோட்டியூரனே ! இன்னமும் என்
ஆசைத் திருக்கு ஒட்டி ஆள்.

மங்களாசாசனம்

பெரியாழ்வார்: 13-22, 173, 360-370.
திருமங்கையாழ்வார் : 1550,1838-1847, 1856, 2674(125)
பூதத்தாழ்வார் : 2227, 2268
பேயாழ்வார் : 2343
திருமழிசையாழ்வார் : 2415
மொத்தம் 39 பாசுரங்கள்

மதுரை திருப்பத்தூரை அடுத்து 12 கி.மீ தொலைவில் உள்ளது கிழக்கே திருமுகமண்டலம் . 4மாடிகள் அமைந்துள்ள திவ்யதேசம் நின்ற, இருந்த, கிடந்த, கூத்தாடிய திருக்கோலங்கள் பெற்ற திவ்யதேசம். திருமந்திர உட்பொருளை உபதேசமாகப் பெற்ற எம்பெருமானார் கோபுரத்தின் உச்சியில் ஏறி அதனை உலகுக்கு வெளிப்படுத்திய தலம். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : உரகமெல்லணையான். புஜங்கசயனம்.
தாயார் : திருமாமகள் நாச்சியார்.

125. திருப்பாச்சேத்தி : மலைமண்டலப் பெருமாள் கோயில்.

126. தேவக்கோட்டை : கோதண்ட ராமசாமிப் பெருமாள் கோயில்.

127. நாட்டரசன் கோட்டை : ஸ்ரீ வெங்கடாசலபதிப் பெருமாள் கோயில்.

128. பரமக்குடி : வைகையாற்றின் கரையில் ஸ்ரீபத்மவல்லித் தாயார் ஸ்ரீசௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயில்.

129. பாகனேரி : பெருமாள் கோயில்.

130. மானாமதுரை : தியாக வினோதப் பெருமாள் கோயில் வீரழகர் பெருமாள் கோயில், சுந்தரராஜப் பெருமாள் கோயில்கள்.

131. வேலங்குடி : ஸ்ரீ தேசிக நாராயணப் பெருமாள் கோயில்.

சென்னை மாவட்ட தலங்கள் - 37

132. அத்திப்பட்டு: வரதராஜப் பெருமாள் கோயில். தாயார் - பெருந்தேவித் தாயார்.

133. அபிராமபுரம் : 20 அடி உயர ஹனுமார் கோயில்.

134. அடையாறு: பத்மநாமசாமி கோயில்.

135. அயனம் பாக்கம் : கரி வரதராஜப் பெருமாள் கோயில்.

136. எழும்பூர்: ரயில் நிலையத்திலிருந்து 1 கி.மீ-ல் ஸ்ரீநிவாசப் பெருமாள் என்ற லெஷ்மி நாராயணப்பெருமாள் - பத்மாவதி அலர்மேலுமங்கைக் கோயில்.

137. கல்பாக்கம் : வரதராஜப் பெருமாள் கோயில். லெக்ஷ்மிநாராயண பெருமாள் கோயில்.

138. காலாடிப்பேட்டை : வரதராஜப் பெருமாள் கோயில்.

139. குளத்தூர் : அமிர்தராஜப் பெருமாள் கோயில்.

140. குண்ணம் : கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.

141. கெருகம்பாக்கம் : வேணுகோபாலப் பெருமாள் கோயில்.

142. கொரட்டூர் : ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

143. கொத்தவால்சந்தை: ஆதிகேசவப் பெருமாள் கோயில் - ஸ்ரீதேவி -பூதேவி. வரதராஜப் பெருமாள்கோயில். தேவராஜ முதலித் தெருவில் சென்னகேசவப் பெருமாள் கோவில் - வேணுகோபாலன் கோயில்.

144. கோபாலபுரம் : வேணுகோபாலசாமி கோயில், ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில்.

145. கோயம்பேடு : வைகுண்டவாசப் பெருமாள் கோயில்.

146. கோடம்பாக்கம்: சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

147. சிந்தாதரிப்பேட்டை: ஆதிகேசவப் பெருமாள் கோயில். திருவரங்கப் பெருமாள் கோயில்.

148. சூளை : சுந்தரராஜப் பெருமாள் கோயில் - அலர்மேலுமங்கை, வேணுகோபால சுவாமி கோயில். ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில், கோதண்ட ராமசாமி கோயில்.

149. சென்னை : சென்னகேசவப் பெருமாள் கோயில். நின்ற திருக்கோலம்.

150. சைதாபேட்டை: பிரசன்ன வெங்கடேசர் கோயில்.

151. சோமங்கலம்: சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

152. திருக்கச்சூர்: மகாவிஷ்ணுக் கோயில். இங்கு விஷ்ணு ஆமையாய்ப் பூஜை செய்த தலம்.

153. திருக்கள்ளம் : அசுவத்த நாராயணர் கோயில். ஆதிவராக மூர்த்தி - அஞ்சிலைவல்லி நாச்சியார். நித்யபுஷ்கரணி.

154. திருவல்லிக்கேணி *

அல்லிக்குளப் பார்த்தசாரதி

திரிந்து உழலும் சிந்தைதனைச் செவ்வே நிறுத்தி,
புரிந்து புகன்மின் - புகன்றால் , மருந்து ஆம்,
கருவல்லிக்கு; ஏணி ஆம், மாக் கதிக்கு - கண்ணன்
திருவல்லிக்கேணியான் சீர்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1068 - 1077
பேயாழ்வார் : 2297
திருமழிசையாழ்வார் : 2416
மொத்தம் : 12 பாசுரங்கள்

இந்த ஆலயத்தில் 5 திருச்சந்நிதிகள் உள்ளன. கிழக்கே திருமுக மண்டலம். உற்சவர் - பார்த்தசாரதி. கிருஷ்ணன் குடும்ப ஸமேதராக எழுந்திருப்பது இங்கு மட்டுமே. வெள்ளிக்கிழமைகளில் திருமஞ்சனம் நடைபெறுகிறது.

1. வேங்கட கிருஷ்ணன் - ருக்மணிப் பிராட்டி.
2. ரங்கநாதர் புஜங்க சயனம். கிழக்கே திருமுகமண்டலம். தாயார் : வேதவல்லி.
3. ராமர் - சீதை - நின்ற திருக்கோலம். தெற்கே திருமுக மண்டலம்.
4. வரதராஜன் - கருடவாகனர் - கிழக்கே திருமுகமண்டலம்.
5. நரசிம்மன் - வீற்றிருந்த திருக்கோலம். மேற்கே திருமுக மண்டலம்.

வடக்குப்பக்கம் தனி ஆண்டாள் சந்நிதி.

ஸ்ரீ இராமானுஜர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம்.

155. திருவாய்ப்பாடி: பெருமாள் கோயில். கரிகிருஷ்ணப் பெருமாள் - சுந்தரவல்லி தாயார். சுந்தர தீர்த்தம்.

156. திருவொற்றியூர் : சீனிவாசப் பெருமாள் கோயில்.

157. திருமயிலாப்பூர் (பிருந்தாரண்யம்): ஏழு நிலை ராஜ கோபுரம் மயூரவரல்லித் தாயார் சமேத ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தீர்த்தம் - சந்திர புஷ்கரணி, சர்வதீர்த்தம். பேயாழ்வார் அவதரித்த திருத்தலம்.

158. தியாகராயநகர்: சீனிவாசப் பெருமாள் - அலர்மேலுமங்கை தாயார் கோயில். மேலும் லக்ஷ்மிநாராயணர் கோயில்.

159. நந்தம் பாக்கம்: கோதண்ட ராமசாமி திருக்கோயில் .

160. நசரத்பேட்டை: பச்சைப் பெருமாள் கோயில். பச்சை வண்ணப் பெருமாள் - அமிர்தவல்லித் தாயார்.

161. நுங்கம்பாக்கம்: பிரசன்னப் பெருமாள்கோயில்.

162. புரசைப்பாக்கம்: கோதண்டராமசாமி கோயில், வரதராஜப் பெருமாள் கோயில், சீனிவாசப்பெருமாள் கோயில்.

163. பூவிருந்தவல்லி : வரதராஜப் பெருமாள் கோயில். திருக்கச்சி நம்பிகள் அவதாரத்தலம் .

164. பெசன்ட் நகர்: அஷ்டலக்ஷ்மி கோவிலில் மூன்று அடுக்குகளில் கீழ்சுற்றில் மஹாவிஷ்ணு மஹாலெக்ஷ்மி நின்ற கோலத்தில் காணப் படுகின்றார்.

165. மாம்பலம் : ரயில்நிலையத்திலிருந்து 1 கி.மீ-ல் ஸ்ரீநிவாசப் பெருமாள் என்ற லெக்ஷ்மி நாராயணப் பெருமாள் - பத்மாவதி அலர்மேலுமங்கைக் கோயில்.

166. முத்தியாலுப்பேட்டை: லிங்கச்செட்டிதெருவில் சொக்கலிங்கப் பெருமாள் கோயில். வேணுகோபாலசாமி கோயில். கண்ணபிரான் ருக்மணி - பூதேவி ஸ்ரீதேவியுடன் சீனிவாசப் பெருமாள் கோயில்.

167. வண்ணாரப்பேட்டை : சீனிவாசப் பெருமாள் கோயில்.

168. வேளச்சேரி : பெருமாள் கோயில்.

சேலம் மாவட்டத் தலங்கள் - 6

169. அயோத்தியாப்பட்டினம் : 5 நிலை ராஜ கோபுரம், கோதண்டராமர் சீதையுடன் உள்ள கோயில் வெளிப்பிராகாரத்தில் பன்னிரு ஆழ்வார்கள் தனிச் சந்நிதியில் உள்ளனர். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். இராமநவமி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது - சின்ன திருப்பதி.

170. ஆத்தூர் : பச்சைநதிப் பெருமாள் கோயில்.

171. கொங்குப்பட்டி (காரவல்லி): சின்னத் திருப்பதி. வெங்கடாசலபதி நின்றத் திருக்கோலத்தில் 5- அடி உயரம் கொண்டு காட்சி தருகிறார். தாயார் : அலமேலுமங்கை.

172. சின்னசேலம் : பெருமாள் கோயில்.

173. சேலம் : சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

174. பாபநாசமலை : நரசிம்மமூர்த்தி லக்ஷ்மி கோயில். பாபநாச தீர்த்தம்.

தஞ்சை மாவட்டத் திருத்தலங்கள் - 29

175. கருந்தட்டாங்குடி: வெங்கடேசப் பெருமாள் கோயில். நீலமேகப் பெருமாள் - செங்கமலவல்லித் தாயார்.

176. கல்யாணபுரம்: திருவையாற்றுக்கு அருகில் கல்யாண வெங்கடேசர் கோயில்.

177. காரப்பன் காடு : இராஜமன்னார்குடிக்குத் தெற்கே உள்ள தலம். 3 நிலை ராஜ கோபுரம். ஸ்ரீ அபீஷ்டவரதராஜ சுவாமி - பூமிதேவி, திருமகள், ஸ்ரீ பெருந்தேவி நாச்சியார் - தனிச் சந்நிதி.

178. குடந்தை ராமசாமி கோயில் : குடந்தை கடைத்தெருவில் உள்ள ராமசாமி கோயில். வடக்கே திருமுக மண்டலம். இங்கே ராமாயண ஓவியங்கள் அழகுற அமைந்துள்ளன.

179. சக்கரபாணி கோயில் : காவிரியின் தென்கரையில் திருமால் அஷ்டபுஜங்களுடன் சக்கரபாணியாகச் சேவைசாதித்து அருள்கின்றார்.

180. சுந்தரப்பெருமாள் கோயில் (கும்பகோணம் வட்டம்): கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜ கோபுரம். ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள்-ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார். இந்திர தீர்த்தம் அரசலாற்றின் தென்கரை.

181. சேங்கனூர் : கும்பகோணம் திருப்பனந்தாள் சாலையின் உட்புறம் அமைந்த திருமால் கோயில். இத்தலம் பெரியவாச்சான் பிள்ளையின் அவதாரத் தலம்.

182. தஞ்சை ஆளிநகர் : கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : நரசிம்மன் - வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : தஞ்சை நாயகி.

தஞ்சை-குடந்தை நெடுஞ்சாலையில் வெண்ணாற்றின் தென்கரையில் இம்மூன்று திருத்தலங்களும் அடுத்தடுத்து அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

183. தஞ்சை மணிக்குன்றம் : கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : மணிக்குன்றப் பெருமாள். வீற்றிருந்த பெருமாள்

தாயார் : அம்புஜவல்லி.

184. தஞ்சை மாமணிக் கோயில் * கிழக்கே திருமுக மண்டலம்

தஞ்சையின் நீலமஞ்சன்

ஓதக்கேள், நெஞ்சே ! உனக்கும் இது நன்று ; எனக்கும்
மேதக்க நன்மை இதின் வேறு இல்லை ; போதப்
பெருந் தஞ்சை மா மணியைப் பேணி, வடிவம்
பொருந்து அஞ்சை, மா, மணியை, போற்று.

மங்களாசாசனங்கள்

திருமங்கையாழ்வார் : 953, 1090, 1576

பூதத்தாழ்வார் : 2251

நம்மாழ்வார் : 3139

மொத்தம் : 5 பாசுரங்கள்

பெருமாள் : நீலமேகப் பெருமாள், வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : செங்கமல வல்லி.

185. திருஆதனூர் *

ஆதனூர் ஆண்ட ஐயன்

இடர் ஆன ஆக்கை இருக்க முயலார்,
மடவார் மயக்கின் மயங்கார், கடவுளர்க்கு

நாதன் ஊர் ஆதரியார், நான் எனது என்னார் - அமலன்
ஆதனூர் எந்தை, அடியார்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2674 (130) - பாசுரம்

சுவாமிமலையிலிருந்து 3 கி.மீ தொலைவில் அமைந்துள்ள திவ்யதேசம். ஸ்ரீ அஹோபில மடத்தின் நிர்வாகம். கிழக்கே திருமுக மண்டலம். பெருமான் தலையின் கீழ் மரக்காலும், இடது கையில் ஒலை எழுத்தாணியும் காணப்படுகின்றன.

பெருமாள் : ஆண்டளக்குமையன். புஜங்கசயனம்.
தாயார் : ஸ்ரீ ரங்கநாயகி.

186. திருக்கண்டியூர் *

கண்டியூர்க் கடவுள்

பேசுவரின் தென் அரங்கன் பேர் எல்லாம் பேசுக வாய்,
கேசவனைக் காண்க, விழி; கேட்க , செவி , ஈசனார்
உண்டி ஊர்தோறும் உழன்று இரவாமல் தவிர்த்தான்
கண்டியூரங் கூப்புக என் கை.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2050 - 1 பாசுரம்

தஞ்சை - திருவையாறு சாலையில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : ஹரசாபவிமோசனப் பெருமாள் - நின்ற திருக்கோலம்.
தாயார் : கமலவல்லித் தாயார்

187. திருக்கவித்தலம் *

கபித்தல க் கரிவரதன்

காணியும், இல்லமும், கைப்பெருளும், ஈன்றோரும்,
பேணிய வாழ்க்கையும், பேர் உறவும், சேணில்
புவித் தலத்தில் இன்பமும்-பொங்கு அரவம் ஏறிக்
கவித்தலத்தில் கண் துயில்வோன் கால்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2431 - 1 பாசுரம்

திருவையாறு - கும்பகோணம் நெடுஞ்சாலையில், காவிரி வடகரையில் உள்ள திவ்ய தேசம். கிழக்கே திருமுக மண்டலம். ஆதிமுலமே என்று அழைத்த கஜேந்திரனுக்கு அபயம் அளித்த திவ்யதேசம்.

பெருமாள் : கஜேந்த்ர வரதன். புஜங்க சயனம்.

தாயார் : ரமாமணி வல்லி (பொற்றாமரையாள்)

188. திருக்குடவாயில் : வெண்ணாற்றங்கரையில் மணிபல்லவப் பெருமாள் - அம்புஜவல்லித் தாயார். நீலமேகப் பெருமாள் - செங்கமல வல்லித் தாயார். நரசிம்ம பெருமாள் - தஞ்சைநாயகி. சிங்கப்பெருமாள். கல்யாண வேங்கடேசப்பெருமாள் கோயில்.

189. திருக்குடந்தை சாரங்கபாணி கோயில் *

குடந்தை கிடந்தான்

தானே படைத்து, உலகைத்தானே அளித்து , நீ
தானே அழிக்கும் தளர்ச்சியோ? - வானில்
திருமகுடம் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெரும! குடந்தைக் கிடந்தாய் ! பேசு.

மங்களாசாசனங்கள்

பெரியாழ்வார் : 173, 177, 188

ஆண்டாள் : 628

திருமழிசையாழ்வார் : 807- 812, 2417

திருமங்கையாழ்வார்: 949, 954, 991, 1078, 1202, 1205, 1394, 1526, 1538, 1570, 1606, 1732, 1759, 1853, 1949, 1975, 2010, 2037, 2045, 2068, 2070, 2080, 2672, 2673(73), 2674(114),

பூதத்தாழ்வார் : 2251, 2278

பேயாழ்வார் : 2311, 2343

நம்மாழ்வார் : 3194-3204

மொத்தம் : 51 பாசுரங்கள்

கும்பகோணம் சாரங்கபாணி திருக்கோயில். கிழக்கே திருமுக மண்டலம். ஆதிசேஷசயனம் (உத்தியோகசயனம்) ஸ்ரீமந் நாதமுனிகள் திவ்ய பிரபந்தத்தை தொகுத்தருளிய திவ்யதேசம். புத்திரப்பேறு இல்லாத நாராயணசாமி என்ற திருமால் அடியார்க்குத் திருமால் புத்திர

ஸ்தானத்தில் இருந்து ஆண்டுதோறும் இறுதிக்கடன்களைச் செய்து வரும் திவ்யதேசம் இது.

பெருமாள் : சாரங்கபாணி, ஆராவமுதன், அபயப்ராம்ருதன்

தாயார் : கோமளவல்லி (படிதாண்டாப்பத்தினி)

190. திருக்கூடலூர் *

வையம் காத்த விமலன்

உண்டு, கேட்டு, உற்று, மோந்து பார்க்கும் ஐவர்க்கே
தொண்டுபடலாமோ, உன் தொண்டனேன்? - விண்டு இலங்கும்,
ஆடல் ஊர் நேமி முதல் ஐம்படையாய்! அன்பு உடையாய்!
கூடலூராய்! இதனைக் கூறு.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1358-67 -10 பாசுரங்கள்

திருவையாறு - குடந்தை நெடுஞ்சாலைத்துறையில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம். நந்தக முனிவருக்குச் சேவை சாதித்த திவ்யதேசம். ராணி மங்கம்மாள் திருப்பணி செய்த திருப்பதி.

பெருமாள் : வையங்காத்த பெருமாள். நின்ற திருக்கோலம்.

தாயார் : பத்மாஸனி, புஷ்பவல்லி.

191. திருமண்டங்குடி : ஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோயில், தொண்டரடிப் பொடியாழ்வார் அவதாரத்தலம்.

192. தியாக சமுத்திரம் : 5 நிலை ராஜகோபுரம். கிழக்கு நோக்கிய வல்வில் ராமன் புஜங்க சயனத்தில் காட்சி தருகிறார் .

ஹேமாம்புஜவல்லி- தாயார், தலவிருட்சம் புன்னை - யோக நரசிம்மர், கண்ணன், கருடன், அனுமன் ஆகியோருக்குத் தனிச் சந்நிதி.

193. திருப்பேர்நகர் (கோவிலடி) *

திருப்பேரப்பக் குடத்தான்

போம் மானை எய்து, பொரும் ஆனைக் கொம்பு பறித்து,
ஆம் ஆனை மேய்த்து உவந்த அம்மானை, தாமச்
செழுந் திருப்பேரானை, சிறுகாலே சிந்தித்து
எழுந்திருப்பேற்கு உண்டோ இடர்?

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 173, 205

திருமங்கையாழ்வார் : 1428-37 , 1851, 1857, 2048, 2050, 2059, 2060, 2070, 2673(70), 2674(118)

திருமழிசையாழ்வார்: 2417

நம்மாழ்வார் : 3744-54

மொத்தம் : 33 பாசுரங்கள்

திருக்காட்டுப்பள்ளி - கல்லணைச் சாலையில் உள்ள திவ்யதேசம். மேற்கே திருமுக மண்டலம். இத்திவ்யதேசத்தில் இருந்து நம்மாழ்வார் மோட்சம் சென்றதாக ஐதீகம். இங்குள்ள பெருமாளுக்கு நாள்தோறும் இரவில் அப்ப அமுது சேவிக்கப்படுகிறது.

பெருமாள் : அப்பக்குடத்தான், அப்பாலா ரெங்கநாதர். புஜங்கசயனம்.

தாயார் : இந்திரா தேவி, கமலவல்லி.

194. திருச்சேறை *

சேறைவாழ் சாரநாதன்

சென்று சென்று செல்வம் செருக்குவார் வாயில் தோறும்
நின்று நின்று தூங்கும் மட நெஞ்சமே ! இன் தமிழைக்
கூறைக்கும், சோற்றுக்கும் கூறாதே, பேறு ஆகச்
சேறைக்கு நாயகன் பேர் செப்பு

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1578-87, 1853, 2673(72), 2674 (115)

மொத்தம் : 13 பாசுரங்கள்

கும்பகோணம் - திருவாரூர்ச் சாலையில் அமைந்துள்ள பஞ்சஸார க்ஷேத்ரம். கிழக்கே திருமுக மண்டலம். தைப்பூசத் திருநாளன்று தேரில் பெருமாள், ஸ்ரீ தேவி, பூதேவி, நீளாதேவி, மஹாலெட்சுமி, ஸார நாயகி என்ற ஐந்து தாயார்களுடன் காட்சி கொடுத்து அருள்வது சிறப்பாகும். இங்குள்ள மண்ணைக் கொண்டு ஒரு கடம் செய்து அதில் வேதங்கள் காப்பாற்றப்பட்டதாக வரலாறு. அதனால் இங்குள்ள மண்ணுக்கு மகிமை உண்டு என நம்பப்படுகிறது.

பெருமாள் : ஸாரநாதன் நின்ற திருக்கோலம்

தாயார் : ஸார நாயகி.

195. திருவிண்ணநகர் (ஒப்பிலியப்பன்) *

விண்ணநகர் ஒப்பிலியப்பன்

கையும் உரையும் கருத்தும் உனக்கே அடிமை
செய்யும்படி நீ திருத்தினாய் - ஐயா !
திரு விண்ணகராளா ! - சிந்தையிலும் எண்ணேன்
பெரு விண்நகர் ஆளும் பேறு.

மங்களாசாசனங்கள்

திருமங்கையாழ்வார் : 1448-77, 1855, 2080, 2673(72), 2674(113)

பேயாழ்வார் : 2342, 2343

நம்மாழ்வார்: 3249-59

மொத்தம் : 47 பாசுரங்கள்

கிழக்கே திருமுகமண்டலம். இக்கோயில் திருக்கல்யாணப் பிரார்த்தனைத் தலம். உத்ஸவம், சிறப்பு கருடசேவை, மூலவர் திருமஞ்சனம் முதலியன. சிரவண நட்சத்திரத்தன்று சிரவணதீபம் எடுத்துக் குறி சொல்வது விசேஷம்.

பெருமாள் : ஒப்பிலியப்பன் (ஒப்பற்றவன்). நின்ற திருக்கோலம்.

தாயார் : பூமிதேவி.

196. திருபுள்ளம் பூதங்குடி *

புள்ளம் பூதவல்வில் ராமர்

விரும்பினவை எய்தும் ; வினை அனைத்தும் தீரும் ;
அரும் பரம வீடும் அடைவீர்- பெரும் பொறிகள்
கள்ளம் பூதம் குடிகொள் காயமுடையீர் ! அடிகள்
புள்ளம் பூதங்குடியில் போம்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1348-57 - 10 பாசுரங்கள்

சுவாமிமலை திருவைகாவூர்ச் சாலையில் அமைந்த திவ்ய தேசம். கிழக்கே திருமுக மண்டலம். ஜடாயுவுக்கு மோட்சம் அளித்த பின் ராமன் ஓய்வுகொண்ட திருத்தலம். ஸ்ரீ அஹோபில மடத்தின் நிர்வாகம். ஸ்ரீ அஹோபில மடம் 19-வது பட்டம் ஜீயர் சுவாமிகளுக்கு இங்கே பிருந்தாவனும் அமைந்துள்ளது.

பெருமாள் : வல்வின் ராமன் - புஜங்கசயனம்

தாயார் : பொற்றாமரையாள் (ஹேமாம்புஜவல்லி)

197. திருநறையூர்

நறையூர் நின்ற நம்பி

செய்ய சடையோன், திசைமுகத்தோன், வானவர்கோன்
ஐயம் அறுத்து இன்னம் அறியாரே - துய்ய
மருநறை ஊர் வண் துழாய் மாயோன், செவ்வாயோன்,
திருநறையூர் நின்றான் செயல்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1078, 1329, 1470, 1478-1577, 1611, 1659, 1852, 2067, 2068, 2673(71) , 2674(73-133)

மொத்தம் : 110 பாசுரங்கள்

கும்பகோணம் - திருவாரூர்ச் சாலையில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். மேதாவி ரிஷியின் வளர்ப்புப் பெண்ணான வஞ்ஜுளவல்லியைத் திருமால் ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன், புருஷோத்தமன், வாஸுதேவன் என்ற நான்கு உருவங்களில் திருமணம் செய்தருளுகின்றார்.

பெருமாள் : திருநறையூர் நம்பி - நின்ற திருக்கோலம்

தாயார் : வஞ்ஜீளவல்லி (நம்பிக்கை நாச்சியார்). பெருமாள் பக்கத்தில் திருமணக் கோலத்தில் நிற்கிறார் .

198. திருநந்திபுர விண்ணகரம் *

நந்தி விண்ணகர் நாதன்

செயற்கு அரிய செய்வோமைச் செய்யாமை - நெஞ்சே !
மயக்குவார் ஐவர் வலியால் ; 'நயக் கலவி
சிந்திபுர, விண்ணகரம் ' என்பர்: திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகரம் நாடு.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1438 - 47 - 10 பாசுரங்கள்

பட்டீஸ்வரத்திற்கு நேர் கிழக்கேப் பழையாறையை அடுத்துள்ள திவ்யதேசம். மேற்கே திருமுக மண்டலம். நந்தி தவம் செய்த திவ்யதேசம் சிபிச் சக்கரவர்த்தி வரலாறு சிறப்பு. வானமாமலை மடத்தின் நிர்வாகத்தில் உள்ள திவ்ய தேசம்.

199. திருவெள்ளிஅயங்குடி *

வெள்ளியங்குடிவில் இராமன்

கால் அளவும் போதாக் கடல் ஞாலத் தோர் கற்ற
நூல் அளவே அன்றி நுவல்வார் ஆர்-கோலப்
பரு வெள்ளி அம் குடியான் பாதக ஊண் மாய்த்த
திரு வெள்ளியங்குடியான் சீர்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்: 1588-1627, 1854, 2066, 2077, 2673(72), 2674(123)

மொத்தம் : 45 பாசுரங்கள்

கும்பகோணம் - அணைக்கரை செல்லும் சாலையில் சோழபுரத்தின் அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். 108 திவ்யதேசங்களைத் தரிசித்த பலனைத் தரும் திவ்யதேசம். இங்குள்ள கருடாழ்வார் திருக்கரங்களில் சங்கு, சக்கரங்கள் காணப்படுகின்றன.

பெருமாள் : கோலவல்வில்லி ராமன் - புஜங்கசயனம்.

தாயார் : மரகதவல்லி

200. திருக்கோளிலி : வரதராஜப்பெருமாள் கோயில்.

201. பந்தணைநல்லூர் : (கொன்றைவனம்) கொள்ளிடம் ஆற்றின் தென்கரை பரிமளவல்லித் தாயார் - ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

202. பாபநாசம் : குடமுருட்டி ஆற்றின் தென்கரை, பங்கஜவல்லித் தாயார்- ஆதிகேசவப்பெருமாள் கோயில்.

203. பெரும்புலியூர் : சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில். திருமழிசை ஆழ்வார் தரிசித்த இடம்.

தர்மபுரி மாவட்டத் திருத்தலம் - 1

204. தேன்கனிக்கோட்டை: கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜ கோபுரம் வெங்கடேசப் பெருமாள் - பூமிதேவியுடன் நின்ற திருக்கோலத்தில் சௌந்தரவல்லித் தாயாருக்குத் தனிச் சந்நிதி. தீர்த்தம் கண்வரிஷி, சகுந்தலை, அர்ச்சுனன் ஆகியோர் வழிபட்ட திருத்தலம்.

திண்டுக்கல் மாவட்டத் தலங்கள் - 14

205. ஆயக்குடி : ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

206. இராமராஜபுரம் : ஸ்ரீ வெங்கடாசலபதி திருக்கோயில்.

207. இராமகிரி: ஸ்ரீ கல்யாண நரசிங்கப்பெருமாள், கமலவல்லித் தாயார்.

208. சின்னாளம்பட்டி: நான்முகப்பெருமாள் கோயில்.

209. சுருளிமலை : சுருளி நதியின் மேற்குக் கரையில் வீர நாராயணப் பெருமாள் கோவில்.

210. சோழவந்தான் : சந்தானகோபால கிருஷ்ணன் கோயில்.

211. தாடிக்கொம்பு : (தாலம்புரி) சௌந்தரராஜப் பெருமாள் - சௌந்தர வல்லித் தாயார் - கிழக்கு நோக்கிய தலம். தலவிருட்சம் - வில்வம்.

212. திண்டுக்கல் : ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில்கள்.

213. பழநி : லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயில், வேணு கோபாலப் பெருமாள் கோயில்.

214. மண்ணாடிமங்கலம் : நரசிங்கப் பெருமாள் கோயில்.

215. வத்தலகுண்டு : லெக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயில்.

216. வடமதுரை : ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் சௌந்தர வல்லித் தாயார் தலவிருட்சம்- வில்வம். தீர்த்தம் பால்கேணி -ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் - ஆதி லெட்சுமித் தாயார் கோயில்.

217. வாலா சமுத்திரம் : அகோபில வரதராஜப் பெருமாள் கோயில்.

218. வேடசந்தூர் : ஸ்ரீ நரசிங்கப் பெருமாள் கோயில்.

திருச்சி மாவட்டத் தலங்கள் - 17

219. அரியலூர் : சுந்தரராஜர் - மகாலக்ஷ்மி திருக்கோயில். கிருஷ்ணன் கோயில். கலியபெருமாள் - லக்ஷ்மி நரசிம்ம சுவாமிகோயில். இங்கு தசாவதார சந்நிதி உள்ளது.

220. உறையூர் என்னும் திருக்கோழி *

வண் பொழில் கோழி மணவாளர்

சிறப்பு உடைய செல்வம் திருப்பதிகள் போல,
மறப்பு உடைய நாயேன் மனத்துள் உறப்போந்து,
அறம் தையா நின்ற அரங்கா! திருவாழ்
உறந்தையாய்! இங்கு உறைந்தது ஒது.

மங்களாசாசனங்கள்

திருமங்கையாழ்வார் : 1762
குலசேகராழ்வார் : 667 மொத்தம் : 2 பாசுரங்கள்.

திருச்சியில் உள்ள ஒரு பகுதி. வடக்கே திருமுகமண்டலம். திருப்பாணாழ்வார் அவதாரத்தலம். சோழமன்னன் மகள் கமலவல்லி நாச்சியாரை ஸ்ரீரங்கநாதர் மணம் புரிந்து கொண்ட தலம்.

பெருமாள் : அழகிய மணவாளப் பெருமாள்.
நின்ற திருக்கோலம்

தாயார் : கமலவல்லி நாச்சியார்

221. கள்ளகம்: ஸ்ரீநிவாஸர் - அலர்மேல்மங்கை.

222. குணசீலம் : காவிரி வடகரை மூன்று நிலை ராஜகோபுரம். ஸ்ரீபிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில். இங்கு துருவிய தேங்காயில் சர்க்கரை வைத்துப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. தீர்த்தம் பாபநாச தீர்த்தம். முனிவர் குணசீலர் தவம் புரிந்த இடம். சித்த சுவாதீனம் அற்றவர்கள் வழிபாடு செய்யும் திருத்தலம்.

223. குணசேகரம் : சீனிவாசப் பெருமாள் - அலர்மேல் மங்கை.

224. குளித்தலை: வைரமேகப் பெருமாள் கோயில்.

225. மேலஅன்பில் : நம்பி சுந்தரராஜப் பெருமாள் - அழகிய வல்லி நாச்சியார்.

226. திருவரங்கம் *

ஆற்றிடைக் குறையுறை அரங்கன்

சீர் வந்த உந்தித் திசை முகனால் அல்லாது என்
சோர்வந்த சொல்லில் சுருங்குமோ - ஆர்வம்
ஒருவர் அங்கு அங்கு ஒயில், உகந்து அவரை ஆள்வான்
திரு அரங்கம் கோயில் சிறப்பு?

மங்களாசாசனங்கள்

பெரியாழ்வார் : 183 , 189, 212, 245, 402-432

ஆண்டாள் : 607-616

குலசேகராழ்வார் : 647-676, 728

திருமழிசையாழ்வார் : 772, 800-806, 844, 870, 2384, 2411, 2417, 2441

தொண்டரடிப்பொடியாழ்வார் : 872 - 926

திருப்பாணாழ்வார் : 927 - 936

திருமங்கையாழ்வார் : 1019, 1213, 1378-1427, 1506, 1571, 1664, 1829, 1978, 2029, 2038, 2043, 2044, 2050, 2062, 2063, 2065, 2069, 2070, 2073-76, 2073(71), 2074(118)

பொய்கையாழ்வார் : 2087

பூதத்தாழ்வார் : 2209, 2227, 2251, 2269

பேயாழ்வார் : 2342, 2343

நம்மாழ்வார் : 2505, 3348-58

மொத்தம் : 247 பாசுரங்கள்

இந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாக விளங்குகிறது. ஆழ்வார்கள் பன்னிருவரில் பதினோரு ஆழ்வார்களின் மங்களா சாசனத்தைப் பெற்ற திருத்தலம் இதுவாகும். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தைத் தாளத்தோடு இசைந்து பாடும் அரையர் சேவை நடைபெறும் திருத்தலம். திருவரங்கமும், திருமதில்களும் கீழ் ஏழ் உலகம், மேல் ஏழு உலகம் எனப்படுகிறது. இங்கு 7 மதில்கள் உள்ளன. தெற்கே திருமுகமண்டலம். பட்டர் வடக்கு வீதிப்பிள்ளை, பிள்ளை லோகாச்சாரியர், பெரியநம்பி இவர்களின் அவதாரத் தலம், இங்குதான்

கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்டது. கருடாழ்வார் சந்நிதியின் இருபுறமும், சுக்ரீவன், அங்கதன் சந்நிதிகள் அமைந்துள்ளன.

பெருமாள் : ரங்கநாதர். புஜங்கசயனம்

தாயார் : ஸ்ரீ ரங்க நாயகி

227. திருஅன்பில் *

அன்பில் மேவிய அழகிய நம்பி

போற்றிசெய, ஓர் குடைக்கீழ், பொன்னாடும், இந்நாடும்,
நாற்றிசையும், ஆண்டாலும், நன்கு இல்லை - தோற்றம் இலா
எந்தை, அன்பில் ஆதி, இணைத் தாமரை அடிக்கே
சிந்தை அன்பிலாதார் சிலர்

மங்களாசாசனம்

திருமழிசையாழ்வார் : 2417 - 1 பாசுரம்

திருச்சி கல்லணை செல்லும் வழியில் உள்ளது. இவ்வூருக்கு மண்டுகபுரி என்ற பெயரும் உண்டு. கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : வடிவழகிய நம்பி - புஜங்கசயனம்

தாயார் : அழகிய வல்லிநாச்சியார்

228. திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்) *

ஒண்கரம்பனூர் உத்தமர்

சில மாதவம் செய்தும், தீ வேள்வி வேட்டும்,
பல மா நதியில் படிந்தும், உலகில்
பரம்ப நூல் கற்றும், பயன் இல்லை - நெஞ்சே!
கரம்பனூர் உத்தமன் பேர் கல்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1399 - 1 பாசுரம்

கிழக்கே திருமுகமண்டலம். சிவபெருமானுடைய பிரமஹத்தி தோஷம் நீங்கப் பெற்ற திவ்யதேசம். சிவபெருமான் பிட்சாண்டவர் கோலத்தில் இங்கு இருப்பதால் பிட்சாண்டார் கோயில் எனவும் பெயர் பெற்றுள்ளது. மும்மூர்த்திகளும் ஒரே கோயிலுக்குள் அமைந்திருப்பது சிறப்பாகும். இதனால் இதனைத் திருமூர்த்தித் தலம் என்பர்.

பெருமாள் : புருஷோத்தமன். புஜங்கசயனம்.

தாயார் : பூர்வாதேவி, பூர்ணவல்லி.

229. திருவெள்ளறை *

வெள்ளறைத் தாமரைக் கண்ணன்

'கல் இருந்தான் தந்தை கமலத்தோன், அக்கமலத்
தில் இருந்தான் தந்தை அரங்கேசன்' என்றே தொல்லை மறை
உள் அறையா நின்றமையால், உள்ளமே ! கள்ளம் இன்றி
வெள்ளறையான் தாளே விரும்பு.

மங்களாசாசனங்கள்

பெரியாழ்வார் : 71, 192-201

திருமங்கையாழ்வார் : 1368-77, 1851, 2673(70), 2674(117)

மொத்தம் : 24 பாசுரங்கள்

திருச்சியிலிருந்து - துறையூர் செல்லும் வழியில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம் இங்கு உத்தராயண வாசல், தக்ஷிணாயண வாசல் என்ற இரண்டு வாயில்கள் உள்ளன. ஸ்ரீதேவி, பூதேவி, சூரியன், சந்திரன், ஆதிசேஷன் ஆகிய ஐவரும் மனித உருவில் நின்று விஷ்ணு கைங்கரியம் செய்வது சிறப்பு. இங்குள்ள பூங்கிணற்றில் பகவானை நோக்கித் தவம் செய்த பிராட்டிக்குப் பெருமாள் செந்தாமரைக் கண்ணனாகக் காட்சியளித்தார். உய்யக்கொண்டார், எங்களாழ்வான் ஆகியோர் அவதாரத் தலம். ஸ்ரீ சுவாமி தேசிகன், ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்த திருத்தலம் .

பெருமாள் : புண்டரீகாஷன் - நின்ற திருக்கோலம்

தாயார் : செண்பகவல்லி, பங்கயச் செல்வி

230. திருச்சின்னம்பூண்டி: ரங்கநாதன் - புஜங்கசயனம் பெருமாள் கோயில்.

231. துறையூர் : பெருமாள் கோயில்.

232. பாச்சிலாச்சிரமம் : மருதப்பெருமாள் கோயில்.

233. பெருமாள் மலை : பெருமாள் கிரிமூர்த்தி - லக்ஷ்மி கோயில்.

234. மணக்கால் : வரதராஜர் - மகாலக்ஷ்மி கோயில்.

235. நத்தம் : ஆதிமூலமூர்த்தி - மகாலக்ஷ்மி கோயில்.

நெல்லை மாவட்டத் திருத்தலங்கள் - 21

236. அம்பாசமுத்திரம் : ஸ்ரீ கிருஷ்ணசாமி கோயில் தாமிரபரணி ஆற்றங்கரை வேணுகோபாலர் - சத்யபாமா, ருக்மணி ஹரிஹர தீர்த்தம் செண்பகமரம்.

ஸ்ரீ புருஷோத்தமப் பெருமாள் கோயில்: பெருமாள் -புருஷோத்தமன்; அலமேலுமங்கை. தீர்த்தம் - கொங்கு தீர்த்தம்.

தென்னழகர் திருக்கோயில் : பெருமாள் - சுந்தரராஜப் பெருமாள்; சௌந்தரவல்லித் தாயார். தீர்த்தம் - மார்க்கண்டேய தீர்த்தம்.

லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்: ஸ்ரீ லெட்சுமி நாராயணன் - பூமிதேவி. தலவிருட்சம் - வில்வம்

237. ஆழ்வார்திருநகரி : திருக்குருகூரின் தெற்குவீதியில் திருவரங்க நாதன், திருவேங்கடமுடையான் கோயில்.

238. இலஞ்சி : ஆதிவீரராம விண்ணகரப் பெருமாள் கோயில். லெட்சுமி வராகப்பெருமாள் கோயில்கள்.

239. இராமேசநல்லூர் : ராமநாதர் - சத்குணாம்பாள்.

240. கருங்குளம் : வேங்கடேசப் பெருமாள் மரத்தினால் ஆனது. பக்கத்தில் ஸ்ரீநிவாசப்பெருமாள் உள்ளது.

241. கள்ளிடைக்குறிச்சி : தாமிரபரணி ஆற்றின் கரை லெட்சுமி வராகர் - பூதேவி தாயார் குபேரனால் பூஜை செய்யப்பட்டதலம். தீர்த்தம் - வராகத் தீர்த்தம் .

242. கிருஷ்ணபுரம் : வெங்கடாசலபதிப் பெருமாள் கோயில். தாமிர பரணி ஆற்றின் தென்கரை ஸ்ரீ வெங்கடாசலபதிப் பெருமாள் - பூமிதேவித் தாயார்.

243. சித்தமல்லி : தென்மேற்கே 11 கி.மீ கந்தருவேசர் - லோகநாயகி - வேங்கடாசலபதி கோயில்.

244. தாழைநல்லூர் : ஆதிமூலப் பெருமாள் கோயில்.

245. திருகுருகூர் (ஆழ்வார் திருநகரி) *

குருகூர் ஆதிநாதன்

வளம் தழைக்க உண்டால் என்? வாசம் மணந்தால் என்?
தெளிந்த கலை என்றால் என்? சீசீ- ' குளிர்ந்து பொழில்

தண் குருகு ஊர் வாவிச் சடகோபன் ஊர் எங்கள்
வண் குருகூர் ' என்னாத வாய்.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3106-3116 -110 பாசுரங்கள்

திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் அமைந்துள்ள திவ்ய தேசம் இந்திரன் சாபவிமோசனம் பெற்ற திருத்தலம். கிழக்கே திருமுக மண்டலம். ஸ்ரீரங்கம் போல் இங்கு அரையர் சேவை நடைபெறுகிறது. திருமால் ப்ருஹம்சர்ய யோகத்தில் இருந்ததால் லக்ஷ்மியை மகிழ மாலையாக மார்பில் தரித்துக்கொண்டதாக ஐதீகம். மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்த தலம்.

பெருமாள் : ஆதிநாதன், ஆதிப்பிரான். நின்ற திருக்கோலம்.
தாயார் : ஆதிநாதவல்லி, குருகூர் வல்லி

246. திருக்குறுங்குடி *

குறுங்குடி நின்ற கோல நம்பி

தாலத்து இழி குலத்துச் சண்டாளர் ஆனாலும்
மேல் அத் தவத்தோரின் மேன்மைத்தே - கோலக்
குறுங்குடி வாழ் மாயன் குரை கழற்கு ஆள் ஆகப்
பெறும் குடியாய் வாழ்வார் பிறப்பு

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 71.
திருமழிசையாழ்வார் : 813
திருமங்கையாழ்வார் : 1005, 1399, 1470, 1788, 1807, 2065, 2674(114)
நம்மாழ்வார் : 2782, 2986, 3161-71
மொத்தம் : 40 பாசுரங்கள்

நாங்குனேரிக்கு அண்மையில் உள்ள திவ்யதேசம். ஸ்ரீ மணவாள மாமுனிவருக்கு சந்நிதி இருக்கிறது. கிழக்கே திருமுக மண்டலம் திருமங்கையாழ்வார் இத்தலத்தில்தான் பரமபதம் பெற்றார். பிள்ளைப் பெருமாளையங்கார், இராமானுஜர் ஆகியோர் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பெருமாள் : நின்ற நம்பி (குறுங்குடி நம்பி)
நின்ற திருக்கோலம்.

தாயார் : குறுங்குடிவல்லி நாச்சியார்.

247. திருநாங்கோயில் : தாமிரபரணி நதிக்கரை சுவேதமலை எனப்படும் திருவேங்கடநாதபுரம் திருமகள், பூமிதேவி உடனாய ஸ்ரீ வேங்கடாசலபதித் திருக்கோயில்.

248. திருநெல்வேலி : கோவிந்தர் கருவறையை அடுத்து வட பக்கத்தில் காலை நீட்டிப் படுத்திருக்கிறார்.

249. திரிபுராந்தகம் : ராமர் கோயில்.

250. திருப்புளிங்குடி *

புளிங்குடி காய்சின வேந்தன்

தெளியும் பசும் பொற் சிறைக் காற்று வீச
விளியும் துயர் போய்விடுமே - எளியேற்கு
அருளப் புளியங்குடி வாழ் அச்சுதனைக் கொண்டு
கருளப்புள் இங்கு வந்தக்கால்

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3473, 3568-78 -12 பாசுரங்கள்

வரகுணமங்கைக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம், நவக்கிரகங்களில் வியாழனோடு சம்பந்தப்பட்ட தலம் யக்ஞசர்மா சாபவிமோசனம் பெற்றதலம். இந்திரனுக்கு இங்கு ப்ரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்றது.

பெருமாள் : காய்சின வேந்தன் - புஜங்கசயனம்

தாயார் : மலர்மகள் நாச்சியார், பூ மகள் நாச்சியார்.

251. திருச்சிரீவர மங்கை (நாங்குனேரி) *

வரமங்கை வானமாமலை

வானோர் முதலா மரம் அளவா எப்பிறப்பும்
ஆனேற்கு அவதியிடல் ஆகாதோ? -தேன் ஏயும்
பூ வர மங்கை, புவி மங்கை, நாயகனே !
சீவர மங்கை அரைசே ?

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3183-93

திருநெல்வேலியிலிருந்து - திருக்குறுங்குடிச் சாலையில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம். திருமாலுக்குத் தைல அபிஷேகம் செய்த எண்ணெயைக் கிணற்றில் ஊற்றி வருகின்றனர். இந்த எண்ணெய் அனைத்து வியாதிகளையும் நீக்க வல்லது. இங்கு சாதிக்கப்படும் சடாரியில் ஸ்ரீ சடகோபனின் திருவுருவம் பொறிக்கப் பட்டுள்ளது. ஸ்ரீ மணவாள மாமுனிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அஷ்டதிக் கஜங்களில் ஒருவரான ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி திருமடம் இங்கு அமைந்துள்ளது.

பெருமாள் : தோத்தாத்ரி நாதன்

தாயார் : சிரீவரமங்கைத் தாயார்

252. திருவரகுண மங்கை *

குணமங்கை விஜயாசனன்

காலமும் நோயும், கருதாத அன்னையீர் !
வேலன் நெறியை விலக்குமின்கள்-மால்ஆம்
வரகுண மங்கையன் தாள் வண் துழாய் மேல் ஆ-
தர குணம் மங்கை தனக்கு

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3571-1 பாசுரம்

திருநெல்வேலி - ஸ்ரீ வைகுண்டம் தொடர்வண்டிப் பாதையில் ஸ்ரீ வைகுண்டத்தை அடுத்து அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம் ஆதிசேடன் இங்கு அமர்ந்த நிலையில் உள்ள பெருமாளுக்குக் குடைபிடிக்கிறார்.

பெருமாள் : விஜயாஸனப் பெருமாள் - அமர்ந்த திருக்கோலம்

தாயார் : வரகுணவல்லித் தாயார்

253. பாப்பான் குளம் (ஆழ்வார்குறிச்சி): வராகி நதிக்கரை. தாயார் சீதாதேவி, ராமசாமிதிருக்கோயில். தலமரம் - புளியமரம்.

254. பிரமதேசம் : ஸ்ரீ ராஜ கோபாலசுவாமி திருக்கோயில்.

255. புளியங்குடி (சங்கரன் கோயில்): அஷ்டாங்க விமானம். லெட்சுமி நரசிங்கப்பெருமாள் கோயில். லெட்சுமி தீர்த்தம். தலவிருட்சம் - புளியமரம்

256. மன்னார்கோயில் : அம்பாசமுத்திரத்திற்கு வடமேற்கில் உள்ளது. 5 நிலை ராஜ கோபுரம். ஸ்ரீ இராஜகோபால சுவாமி, ஸ்ரீ வேதவல்லித் தாயார், ஸ்ரீ புவனவல்லித் தாயார். பிருகு முனிவருக்கு இத்தலப் பெருமாள், பரமபதநாதராகவும், வேதநார்ாயணராகவும், அரங்க நாதராகவும் மூன்று நிலைகளில் காட்சி தந்து அருளிய தலம்.

திருவண்ணாமலை மாவட்டம் - 18

257. அனக்காவூர் : வீரராகவப் பெருமாள் கோயில்.

258. ஆரணி : வரதராஜப் பெருமாள் கோயில்.

259. களம்பூர் : வேணுகோபால சுவாமி கோயில்.

260. காப்பலூர் : விசயராகவப் பெருமாள் கோயில்.

261. கோவிலூர் : ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

262.செங்கம் : வேணுகோபால பார்த்தசாரதி கோயில்.

263. செய்யாறு : வேணுகோபால சுவாமி கோயில்.

264. தென்னாங்கூர் : ஸ்ரீ பாண்டு ரெங்கர் திருக்கோயில்.

265. புரிசை : கரிய மாணிக்கப் பெருமாள் கோயில்.

266. புதுப்பாளையம் : ஆதிமூலநாத நாராயணப் பெருமாள் கோயில்.

267. பொன்னூர் : பெருமாள் கோயில்.

268. போளூர் : இலட்சுமிநரசிம்ம சுவாமி கோயில்.

269. மாமண்டூர் : ஸ்ரீ லெட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்.

270. முள்ளண்டிரம் : பாலவரதராஜ பெருமாள் கோயில்.

271. மேல்சீஷமங்கலம் : வரதராஜப் பெருமாள் கோயில்.

272. வந்தவாசி : ஸ்ரீ ரெங்கநாதர் திருக்கோயில்.

273. வாசுதேவம்பட்டி : ஸ்ரீ வீர நாராயணப் பெருமாள் கோயில்.

274.வீரானந்தல் : ஸ்ரீ லெட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்.

திருவள்ளூர் மாவட்டத் திருத்தலங்கள் - 38

275. அக்கரப்பாக்கம் (ஊத்துக்கோட்டை): சினிவாசப் பெருமாள் திருக்கோயில்.

276. அரசூர் (பொன்னேரி): ஸ்ரீ கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.

277. அருங்குளம் (திருத்தணி): ஸ்ரீ கல்யாண வரதராஜப் பெருமாள் கோயில் நின்ற திருக்கோலம்.

278. அயலூர் (திருவள்ளூர்): ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில்.

279. ஆற்காட்டுக்குப்பம் (திருத்தணி): ஸ்ரீ கோதண்ட ராமசாமி திருக்கோயில்.

280. ஆரணி : ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

281. இருளாஞ்சேரி : நரசிங்கபுரத்தில் லட்சுமிநரசிம்ம ஸ்வாமி திருக்கோயில்.

282. ஊத்துக்கோட்டை : சுந்தரவரதராஜப் பெருமாள் - சுந்தரவல்லித் தாயார் திருக்கோயில்.

283. ஊதிக்காடு (திருவள்ளூர்): கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.

284. எலையம்பேடு (பொன்னேரி): ஸ்ரீ கோதண்டசாமித் திருக்கோயில்.

285. கட்டாவூர் (பொன்னேரி): வெங்கடேசப் பெருமாள் கோயில்.

286. கன்னிகைப்பேர் (பெரியபாளையம்): ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

287. காட்டூர் (மீஞ்சூர்): வீற்றிருந்தப் பெருமாள் மஹாலட்சுமி திருக்கோயில்கள்.

288. கும்மிடிப்பூண்டி : ஸ்ரீ சென்ன கேசவப் பெருமாள் கோயில்.

289. சிறுவாபுரி (சின்னம்பேடு): ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

290. செஞ்சி (கடம்பத்தூர்): ஸ்ரீ லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

291. செம்பேடு (திருவள்ளுவர்): ஸ்ரீ வேணுகோபாலசாமித் திருக்கோயில்.

292. தட்டமாஞ்சி (பொன்னேரி) : வெங்கடேசப் பெருமாள் கோயில்.

293. திருநீர்மலை *

நீர்மலை நீல்முகில்வண்ணன்

இரங்கும் உயிர் அனைத்தும் இன் அருளால் காப்பான்
அரங்கன் ஒருவனுமே ஆதல், கரங்களால்
போர் மலைவான் வந்த புகழ் வாணன் காட்டினான்
நீர் மலை வாழ் எந்தை எதிர் நின்று

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1078-87, 1115, 1521, 1554, 1660, 1765, 1848, 2069, 2673(73), 2674(130)

பூதத்தாழ்வார் : 2227

மொத்தம் : 20 பாசுரங்கள்

பல்லாவரத்திற்கு அருகில் உள்ள திவ்ய தேசம்.

நின்றான் - நீர்வண்ணன்
இருந்தான் - சாந்த நரஸிம்மர்
கிடந்தான் - ரங்கநாதர்

நடந்தான் - உலகளந்த திரிவிக்ரமன் எனும் நான்கு திருக் கோலங்களில் எழுந்தருளி உள்ள திவ்யதேசம். வால்மீகி முனிவருக்கு, ஸ்ரீ ரெங்கநாதன் ராமனாகவும் , லட்சுமி ஜானகியாகவும், ஆதிசேஷன் லஷ்மணனாகவும் சங்கு சக்கரங்கள் சத்ருகன், பரதர்களாகவும், விஷ்வக்ஸேனர் சுக்ரீவர்னாகவும், கருடன், ஹனுமானாகவும் காட்சி தந்து அருளியதாகக் கூறப்படுகிறது.

பெருமாள் : நீர் வண்ணன், நிலமுகில் வண்ணன்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : அணிமாமலர் மங்கை

294. திரு எவ்வுள் *

எவ்வுளில் வீர இராகவன்

நீர்மை கெட வைதாரும், நின்னோடு எதிர்ந்தாரும்,
சீர்மை பெற நின் அடிக்கீழ்ச் சேர்க்கையினால், நேர்மை இலா
வெவ் உளத்தனேன் செய் மிகையைப் பொறுத்தருளி-
எவ்வுள் அத்தனே! - நீ இரங்கு.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1058-1067, 2674(116)

திருமழிசைஆழ்வார் : 2417

மொத்தம் : 12 பாசுரங்கள்.

சென்னை - அரக்கோணம் தொடர்வண்டிப் பாதையில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். இங்குள்ள தீர்த்தத்தில் நீராடிப் பெருமாளைச் சேவிக்கச் சகல நோய்களும் தீரும். ஆதலால் இப்பெருமானுக்கு வைத்ய வீரராகவன் என்ற பெயரும் உண்டு.

பெருமாள் : வீரராகவப் பெருமாள் - புஜங்கசயனம்.

தாயார் : கனகவல்லி (வசுமதி)

295. திருநின்றவூர்*

நின்றவூர் பக்தவத்சலம்

சீர் அறிந்து, தோழிமீர் ! சென்று கொணர்ந்து எனக்குப்
போர் முலை முகட்டில் பூட்டுமினோ - நேர் அஷணர்
பொன்ற ஊர் புட் கழுத்தில் பொன்னை, மாணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை, நீர்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1089, 1642

மொத்தம் : 2 பாசுரங்கள்

சென்னை அரக்கோணம் சாலையில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம். இக்கோயில் ஸ்ரீமந் பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஆதீனத்துக்குட்பட்டது.

பெருமாள் : பக்தவத்ஸலப் பெருமாள் - நின்ற திருக்கோலம்.

தாயார் : ஸீதாவல்லித் தாயார்.

296. திருமழிசை : கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜகோபுரம், ஸ்ரீ ஜெகநாதப் பெருமாள் கோயில். ஸ்ரீ திருமங்கைவல்லித் தாயார். தீர்த்தம் - பிருகு புஷ்கரணி. திருமழிசை ஆழ்வார் அவதாரத் திருத்தலம்.

297. திருவள்ளூர் : ஸ்ரீ வீரராகவப் பெருமாள் கோயில், ஸ்ரீ பாண்டு

ரங்கன் திருக்கோயில், பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் ஆகியன உள்ளன.

298. தொட்டிக்கலை (திருவள்ளூர்): ஸ்ரீ தேவி, பூதேவியுடன், ஸ்ரீ கேசவப் பெருமாள் கோயில்.

299. தோமூர் (திருவள்ளுவர்): ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

300. பட்டரைப் பெரும்புதூர் (திருவள்ளூர்): ஸ்ரீ சௌந்தர்ய நாராயணப் பெருமாள் கோயில்.

301. பாக்கம் : (திருவள்ளூர்) : ஸ்ரீ கரிய மாணிக்கப் பெருமாள் கோயில்.

302. பாடி : சௌமிய தாமோதரப் பெருமாள் கோயில்.

303.பேரம்பாக்கம் : ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் கோயில்.

304. பொன்னேரி : ஸ்ரீ அரிகிருஷ்ணப் பெருமாள் கோயில்.

305. மணவூர் : (திருத்தணி) ஸ்ரீவிஜயராகவப் பெருமாள், ஸ்ரீ தேவி, பூதேவி திருக்கோயில்.

306. மணிமங்கலம் : ஸ்ரீ பெரும்புதூர் கிழக்கே உள்ளது. ஸ்ரீ ராஜ கோபாலப் பெருமாள் - பூமிதேவியுடன் - கிழக்கு நோக்கி காணப் படுகிறார். இங்குள்ள இறைவனின் நான்கு திருக்கரங்களில் மேல் வலக் கரத்தில் சங்கும் மேல் இடக்கரத்தில் சக்கரமும் கிழே அபய ஹஸ்தம், கதை உடன் காட்சியளிக்கிறார் (மற்ற தலத்தில் வலக்கரத்தில் சக்கரமும் இடக்கரத்தில் சங்கும் இருக்கும்)

307. மீஞ்சூர் : வரதராஜப் பெருமாள் கோயில்.

308. ராமன் சேரி : ஆதிகேசவப் பெருமாள் கோயில்.

309. நசரத்பேட்டை (பூவிருந்தவல்லி):கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜ கோபுரம். அமிர்தவல்லித் தாயார் - பச்சை வாரணப் பெருமாள் திருக்கோயில். தருமபுத்திரர் யாகம் செய்த தலம். தீர்த்தம் - தரும புஷ்கரணி.

310. நிமிழி (திருத்தணி): ஸ்ரீ வைகுண்டநாதப் பெருமாள் அமர்ந்த திருக்கோலம்.

311. வெங்கல் (திருவள்ளூர்): நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீ சென்ன கேசவப் பெருமாள் கோயில்.

312. வெள்ளிக்கரம் (பள்ளிப்பட்டு): ஸ்ரீதேவி, பூதேவியுடன் விஜய ராகவ சுவாமி திருக்கோயில்.

திருவாரூர் மாவட்டத் திருத்தலங்கள் - 9

313. அடம்பர் (பனையூர்): கல்யாண ரங்கநாதர்.

314. அலிவலம் : கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.

315. காரப்பன் காடு (ராஜமன்னார்குடி): மூன்று நிலை ராஜ கோபுரம். ஸ்ரீபெருந்தேவி நாச்சியார் உடனாய ஸ்ரீ வரதராஜ சுவாமி கோயில். தலவிருட்சம் பாதிரி. தீர்த்தம் - வரதபுஷ்கரணி. விமானம் - புண்ணியகோடி.

316. திருநல்லூர் : குடமுருட்டி ஆற்றின் தென்கரை. திருமகள் பூமிதேவி உடனாய ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில. சிவன் கோயில் மேலவீதியில் - சிவயோக நாதப்பெருமாள் திருக்கோயில் தனியே உள்ளது.

317. தில்லை விளாகம் (தண்டகாரண்யம்): கோரையாற்றின் தென்கரை கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜ கோபுரம். ஸ்ரீ வீரகோதண்ட ராமர் சீதாதேவி திருக்கோயில். தலவிருட்சம் - தில்லைமரம். தீர்த்தம் - ஹேமபுஷ்கரணி ராம தீர்த்தம், அனுமன் தீர்த்தம். ஆனந்த விமானம். 39 வகையான ராமாயணக் காட்சிகள் உள்ள தலம்.

318. திருமக்கோட்டை(திருமெய்ஞானபுரம்): ஸ்ரீ ரெங்க நாயகி உடனாய ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள் திருக்கோயில் ராமனும் விபீஷணனும் தரிசித்த தலம்.

319. திருக்கண்ணங்குடி *

கண்ணங்குடி நீலவண்ணன்

கூறுபுகழ்த் தன் அடிக்கே கூட்டுவனோ? இன்னம் எனை
வேறுபடு பல் பிறப்பில் வீழ்த்துவனோ? தேறுகிலேன்-
எண்ணம் குடியாய் இருந்தான், நின்றான், கிடந்தான்
கண்ணங்குடியான் கருத்து.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1748-57 -10 பாசுரங்கள்

திருவாரூர் நாகை சாலையில், கீழ் வேளூருக்குத் தெற்கில் உள்ள திவ்ய தேசம். கிழக்கே திருமுக மண்டலம்

"காயாமகிழ், உறங்காப்புளி, தோலாவழக்கு, ஊராக்கிணறு திருக்கண்ணங்குடி" என்பது பழமொழி.

பெருமாள் - லோகநாதன் - நின்ற திருக்கோலம்.

தாயார் - லோகநாயகி.

இங்குள்ள மூலவரும் உற்சவரும் ஒரே முகச்சாயலில் இருப்பது வேறு எங்கும் காணமுடியாத விந்தை. இங்கு வசிட்டர் வெண்ணையால் கிருஷ்ண விக்ரகத்தைச் செய்து தியானம் செய்து வந்துள்ளார்.

320. ராஜமன்னார்குடி (செண்பகாரண்யம்): 11 நிலை ராஜ கோபுரம் ராஜகோபால சுவாமி - செங்கமலத் தாயார். கிருஷ்ண தீர்த்தக் குளம். தலவிருட்சம் - புன்னைமரம். மன்னார்குடி மதில் அழகு என்பது பழமொழி.

321. வடுவூர் (வகுளாரண்யம்): கோதண்டராமசுவாமி திருக்கோயில்.

தூத்துக்குடி மாவட்டத் திருத்தலங்கள் - 7

322. ஆத்தூர் : பள்ளிகொண்ட பெருமாள் கோயில்.

323. திருக்கோளூர் *

கோளூர் வைத்த மாநிதி

பிறப்பு அற்று, மூப்புப் பிணி அற்று, நாளும்
இறப்பு அற்று, வாழ இருப்பீர்! புறப்பற்றுத்
தள்ளுங்கோள்; ஊர் அரவில் தாமோதரன் பள்ளி
கொள்ளும் கோளூர் மருவுங்கோள்.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3293-3309, 3473

மொத்தம் - 12 பாசுரங்கள்

ஆழ்வார்திருநகரிக்கு அருகில் உள்ள திவ்ய தேசம். கிழக்கே திருமுக மண்டலம். மதுரகவி ஆழ்வார் அவதாரத் தலம். தர்ம, அதர்ம யுத்தத்தில் தர்மம் வெற்றிபெற்ற தலம். பார்வதியால் சாபம் பெற்ற குபேரன் சாபவிமோசனம் பெற்ற தலம்.

பெருமாள் : வைத்த மாநிதிப் பெருமாள் - புஜங்கசயனம்

தாயார் : குமுதவல்லி, கோளூர்வல்லி.

324. திருக்குளந்தை *

குளந்தை வாழ் மாயக்கூத்தன்

தனக்கு உடலம் வேறான தன்மை உணரார்;
மனக்கவலை தீர்ந்து உய்யமாட்டார் - நினைக்கில்
திருக்குளந்தையார் உரைத்த சீர்க்கீதை பார் மாந்-
தருக்கு உளம் தையாமல இருந்தால்

மங்களாசாசனம்

நம்மாழ்வார்: 3561 மொத்தம் : 1 பாசுரம்

திருப்புளியங்குடியிலிருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள திவ்ய தேசம். கருடனும் உற்சவராகப் பெருமாளின் பக்கத்தில் எழுந்தருளி யுள்ளார். கிழக்கே திருமுகமண்டலம். வேதசாரன் என்ற அந்தணன் மகளாகிய கமலாவதியை மஹாவிஷ்ணு திருமணம் செய்தருளிய தலம்.

பெருமாள் : ஸ்ரீநிவாஸன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : அலமேலுமங்கை , குளந்தை வல்லி.

325. திருத்தொலைவில்லி மங்கலம் *

வில்லி மங்கலத் தேவபிரான்

வாயும் மனைவியா, பூமங்கையர்கள்- எம்பிராற்கு
ஆயுதங்கள், ஆழிமுதல் ஐம்படைகள்; தூய
தொலைவில் லிமங்கலம் ஊர் ; தோள் புருவம், மேனி;
மலை, வில், இமம் கலந்த வான்

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3271-81 மொத்தம் - 11 பாசுரங்கள்

இரட்டைத் திருப்பதி என்பர். ஆழ்வார் திருநகரிக்கு அண்மையில் தாமிரபரணி நதிக்கரையில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். அச்வினி தேவர்களுக்குப் பகவான் அருளால் யாகத்தில் பாகம் கொடுத்த தலம். மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்த தலம் .

பெருமாள் : ஸ்ரீனிவாசன் (தேவப்பிரான்). நின்ற திருக்கோலம்.

தாயார் : உபயநாச்சியார்

மற்றொரு கோயில்

பெருமாள் : அரவிந்த லோசனன்

தாயார்: கருந்தடங்கண்ணி நாச்சியார்

326. திருப்பேரை *

பேரையில் வாழ் குழைக்காதன்

அரைசு ஆகி வையம் முழுது ஆண்டாலும், இன்பக்
கரை சாரமாட்டார்கள் கண்டீர் - முரைசு ஆகும்
தென் திருப்பேரைப் பதியான் சீர் கேட்டு, நாவில் அவன்
தன் திருப்பேரைப் பதியாதார்.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3359-69 மொத்தம் - 11 பாசுரங்கள்

ஆழ்வார்திருநகரியிலிருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம். வருணபகவானது குருஹத்தி தோஷம் நீங்கிய தலம் இதுவாகும்.

பெருமாள் : மகரநெடுங்குழைக்காதன், நிகரில் முகில் வண்ணன் வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : குழைக்காது வல்லி நாச்சியார்.

327. நத்தம் : தாமிரபரணியாற்றின் வடகரையில் ஸ்ரீ விசயாசனப் பெருமாள். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். நின்ற கோலத்தில் ஆதிசேஷன் குடைபிடிக்க வீற்றிருக்கிறார். தாயார் - வரகுணவல்லி, தீர்த்தம் - அக்னி, தேவபுஷ்கரணி. விமானம் - விஜயகோடி.

328. திருவைகுண்டம் *

வைகுந்தமேய கள்ளப்பிரான்

தார் உடுத்துத் தூசு தலைக்கு அணியும் போதை இவள்
நேர் உடுத்த சிந்தைநிலை அறியேன் - போர் உடுத்த
பாவை குந்தம் பண்டு ஒசித்தான் பச்சைத் துழாய் நாடும்
சீ வைகுந்தம் பாடும், தெளிந்து

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3571,3575 -2 பாசுரங்கள்

திருநெல்வேலி - திருச்செந்தூர்ச் சாலையில் உள்ள திவ்யதேசம். ஆதிசேஷன் குடைபிடிக்கத் திருமால் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். கிழக்கே திருமுகமண்டலம். சோமுகாசுரனிடமிருந்து இறைவன் நான்மறைகளை மீட்டுப் பிரமனிடம் அளித்த திருத்தலம். மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்த இடம்.

பெருமாள்: ஸ்ரீ வைகுந்த நாதன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : வைகுந்தவல்லி, பூதேவி

தேனி மாவட்டத் திருத்தலங்கள் - 7

329. உப்பார்பட்டி: ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

330. கங்குவார்பட்டி : லெட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்.

331. கோட்டூர் : ஸ்ரீ கோபாலகிருஷ்ணப் பெருமாள் கோயில்.

332. சீலையான்பட்டி: ஸ்ரீ வேணுகோபால சுவாமிகள் கோயில்.

333. தாமரைக்குளம் : ஸ்ரீ லெட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்.

334. பெரிய குளம்: ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

335. மேல் மங்கலம் : பள்ளிகொண்ட ரெங்கநாதர் கோயில்.

நாகை மாவட்டத் திருத்தலங்கள் - 33

336. ஆக்கூர் : விஷ்ணு கோயில். ராஜகோபாலன் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காணப்படுகின்றார். குமுததீர்த்தம். வில்வமரம் - தலவிருட்சம்.

337. காட்டுமன்னார்கோவில் (உடையார்கோவில்): வீரநாராயணப் பெருமாள் - செங்கமலவல்லித் தாயார். வேததீர்த்தம்.

338. கீழ்சட்டநாதபுரம் (சீர்காழி): கண்ணன் கோயில் என்று அழைக்கப் படுகிறது. ஸ்ரீ கோபால கிருஷ்ணன் நின்ற கோலத்தில் வலது கரத்தில் சாட்டையைக் கொண்டும், இடது கரம் பசுவின் மேல் வைத்துக் கொண்டும், கிழக்கு நோக்கிக் காட்சி தருகிறார். தீர்த்தம் - தடமலர்ப் பொய்கை.

339. கீழச்சாலை(சீர்காழி) : தெய்வ நாயகப் பெருமாள் பூமிதேவியுடன் நின்ற திருக்கோலம். தீர்த்தம் - சோபன புஷ்கரணி, சோபன விமானம்.

340. கொண்டல் : வள்ளுவக்குடிக்கு மேற்கில் கொண்டல் வண்ணப் பெருமாள் கோயில்.

341. சிக்கல் : கோலவாமனர் திருக்கோயில்.

342. திருஇந்தளூர் *

இந்தளூர் மருவினியமைந்தன்

நாடுதும் வா, நெஞ்சமே! நாராயணன் பதிகள்,
கூடுதும் வா, மெய்யாடியார் கூட்டங்கள்; சூடுதும் வா,
வீதி இந்தளத்து அகிலின் வீசு புகை வாசம் எழும்
ஆதி இந்தளூரான் அடி.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1328-1337, 2674(126)
மொத்தம் : 11 பாசுரங்கள்

மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். சயனத் திருக்கோலத்தில் 4 புஜங்கள் உள்ள மூர்த்தி. தலை மாட்டில் காவேரித் தாயாரும், கால் மாட்டில் கங்கைத் தாயாரும் அமர்ந்துள்ளனர். ஐப்பசி மாதம் கடைமுழுக்கு, முடவன் முழுக்கு, இங்கு சிறப்பு.

பெருமாள் : பரிமள ரங்கநாதன்
தாயார் : பரிமள ரங்கநாயகி, புண்டரீகவல்லி

343. திருச்சிறுபுலியூர் *

புலியூர் அருமாகடல்

ஆமருவி மேய்த்த அரங்கர் எதிர் ஆர் நிற்பார்-
தாம் மருவி வாணனைத் தோள் சாய்த்த நாள், சேமம்
உறுபுலி ஊர் வன் தோல் உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேல் சென்று?

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்: 1628-37 -10 பாசுரங்கள்

மாயவரம் திருவாரூர்ச் சாலையில் கொல்லுமாங்குடியை அடுத்து தெற்கே திருமுக மண்டலம். அனந்தனுக்குக் கருடனிடமிருந்து அபயமளித்த ஸ்தலம். வியாக்ரபாதர் இங்கிருந்துதான் வைகுந்தம் சென்றடைந்தார்.

பெருமாள் : அருள்மாகடல், சலசயனப்பெருமாள்.
புஜங்க சயனம்.

தாயார் : திருமகள் நாச்சியார்.

344. திருச்சித்ர கூடம் (சிதம்பரம்) *

தில்லை கோவிந்தராஜன்

அடியால் உலகு எல்லாம் அன்று அளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியேல், நெஞ்சே! கொடியது ஆய
குத்திரகூடு அங்கி கொளுந்தா முன், கோவிந்தன்
சித்திரக்கூடம் கருதிச் செல்.

மங்களாசாசனம்

குலசேகராழ்வார்: 741-751

திருமங்கையாழ்வார் : 1158-1177, 2674(124)

மொத்தம் : 32 பாசுரங்கள்

கிழக்கே திருமுகமண்டலம். நடராஜர் கர்ப்பக்கிருஹத்தில் சிதம்பர ரகஸ்யம் மூடிவைக்கப்பட்டு ஸேவார்த்திகளுக்குக் காட்டப்பட்டு வருகிறது. பாணினி சிவன் ஆடும் ஆனந்த தாண்டவத்தைக் கண்டு வியாகரணம் செய்த இடம். உலகில் உள்ள எல்லாவிதமான நடனங்களையும் சிற்பச் சாலையில் காணலாம்.

பெருமாள் : கோவிந்தராஜன் - போகசயனம்

தாயார் : புண்டரீகவல்லி.

345. திருக்காழிச்சீ ராம விண்ணகரம் *

விண்ணகர்க்கா விக்ரமன்

செல்லும் தோறும் உயிர்ப்பின் செல்லும் இருவினையை
வெல்லும் உபாயம் விரும்புவீர் ! தொல் அரங்கர்
சீ ராம விண்ணகரம் சேர்மின்; பின் மீளாத
ஊர் ஆம் அ விண்ணகரம் உண்டு

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : -1178-1187 -10 பாசுரங்கள்.

கிழக்கே திருமுகமண்டலம். பிரம்மாவின் ஆணவத்தை ரோமச முனிவர் நீக்கிய தலம். இங்கு பெருமாள் இடது காலைத் தூக்கி விண்ணை

அளக்கின்றார். திருமங்கையாழ்வார், திருஞானசம்பந்தரை வாதில் வென்று வெற்றி வேலைப் பரிசாக பெற்ற தலம் என்று கூறப்படுகிறது. மணவாள மாமுனிகள் மங்களாசாஸனம் பெற்ற தலம்.

பெருமாள்: த்ரிவிக்ரமன்.
நின்ற திருக்கோலம்.

தாயார்: லோக நாயகி, மட்டவிழ்குழலி.

346. தலைச்சங்க நாண்மதியம் *

சங்க நாண்மதிய வெண்சுடர்

செப்புங்கால், ஆதவனும் திங்களும், வானும், தரையும்
அப்பும், காலும், கனலும், ஆய் நின்றான்-கைப்பால்
அலைச் சங்கம் ஏந்தும் அணி அரங்கத்து அம்மான்,
தலைச் சங்கநாண் மதியத்தான்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1736, 2674 (134) -2 பாசுரங்கள்

ஆக்கூர்-சீர்காழிச் சாலையில் அமைந்த திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். ராமானுஜரின் முயற்சியால் இக்கோயில் புதுப் பிக்கப்பட்டுத் தாயார் சந்நிதி கட்டப்பட்டது.

பெருமாள்: நாண்மதியப் பெருமாள், வெண்சுடர்ப் பெருமாள்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : தலைச்சங்க நாச்சியார்.

347. திருக்கண்ண மங்கை *

கண்ணமங்கை பக்தவத்சலம்

கருத்தினால், வாக்கினால், நான் மறையும் காணா
ஒருத்தனை, நீ நெஞ்சே! உணரில் - பெருத்த முகில்
வண்ணம்; அம் கை, கண், கால், வனசம்; திரு அரங்கம்,
கண்ணமங்கை, ஊர் - என்று காண்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1638-47, 1848,2008,2673(71)
2674(116)

மொத்தம் : 14 பாசுரங்கள்.

கும்பகோணம்-திருவாரூர்ச் சாலையில் குடவாசலை அடுத்து அமைந்த திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். நாரத முனிகளின் சீடரான திருக்கண்ண மங்கையாண்டான் அவதாரத் தலம். தாயார் சந்நிதியில் ஒரு தேன் கூடு போன்ற அமைப்புக்குத் தினந்தோறும் பூஜை நடக்கிறது. லக்ஷ்மி தவம் செய்ததால் லக்ஷ்மி வனம் என்றும் கூறுவர்.

பெருமாள்: பக்தவத்ஸலப் பெருமாள்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : அபிஷேகவல்லி.

348. திருக்கண்ணபுரம் *

கண்ணபுரக் குடில் மன்னன்

பேறு தரினும்; பிறப்பு, இறப்பு, நோய், மூப்பு
வேறு தரினும்; விடேன் கண்டாய் - ஏறுநீர்
வண்ண புரத்தாய்! என் மனம் புகுந்தாய்! வைகுந்தா!
கண்ணபுரத்தாய்! உன் கழல்.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 71

ஆண்டாள் : 535

குலசேகராழ்வார் :719-729

திருமங்கையாழ்வார்: 1648-1747, 2067, 2078, 2673(72)
2674(90,133)

நம்மாழ்வார் : 3656-3666

மொத்தம்-128 பாசுரங்கள்

நாகப்பட்டினம் - நன்னிலம் சாலையில் திருப்புகலூருக்கு அருகில் உள்ள திவ்யதேசம். திருமங்கை ஆழ்வாருக்குத் திருமந்திர உபதேசம் செய்த தலம். அபயஹஸ்தத்துக்குப் பதிலாக வரதஹஸ்தம் விளங்குகிறது. ப்ரயோகச் சக்ரம். கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள்: நீலமேகப் பெருமாள், சௌரிராஜன்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : கண்ணபுர நாயகி

349. திருநகரி (திருவாலி) *

வயலாலியுள் மணவாளன்

கழன்று போம் வாயுவினைக் கட்டாமல், தீர்த்தம்
உழன்று போய் ஆடாமல் , உய்ந்தேன்-அழன்று
பொரு வாலி காலன், பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து.

மங்களாசாசனம்

குலசேகராழ்வார் : 725

திருமங்கையாழ்வார்: 1078,1188-1217,1329,1519, 1733, 1735, 1850, 2014, 2027, 2063, 2673 (71), 2674(115)

மொத்தம் : 42 பாசுரங்கள்

சீர்காழி-திருவெண்காடு சாலையில் அமைந்த திவ்யதேசம். திருவாலி. மேற்கே திருமுக மண்டலம். இங்கு திருமங்கையாழ்வாரின் தேவியான குமுதவல்லி நாச்சியார் வளர்க்கப்பட்ட இடம். கல்யாண கோலத்தில் பெருமாள் ஆழ்வாருக்குக் காட்சி கொடுத்ததால் இவரைக் கல்யாண ரெங்கநாதர் என்று கூறுவர்.

பெருமாள் : லக்ஷ்மி நரஸிம்மர். வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : அம்ருதகடவல்லி.

350. திருநகரி : திருவாலியிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது. மேற்கே திருமுகமண்டலம். திருமங்கையாழ்வார் அவதாரத்தலம். ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

பெருமாள்: வேதராஜன் - வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : அம்ருதவல்லி.

351. திருவழுந்தூர் *

அழுந்தூர் ஆமருவியப்பன்

அடியாராய் வாழ்மின் - அறிவு இலாப் பேய்காள் !-
செடி ஆர் வினை அனைத்தும் தீரும் : முடிவில்
செழுந் தூரத்தான் எனினும், செங்கண்மால், எங்கள்
அழுந்தூர் அத்தன், அணியன் ஆம்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1588-1627, 1854, 2066, 2077,
2673(72), 2674(123)

மொத்தம் : 45 பாசுரங்கள்

மயிலாடுதுறை - குத்தாலம் பேருந்துச் சாலையில் சற்றுத் தொலைவில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திரு முகமண்டலம். பெருமாளின் இடதுபுறம் கருடாழ்வாரும், வலதுபுறம் பிரகலாதாழ் வானும் காட்சி தருகின்றனர். க்ம்பர் அவதாரத்தலம். ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்ததலம்.

பெருமாள் : ஆமருவியப்பன் - தேவாதிராஜன்
நின்ற திருக்கோலம்.

தாயார் : செங்கமலவல்லி.

352. திருநாகை *

அணி நாகை அழகரசன்

சேர்ந்து உனக்குக் குற்றேவல் செய்திலன் ; என் சிந்தையில் நீ
ஆர்ந்ததற்கு ஒர் கைம்மாறு அறிகிலேன் - பூந்து வரை
மன்னா! கை ஆழி வலவா! வலம்புரியாய்!
தென் நாகையாய்! -அருளிச் செய்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1758-67 -10 பாசுரங்கள்

கிழக்கே திருமுகமண்டலம். அஷ்டபுஜ நரசிம்மரின் வடிவம் சிறப்புடையது. குழந்தை துருவனுக்குத் தாயாகவும், பிரகலாதனுக்குத் தந்தையாகவும் திகழும் திவ்யதேசம் இது.

பெருமாள் : நீலமேகப் பெருமாள் - நின்ற திருக்கோலம்.

தாயார் : சௌந்தர்யவல்லி.

353. திருஅரிமேய விண்ணகரம் *

அரிமேய விண்ணகர்க் குடக்கூத்தன்

வாழும் அடியார், மட நெஞ்சே! நம் அளவோ?
தாழும் சடையோன், சதுமுகத்தோன், பாழிக்

கரிமேய விண்ணகரக் காவலோன், கண்டாய்-
அரிமேய விண்ணகரத்தார்க்கு

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1238-1247-10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். குடமாடுங் கூத்தர் கோயில் என்றும் வழங்கப்படுகிறது. கிழக்கே திருமுகமண்டலம். சதுர்புஜ கோபாலன் வடிவம் சிறப்புடையது. கருடஸேவை மிகவிசேஷம் பெருமாளுக்குத் தைலக்காப்பு அணிவிக்கப்படுகிறது.

பெருமாள் : குடமாடுங் கூத்தன் (வீற்றிருந்த திருக்கோலம்)

தாயார் : அம்ருதகடவல்லி.

354. திருக்காவளம்பாடி *

காவளம்பாடி கோபால கண்ணன்

செப்பேன் மனிதருக்கு என் செஞ்சொல் - தமிழ் மாலை;
கைப்பேன் பிற தெய்வம் காண்பாரை ; எப்போதும்
காவளம்பாடித் திருமால் கால் - தாமரை தொழுது
நா வளம் பாடித் திரிவேன், நான்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1298-1307 -10 பாசுரங்கள்

வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகில் உள்ள திவ்யதேசம் கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : கோபாலகிருஷ்ணன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : மடவரல் மங்கை

355. திருச்செம்பொன் செய் கோயில் *

செம்பொன்செய் கோயில் பேரருளாளன்

ஊர்வேன் மடலை; ஒழிவேன் மடம் நாணம் ;
சேர்வேன் கரிய திருமாலை- பார் அறிய
அம்பொன் செய் கோயில் அரங்கன் அணி நாங்கூர்ச்
செம் பொன் செய் கோயிலினில் சென்று.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1268 - 1277 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள தலம் . கிழக்கே திருமுக மண்டலம். ராவண சம்ஹாரத்துக்குப் பின்னர் ராமன் தங்கிச் சென்ற தலம்.

பெருமாள் : பேரருளாளன் - நின்றத் திருக்கோலம்.

தாயார் : அல்லி மாமலர் நாச்சியார்.

356. திருத்தெற்றியம்பலம் *

தெற்றியம்பலச் செங்கண்மால்

சென்றது காலம் ; திரை, நரை, மூப்பு, ஆன, இனி,
என்று கொல் சாவு? அறியேன்- என்நெஞ்சே !-கன்றால்
உருத்து எற்றி அம் பலத்தை ஒர் விளவின் வீழ்ந்தான்
திருத் தெற்றியம்பலத்தைச் சேர்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1278-87 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். பள்ளி கொண்ட பெருமாள் என்ற பெயரால் அழைக்கின்றனர். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : செங்கண்மால்

தாயார் : செங்கமலவல்லி

357. திருத்தேவனார் தொகை *

தேவனார் தொகைத் தெய்வநாயகன்

ஆர்க்கும் வலம்புரியால், அண்டமும், எண்திசையும்
கார்க் கடலும், வெற்பும், கலங்கினவால்- சீர்க்கும்
திருத்தேவனார் தொகை மால் செய்வாய் வைத்து ஊதத்
தருத் தேவனார் தொகையும் சாய்ந்து

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1248-57 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கு திருமுக மண்டலம். இங்கு தேவர்கள் கூடிப் பேசியதாக வரலாறு. அதனால் தான் தேவனார் தொகை எனப் பெயர் பெற்றது.

பெருமாள் : தெய்வநாயகன்- நின்ற திருக்கோலம்.

தாயார் : கடல் மகள் நாச்சியார்.

358. திருப்பார்த்தன் பள்ளி *

பார்த்தன் பள்ளித் தாமரையாள் கேள்வன்

ஒத்து அமரர் ஏத்தும் ஒளி விசும்பும், பாற்கடலும்,
இத்தலத்தில் காண்பு அரிய என் நெஞ்சே! சித்து உணர்ந்த
தீர்த்தன் பள்ளிக்கு இருந்து செப்ப வெளி நின்றானைப்
பார்த்தன் பள்ளிக்குள் பணி

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்:1318-27 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். மேற்கே திருமுக மண்டலம். சங்கு, சக்கரத்துடன் கோலவல்வில்ராமன் உற்சவமூர்த்தி கண்டு தரிசிக்கத் தக்கதாகும். இங்கு அர்ச்சுனனுக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

பெருமாள் : தாமரையாள் கேள்வன். நின்ற திருக்கோலம்.

தாயார் : தாமரை நாயகி.

359. திருவெள்ளக்குளம் *

வெள்ளக்குள கண்ணநாரணன்

நான் அடிமை செய்ய, விடாய் நான் ஆனேன் ; எம் பெருமான்
தான் அடிமை கொள்ள விடாய் தான் ஆனான் ; ஆனதற்பின்,
வெள்ளக் குளத்தே விடாய் இருவரும் தணிந்தோம்,
உள்ளம் குளம், தேனை, ஒத்து.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1308-17 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். தென் திருப்பதி என்று போற்றப்படுகிறது. சுவேதன் என்ற அரசனுக்கு நீண்ட ஆயுள் அளித்த தலம் இதுவாகும். இத்தல தீர்த்தத்தில் நீராடித் தரிசிப்பவருக்குக் கொலைபாவமும், நவக்கிரகத் தோஷங்களும் நீங்கும்.

பெருமாள் : ஸ்ரீநிவாசன். நின்ற திருக்கோலம்.

தாயார் : அலர்மேல்மங்கை

360. திருமணிக்கூடம் *

திருமணிக்கூட நாயகன்

சேராது முன் செய்த தீவினை; பின் செய்வதுவும்
வாராது, இனி ; நீ-மட நெஞ்சே! - நேராக்
குருமணிக் கூடத்து ஆனைக் கொம்பு பறித்தானை,
திருமணிக்கூடத்தானை, செப்பு.

மங்களாசாசனம்

1288-97 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள்: வரதராஜப் பெருமாள். நின்ற திருக்கோலம்.
தாயார் : திருமாமகள் நாச்சியார்

361. திருமணிமாடக் கோயில் *

மணிமாடக் கோயில் நாரணன்

சீரே தரும் கதியில் சேருகைக்கு நான் உன்னை
நேரே வணங்கினேன், நெஞ்சே! நீ பாரில்
அணி மாடக் கோயில் அரங்கனார் நாங்கூர்
மணி மாடக் கோயில் வணங்கு.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1218-27, 1850, 2674(132)
மொத்தம் : 12 பாசுரங்கள்

திருநாங்கூரிலேயே உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். இங்கு கோட்டியூர் நம்பி எழுந்தருளியிருப்பது சிறப்பு.

பெருமாள் : நாராயணன் - வீற்றிருந்த திருக்கோலம்
தாயார் : புண்டரீகவல்லித் தாயார்.

362. திருவண் புருடோத்தமம் *

புருடோத்தமப் புருடோத்தமன்

சாய்ந்த திருஅரங்கம், தன் வேங்கடம், குடந்தை,
ஏய்ந்த திருமாலிருஞ் சோலை பூந்துவரை,

வண்புரு டோத்தமம் ஆம் - வானவர்க்கும் வானவன் ஆம்
ஒண் புரு டோத்தமன் தன் ஊர்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்: 1258-67 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : வைகுந்த நாதன் தாயார் : வைகுந்தவல்லித் தாயார்

363. திருவைகுந்த விண்ணகரம் *

வைகுந்த விண்ணகர்நாதன்

வணங்கேன், பிற தெய்வம், மால் அடியார் அல்லாக்
குணங் கேடர் தங்களுடன் கூடேன், இணங்கி நின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்துவேன்; ஈது அன்றோ,
வைகுந்த விண்ணகர வாழ்வு

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1228-37 -10 பாசுரங்கள்

சீர்காழிக்கு அருகில் உள்ளது. கிழக்கே திருமுகமண்டலம். பாண்டிய நாட்டில் ஸ்ரீ வைகுண்டம், தொண்டை நாட்டில் ஒரு ஸ்ரீ வைகுண்டம், பரமபதத்தில் ஒரு ஸ்ரீ வைகுண்டமும் அமையப் பெற்றுள்ளது சிறப்பாகும்.

பெருமாள் : வைகுந்த நாதன்

தாயார் : வைகுந்தவல்லி

364. நரசிங்கன்பேட்டை : செங்கநல்லூருக்கு 10. கி.மீ தொலைவில் ராமர் - சீதை கோயில்.

365. நீடூர் : (மகிழவனம்) கொள்ளிடக்கரையின் தென்கரை. லெட்சுமித் தாயார். லெட்சுமி நாராயணப் பெருமாள் நின்ற திருக்கோலம். செங்கழு நீர் ஓடைத் தீர்த்தம்.

366. மயிலாடுதுறை : 5 நிலை ராஜகோபுரம். சுகந்தவனநாதன் - சுகந்தவனநாயகித் தாயார். கால்மாட்டில் கங்கை, தலைமாட்டில் காவிரியும் காட்சி தருகின்றார்.

367. ராதாநல்லூர் : 3 இராஜ கோபுரத்துடன் மேற்கு நோக்கிய தாமரை யாள் கேள்வன் - பூமிதேவியுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார். தீர்த்தம் - சங்கசரஸ்

368. வேள்விக்குடி : வரதராஜப் பெருமாள் கோயில்.

நாமக்கல் மாவட்டத் திருத்தலங்கள் - 3

369. கொடுமுடி (திருப்பாண்டிகொடுமுடி): வீரநாராயணப் பெருமாள் கோவில்.

370. திருச்செங்கோடு : ஆதிகேசவப் பெருமாள்.

371. நாமக்கல் (நாமகிரி): குடைவரைக் கோயில். மேற்கு நோக்கிய நரசிம்மர். தாயார் - நாமகிரி லெட்சுமி. தீர்த்தம் - நரசிம்ம புஷ்கரணி, சக்கரதீர்த்தம். 18 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சன்னதி சிறப்பு.

புதுக்கோட்டை மாவட்டத் தலங்கள் - 4

372. சாலக்கிராம ஷேத்திரம் : வடமேற்கு ரெங்கநாதர் - லக்ஷ்மி கோவில்.

373. திருநாராயணபுரம்: முசிறிக்கு அருகில் வேதநாராயணப் பெருமாள் - வேதநாயகி கோயில். வேத விமானம், வேததீர்த்தம், காவேரி நதி தெற்கே ஓடுகிறது. தலமரம் - வில்வம். துவஜ ஸ்தம்பத்தில் ஹனுமான் வீற்றிருக்கின்றார். புதுக்கோட்டை-திருப்பதி நெடுஞ் சாலையில் அமைந்துள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம். இது குடைவரைக்கோயில். ஆதிசேஷன் இத்தலத்தைப் பாதுகாப்பதாகக் கூறப்படுகிறது.

பெருமாள் : ஸத்யகிரி நாதன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : உய்யவந்த நாச்சியார்.

374. திருமெய்யம் *

மெய்யத்துறை சத்தியமூர்த்தி

ஆள் ஆய் உனக்கு. அன்பு ஆய் , ஆசை ஆய், நாணிலி ஆய்
வாளா மனைவி என்று வாழ் வேனைக் கேளாய்-
திருமெய்ய மாயா ! - சிலை கால் வளைத்து
வரும் எய்ய, மாயா மதன்

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1090, 1206 , 1524, 1660, 1760,
1852, 2016, 2050, 2674(126)

மொத்தம் : 9 பாசுரங்கள்.

375. விராலிமலை : ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில்.

பெரம்பலூர் மாவட்டத் திருத்தலங்கள் - 2

376. முத்துசேர்வாமடம்(ஜெயங்கொண்ட சோழபுரம்): நெல்லித் தோப்பு பள்ளிகொண்ட பெருமாள் கோயில். ஸ்ரீமந் நாத முனிகள் மங்களாசாசனம் செய்த தலம்.

377. குருவாலப்பர் கோயில்(ஜெயங்கொண்ட சோழபுரம்): திருமகள் பூமிதேவி உடனாய ஸ்ரீவீர நாராயணப் பெருமாள். ஆளவந்தார் முக்தி பெற்ற தலம்.

மதுரை மாவட்டத் திருத்தலங்கள் - 9

378. இடையக்கோட்டை (வேடச்சந்தூர்): நங்கங்கை ஆற்றங்கரையில் ஸ்ரீ திருவேங்கட நாதப்பெருமாள் திருமகள் பூமிதேவி.

379. கரைக்கண்ணி : ஸ்ரீ லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

380. கீழ் மாத்தூர் : சுந்தர மாணிக்கப் பெருமாள் கோயில்.

381. சௌதார் பட்டி : ஸ்ரீ லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

382. திருமாலிருஞ்சோலை *

அணிமாலிரும் சோலை அழகன்

பணிந்தேன் திருமாலை; பாமாலை தாளில்
அணிந்தேன்; அருள் தஞ்சமாகத் துணிந்தேன்
திருமாலிருஞ்சோலை சேர்ந்தேன் ; எனக்கு
வருமால், இருஞ் சோதி வான்.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 71,258, 338-59, 453-62

ஆண்டாள் : 534, 587-96

திருமங்கையாழ்வார் : 1022, 1114, 1329, 1573, 1634,
1760, 1765, 1818-37, 1855, 1969,

2020, 2034, 2673(74), 2674 (125)

பூதத்தாழ்வார் : 2227, 2229, 2235

பேயாழ்வார் : 2342

நம்மாழ்வார் :2886-2918, 3733-34, 3749

மொத்தம் : 128 பாசுரங்கள்

மதுரைக்கு அருகில் உள்ள திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம். இங்கு மூலவர், உற்சவர் 5 ஆயுதங்களுடன் திகழ்கின்றனர். இந்த மலைக்குச் சுற்றுப்புறத்துள்ள மலைகள் பசுவைப் போலவும், இந்த மலை ரிஷபம் போலவும் காட்சியளிப்பதால் வ்ருஷாபாத்ரி என்றும் கூறுவர். க்ஷேத்ரபாலருக்கு ஒரு தனிச் சந்நிதி உண்டு. இராமனுஜர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பெருமாள் : அழகர், கள்ளழகர். நின்ற திருக்கோலம்

தாயார் : சுந்தரவல்லி

383. திருக்கூடல் (மதுரை) *

மதுரைக் கூடலழகன்

வாழ்விப்பான் எண்ணமோ? வல்வினையில் வின்னம் எனை
ஆழ்விப்பான் எண்ணமோ? அஃது உரையாய் - தாழ்வு இலாப்
பாடல் அழகு ஆர் பூவைப் பட்டர் பிரான் கொண்டாடும்
கூடல் அழகா ! -நின் குறிப்பு

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1762

திருமழிசையாழ்வார்: 2420 மொத்தம் : 2 பாசுரங்கள்

கிழக்கே திருமுகமண்டலம். பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய திவ்யதேசம். இங்கு நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

பெருமாள் : கூடலழகர் - வீற்றிருந்த திருக்கோலம்

தாயார் : மதுரவல்லி

384. திருமோகூர் *

மோகூர் காளமேகன்

வாயால் மலர் கோதி வாவி தொறும் மேயுமோ?
மேயாமல் அப்பால் விரையுமோ? மாயன்

திருமோகூர்வாய் இன்று சேருமோ? நாளை
வருமோ? -கூர்வாய் அன்னம், வாழ்ந்து

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 2673(74)
நம்மாழ்வார் : 3667-77 மொத்தம்: 12 பாசுரங்கள்

மதுரையிலிருந்து -திருவாதவூர் செல்லும் பாதையில் உள்ளது. கிழக்கே திருமுகமண்டலம். ஆதிசேஷனுக்கு இங்கு தங்கக் கவசம் சாத்தப்படுவது சிறப்பு

பெருமாள் : காளமேகப் பெருமாள் - நின்ற திருக்கோலம்.
தாயார் : மோகூர் வல்லி

385. பாலையூர் (திருமங்கலம்) : ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள்-பூமிதேவி யுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். மண்டபத்தூண்களில் தசாவதாரத் திருக்காட்சிகளும் கிருஷ்ணலீலைக் காட்சிகளும் இடம்பெற்று உள்ளன.

386. லாலாபுரம் : ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

விருதுநகர் மாவட்டத் திருத்தலங்கள் - 12

387. அருப்புக்கோட்டை: ஸ்ரீ வேணு கோபால சுவாமி கோயில்.

388. இலந்திரை கொண்டான் : ஸ்ரீ லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

389. இராஜபாளையம் : ஸ்ரீ வேட்டை வெங்கடேசப் பெருமாள் கோயில்.

390. கம்பைக்குடி : ஸ்ரீ வேணு கோபால சுவாமி கோயில்.

391. சாத்தூர் : ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில் வைப்பாற்றின் வடகரை. திருமகள் பூமிதேவி உடனாய வெங்கடாசலபதி. தலமரம் - அரசமரம். தீர்த்தம் - வைப்பாறு.

392. சிவகாசி : ஸ்ரீ வெங்கடாசலப் பெருமாள் கோயில்.

393. திருதண்கால் *

திருத்தங்காலுறைப்பன்

மாறுபட வாடை எனும் வன் கால் வன முலை மேல்
ஊறுபட ஊர்ந்த உளைவு எல்லாம் மாற,

திருத்தண்காலூரான் திருத்தண் துழாயின்
மருத்தண் கால் ஊராதோ, வாய்ந்து?

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1399, 2068, 2673(71), 2674(120)

பூதத்தாழ்வார்: 2251 மொத்தம் :5 பாசுரங்கள்

விருதுநகரிலிருந்தும், ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்தும் இங்கு செல்லலாம். கிழக்கே திருமுக மண்டலம். கோயில் குன்றின் மீது உள்ளது. இங்கு கருடாழ்வார் ஸர்ப்பத்துடனும், அம்ருத கலசத்துடனும் காணப்படுகிறார். ஸ்ரீ கிருஷ்ணனின் பௌத்ரன் அநிருத்தன் உஷையை மணந்த ஸ்தலம்.

பெருமாள்: தண்காலப்பன். நின்ற திருக்கோலம்.

தாயார் : செங்கமலத்தாயார்.

394. திருவண்ணாமலை : ஸ்ரீ வில்லிபுத்தூரில் இருந்து 4 கி. மீ தொலைவில் உள்ளது. தென் திருப்பதி எனப்படும். ஸ்ரீநிவாசப் பெருமாள் எழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கம் போல் இங்கும் அரையர் சேவை நடைபெறுகின்றது. இங்குள்ள நூபுரகங்கையில் எந்நாளும் நீர் வந்து கொண்டு இருக்கிறது.

395. திருவில்லிபுத்தூர் *

வில்லி வடதளப்பள்ளியான்

குறித்து ஒருவர் கொண்டாடும் கொள்கைத்தோ - கோதை
நிறத்த ஊர், விண்டுசித்தர் நீடுஊர், பிறப்பு இலி, ஊர்
'தாழ்வு இல; இ புத்தூர் ' என்ற ஐவருக்குத் தான் இரந்தான் ,
வாழ் வில்லிபுத்தூர் வளம்?

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 133

ஆண்டாள் : 549 -2 பாசுரங்கள்

கிழக்கே திருமுகமண்டலம். ஆண்டாளும் , பெரியாழ்வாரும் அவதரித்த தலம். ஆண்டாள் ரெங்கநாதரை மணந்த தலம். ரங்கநாதருக்கு, வலதுபுறம் ஆண்டாளும் இடதுபுறம் பெருமாளும் நிற்பது சிறப்பு. ஸ்ரீரங்கம் போல் இங்கும் அரையர் சேவை நடைபெறுகிறது. தமிழ்நாடு

அரசமுத்திரையில் இடம்பெற்றுள்ளது. இத்திருத்தலக் கோபுரமே ஆகும். ஆண்டாள் கண்டெடுக்கப்பட்ட நந்தவனத்தில் துளசிச் செடி பக்கத்தில் ஆண்டாள் சந்நிதி ஒன்றும் உள்ளது. திருத்தலத்தில் உள்ள முக்குளதீர்த்தம் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதியும் சேரப்பெற்ற புனிதமுடையது.

பெருமாள் : வடபத்ரசாயீ. புஜங்கசயனம்.

தாயார் : ஆண்டாள் (கோதா நாச்சியார்)

396. நத்தம்பட்டி : வரதராஜப் பெருமாள் கோயில்.

397. வாட்ரப்: ஸ்ரீ சேது நாராயணப் பெருமாள் கோயில். ஸ்ரீ அழகிய மணவாளப் பெருமாள் கோயில்.

398. வீர சோழம் : ஸ்ரீ ஹரி சக்கரப் பெருமாள் கோயில்.

விழுப்புரம் மாவட்டத் திருத்தலங்கள் - 22

399. சிங்காவரம் : வராகநதியின் தென்கரை. சிறிய குன்றின்மீது ஸ்ரீரங்க நாயகி உடனாய ரங்கநாதர் சந்நிதி. ராமானுஜர் தரிசனம் செய்த தலம்.

400. சின்னத்திருப்பதி (கஜகிரி): மலைமீது ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் அலர்மேல்மங்கைத் தாயாருடன் காட்சியளிக்கின்றார்.

401. சின்ன சேலம் (கள்ளக்குறிச்சி):பெருமாள் கோயில்.

402. சீவலபூரை : ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில்.

403. திண்டிவனம் : பெருமாள் கோயில்.

404. திருவெண்ணெய் நல்லூர் : பெண்ணையாற்றின் தென்கரையில் 5 நிலை இராஜகோபுரத்துடன் ஸ்ரீ வைகுண்டவாசன் திருமகள் பூமிதேவியுடன் காட்சியளிக்கின்றார். தாயார் ஜனகவல்லி சாண்டில்ய முனிவர் வழிபட்டு பேறு பெற்ற தலம்.

405. திருக்கோவலூர் *

கோவலூர்க் கோலவிக்ரமன்

தாமரையான் ஆதியாய்த் தாவரங்கள் ஈறு ஆன
சேம உயிரும், செகம் அனைத்தும் - பூமடந்தைக்கு

ஆம்கோ, அலாயுதன் பின்னா அவதரித்த
பூங்கோவல் ஆயன் பொருள்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1078, 1138-1147, 1569, 1641, 2057, 2058, 2068, 2673(69),2674(122),

பொய்கையாழ்வார் : 2158, 2167

பூதத்தாழ்வார் : 2251 மொத்தம் : 21 பாசுரங்கள்

விழுப்புரம்-திருவண்ணாமலைச் சாலையில் உள்ள திவ்யதேசம் திரு விக்ரமன் திருவடியை உயரே தூக்கிய நிலை. கிழக்கே திருமுக மண்டலம். வாமன திருவிக்ரம அவதாரத் தலம். முதல் ஆழ்வார்கள் மூவருக்கும் தொடர்புடைய திவ்யதேசம். மகாபலியின் கர்வத்தை அடக்கி ஆட்கொண்ட தலம். பரசுராமர், அகத்தியர் தவம் செய்த திருத்தலம். பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரத்தில் ஒன்று. ஸ்ரீ மணவாள மாமுனிகள் மங்களாசாசனம் செய்த தலம்.

406. திருபுவனை : வரதராஜப் பெருமாள் கோயில். இங்கு தோத்தாத்திரிநாதர் அமர்ந்த கோலத்தில், கிழக்கு நோக்கிப் பூமி தேவியுடன் காட்சித் தருகிறார். தனிச் சந்நிதியில் வரமங்கைத் தாயார்.

407. திருமுண்டீச்சரம் : வைகுண்டநாதப் பெருமாள் கோயில்.

408. திருமுதுகுன்றம் : மாதவப் பெருமாள் கோயில்.

409. திருவரங்கம் : ஸ்ரீரங்கநாதர் - ஸ்ரீரங்கநாயகி. பிநாகினி நதி, சந்திரபுஷ்கரணி, பாண்டவ தீர்த்தம்.

410. தேவபந்தளம் (கள்ளக்குறிச்சி): மணிமுத்தாற்றின் கரையில் சாட்டையுடன் காட்சி தரும் ஸ்ரீ பார்த்தசாரதி திருக்கோயில். நின்ற திருக்கோலம். திரௌபதிக்கு அட்சயபாத்திரம் வழங்கிய பெருமான்.

411. நொச்சலூர் (செஞ்சி): லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

412. பண்ருட்டி : அபயம் காத்த பெருமாள் கோயில். தாயார் - ஸ்ரீதேவி.

413. பரிக்கல் (உளுந்தூர்பேட்டை): அமர்ந்த நிலையிலான ஸ்ரீலெட்சுமி நரசிம்மர் கோயில். தலவிருட்சம் - மகிழமரம். கருடதீர்த்தம் கோமுகி தீர்த்தங்கள்.

414. பாதூர்:(உளுந்தூர் பேட்டை) கருடநதிக்குத் தென்கரையில் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில்.

415. புதுச்சேரி: மிஷன் வீதியில் வரதராஜப் பெருமாள் கோயில்.

416. மேலூர் : உலகளந்த பெருமாள் கோயில். மகாவிஷ்ணு - திருவிக்ரமன் - பூங்கோவல் நாச்சியார். கரவிமானம், லெக்ஷ்மி நாராயணன் கோயில். வரதராஜன், நரசிம்மன் ராமர் - புஷ்பவல்லித் தாயார். கிருஷ்ணதீர்த்தம்.

417. வள்வனூர் : பெண்ணையாற்றின் வடகரையில் ஸ்ரீலெட்சுமி நாராயணர் கோயில். இங்கு லெட்சுமியை இடது தொடையில் அமர்த்தி அணைத்தபடி பெருமாள் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். வேதவல்லித் தாயார்.

418. விளம்பார் (கள்ளக்குறிச்சி) : ஆதிகேசவப் பெருமாள் கோயில். ஆதிகேசவப் பெருமாள் - கோகனாதவல்லி தாயார்.

419. விழுப்புரம்: பெருமாள் கோயில்.

420. வீராமூர் : கரிவரதராஜப் பெருமாள் கோயில்.

வேலூர் மாவட்டத் திருத்தலங்கள் - 16

421. ஆம்பூர் : சீனிவாசப் பெருமாள் கோயில்.

422.ஆற்காடு : ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.

423. கலவை : ஸ்ரீ கரிவரதராஜப் பெருமாள் கோயில்.

424. கரிவேடு: கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோயில்.

425. காங்கேயநல்லூர் : சுந்தரவரதராஜப் பெருமாள் கோயில்.

426. காவேரிப்பாக்கம்: கோட்டை அபய வர்தராஜப் பெருமாள் கோயில்.

427. சக்கர மல்லூர் : சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

428. சேரி : கோதண்ட ராமர் திருக்கோயில்.

429. திருக்கடிகை (சோளிங்கர்) *

கடிகையில் யோகநரஹரி

சீர் அருளால் நம்மைத் திருத்தி, நாம் முன் அறியாக்
கூர் அறிவும் தந்து, அடிமை கொண்டதற்கே, நேரே
ஒரு கடிகையும், மணமே ! உள்ளுகிலாய் -முத்தி
தரு கடிகை மாயவனைத் தான்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1731, 1736, 2673(73)

பேயாழ்வார் : 2342

மொத்தம் : 4 பாசுரங்கள்

500 அடி உயரமுள்ள மலையில் கடிகாசலப் பெருமாள். கிழக்கே திருமுக மண்டலம் தொட்டாசாரியார் அவதாரத்தலம் 74 சிம்மா சனங்களில் இதுவும் ஒன்று 1500 படிகள் மேலே யோக நரசிம்மர் சேவை சாதித் தருள்கிறார். இத்தேசத்தை நினைத்தாலே மோட்சம் சித்திக்கும் என்பது பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கருத்து நாத முனிகள், திருக்கச்சிநம்பி, ஸ்ரீ மணவாள மாமுனிகள், ஸ்ரீ ராமானுஜர் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பெருமாள் : யோக நரசிம்ஹர் - வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : அம்ருதவல்லி

430. துத்திப்பட்டு: (ஆம்பூர்) பாலாற்றின் வடகரை கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜ கோபுரம் பெரும் தேவியார் உடனாய பிந்து மாதவராயப் பெருமாள் கோயில். தலவிருட்சம் - மகிழமரம்.

431. திருப்பாற் கடல் : அரங்கநாதர் கோயில்.

432. திருப்பத்தூர் : ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில்.

433. பள்ளிக் கொண்டா : பாலாற்றின் கரையில் ஸ்ரீ உத்திர ரங்கநாதர் திருக்கோயில் கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜகோபுரம் தாயார் ரங்கநாயகி. தலவிருட்சம்-பாதிரி. தீர்த்தம் - வியாச தீர்த்தம், சம்பாதி தீர்த்தம், பாலாறு.

434. வாணியம்பாடி : (பெரியபேட்டை) அழகிய பெருமாள் கோயில்.

435. வாலாஜா பேட்டை : வேணு கோபாலசுவாமி கோயில்.

436. வாழைப் பந்தல்: ஸ்ரீ கஜேந்திர வரதராஜப் பெருமாள் கோயில்.

பெரியாழ்வார் கூறும் எண்வகை மலர்களாவன

செண்பகம்	புன்னை
மல்லிகை	குருக்கத்தி
பாதிரி	இருவாட்சி
செங்கழுநீர்	கருமுகை

மாநிலத் திருத்தலங்கள்

கேரள மாநிலத் திருத்தலங்கள் - 56

437. அம்பலப்புழை : கொல்லத்திலிருந்து 56 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் கிருஷ்ணன் கோயில் பிரபலமானது.

438. ஆலப்புழை: பெருமாள்கோயில். இவ்வூரின் 2 கி.மீ. தொலைவில் திருவம்பாடியில் கிருஷ்ணன் கோயில்.

439. ஆலவாய் : எர்ணாகுளத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் பெருமாள், கிருஷ்ணன் கோயில்கள்.

440. இருஞ்சாலகுடி: திருச்சூரிலிருந்து 32 கி.மீ. தொலைவில் விஷ்ணு மூர்த்தி கோயில்.

441. எர்ணாகுளம் : கொச்சியிலிருநது 6 கி.மீ. தொலைவில் உள்ள பெருமாள் கோயில்.

442. கல்பாத்தி : பழைய கல்பாத்தியில் லெக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயில். பக்கத்தில் கோவிந்தராஜபுரம் வரதராஜர் கோயில்.

443. திருக்கண்டியூர் : கோட்டக்கல் அருகில் உள்ள மஹாவிஷ்ணு கோயில்.

444. கண்ணனூர் : வடக்கே 21 கி.மீ தொலைவில் கிருஷ்ணன் கோயில் - சமுத்திர தீர்த்தம்.

445. திருக்கடித்தானம் *

கடித்தானத் தத்துவ நாரணன்

காண விரும்பும், என் கண்; கையும் தொழ விரும்பும் ;
பூண விரும்பும், என் தன் புன் தலைதான் - வாணன்
திருக்கு அடித்தான், நத்தான், திகிரியான், தண்டான்,
திருக்கடித்தானத்தானைச் சென்று.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3502-12 -11 பாசுரங்கள்

கோட்டயத்திற்கு அருகில் செங்கணாச்சேரிக்கு அருகில் உள்ள திவ்யதேசம். மூன்று கடி நகரங்களில் இதுவும் ஒன்று. பஞ்ச பாண்டவர்களில் சகாதேவன் கட்டி முடித்த திருத்தலம். நினைத்த மாத்திரத்தில் மோட்சம் தரும் திவ்யதேசம். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : அற்புத நாராயணன். நின்ற திருக்கோலம்.

தாயார் : கற்பகவல்லி

446. காச்சாம்குறிச்சி : கொல்லங்கோட்டிலிருந்து 4 கி.மீ. தொலைவில் பெருமாள் கோயில் - ராமச்சந்திர மூர்த்தி.

447. காஞ்சரங்காடு : 2 கி.மீ தொலைவில் கிருஷ்ணன்கோயில்.

448. காசர் கோடு : பையனூர் வடக்கே 52 கி.மீ வெங்கடரமண சுவாமிகோயில், இங்கு ஆஞ்சநேயர், கருடாழ்வார் உள்ளனர்.

449. குருவாயூர் : குருவாயூரப்பன் கோயில் பட்டாத்திரிக்கு நாராயணீயம் அருளியதலம். நாராயணீயம் சொல்லும்போது பட்டாத்ரிக்கு அந்தந்தக் கட்டத்தில் அந்தந்தக் காட்சியைப் பகவான் நேரில் காட்டியதாகக் கூறப்படுகிறது.

450. கும்பளா : (பாலக்காடு) வடக்கே 12 கி.மீ தொலைவில் பாலகோபால கிஷ்ணன் கோயில்.

451. திருக்குலசேகரபுரம் : கொடுங்களூரிலிருந்து 3 கி.மீ தொலைவில் மகாவிஷ்ணு கோயில்.

452. கொல்லம் : திருவனந்தபுரத்திலிருந்து புகைவண்டிப் பாதையின் வடக்கே 65 கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு பெருமாள் கோயில் உள்ளது.

453. கொச்சி : கிருஷ்ணர் கோயில்.

454. கொட்டாரக்கரை: கொல்லத்திலிருந்து 25 கி.மீ தொலைவில் உள்ள ஊரில் அற்புதநாராயணர் கோயில். சுவாமி - அற்புதநாராயணர். அம்மன் - கற்பகவல்லித் தாயார். விமானம் - புண்யகோடி. தீர்த்தம் - பம்பாநதி, பூமிதீர்த்தம் ஆகியன உள்ளன.

455. கொடும்பு : பாலக்காட்டுக்கு 5 கி.மீ தொலைவில் வரதராஜப் பெருமாள் கோயில்.

456. கொடுவாயூர் (பாலக்காடு): கிருஷ்ணன் கோயில்.

457. கோழிக்கோடு : திரூரிலிருந்து வடக்கே 41 கி.மீ தொலைவில் மஹாவிஷ்ணு கோயில்.

458. செருகுன்று: ராகவபுரத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் கிருஷ்ணன் கோயில்.

459. தத்தமங்கலம் : பாலக்காடுக்கு அருகில் உள்ள கிருஷ்ணன் கோயில்கள்.

460. துறவூர் : ஆலப்புழையிலிருந்து 35 கி.மீ தொலைவில் நரசிம்ம சுவாமி கோயில் அருகில் தெக்கப்பன், வடக்கப்பன் என்று இரு பெருமாள் கோயில்கள் உள்ளன.

461. திருச்சூர் : சோரனூருக்குத் தெற்கே 32 கி.மீ தொலைவில் சத்திய நாராயணன், விஷ்ணு கோயில்கள்.

462. தொடுபுழா: மூவாட்டுப்புழா அருகில் கிருஷ்ணன் கோயில்.

463. நூறணி : பாலக்காடுக்கு 2 கி.மீ தொலைவில் சுந்தரராஜப் பெருமாள் கோயில்.

464. பழையன்னூர்: திருச்சூரிலிருந்து 35 கி.மீ தொலைவில் மஹாவிஷ்ணு கோயில்.

465. பட்டாம்பி : வித்துவக்கோட்டுக்குத் தெற்கே 1 கி.மீ தொலைவில் உய்யவந்த பெருமாள் கோயில். பெருமாள் உய்யவந்த பெருமாள் - வித்துவக்கோட்டுவல்லி. விமானம் - தத்வகாஞ்சன விமானம். தீர்த்தம் - சக்ர தீர்த்தம்.

466. பறளி(பாலக்காடு): அலர்மேலு சமேத வெங்கடாசலபதிக் கோயில்.

467. திருப்பரையார் : திருச்சூரிலிருந்து 24 கி.மீ தொலைவில் ராமர் கோயில்.

468. திருப்பணிதுரா (கொச்சி): கோபாலகிருஷ்ணன் கோயில்.

469. புரக்காடு : ஆலப்புழையிலிருந்து 16 கி.மீ தொலைவில் உள்ள இவ்வூரில் வேணுகோபாலசுவாமி திருக்கோவில். தீர்த்தம் - நாககன்யா, சேஷதீர்த்தம்.

470. பொங்கணம் : வடமேற்கில் 6 கி.மீ தொலைவில் ராமர் கோயில்.

471. மழூர்: கிருஷ்ணர் கோயில்.

472. மட்டாஞ்சேரி(கொச்சி): வெங்கடாசலபதிக் கோயில்.

473. மாவேலிக்கரை : நவநீதகிருஷ்ணன் கோயில்.

474. மீன்குளம் : ஒலையம்பாடி வழி. கிருஷ்ணன் கோயில்.

475. வர்க்கலா : ஜனார்த்தனப் பெருமாள் கோயில்.

476. திருவல்லவாழ் *

வல்லவாழ் கோலப்பிரான்

உலகத்தார்க்கு எஞ்ஞான்றும் உளன் ஆய், உகவாது,
இகந்தார்க்கு எஞ்ஞான்றும் இலன் ஆய், திகழ்ந்திட்டு,
அரு அல்ல, வாழ் உருவம் அல்ல, என நின்றான்-
திரு வல்லவாழ் உறையும் தே.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்: 1808-17,2674(118)
நம்மாழ்வார் : 3205-15
மொத்தம்: 22 பாசுரங்கள்

கோட்டயத்திற்கு அருகில் திருவல்லாவைச் சூழ்ந்துள்ள ஆறு திவ்ய தேசங்களில் இதுவும் ஒன்று. ஸ்ரீவல்லப க்ஷேத்திரம் என்னும் இத் திருப்பதியில் மார்கழி, திருவாதிரை, சித்திரை வருடப்பிறப்பு ஆகிய நாட்களில் மட்டுமே முன்பு பெண்கள் வழிபட அனுமதிக்கப்பட்டனர். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் அவ்வப்போது கதகளி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அதன்மூலம் எம் பெருமானிடம் குழந்தைப்பேற்றுக்கு பிரார்த்தனை செய்து கொள்வார்கள். இங்கு விபூதியும், சந்தனமும் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. இங்குள்ள 50 அடி கல்தூண் சிறப்பு வாய்ந்தது. கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : கோலப் பிரான், திருவாழ்மார்பன்.
நின்ற திருக்கோலம்

தாயார் : செல்வத் திருக்கொழுந்து நாச்சியார்

477. வடக்காஞ்சேரி : திருச்சூரிலிருந்து 10 கி.மீ தொலைவில் லக்ஷ்மி நாராயணன் கோயில்.

478. திருவம்பாடி : திருச்சூரிலிருந்து 1 கி.மீ தொலைவில் பாலகிருஷ்ணன் கோயிலும் பூகுன்னம் என்ற இடத்தில் ராமர் கோயிலும் உள்ளது. திருக்சூரிலிருந்து 3 கி.மீ தொலைவில் உள்ள ஐயன்தோள் என்ற இடத்தில் கிருஷ்ணன் கோயில் உள்ளது.

479. திருவார்ப்பு: கோட்டயத்திற்கு அருகில் உள்ள இவ்வூரில் சந்தான கோபாலகிருஷ்ணன் கோயில்.

480. வைக்கம் (ஆலப்புழை): கிருஷ்ணன்கோயில்.

481. வில்வாத்ரிமலை: திருச்சூரிலிருந்து 45 கி.மீ தொலைவில் விஷ்ணுகோயில். இங்கு ராமர் லஷ்மணர்களாக ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஆராதிக்கிறார்கள். தீர்த்தம் - ராமதீர்த்தம்.

482. திருவெண்காடு : தெல்லிச்சேரி அருகில் உள்ள, ராமஸ்வாமி, திருவெண்காட்டுப் பெருமாள் என்ற பெயர்கள் கொண்டாலும் மூர்த்தி சதுர்புஜ விஷ்ணு அங்கிருந்து 8 கி.மீ தொலைவில் மற்றொரு விஷ்ணு கோயில் உள்ளது.

483. திருக்காட்கரை *

திருக்காட்கரை யென்னப்பன்

மாற்கமும், தாம்தாம் வழிபடும் தெய்வமும் ,
ஏற்க உரைப்பார் சொல் எண்ணாதே, தோல் -குரம்பை
நாள் கரையா முன்னமே - நல் நெஞ்சே ! -நாரணன் ஆம்
காட் கரை யாற்கு ஆள் ஆகாய் காண்.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3612-22 -11 பாசுரங்கள்

ஆல்வாய் - திருச்சூர் தொடர்வண்டிப் பாதையில் உள்ள இரு ஞாலக் குடா புகைவண்டி நிலையத்துக்கு அருகில் உள்ள திவ்யதேசம். மலையாளத்தில் இப்பெருமானை வாமனமூர்த்தி என்று அழைக்கின்றனர். தெற்கே திருமுக மண்டலம். ஓணம் பண்டிகையன்று இக்கோயிலில் பெரிய உத்ஸவம் நடைபெறுகிறது.

பெருமாள் : காட்கரையப்பன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : பெருஞ்செல்வ நாயகி

484. திருச் செங்குன்றூர் *

செங்குன்று இமையவரப்பன்

வரவேண்டும் கண்டாய், மதி கலங்கி விக்குள்
பெரவே உயிர் மாயும் போழ்து-பர மேட்டி !
செங்குன்றூர் மாலே ! சிறைப் பறவை மேல் கனகப்
பைங் குன்று ஊர் கார் போல் பறந்து.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3480-90 -11 பாசுரங்கள்

எர்ணாகுளத்திலிருந்து-செங்கண்ணூர் தொடர்வண்டிப் பாதையில் உள்ள திவ்யதேசம். பஞ்ச பாண்டவர்களில் தருமன் பூஜித்த தலம். கோயிலின் சுற்றுப் பிராகாரத்தில் வர்ணம் கலந்த தீபங்கள் அகல்விளக்கு போல் வரிசை வரிசையாக அமைந்துள்ளது சிறப்பாகும். மேற்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : இமயவரப்பன். நின்ற திருக்கோலம்.
தாயார் : செங்கமலவல்லி.

485. திருநாவாய் *

நாவாய் உள்ளுறை நாரணன்

பறந்து திரிதரினும் பாவியேன் உள்ளம்
மறந்தும் பிறிது அறிய மாட்டா ; சிறந்து
திருநாவாய் வாழ்கின்ற தேவனை அல்லால், என்
ஒரு நா வாய் வாழ்த்தாது உகந்து.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1520, 1856
நம்மாழ்வார் : 3634-44
மொத்தம் - 13 பாசுரங்கள்

சென்னை - கள்ளிக்கோட்டை தொடர்வண்டிப் பாதையில் உள்ள திவ்யதேசம். 9 யோகிகள் இங்கு தவம் செய்ததால் நவயோகித் தலம் என்று கூறப்படுகிறது. காசியில் நடைபெறுவதைப் போன்று இங்குள்ள ஆற்றங்கரையில் பிதுர்க் கடன் செய்வது சிறப்பு. கிழக்கே திருமுக மண்டலம். இங்கு சிவனுக்கும் பிரம்மாவிற்கும் கோயில்

இருப்பதால் திருக்கண்டியூரைப் போல இதுவும் மும்மூர்த்தித் தலமாகப் புகழப் பெறுகின்றது.

பெருமாள்: நாவாய் முகுந்தன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : மலர் மங்கை நாச்சியார்.

486. திருப்புலியூர் (குட்டநாடு) *

புலியூர் மாயப்பிரான்

முதல் வண்ணம் ஆமே முலைவண்ணம் ; முன்னை
விதி வண்ணம் நீங்கி விடுமே - சதுரத்
திருப்புலியூர் நின்றான் திருத்தண் துழாயின்
மருப்புலி ஊர் தென்றல்வரின்

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3535-45

திருமங்கையாழ்வார் : 2673(71) -12 பாசுரங்கள்

செங்கண்ணூரில் இருந்து 5கி.மீ தொலைவில் உள்ள திவ்யதேசம். பஞ்ச பாண்டவர்களில் பீமன் பூசித்த திவ்யதேசம். தமிழ்நாட்டில் உள்ள 12 உட்பிரிவுகளில் குட்ட நாடும் ஒன்றாகும். ஸப்தரிஷிகள் ஸ்ரீமந் நாராயணன்தான் தேவதைகளுக்குள் உத்தமன் என்று பரதேவதா நிர்ணயம் செய்ததால் பகவான் பிரத்யஷமாகி மாயப்பிரானாகக் காட்சியளிப்பதாகச் சொல்லப்படுகிறது. கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : மாயப்பிரான் - நின்ற திருக்கோலம்

தாயார் : பொற்கொடி நாச்சியார்

487. திருமூழிக்களம் *

மூழிக்களக் குடக்கூத்தன்

காண்கின்ற ஐம்பூதங்கட்கும், இரு சுடர்க்கும்,
சேண் கலந்த இந்திரற்கும், தேவர்க்கும், மாண் கரிய
பாழிக் களத்தாற்கும், பங்கயத்து நான்முகற்கும்
மூழிக் களத்தான் முதல்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1553, 2061, 2674(129)

நம்மாழ்வார் : 3623-33

மொத்தம் : 14 பாசுரங்கள்

கேரளாவில் உள்ள ஆல்வாயிலிருந்து இத்திவ்யதேசத்திற்குச் செல்லலாம். பாரதப்புழை ஆற்றங்கரையில் உள்ள திவ்யதேசம். இலக்குவனும் பரதனும் சேர்ந்து வழிபட்ட தலம். கிழக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : திருமூழிக்களத்தான்- நின்ற திருக்கோலம்

தாயார் : மதுரவேணி நாச்சியார்

488. திருவண்வண்டூர்

வண்டூர் பாம்பணையப்பன்

தேவும், உலகும், உயிரும், திரிந்து நிற்கும்
யாவும், படைத்த இறைகண்டீர் - பூவில்
திருவண் வண்டூர் உறையும் தேவாதி தேவன்
மரு வண்வண்டு ஊர் துளவ மால்.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3227-37

மொத்தம் - 11 பாசுரங்கள்

செங்கண்ணூருக்கும் திருவல்லாவிற்கும் இடையில் உள்ளது. பஞ்ச பாண்டவர்களில் நகுலனால் உண்டாக்கப்பட்ட திவ்யதேசம். இங்குள்ள காளிங்க நர்த்தன உருவம் சிறப்பாகும். மேற்கே திருமுக மண்டலம். இங்குள்ள பெருமான் சங்கு, சக்கரம், கதை, பத்மம் ஆகியவற்றைத் தாங்கி நிற்கிறார்.

பெருமாள் : பாம்பணையப்பன் - நின்ற திருக்கோலம்

தாயார் : கமலவல்லி நாச்சியார்

489. திருவனந்தபுரம்

அனந்தையில் பத்மநாபன்

கோள் ஆர் பொறி ஐந்தும் குன்றி, உடலம் பழுத்து,
மாளாமுன், நெஞ்சே! வணங்குதியால் - கேளார்
சினந்தபுரம் சுட்டான், திசை முகத்தான், போற்றும்
அனந்தபுரம் சேர்ந்தான் அடி.

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3678-88 மொத்தம் : 11 பாசுரங்கள்

கேரளத் தலைநகரில் அமைந்துள்ள திவ்யதேசம். பலராமன் தரிசித்த திவ்யதேசம். கிழக்கே திருமுகமண்டலம். மிகப் பெரிய திருமேனி யாதலால் தலை, உடல், திருவடிகள் ஆகியவற்றை மூன்று வாசல்கள் வழியே தனித் தனியே தரிசிக்க வேண்டும். இங்குள்ள அனுமனுக்குச் சாத்தப்படும் வெண்ணெய் எத்தனை நாட்கள் ஆனாலும் வெயிலிலும் உருகுவது இல்லை. இங்கு அனந்தசயன விரதம் இருப்பது சிறப்பு. இத்திருத்தலத்திற்குச் சென்று வழிபடுவோருக்கு நோயும் வினைகளும் பாபமும் அப்போதே தொலையும் என்பது நம்பிக்கை. இவ்வூரைச் சிலப்பதிகாரம் 'ஆடக மாடம்' என்று குறிப்பிடுகிறது. ஸ்வாமி நிகமாந்த தேசிகர் மங்களாசாசனம் செய்துள்ளார்.

பெருமாள் : அனந்த பத்மநாபன் - புஜங்க சயனம்

தாயார் : ஸ்ரீ ஹரி லக்ஷ்மி.

490. திருவாறன் விளை *

ஆறன் விளைக் குறளப்பன்

சென்று புனல் மூழ்கிச் செய் தவங்கள் செய்தாலும்,
வென்று புலன் அடக்கிவிட்டாலும், இன் தமிழால்
மாறன் விளைத்த மறை ஓதார்க்கு இல்லையே-
ஆறன் விளைத் திருமால் அன்பு

மங்களாசாசனம்

நம்மாழ்வார் : 3436-46 மொத்தம் : 11 பாசுரங்கள்

செங்கண்ணூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள திவ்யதேசம். பஞ்ச பாண்டவர்களில் அர்ச்சுனன் பூசித்த தலம். கிழக்கே திருமுக மண்டலம். இங்குள்ள வன்னிமரக் காய்களை நோயுற்ற குழந்தைகளின் தலையைச் சுற்றி எறிந்தால் நோய் நீங்கும் என்பது நம்பிக்கை. இங்கு துலாபாரமாக வன்னிமரக் காய்களை அளித்து வருகின்றனர். இத்தலம் பம்பை நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்குதான் சபரிமலை ஐயப்பன் ஆபரணங்கள் வைக்கப்பட்டு, மகரஜோதியின் போது எடுத்துச் செல்லப்படுகிறது.

பெருமாள் : திருக்குறளப்பன். நின்ற திருக்கோலம்.

தாயார் : பத்மாஸனி நாச்சியார்

491. திருவித்துவக்கோடு *

வித்துவக்கோட்டு உய்யவரு பெருமான்

வாய்த்த கருமம் இனி மற்று இல்லை; நெஞ்சமே !
தோய்த்த தயிர், வெண்ணெய், தொட்டு உண்ட கூத்தன்
திருவிற்றுவக்கோடு சேர்ந்தால், பிறவிக்
கருவின் துவக்கு ஒடும் காண்

பெருமாள் : உய்யவந்த பெருமாள், அபயப்ரதன்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : வித்துவக்கோட்டுவல்லி.

கேரளாவில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள பட்டாம்பி என்னும் ஊருக்கு அருகில் உள்ள திவ்யதேசம். இங்கு பஞ்ச பாண்டவர் ஐவரும் 5 மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதால் ஐந்து மூர்த்தித் திருக்கோயில் என்று வழங்கப்படுகிறது. பெருமாள் நான்கு வடிவங்களில் அம்பரீஷ மன்னனுக்குக் காட்சியளித்தார். நடுவில் இருக்கும் மூர்த்தியைத் தர்மனும், மேற்கில் உள்ள மூர்த்தியை அர்ஜுனனும், இடப்புறத்தில் உள்ள மூர்த்தியைப் பீமஸேனனும், வலப்புறத்தில் உள்ள மூர்த்தியை நகுலனும், சகாதேவனும் பூஜித்தார்கள். அம்பரீஷன் முக்தி அடைந்த தலம். தெற்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : உய்யவந்த பெருமாள். அபயப்ரதன்.
நின்ற திருக்கோலம்.

தாயார் : வித்துவக்கோட்டுவல்லி

492. ஸ்ரீராகவபுரம் : பிலாத்ராவுக்கு 21 கி.மீ. தொலைவில் ராமர் கோயில்.

ஆந்திர மாநிலம் - 45

493. அன்னாவரம் : ரத்தினகிரி மலைமேல் வீரவேங்கட சத்யநாராயண ஸ்வாமி - அனந்தலக்ஷ்மி திருக்கோயில் உள்ளது.

494. அகிரபல்லி : மலைமீது சோபநாசலசுவாமி அல்லது வியாக்ர நரசிம்மர் கோவில் இருக்கிறது. ராஜ்யலெக்ஷ்மி அம்மன், மல்லி கார்ஜுனன், வேங்கடாசலஸ்வாமி, வேணுகோபாலன் முதலிய கோயில்கள் உள்ளன.

495. கதிரி : லக்ஷ்மி நரசிம்மர் கோயில். நரசிம்ம தீர்த்தம்.

496. கர்னூல் : விஷ்ணு கோயில். துங்கபத்ரா நதி அருகே உள்ளது.

497. கடப்பை : ராமர் கோயில்.

498. கமலாபுரம் : கடப்பையிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ள கோயில்.

499. காகினாடா : ராமர் கோயில் - சமுத்திர தீர்த்தம்.

500. குண்டூர்: உண்டவல்லி தாலூக்காவில் அனந்தசயனர் - லக்ஷ்மி திருக்கோயில்.

501. கொண்டாபுரம் : பெருமாள் கோயில்.

502. சிங்கராயகுண்டா: பிட்ரகுண்டாவிலிருந்து 54 கி.மீ வடக்கில் உள்ள பெருமாள் கோயில். இங்கு ராமர், நரசிம்மர், வராகர், லக்ஷ்மி சந்நிதிகள் உள்ளன. க்ஷீரநதி சிம்மபிநாக தீர்த்தம்.

503. சிலகலபுடி : விஷ்ணு - பாண்டுரங்கர். ருக்மணி, சத்தியபாமா கோயில்.

504. சூளூர்பேட்டை : அழகிய மன்னார்கோயில். அழகிய மன்னார் - ருக்மணி - சத்தியபாமை.

505. செகந்தராபாத் : லெக்ஷ்மிநாராயணர் கோயில் அருகில் வரதராஜஸ்வாமி கோயில்.

506. சோமபல்லி : சித்தூரில் உள்ளது. சென்னகேஸ்வர ஸ்வாமி - பெருந்தேவி, லக்ஷ்மிநாராயண ஸ்வாமி.

507. தர்மபுரி : ஸ்ரீநூதன நரசிம்ஹஸ்வாமி கோயில். அண்மையில் ராமலிங்கேச்வர ஸ்வாமி கோயில்.

508. தாட்பத்ரி : ராமபதம் என்ற கோயிலும் சிந்தால வேங்கடரமண மூர்த்தி கோயில் உள்ளன.

509. தென்னாலி: விஜயவாடாவிலிருந்து 26 கி.மீ தெற்கே பெருமாள் கோயில்.

510. த்ராக்ஷராமா : ராஜமஹேந்திரத்திலிருந்து பஸ்ஸில் போக வேண்டும். பீமேஸ்வர ஸ்வாமி வேதவியாசர் நிறுவியது. ருத்ர தீர்த்தம். ஸப்த கோதாவரி புஷ்கரிணி. ரவிமரம், ரவிவேப்பமரம் சேர்ந்து இருக்கிற அடியில் சங்கரநாராயண ஸ்வாமி இருக்கிறார். லெக்ஷ்மி நாராயண ஸ்வாமி உள்ளார்.

511. நகரி : அரக்கோணத்திலிருந்து 24 கி.மீ-ல் வேதநாராயணப் பெருமாள் கோயில். வேதவல்லித் தாயார். குசஸ்தலை ஆறு.

512. நரசாபட்டணம் ரோட் : பலகட்டம் பலிசக்ரவர்த்தி தானம் செய்த இடம். திருவிக்கிரமர் - லக்ஷ்மி கோயில். வராக நதி.

513. நாராயணவனம் : நகரியிலிருந்து 4 கி.மீ -ல் கல்யாண வேங்கடேசர் கோயில். தாயார் - பத்மாவதி, ஸ்ரீதேவி, பூதேவி.

514. நாகலாபுரம் : நகரியிலிருந்து 5 கி.மீ. ஆராவமுதப்பெருமாள் கோயில். பெருமாள் நரசிம்மர் - கோமளவல்லி நாச்சியார்.

515. நாயுடுபேட்டை : நரசிம்மர் கரியமாணிக்கப் பெருமாள் கோயில். தாயார் - லக்ஷ்மி தேவி. தீர்த்தம் - சுவர்ணமுகி, தும்புரு தீர்த்தம்.

516. நிடதவோல் : ராமர் கோயில்.

517. நெல்லூர் (கூடூர்): அழகிய ரெங்கநாதர், ரெங்கநாயகி கோயில்.

518. பாபட்லா: பல நாராயணசுவாமி கோயில்.

519. பீமடோல்: விஜயவாடாவிலிருந்து 80 கி.மீ. வடக்கே துவாரகமலை சுதர்சன க்ஷேத்திரம். வேங்கடாசலபதி - அலர்மேல் மங்கை ராமர் கோயில் . நரசிம்ம தீர்த்தம், சுதர்சன புஷ்கரணி.

520. பெனுகொண்டா: லஷ்மி நாராயணர் கோயில்.

521. பெத்த செருக்கூர் : பாபட்லாவிலிருந்து 17 கி.மீ திருவிக்கிரம அவதாரம். சுயம்புமூர்த்தி விராட் விஸ்வரூபத்தில் இருக்கிறார். வலது கால் பூமியிலும், இடது கால் ஆகாசத்திலும் சுக்கிராச்சாரியார், விஜயவல்லி விக்கிரங்களும் உள்ளன.

522. பொப்பிலி: விஜயநகரத்தில் இருந்து ரங்கநாதர் கோயில்கள்.

523. மங்களகிரி: மலையடிவாரத்தில் மல்லிகார்ஜுனஸ்வாமி கோயில். மலைமத்தியில் பானக நரசிம்ஹர் கோவில். மலை 409 படிகள் கொண்டது. பள்ளிகொண்ட சுவாமி கோவில். அழகியசிங்கர் வள்ளி நாச்சியாருடன் இருக்கிறார். லக்ஷ்மி புஷ்கரணி, மலை அடிவாரத்தில் லக்ஷ்மி நரசிம்மர் கோயிலும் உள்ளது.

524. யாதகிரி: 300 அடி உயர மலைமேல் லக்ஷ்மி நரசிம்மர் கோயில். சுவாமி - புஷ்கரணி.

525. ராஜமஹேந்திரம்: ஜனார்த்தனப் பெருமாள் - ஜனகதேவி கோயில்.

526. வால்டேர் சிம்மாசலம் : சிம்மகிரி மலைமேல் வராகநாதர் - நரசிம்ஹர். கூர்மமூர்த்தி - சிம்மவல்லித் தாயார் உள்ள கோயில். நரசிம்ம சுவாமி உக்கிரமானவர். சந்தனம் கொண்டு மறைக்கிறார்கள்.

527. விசாகப்பட்டினம் : வால்டேர் அருகேயுள்ளது. பெருமாள் கோயில் உண்டு. விஜயநகரத்தில் கிருஷ்ணர், நரசிம்மர் - லெக்ஷ்மி, பத்மநாபம், பத்மநாபர் கோயில்கள்.

528. வினுகொண்டா : குண்டூரிலிருந்து 83 கி.மீ. தெற்கே ராமர் கோயில்.

529. விஜயவாடா : திருமால், ராமர் கோயில்கள்.

530. வேமுல்வாடா : அனந்த பத்மநாபஸ்வாமி கோயிலும், கோதண்ட ராமர் கோயில்.

531. ஹைதராபாத் : 3 கி.மீ. தொலைவில் வேங்கடேஸ்வரர் கோயில். சலவைக் கல்லால் ஆனது.

532. ஸ்ரீ கூர்மம்: ஸ்ரீகாகுளத்தில் இருந்து 20 கி.மீ. - ல் ஸ்ரீ கூர்மநாதர் - வேதபுஷ்கரிணி, குளம், வக்ர தீர்த்தம். சக்ர, அஷ்ட தீர்த்தங்கள்.

533. திருவேங்கடம் *

திருமலை ஸ்ரீனிவாசன்

தானே சரணமும் ஆய், தானே பலமும் ஆய்,
தானே குறை முடிக்கும் தன்மையான் தேன் ஏய்
திருவேங்கடம் தொழுதேம் ; தீய விபூதிக்குள்
மருவேம்; கடந்தணெம் இவ்வாழ்வு

மங்களாசாசனம்

பெரியாழ்வார்: 56, 104, 180, 184, 207, 247
ஆண்டாள் : 504, 506, 535, 546, 577-586, 601, 604
குலசேகராழ்வார் : 677-87
திருமழிசையாழ்வார்: 799, 811, 832, 2415, 2420-29,2471
திருப்பாணாழ்வார்: 927, 929
திருமங்கையாழ்வார் : 1018-1057, 1275, 1312, 1371,

1388, 1404,1518, 1572, 1640,
1660, 1811, 1836, 1849, 1946,
1978, 2001, 2038, 2059, 2060,
2067, 2673(69), 2674(6, 124)

பொய்கையாழ்வார்: 2107, 2118-21, 2149, 2157, 2158, 2163, 2180

பூதத்தாழ்வார் : 2206, 2209, 2214, 2226, 2227, 2234, 2235, 2253, 2256

பேயாழ்வார் : 2295, 2307, 2311, 2313, 2320, 2321, 2326, 2339, 2342-44, 2349-54, 2356, 2370

நம்மாழ்வார் : 2485, 2487, 2492, 2508, 2527, 2537, 2544 2558, 2754, 2848, 2849, 2862, 2919-29, 2948, 2985, 3061, 3282- 92, 3326- 36, 3458, 3586, 3716, 3740

மொத்தம் : 202 பாசுரங்கள்

534. கீழத்திருப்பதி : கோவிந்தராஜப் பெருமாள் - புஜங்கசயனம் - கிழக்கே திருமுக மண்டலம். தாயார் - புண்டரீக வல்லி.

535. மேலத்திருப்பதி : திருமலையில் ஏழு மலைகளுக்கு மத்தியில் ஸ்ரீநிவாசப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். கிழக்கே திருமுக மண்டலம். ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு முன்பே வராக மூர்த்தியாக இவ்விடத்தில் எழுந்தருளிவராக ரூபியாய்க் காட்சி தருவதால் இன்றும் ஆதிவராகரைச் சேவித்த பின்பே ஸ்ரீநிவாசரைத் தரிசிக்கவேண்டும். புரட்டாசி மாதப் பிரம்மமோத்ஸவத்தில் பிரமனே இங்கு வந்து நடத்தி வைப்பதாக ஐதீகம். இச்சமயத்தில் பெருமாளைத் தரிசிப்பவருக்குச் சகல பாவங்களும் தொலைந்து விடுவதாக நம்பப்படுகிறது. திருமாலின் வலது மார்பில் மஹாலக்ஷ்சுமியும், இடது மார்பில் பத்மாவதியும் உறைகின்றனர். இங்கு 108 தீர்த்தங்கள் உள்ளன . திருப்பதி லட்டு சிறப்பு.

பெருமாள் : திருவேங்கடமுடையான் பாலாஜி.
ஸ்ரீனிவாசன் நின்றதிருகோலம்

536. திருச்சானூர் தாயார் : அலர்மேல்மங்கை (பத்மாவதி) தாயார். கிழக்கே திருமுக மண்டலம். ஸ்ரீ மணவாள மாமுனிகள் சுப்ரபாதம், ப்ரபத்தி மங்களம் ஆகியவற்றை அருளி மங்களாசாசனம் செய்துள்ளார்.

கர்நாடக மாநிலம் - 38

537. உடுப்பி : பாலகிருஷ்ணன் ஆலயம்.

538. எடத்தூர் : 2 கி.மீ. தொலைவில் ராமர் - சீதை கோயில்.

539. கூடலி : நரசிம்மர், ராமேச்வர் கோயில்கள்.

540. கைதாள : தும்கூரிலிருந்து 85கி.மீ - ல் கேசவநாராயணன் கோயில்.

541. கைவாரா : விஜயபுரத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் அமரநாராயண ஸ்வாமி ஆலயம்.

542. கொல்லூர் : உடுப்பியிலிருந்து 89 - கி.மீ -ல் உள்ளது. கோல மகரிஷியால் பூஜை செய்யப்பட்ட ஜ்யோதிர்லிங்கம். இருபாகமாகத் தங்கரேகையால் பிரிக்கப்பட்டு இடப்பாகம் மாகாளி, மகாலக்ஷ்மி, மகாஸரஸ்வதி, வலப்பக்கம், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன். பாபநாசினி நதி.

543. கோகர்ணம் : உடுப்பியிலிருந்து 10 கி.மீ - ல் அனந்த பத்மநாபர் கோயில். ஸோண்டாவில் திரிவிக்கிரமர் கோயில்.

544. கோரிபித்தனூர் : ஹிந்துபூரிலிருந்து தெற்கே 24 கி.மீ -ல் கிருஷ்ணன் - ருக்மணி, சத்தியபாமா கோயிலும் உள்ளது.

545. சங்கரநாராயண : கோடேச்வரராவிலிருந்து 24 கி.மீ. தொலைவில் வேணுகோபாலன், கருடாழ்வார்களும், பஞ்சமுக ஆஞ்சநேயரும் உள்ள சங்கரநாராயணர் கோயில்.

546. சரவணபெலகுலா: ஹாஸினிலிருந்து 50 கி.மீ. விந்தியகிரியில் லக்ஷ்மிநரசிம்மர், கேசவநாராயணன், வேணுகோபாலன் சந்நிதிகள் உள்ளன.

547. சிஞ்சன்சட்டி (கஞ்சன்கட்டே) - கோதண்டராமசாமி கோயில்.

548. சோமநாதபுரம் : மைசூருக்குக் கிழக்கில் 36 கி.மீ - ல் வியக்கத் தக்க வேலைப்பாடுள்ள கலைக்கோயில். 13 -ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கிழக்கு பார்த்த கோயில் மூன்று கோணமானது. திரிகூடாசலம் என்பர். கேசவன், கோபாலன், ஜனார்த்தனன் வடிவங்கள் உள்ளன.

549. தலக்காடு : மைசூரிலிருந்து 48 கி.மீ. தொலைவில் கீர்த்தி நாராயணர் ஆலயம் உள்ளது. பிலிகிரி என்ற இடத்தில் சுவேதாசலம் என்ற மலையில் வேங்கடேசர் ஆலயம்.

550. தும்கூர் : ஹாஸனிலிருந்து 50 கி.மீ. விந்தியகிரியில் லக்ஷ்மி நரசிம்மா, கேசவநாராயணன், வேணுகோபாலன் சந்நிதிகள் உள்ளன.

551. தேவராயதுர்க்கா: தும்கூரிலிருந்து 16 கி.மீ-ல் கிழக்கே மலை அடிவாரத்தில் யோக நரசிம்மர். மலைமீது யோக நரசிம்மர். 24கி.மீ. தொலைவில் சிபி நரசிம்மர், சுயம்பு நரசிம்மர்.

552. தொட்குருகாட் : விதுர அச்வத்தம் பெங்களூருக்கு நேர்வடக்கே நாராயணர் - லக்ஷ்மி கோயில்.

553. தொட்டகட்டவல்லி : மஹாலக்ஷ்மி கோயில். திருமாலும், சிவபெருமானும் எதிர் எதிரான சந்நிதிகளில் இருக்கிறார்கள். இங்கு லக்ஷ்மிக்கு நான்கு கரங்கள்.

554. தொண்டனூர் : பெங்களூருக்கு வடக்கே 12 கி.மீ. தொலைவில் நம்பிநாராயணர்- நரசிம்மர் கோயில்கள்.

555. நாசிப்பூர் திருமுக்கூடல் : சோமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் நரசிம்மர் கோயில். வலக்கையில் ஒரு குன்றுமணியையும், தராசையும் வைத்துக் கொண்டிருக்கிறார். உற்சவர் - நாராயணஸ்வாமி. அண்மையில் சிவசமுத்திரம் என்ற இடத்தில் ஜகன்மோகன ரங்கநாதர்.

556. பாகமண்டலா : 6 கி.மீ. தொலைவில் மஹாவிஷ்ணு கோயில்.

557. பாதாமி : ரங்கநாதர் கோயில்.

558. பெங்களூர் : விச்வேச்வரபுரம் என்ற இடத்தில் வேங்கடேஸ்வரர், கிருஷ்ணர் கோயில்கள்.

559. பெல்லாரி : லோகாசலா குன்றின் மேல் ராமர் கோயில்.

560. பேலூர் : ஹாஸனிலிருந்து 38 கி.மீ-இல் சென்ன கேசவப் பெருமாள், விஜயநாராயணர் சங்கு சக்ரபாணியாகப் பெரிய பீடத்தில் நிற்கிறார். மேலும் கப்பே சென்னகராயர், வீரநாராயணன், வேணு கோபாலன் கோயில்களும் உள்ளன. லக்ஷ்மிதேவி கோயில் பக்கத்தில் மலைமேல் தனியாக உள்ளது. ஹாஸன் அருகில் நூக்கிஹல்லி தாயார் திருநடனக் கோலத்துடன் உள்ளார். மஹாலெக்ஷ்மிக்கு எட்டுக்கரங்கள் உள்ளன.

561. மங்களூர் : ராமர் கோயில்.

562. மாடூர், மாத்தூர் : பெங்களூரிலிருந்து 80 கி.மீ தொலைவில் ரங்கநாதர் - லக்ஷ்மி கோயில்கள்.

563. மிதுனசாலக்ராமம் : வடமேற்கே 22 கி.மீ. சாலக்ராமம் - நரசிம்மர் கோயில். ஸ்ரீபாத தீர்த்தம். தாயார் - லெக்ஷ்மி தேவி. அருகே 1 கி.மீ. தொலைவில் நரசிம்மர் - உடையவர் சந்நிதி - கௌதம புஷ்கரணி.

564. மைசூர் : சாமுண்டி மலையின் கீழ் மகாபலேச்வரரும் லக்ஷ்மி நாராயணரும் கோயில் கொண்டுள்ளனர்.

565. ராமநாதபுரம் : எடத்தூரிலிருந்து 20 கி.மீ. மேற்கில் ராமர் - சீதை கோயில். காவேரி, அக்னி தீர்த்தங்கள்.

566. லேபாக்ஷி: விஷ்ணு கோபாலஸ்வாமி கோயில்.

567. ஐஹோளே : பாதாமிக்கு வடகிழக்கில் 25 கி.மீ -ல் லட்கான் கோயில் நாராயணன், அனந்தநாராயணர் சிற்பங்கள் உள்ளன.

568. ஹம்பி : கிருஷ்ணசுவாமி கோயில்.

569. ஹப்பி : விட்டல் என்ற இடத்தில் கோதண்டராமர் கோயில் உள்ளது. சக்கர தீர்த்தம்.

570. ஹாஸ்பேட் : நரசிம்மர், சீதாநாயகர் லெக்ஷ்மி தேவி உள்ள கோயில்.

571. T நரசிம்மபுரம் : குஞ்சால நரசிம்மர் கோயில்.

572. சிவசமுத்திரம் : ஸ்ரீ ரங்கநாதர் - ரங்கநாயகி கோயில்.

573. திருநாரயணபுரம் : திரு நாரயணன் கோயில், நின்ற திருக்கோலம்.

574. தொண்டனூர் : பார்த்தசாரதி கோயில்.

575. ஸ்ரீரங்கப்பட்டினம்: ரங்கநாதர் கோயில்.

மகராஷ்டிரா மாநிலம் - 12

576. ஆலந்தி : பண்டரிநாதர் - ருக்மணி, சத்யபாமா திருக்கோயில். இந்திராணி நதி.

577. கல்யாண் : ராமர் கோயில்.

578. கதாம்புரி : கிருஷ்ணர் கோயில்.

579. குண்டினபுரம் : கிருஷ்ணன் - ருக்மணி, சத்யபாமா கோயில்.

580. கோலாப்பூர் : சக்திபீடம் நாம்தேவ என்ற வைஷ்ணவக் கோயில். மஹாலெக்ஷ்மி அல்லது அம்பாபாய் கோயில்.

581. நாசிக் : கோதாவரி நதிக்கரையில் சத்யநாராயணப்பெருமாள் கோயில்.

582. பம்பாய் : மும்பாதேவி கோயில். மஹாலக்ஷ்மி கோயில்.

583. பண்டரிபுரம் : பாண்டுரங்கர் திருக்கோயில்.

584. பாதாமி : பாதாமி குகைக்கோயில். வராஹ அவதாரம், வாமன அவதாரக் கோயில்கள். மேலும் லெக்ஷ்மி நாராயணன் கோயில்.

585. பூனா : மகாவிஷ்ணு திருக்கோயில், லக்ஷ்மிநாராயணன் கோயில்.

586. ராம்டேக் : மலைமேல் ராமர்கோயில் உள்ளது. சிந்து நதியில் நரசிம்ம, வராக, ராமபாவன தீர்த்தங்கள்.

587. திருச்சிங்கவேள் குன்றம் *

சிங்க வேள் மலை நரசிங்கன்

வாழ் குமரன் மேல, கனக வஞ்சகன் மேல், ஒர் முகத்தே
சூழ் கருணையும், முனிவும், தோன்றினவால் - கேழ்கிளரும்
அங்க வேள் குன்ற அழல் சரபத்தைப் பிளந்த
சிங்க வேள் குன்றத்தினார்க்கு.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 1008-1017 -10 பாசுரங்கள்

சென்னை- பம்பாய் தொடர்வண்டிப் பாதையில் கடப்பாவில் இறங்கி அர்ரகட்டா என்ற ஊருக்கு அருகில் உள்ளது. இங்கு மலை அடிவாரத்திலும், மலைமேலும் இரண்டு கோயில்கள் உள்ளன. கருடனுக்கு எம்பெருமான் நரசிங்க அவதாரமாகக் காட்சியளித்த தலம் நரசிம்ம வடிவத்தின் 9 மூர்த்திகள் இங்கு சேவை சாதிக்கின்றனர். கிழக்கே திருமுக மண்டலம். அஹோபிலமடத்தின் தலைமை ஸ்தலமே இந்தக் கோயில்தான்.

பெருமாள் : ப்ரஹலாதவரதன். வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : அம்ருதவல்லி.

மத்தியப் பிரதேசம் - 5

588. அமர்கண்டக் : சகடோல் என்ற இடத்தில் கிருஷ்ணன் கோயில்.

589. உஜ்ஜயினி : 29-கி.மீ-ல் சாஞ்சி ராமநாதர் - நாராயணன் கோயில்கள்.

590. கஜுரோஹா : பதினொரு தலை விஷ்ணு கோயிலும், ராமர் நான்கு கை, மூன்று தலைகள் உள்ள விஷ்ணு கோயில். வடக்கே 1 கி.மீ. தொலைவில் ராமர், நரசிம்மர் கோயிலும் உள்ளது.

591. குவாலியர்: கிரி அருகில் ஸஹஸ்ரபாஹீ பத்மநாபர் கோயில் உள்ளது.

592. ஜபல்பூர் : ராமர் சீதை கோயில்.

குஜராத் மாநிலம் - 13

593. ஆஜ்மீர் : 11 கி.மீ. தொலைவில் புஷ்கரம் என்ற இடத்தில் புஷ்கரம் உள்ளது. கஜேந்திர மோஷம் நடைபெற்ற இடம். ஸ்ரீவைகுண்டநாதர், ஸ்ரீதேவி, பூதேவி கோயில் உள்ளது. மற்றும் தமிழ்நாட்டுக் கோயில் போல ஸ்ரீநிவாசப் பெருமாள் ஆலயம், ரங்கநாதர் கோயிலும் உள்ளன.

594. உதயபூர் : 48 கி.மீ-ல் நாதத்வாராவில் விஷ்ணு கோயில் உள்ளது.

595. ஒகாட் போர்ட் : கண்ணன் கோயில். அதன் அருகில் வராகநாதர் ருக்மணி, ஆண்டாள் கோயில்களும் உள்ளன.

596. கோவா : 18 கி.மீ. தொலைவில் லக்ஷ்மிநாராயணர், சூரிய நாராயணர் கோயில்கள், ஹனுமான் சிலைகள் உள்ளன.

597. சித்தூர்கள்: கோட்டையில் மீராபாய் வணங்கிய கண்ணன் கோயில்.

598. சூரத் : தபதி நதம். அஹமதாபாத்திலிருந்து 229 கி.மீ. கோவிந்தர், பாலாஜி (திருப்பதி ரூபம்) கோயில்கள்.

599. சோமநாதம் : பிரபாஸப்பட்டினம், தேவிபட்டினம் - அதற்கு அருகே கண்ணபிரான் முக்தி அடைந்த சொர்க்காரோஹணம். 1/2 கி.மீல் உள்ளது. ஆதிசேஷன் அவதாரமாகிய பலராமன் இந்த இடத்தில் சரீரத்தை துறந்தார். அதன் சமீபம் தப்தோத்க சுவாமி நாராயணர் கோயில்.

600. டாக்கோர் : கோமதி தடாகத்தில் கிருஷ்ணர் ருக்மணிகோயில்.

601. ராஜ்கோட் : ராமர் கோயில் உள்ளது.

602. ஸீதாபூர் : கோவிந்த, மாதவ கோயில்கள்.

603. ஜாம்நகர் : பரமபதநாதர் - பெரிய பிராட்டியர் - சுதாமதி திருக்கோயில் ஐராவத தீர்த்தம்.

604. போர்பந்தர் போர்ட் : பெருமாள் கோயில்.

605. திருத்வாரகை *

துவாரகையில் மணவாள நாரணன்

திறம் திறமாத் தாம் துய்க்கும் தீம் சுவையை நாடி,
அறம் திறம்பி, பாதகர் ஓர் ஐவர் - நறுந்துளவ
மா துவரையோனே! - மணம் துணையாக் கொண்டு என்னைக்
காதுவர், ஐயோ, மெய் கலந்து!

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 333, 398, 399, 415, 472
ஆண்டாள் : 507, 541, 594,625
திருமங்கையாழ்வார் : 1504, 1524
திருமழிசையாழ்வார்: 2452
நம்மாழ்வார் :3144
மொத்தம் : 13 பாசுரங்கள்

குஜராத் மாநிலம் கபில நதிக்கரையில் உள்ள திவ்யதேசம். பக்த மீரா கண்ணனுடன் கலந்த திவ்யதேசம். இங்கு ஒரு நாளைக்கு 17 முறை கண்ணனுக்கு உணவளித்து, உடைமாற்றி அலங்காரம் செய்கின்றனர். இந்த ஆராதன முறையைப் 'போக்' என்று அழைக்கின்றனர். கிருஷ்ணன் ருக்மணியை விவாகம் செய்து கொண்ட தலம். மேற்கே திருமுக மண்டலம். இது முக்தி தரும் எழு தலங்களுள் ஒன்றாகும். இங்கு கிருஷ்ணன் வீடு, சத்யபாமா வீடு, ருக்மணி வீடு என்று தனித்தனி அறைகள் உண்டு. அங்கு அவர்களின் திருவுருவங்களைத் தரிசிக்கலாம்.

பெருமாள்: கல்யாண நாராயணன் - நின்ற திருக்கோலம்.
தாயார்: கல்யாண நாச்சியார்

மேற்கு வங்கம் - 1

606. திருநைமிசாரண்யம் *

நிமிவனதேவராசன்

ஓர் அறிவும் இல்லாத என்போல்வார்க்கு உய்யலாம்;
பேர் அறிவு உண்டேனும், பிறர்க்கு அரிது - பார் அறிய
நைமிசாரண்ணியத்து நாதர் அடியாரோடும்
இம்மி சார்வு உண்டாயினால்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார்: 998-1007 -10 பாசுரங்கள்

மேற்கு வங்க மாநிலத்தில் பாலமாவ்-சீதாப்பூர் தொடர்வண்டிப் பாதையில் உள்ள திவ்யதேசம். இங்கு எம்பெருமான் ஆரண்ய ரூபியாகத் திகழ்கிறார். இங்குள்ள சக்ர தீர்த்தம் அனைத்துப் பாபங்களையும் நீக்கவல்லது. கிழக்கே திருமுக மண்டலம். இங்கு வியாச பகவான் முதலிய ரிஷிகள் எப்பொழுதும் தவம் செய்து கொண்டிருப்பதாக ஐதீகம்.

பெருமாள் : தேவராஜன் (ஸ்ரீஹரி). நின்ற திருக்கோலம்.

தாயார் : ஸ்ரீஹரிலக்ஷ்மி.

பஞ்சாப் - 1

607. அமிர்தஸரஸ்: கிருஷ்ணர்கோவில் அருகே லக்ஷ்மிநாராயணர் கோவில்.

பீகார் - 5

608. கயா : விஷ்ணு பாதத்தில் நாராயணர், லக்ஷ்மி கோயில்.

609. பாகல்பூர் : கோபிகாநாதர் - ருக்மணி, சத்யபாமை கோயில்.

610. மாங்கீர் : ஜபல்பூர் அருகில் ராமர் - சீதை கோயில். மலைமேல் (நாராயணன் - லக்ஷ்மி, ராமர் சீதை கோயில்கள்)

611. மிதிலாபுரி : ராமர் - சீதை கோயில். ராமர் வில் முறித்துக் கல்யாணம் செய்த இடம்.

612. மிதிலா : ஜானகி, ராமர், தசரதர் கோயில்கள்.

உத்திரப்பிரதேசம் - 22

613. திருஅயோத்தி *

நல்ல யோத்தியில் இரகு நாயகன்

ஆர்க்கும் இது நன்று; தீது ஆனாலும் - நெஞ்சே!-நீ
பார்க்கும் பல கலையும் பண்ணாதே, சீர்க்கும்
திரு அயோத்திப் புயலை, சீரிய மெய்ஞ்ஞானத்து
உருவை, ஒத்தின் பொருளை,. ஓர்

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 312, 314, 316, 321, 325, 399

குலசேகராழ்வார் :724, 725, 741, 748

தொண்டரடிப்பொடியாழ்வார்: 920

திருமங்கையாழ்வார் : 1875

நம்மாழ்வார் :3381

மொத்தம் : 13 பாசுரங்கள்

உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள பைசாபாத். தொடர்வண்டி நிலையத்திற்கு 5 கி.மீ. தொலைவில் உள்ள திவ்யதேசம் இங்குள்ள சரயூநதியில். ராமன் தன்னுடைய பூதவுடலை நீத்தார் என்று கூறப்படுகிறது. ஏழு முக்தி தரும் நகரங்களில் இதுவும் ஒன்று. வடக்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : ராமர் வீற்றிருந்த திருக்கோலம்.

தாயார் : ஸீதாப்பிராட்டி

614. ஆக்ரா (திருவடமதூரா) *

வடமதுரை கோவர்த்தனேசன்

செல்வம், உயிர், உடம்பு, சேர உரித்தாக்கி,
வல்வினையை நீக்குமினோ, மாந்தர் காள்! -'தொல்லை
வட மதுரையான், கழலே வாய்த்த தஞ்சம்' என்று
திடமது உரைசெய்தான் திறத்து.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 16, 277, 399, 264-74, 341, 430

ஆண்டாள் : 478, 538, 539, 560, 569, 617, 624, 627-46, 634, 638

தொண்டரடிப்பொடியாழ்வார்: 916

திருமங்கையாழ்வார்: 1512, 1527, 1833, 2673(74)

நம்மாழ்வார் : 3439, 3499, 3559-66

மொத்தம் : 50 பாசுரங்கள்

டில்லியிலிருந்து ஆக்ரா செல்லும் பாதையில் மதுரா என்ற இடத்தில் உள்ள திவ்யதேசம். கிருஷ்ணன் பிறந்தது மதுரா. ஆநிரை மேய்த்த பிருந்தாவனம். குன்றைக் குடையாக எடுத்த கோவர்த்தின கிரி இம்மூன்றும் முக்கோண வடிவில் அமைந்துள்ளது சிறப்பு. கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : கோவர்த்தநேசன்

தாயார்: ஸத்யபாமா

615. உத்திர யாத்திரை : மஹாபாரதத்தில் தாரகேச்வரர் கோயில் பாண்டவருக்குத் தாரக மந்திரத்தை உபதேசித்த இடம்.

616. குருக்ஷேத்திரம் : பஞ்சபாண்டவர் கோயில். கிருஷ்ணன் கோயில்.

617. சித்திரகூடம் : ராமர் - சீதை - காந்தநாதர் கோயில். சங்கர்தர் 29-கி.மீ-ல் ராமர் சீதை. கோயில் - யமுனா நதிகரையில்.

618. சிம்லா : ராமர் கோயில்.

619. சீதாபூர் : மந்தாகினிக் கரையில் ராமர் சீதை கோயில்.

620. டெல்லி : யமுனை நதிக்கரையில் லெக்ஷ்மிநாராயணர், கிருஷ்ணன் கோயிலும், இந்திரப் பிரஸ்தத்தில் கிருஷ்ணர், ருக்மணி - சத்யபாமா கோயிலும், குதுப்மினார் அருகில் வெங்கடேசப்பெருமாள், ராமர் கோயிலும், குருமுக்தேச்வர் என்ற இடத்தில் கிருஷ்ணர் கோயிலும் உள்ளது.

621. நேபாளம் : நான்கு முகங்கள் நாராயணர் லக்ஷ்மி கோயில். பிக்னாதோரியில் ராமர் - சீதை கோயில்.

622. பத்ரிநாத் : நரசிம்ஹர் கோயில். பதரிநாராயணர் கோயில். சாலிக்ராமத்தில் மஹாலெக்ஷ்மி நான்கு கைகளுடன் வீற்றிருக்கிறாள். பின்புறம் லக்ஷ்மி நரசிம்மர் கோயில்.

623. பால்வால் : கிருஷ்ணர் கோயில்.

624. ரிஷிகேசம் : பத்ரிநாத சிகரத்தில் நாராயணர் கோயில்.

625. ஸ்ரீநகர் : கிருஷ்ணர் கோயில்.

626. திருவாய்ப்பாடி *

ஆய்ப்பாடிமேவிய அண்ணல்

கலந்து அமரரோடும், கரைகண்டரோடும்
பொலிந்து திருநாட்டு இருக்கப் போவீர் மலிந்த புகழ்,
அண்டர் ஆய்ப்பாடி, அமலர் அடியார் அடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும்

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 14, 16, 132 , 145, 231, 235, 237, 239, 263, 281

ஆண்டாள் : 474, 618, 630, 636, 638

திருமங்கையாழ்வார் : 1021, 1392, 1435, 1993, 1994, 1995, 2673(28)

மொத்தம் : 22 பாசுரங்கள்

மதுரா ரயில் நிலையத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள திவ்ய தேசம். கண்ணன் வளர்ந்த திருத்தலம். ஆயர்பாடியைச் சேவிக்கச் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை. கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : நவமோஹன கிருஷ்ணன் - நின்ற திருக்கோலம்.

தாயார் : ருக்மணி, சத்யபாமா.

627. திருவதரியாச்சரமம் (இமயமலை) *

பதரிபத்ரிநாராயணன்

தாட்கு அடிமை என்று தமை உணரார்க்கு , எட்டு எழுத்தும்
கேட்டு வெளியிட்டருளும் கேசவனை, வேட்கையொடு
போவது அரிது ஆனாலும், போய்த் தொழுவோம்-நெஞ்சமே !-
மா பதரியாச்சிரமத்து.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 399

திருமங்கையாழ்வார் : 968-87, 2673(74)

மொத்தம் : 22 பாசுரங்கள்

இமயமலைச் சாரலில் இலந்தை மரக்காடுகள் நிறைந்த பகுதி இதுவாகும். இங்கு எம்பெருமான் ஆச்சாரிய வடிவத்தில் எழுந்தருளி யுள்ளார். ஆண்டிற்கு 4 மாதங்கள் மட்டுமே இங்கு பெருமானைச் சேவிக்கலாம். கிழக்கே திருமுகமண்டலம். ஸ்தலவிருட்சம் பதரீ என்ற இலந்தைமரம். கோயிலுக்கு எதிரே கங்கையுடன் எதிர்க்கரையில் தப்ததண்டம் என்ற வெந்நீர் ஊற்று இருக்கிறது.

பெருமாள் : பத்ரி நாராயணன் - வீற்றிருந்த திருக்கோலம்

தாயார் : அரவிந்தவல்லி

திருவஷ்டாக்ஷரமந்திரத்தின் அவதாரத்தலம்.

628. திருப்பிருதி *

பிரிதியில் பரமபுருடன்

வழங்கும் உயிர் அனைத்தும் வாரி வாய்ப்பெய்து
விழுங்கும் கவந்தன் விறல் - தோட்கிழங்கை,
பொருப்பு இரு திக்கும் கிடந்தால் போல், துணித்து வீழ்த்தான்
திருப்பிருதிக்கு - என் நெஞ்சே ! -செல்.

மங்களாசாசனம்

திருமங்கையாழ்வார் : 958 - 967 - 10 பாசுரங்கள்

ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ள ஜோஷிமட் என்ற இடம்தான் திருப்பிருதி. சமுத்திர மட்டத்திலிருந்து 6150 அடி உயரம் உள்ளது திருமங்கை ஆழ்வார் முதன் முதலாக மங்களாசாசனம் செய்த திவ்ய தேசம். கிழக்கே திருமுகமண்டலம். மானசரோவர் கரையில் இத்தலம் அமைந்திருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

பெருமாள் : பரம புருஷன் - புஜங்க சயனம்.

தாயார் : பரிமளவல்லி நாச்சியார்.

629. திருக்கண்டமென்னும் கடிநகர் *

கண்டங்கடிநீலமேகன்

மத்தால் கடல் கடைந்து, வானோர்க்கு அமுது அளித்த
அத்தா!-எனக்கு உன் அடிப்போதின் புத்தமுதை-
கங்கைக் கரை சேரும் கண்டத்தாய்! புண்டரிக
மங்கைக்கு அரசே! -வழக்கு.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 391-401-11 பாசுரங்கள்

ரிஷிகேஷ். பத்ரிநாத் செல்லும் வழியில் அமைந்துள்ள திவ்யதேசம் தேவப்பிரயாகை எனப்படும். துரியோதன சந்ததிகளை கொன்ற பாபம் நீங்கப் பாண்டவர்கள், இங்கு தீர்த்தம் ஆடினர். இங்கு அன்னதானம் செய்வது சிறப்பு. ப்ருஹ்ம தேவ், தசரதன், ராமன் முதலானோர் தவம் செய்த தலம். கிழக்கே திருமுகமண்டலம்.

பெருமாள் : நீலமேகப் பெருமாள்

தாயார் : புண்டரீகவல்லி

630. காசி : பாண்டுரங்கர் கோயில், ஸ்ரீராமர் கோயில், சங்கடஹரண ஆஞ்சநேயர் கோயில், சத்ய நாராயண கோயில் உள்ளது. மேலும் அஸி நதிக்கரையில் லெக்ஷ்மி நாராயணர் கோயில்.

631. திருச்சாளக்கிராமம் *

சாளக்கிராம ஸ்ரீமூர்த்தி

உண்டாம் முறைமை உணர்ந்து, அடிமைப் பேர் பூண்டேன்-
பண்டு ஆம் குடி குலத்தால், பல் மதத்தால், கொண்டாட்டால்,
ஆள் அக் கிராமத்தால் , அல்லற் பேர் பூணாமல்,
சாளக்கிராமத்தார் தாட்கு.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 206, 399

திருமங்கையாழ்வார் : 988-997 -12 பாசுரங்கள்

நேபாள நாட்டில், காட்மண்டு பகுதியில் கண்டகி நதிக்கரையில் அமைந்துள்ள திவ்யதேசம். இங்கு சாளக்கிராமங்கள் அதிக அளவில் கிடைக்கப்பெறுகின்றன. இங்கு எம்பெருமான் தீர்த்த ரூபமாக

எழுந்தருளியுள்ளார். வடக்கே திருமுகமண்டலம் யாத்திரீகர்களின் பாதுகாப்புக்காக 50 பேர்களுக்குக் குறைவாகவே நேபாள அரசு அனுமதி வழங்குகின்றது. ஸ்ரீ ராமானுஜர் மங்களாசாசனம் செய்த இடம்.

பெருமாள் : ஸ்ரீ மூர்த்தி. நின்ற திருக்கோலம்.

தாயார் : ஸ்ரீ தேவி நாச்சியார்

632. லக்ஷ்மணபுரி : லக்ஷ்மணர் அரசாண்ட இடம். ராமர் கோயில் உள்ளது.

633. ஸ்ரீ வைகுண்டம் (பரமபதம்) *

பரத்தினில் பரமபதநாதன்

இடர் உடையோன் சொல்ல எளிதோ? பிரமன்,
அடரும் விடையோற்கும் அரிதே- தொடரும்
கரு வைகும் தம் பிறவிக் கட்டு அறுத்து, மீளாத்
திரு வைகுந்தம் பெறுவார் சீர்

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 190, 277, 399, 479

ஆண்டாள் : 482

திருமழிசையாழ்வார் : 796 , 2476

திருப்பாணாழ்வார் : 927

திருமங்கையாழ்வார் : 2042

பொய்கையாழ்வார் : 2149, 2158

பேயாழ்வார் : 2342

நம்மாழ்வார் : 2543, 2545, 2552, 2652, 2867, 3000, 3040, 3431, 3465, 3585, 3627, 3740, 3747, 3755-65

மொத்தம் : 36 பாசுரங்கள்

நில உலகில் பார்க்க முடியாத திவ்யதேசம். இங்கு பரமபத நாதன், வீற்றிருந்த திருக்கோலத்தில் தெற்கு நோக்கிச் சேவை சாதிப்பதாகக் கூறப்படுகிறது. மோட்சம் பெற்ற ஜீவாத்மாக்கள் பகவானோடு ஐக்கியம் ஆகாமல் அவருக்குக் கைங்கர்யம் செய்யும் இடம்.

634. திருப்பாற்கடல் *

பாற்கடல் பாம்பணைப் பள்ளியான்

தொழும்பு ஆய நான் நல்ல சூது அறிந்துகொண்டேன் -
செழும் பாய் அலை முத்தம் சிந்தி முழங்கும்
திருப்பாற்கடலான் தாள் சேர்ந்தார் அடி சேர்ந்து
இருப்பாற்கு அடல் ஆம் இடர்.

மங்களாசாசனம்

பெரியாழ்வார் : 250, 427, 439, 452, 471

ஆண்டாள் : 475, 516, 551

குலசேகராழ்வார் : 665, 680

திருமழிசையாழ்வார் : 768, 769, 774, 779, 780, 832, 843, 846, 861, 2384, 2417, 2456, 2460

தொண்டரடிப்பொடியாழ்வார் : 889

திருமங்கையாழ்வார் : 1003, 1006, 1019, 1341, 1347, 1398, 1744, 1828, 2060, 2066

பொய்கையாழ்வார் : 2106

பூதத்தாழ்வார் : 2184, 2209

பேயாழ்வார் : 2292, 2312, 2313, 2342

நம்மாழ்வார் : 2556, 2618, 2661, 2835, 2844, 2963, 2454, 3465, 3470

மொத்தம் : 51 பாசுரங்கள்

திருமால் பள்ளிகொண்டுள்ள திவ்யதேசம். பிரமதேவன் படைக்கப்பட்ட தலம். நில உலகில் பார்க்க முடியாத திவ்யதேசம். சூட்சும சரீரம் பெற்ற பிறகே செல்லலாம். 106 திவ்யதேசங்களையும் ஸேவித்தவர்களைப் பகவானே இந்த திவ்யதேசத்துக்கு அழைத்துச் சென்று ஸேவை சாதிக்கின்றார் என்பது நம்பிக்கை - தெற்கே திருமுக மண்டலம்.

பெருமாள் : க்ஷீராப்தி நாதன் (வியூஹநிலை) ஆதிசேஷ சயனம்.

தாயார் : கடல் மகள் நாச்சியார்.

ஒரிஸ்ஸா - 3

635. கோலாகாட் : கிருஷ்ணன் சத்யபாமை ருக்மணி கோயில்.

636. சகிகோபால் : வேணுகோபால சுவாமி கோயில்.

637. டாக்லுக் : விஷ்ணு ஹரிலக்ஷ்மி கோயில்.

* இக்குறியிட்டவை மங்களாசாசனம் பெற்ற திவ்யதேசங்கள் ஆகும்.

ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பாடிய காஞ்சிபுராணத்தில் திருமாலுகந்த எட்டுத் தலங்களாகக் குறிப்பிடப்பெற்றுள்ளவை.

1. அத்திகிரி- தேவராஜப்பெருமாள் கோயில் (வரதராஜப் பெருமாள்)
2. வெஃகா - யதோக்தகாரிப் பெருமாள் கோயில்.
3. நிலாத்துண்டம் - ஏகம்பத்தில் உள்ளது.
4. நீரகம் - உலகளந்தார் கோயிலில் உள்ளது.
5. அட்டபுசம் - அஷ்டபுஜப் பெருமாள் கோயில்.
6. சகாளாங்கம் - கள்வனூர் (கள்வர் பெருமாள் - காமாட்சி ஆலயத்தில் உள்ளது)
7. ஊரகம் - உலகளந்தார் சந்நிதியில் உள்ளது.
8. பாடகம் - பாண்டவ தூதப் பெருமாள் கோயில்.

காஞ்சி க்ஷேத்திரமஞ்சரியில் குறிப்பிடப்பெற்றுள்ள ஸ்ரீவரதராஜப்பெருமாள் திருக்கோல மாட்சி

சங்கு சக்கரம் ஏந்தி;
சியாமள வர்ணராய்;
சர்வாபரண பூஷிதராய்;
நீலமணி போலச் சுந்தரராய்;
செந்தாமரைக் கண்ணராய்;
ஸ்ரீ வத்சலராய்;
ஸ்ரீதரராய்;
ஸ்ரீமானாய்;
பத்மநாபராய்;
ரத்னகர்ப்பராய்;
கிரீட குண்டல தாரியாய்;

சவ்ய வாம பாகங்களில், ரமா, பூமி ஆகிய மங்கையர் இருவர் சாமரைகள் அசைக்க புண்ணியகோடி விமானத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமான் வீற்றிருந்து அருள்கிறார்.

வெளிநாடுகளில் உள்ள விஷ்ணு கோயில்கள் சில

இல்லினாய்ஸ்/ILLINOIS

1. **(ஸ்ரீபாலாஜி கோயில்)** BALAJI TEMPLE

7145 W Sullivan road, Rost Office Box No - 1536. Avrura, Illinois - 60507.

2. **(அபிராமிநாராயணன் கோயில்)** SWAMY NARAYAN TEMPLE

1. South 631, Milton ave, Post Box No.2081. Glen Ellyn, Illinois - 60138.

ஒஹியோ/OHIO

3. **(ஸ்ரீ லட்சுமி நாராயணன் கோயில்)** SRI LAKSHMI NARAYAN EMPLE

6464 Sodom - Hut Chinga Road, Liberjy, Ohio.

கலிபோர்னியா/CALI FORNIA

4. **(ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கோயில்)** SRI RADHAKRISHNAN TEMPLE

2011 E Chapman Avenue, Fullerton. California - 91302.

5. **(ஸ்ரீ வெங்கடேஸ்வரா கோயில்)** SRI VENKATESWARA SWAMI TEMPLE

1500 Las Virgenes Conyon Road, Calabasas, California - 91302.

6. **(ஸ்ரீ சுவாமி நாராயணன்கோயில்)** SWAMY NARAYAN TEMPLE

12401 Pellissier Road,Whitier, California - 906601.

7. **(ஹரே கிருஷ்ணா கோயில்)** DSKON HARE KRISHNA TEMPLE

2334, Sturat Street, Berkeley, Kalifornia - 94705.

8. **(ருக்மணி துவாரகாநாதர் கோயில்)** ISKOA RUKMANI DWARAKADISN TEMPLE

3764, Watseka Avenue, Los Bngeles, California - 90084.

9. (சுவாமி நாராயணன் கோயில்) SWAMI NARAYAN TEMPLE

13927 Florine Avenue, Param Mount, California - 90723

கனடா

10. (ஸ்ரீ லட்சுமி நாராயணர் கோயில்)

SRI LAKSHMI NARAYANAN TEMPLE

107, Larange Road, Saskatoon, Saskatchewan, Canada.

11. (ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கோயில்) VHP TEMPLE RADHAKRISHNA

3885 Albert Street, Burnby British Columbia, V5-C2-C8, Canada.

12. (ஸ்ரீ விஷ்ணுகோயில்) VISHNU MANDIR

8640 Yonge Street, Rechmond Hill, Ontarie, Canda.

சிக்காகோ

13. SRI RAMAR TEMPLE

பென்சில்வேனியா

14. (ஸ்ரீ ஹரி கோயில்) HARI TEMPLE

301, Stignerwalt - Hollon Road, New Cumber Land, Pennsylvenia - 17070.

15. (ஸ்ரீ வெங்கடேஸ்வரா கோயில்) SRI VENKATESWARA TEMPLE

Post Box No. 115 235, Pitts Purgh Pennsylvania - 18360

மேற்கு வர்ஜீனியா

16. புது மதுரா பிருந்தாவனம் NEW MATHURA VRINDHAVAN

R.D.I. Box 318A, Mounda Ville, West Virginia - 26041.

மேரிலாண்ட்

17. (சிவாவிஷ்ணு கோயில்) SRI SIVA VISHNU TEMPLE

6905 Ciprriano Road, Lanham, Maryland - 20706.

நியூயார்க்

18. **(ஸ்ரீ சுவாமி நாராயண் கோயில்)** SRI SWAMY NARAYAN TEMPLE
43/18, Bowne Street, Flushing, New york 11355.

19. **(சிவாவிஷ்ணு கோயில்)** SRI SIA VISHNU TEMPLE
Nallico, 45-47 Bovrnie Street, Flushing, New York - 11355

நியூஜெர்சி

20. **ஸ்ரீராம் மந்திர்** SHREE RAM MANDIR
Carltion Road, Metuchen, New Jersey - 01840

21. **(ஸ்ரீ சுவாமி நாராயணர் கோயில்)**
SHREE SWAMY NARAYAN TEMPLE
4, Lovisa Place, Weekawkan, New Jergey - 07087.

ஜீயார்ஜின்


பாலாஜி கோயில்

22. **HINDU TEMPLE OF ATLANTA**
Post Box.No. 298 (Balaji), Reverdale, Georgin - 30274.

★★★

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு
யானடைவே அவர்க்குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

★★★





ஸ்ரீ வைஷ்ணவ சமய இலக்கிய வரலாற்றில்
இதுவரை வெளிவந்துள்ள பல்வகை நூல்களில்
பாற்கடலில் பள்ளி கொள்ளும் ஸ்ரீ பரந்தாமனின்

.... பல்வேறு அவதார நிலைகள்
.... அவதார நோக்கங்கள்
.... திருக்கோல வகைகள்
.... அட்ட சயனங்கள்
.... திருமந்திரங்கள்
.... திருமண் தத்துவங்கள்
.... வைஷ்ணவ புராணங்கள்
.... திருவாராதன நிகழ்வுகள்
.... அர்த்த பஞ்சக ஞானம்
.... பாகவத லட்சணங்கள்
.... வானேறும் வழிப்படிகள்
.... திவ்ய தேச மாண்புகள்
.... விருட்சங்கள், தீர்த்தங்கள்

முதலான பல்வேறு செய்திகளை
முழுமையாகத் தொகுத்துக் கூறும்
திருநெறிய தமிழ்மணி
பேராசிரியர். முனைவர். **சிவ. திருச்சிற்றம்பலம்**
அவர்களுடைய இவ்வரிய நூல்
``**ஸ்ரீ வைஷ்ணவ சமயக் கலைக்களஞ்சிய**''மே
என்பதில் எமக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

பெருமாள் பெருந்தொண்டர் **ஸ்ரீ சுந்தரராஜ பட்டாச்சார்யார்**
சுந்தரப்பெருமாள்கோயில்.